# நிகமம்

## வணிக வரலாற்றாய்வுகள்



பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. அதியமான்

முனைவர் ஆ. துளசேந்திரன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

# நிகமம்

## வணிக வரலாற்றாய்வுகள்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. அதியமான்
முனைவர் ஆ. துளசேந்திரன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613010

ISBN:978-81-7090-427-4

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 384

| | |
|---|---|
| நூல் | : நிகமம் வணிக வரலாற்றாய்வுகள்<br>**Nigamam** Essays on Trade and Guild |
| பதிப்பாசிரியர்கள் | : முனைவர் ந. அதியமான்<br>முனைவர் ஆ. துளசேந்திரன் |
| மொழி | : தமிழ் |
| பொருள் | : வரலாறு |
| பதிப்பு | : திருவள்ளுவராண்டு 2041, ஐப்பசி<br>முதற்பதிப்பு, அக்டோபர் 2010 |
| பக்கம் | : xvi + 182 = 198 பக்கங்கள் |
| தாள் | : 70 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ |
| அளவு | : டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : சாதாக்கட்டு |
| விலை | : உரூ. **70** /- |
| படிகள் | : 1200 |
| அச்சு | : நித்தியாஸ் பிரிண்டர்<br>936, திருவொற்றியூர் நெடுஞ்சாலை<br>திருவொற்றியூர், சென்னை 600 019 |


அட்டையில்: கொடுமணல் (ஈரோடு மாவட்டம்) அகழாய்வில் கிடைத்த 'நிகம' என்னும் சொல் கீறப்பட்ட பானையோடு

கட்டுரைகளில் காணப்பெறும் கருத்துகளுக்கு அக்கட்டுரையாளர்களே பொறுப்பாவர் - பதிப்பாசிரியர்கள்

# தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613010

முனைவர் ம.இராசேந்திரன்
துணைவேந்தர்


## அணிந்துரை

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்கள் தலைமையில் மாமன்னன் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் 1000-ஆம் ஆண்டு விழா தஞ்சைக்கும் தமிழுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் செப்தம்பர் 22 முதல் 26 வரை கொண்டாடப்பட்டது.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் 1000-ஆம் ஆண்டு விழாவில் ஒரு கூறாக **இந்தியப் பெருமைக்குத் தஞ்சையின் பங்களிப்பு** என்னும் பொருண்மையில் ஆய்வரங்கம் நடத்திடத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வாய்ப்பளித்த **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றி.**

உலகளாவிய வகையில் நடைபெற்ற ஆய்வரங்கில் வெளிநாட்டு ஆய்வறிஞர்களும் குறிப்பாக, சோழர்கள் ஆட்சி செய்த தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து கலந்துகொண்ட பேராளர்களும் தேசிய அளவில் புகழ்பெற்ற ஆய்வறிஞர்களும் தமது உயராய்வுக் கட்டுரைகளைச் சோழர்கால இலக்கியமும் சமயமும், இசையும் பண்பாடும், கலை மற்றும் தொழில்நுட்பம், பதிவாக்கமும் ஆவணமாக்கமும், வரலாறு முதலிய பொருண்மைகளில் வழங்கிச் சிறப்பித்தார்கள். இக்கருத்தரங்கில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள், ஆய்வு மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

தமிழகத்தில் வணிக வரலாறு குறித்த கட்டுரைகளின் தொகுப்பைக் கொண்ட நிகமம்: வணிக வரலாற்றாய்வுகள் என்னும் தலைப்பிலான இந்நூல் தஞ்சைப் பெருவுடையார்

கோயில் 1000-ஆம் ஆண்டு நிறைவையொட்டித் தமிழர், தமிழின் சிறப்பு, அறிஞர்களால் பண்டைய தமிழக ஆட்சியில் மிகச்சிறந்ததாகப் போற்றப்படும் சோழர்களின் ஆட்சிக்காலத்தில் நிலவிய சமூகம், பொருளாதாரம் என்பன குறித்த ஆய்வுகள் மக்களுக்குச் சென்றடையும் வகையில் சிறப்பு வெளியீடுகளாக வெளிவர வேண்டித் தமிழ்ப் பல்கலைக்கழகம் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாகும்.

இந்நூலின் ஆக்கப்பணியில் முனைந்து பணியாற்றிய பதிப்பாசிரியர்கள் முனைவர் ந.அதியமான், முனைவர் ஆ.துளசேந்திரன், பதிப்புத்துறை இயக்குநர் திரு.வை.கண்ணபுரக்கண்ணன், பதிவாளர் முனைவர் சா.பி.சரவணன், அலுவலர்கள், பணியாளர்கள், கணினியச்சு செய்தளித்தோர், அச்சகத்தார் முதலிய அனைவருக்கும் வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

# பதிப்பாசிரியர் உரை

**த**ஞ்சைப் பெருவுடையார் கோயிலின் 1000-ஆம் ஆண்டு நிறைவினைச் சிறப்பிக்கத் தமிழக அரசு பார் புகழும் வகையில் நடத்திய பெருவிழாவையொட்டித் தமிழ்ப் பல்கலைக்கழகம் இந்நூலினை வெளிக்கொணர்வது எங்களுக்கு மனநிறைவைத் தருகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மீது தனி அக்கறை காட்டி அதனை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் **மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன்** அவர்கள் இந்நூலினை உருவாக்க அனைத்து வகையிலும் ஊக்கமும் உதவியும் அளித்தார்கள். மாண்பமை துணைவேந்தரவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றி.

நீரகழாய்வுத்துறையில் நடத்தப்பெறும் கடல்சார் தொல்லியல், கடல்சார் வரலாறு ஆகிய பொருண்மைகளிலான கருத்தரங்குகளில் அளிக்கப்பெறும் புதிய சான்றுகள், கண்டு பிடிப்புகள், விளக்கங்கள், கருதுகோள்கள் ஆகியவற்றைக் கொண்ட கட்டுரைகளின் தொகுப்புகளைச் சங்க இலக்கி யங்களில் குறிக்கப்பெறும் கலங்களின் பெயர்களான நாவாய், அம்பி, புணை, வங்கம் போன்ற தலைப்புகளில் தொடர்ச்சியாக வெளியிட வேண்டும் என முடிவு செய்யப்பெற்றது. அவ் வகையில் இந்நூலில் வணிகம் குறித்த கட்டுரைகள் தொகுக்கப் பட்டிருப்பதால் மாங்குளம் என்னும் ஊரில் காணப்பெறும் தமிழ்-பிராமி கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் சங்ககால வணிகக் குழுவின் பெயரான **நிகமம்** என்னும் தலைப்பில் இந்நூல் வெளியிடப் பெறுகிறது.

இந்நூலிலுள்ள கட்டுரைகளில் பெரும்பாலானவை தமிழ்ப் பல்கலைக்கழக நீரகழாய்வுத்துறை 2009-ஆம் ஆண்டில் நடத்திய கருத்தரங்கில் அளிக்கப்பெற்றவை. சில அக்கருத் தரங்கிற்கு வர இயலாத ஆய்வறிஞர்களிடமிருந்து பெறப் பட்டவை. இந்நூலில் கட்டுரைகள் இடம்பெற உதவிய ஆய்வறிஞர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

இரும்புக் காலத்திலிருந்தே இலங்கையுடன் பண்பாட்டு உறவு கொண்டிருந்த தமிழகக் **கடற்**கரைப்பகுதி ஒரு நீண்ட, தொடர் வணிக வரலாற்றை உடையதாக விளங்குகிறது. தென்னிந்

தியாவில் பல வணிகக் குழுக்கள் கடல்கடந்து வணிகம் மேற்கொண்டிருந்தன. இடைக்காலத்தில் குறிப்பாக, சோழர் காலத்திற்குப் பின்பு இவ்வணிகத் தொடர்புகள் உச்சநிலையை எட்டியிருந்தன. இதற்குப் பல சான்றுகள் தென்கிழக்காசிய நாடுகளில் கிடைக்கின்றன. கடல்சார் வணிகத் தொடர்பு குறித்த ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்கடல்சார் வணிகத்தால் உள்நாட்டில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்கள், வணிக விரிவாக்கக் கூறுகள் போன்றன குறித்த கட்டுரைகளை **நிகமம்: வணிக வரலாற்றாய்வுகள்** என்னும் இந்நூல் கொண்டுள்ளது. இவை, வணிக வரலாற்றில் விடுபட்ட சில இடங்களை நிரப்பும் எனலாம்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நீரகழாய்வுத்துறையின் சார்பில் 2009-ஆம் ஆண்டு நடைபெற்ற **தமிழகக் கடல்சார் வரலாறு** என்னும் தலைப்பிலான கருத்தரங்கச் சிறப்புரை இந்நூலில் முதல் கட்டுரையாக அமைந்துள்ளது. மனித வரலாறு முதலாகத் தற்காலம் வரை மனித சமுதாயத்தில் கடல்கள் ஏற்படுத்திய தாக்கங்களையும் அவற்றின் விளைவுகளையும் சான்றுகளுடன் விரித்துரைத்துக் கடல்சார் தொடர்பில் வணிகர்கள் முக்கியப் பங்கு வகித்தமையையும் குறிப்பிட்டு, இனி வருங்காலங்களில் கடல்சார் தொல்லியல், வரலாற்றாய்வுகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதைத் தமது சிறப்புரையில் (கட்டுரை 1) ப.சண்முகம் விவரித்துள்ளார்.

சங்ககாலத் தமிழகம் செங்கடல் நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பினைப் பானை எழுத்துப் பொறிப்புகளுடன் பிற சான்றுகளை ஒப்பிட்டு, சு.இராசவேலு அவர்களின் கட்டுரை (2) விளக்குகிறது.

தமிழகம் வட இந்தியா, கிரேக்கம், எகிப்து, உரோம், தென்கிழக்காசிய நாடுகள் முதலியவற்றுடன் கொண்டிருந்த வணிக உறவைத் தொல்லியல், நாணயவியல், வெளிநாட்டார் குறிப்புகள் துணையுடன் மா.பவானி தமது கட்டுரையில் (3) விரித்துரைக்கிறார்.

சங்ககாலத்தில் கரூர் எவ்வாறு ஒரு முக்கிய வணிகத் தலமாக விளங்கியது என்பதையும் அவ்வூரைச் சுற்றியுள்ள இயற்கை வளங்கள் எவ்வாறு கரூரை முக்கியத்துவம் வாய்ந்ததாக

மாற்றின என்பதையும் தக்க சான்றுகளுடன் ம.இராசசேகர தங்கமணி தமது கட்டுரையில்(4) நிறுவுகிறார்.

கெய்ரோவிலுள்ள பழைய ஆவணங்களைப் பாதுகாக்கும் அறையான கெனிசாவில் கண்டெடுக்கப்பட்ட ஆவணங்கள் இடைக்காலத்தில் செங்கடல், பாரசீக வளைகுடாப் பகுதிகள் எவ்வாறு தென்னிந்தியாவுடன் வணிகப் பரிமாற்றம் கொண்டிருந்தன என்பதையும், சங்க காலத்தில் தமிழகம் வந்த உரோமானியர் அடிமைகளையும் அழைத்து வந்திருக்க வாய்ப்புண்டு என்ற கருதுகோளையும் சான்றுகளினடிப்படையில் வீ.செல்வகுமார் (கட்டுரை 5) முன்வைக்கிறார்.

சுமத்திரா தீவில் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டின் பாடத்தையும் அக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் செய்திகளையும் அளித்து, சுமத்திராவில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள நான்கு கல்வெட்டுகளின் செய்திகள் அங்கு கிடைக்கும் கற்பூரம், பொன் வணிகத்திற்காகத் தமிழ் வணிகர்கள் ஈர்க்கப்பட்டு அவர்கள் அங்கு சென்று வந்தமை குறித்தும் தமது கட்டுரையில் (6) எ.சுப்பராயலு பதிவு செய்துள்ளார்.

வணிகக் குழுவில் ஒருவரின் தூபக்கால் குறித்த புதிய கண்டுபிடிப்புச் செய்தியை ஆறுமுக சீதாராமன் தமது கட்டுரையில் (7) தெரிவிக்கிறார். செக்கார் வணிகச் சமூகத்தின் வளர்ச்சிப் படிநிலைகளை ஏங்கெல்ஸ் தத்துவத்தின் அடிப்படையில் தகுந்த சான்றுகளுடன் நாக.கணேசன் (கட்டுரை 8) நிறுவுகிறார்.

வணிகக் குழுக்கள் ஆய்வுகளில் சமுத்திராபட்டி வீரதாவளக் கல்வெட்டு பல முக்கியச் சான்றுகளைத் தருவதைத் தமது கட்டுரையில் (9) வெ.வேதாசலம் விளக்கியுள்ளார்.

சோழர்காலத்தில் திருநெல்வேலிப் பகுதி வணிகம் குறித்து இ.மணமாறன் (கட்டுரை 10), இடைக்காலப் பாண்டிய நாட்டுக் கடற்கரை, உள்நாட்டுப் பகுதிகளில் வணிக நடவடிக்கைகள் குறித்துச் சு.கண்ணன் (கட்டுரை 11) ஆகியோர் கல்வெட்டுச் சான்றுகளினடிப்படையில் தமது ஆய்வுரைகளைத் தந்துள்ளனர்.

புதுக்கோட்டைப் பகுதியில் வணிகர், வணிகர் நடவடிக்கைகள் குறித்து அ.சந்திரபோஸ் (கட்டுரை 12), செ.கோவிந்தராஜ்

(கட்டுரை 13), மு.காயத்திரிதேவி (கட்டுரை 14), கரு.இராசேந்திரன் (கட்டுரை 15) ஆகியோர் கல்வெட்டுச் சான்றுகளினடிப்படையில் ஆய்வுகளை அளித்துள்ளனர். தஞ்சாவூர்ப் பகுதி வணிகக் குழுக்கள் குறித்த ஆய்வை தனது கட்டுரையில் (16) சீ.நீலாவதி அளித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் இடைக்காலத்தில் மலை மண்டலத்துக் குதிரைச்செட்டிகளின் நடவடிக்கைகளைத் தாம் புதியதாகக் கண்டுபிடித்த கல்வெட்டுகளுடனும், பிற கல்வெட்டுச் சான்றுகளுடனும் ஒப்பிட்டுத் தமது கட்டுரையில்(17) இல.தியாகராஜன் விளக்குவதுடன் தான் படித்தறிந்த கல்வெட்டு களின் பாடங்களையும் அளித்துள்ளார்.

வாலிகண்டபுரத்தில் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டில் காணப்பெறும் மணிக்கிராமத்தார் குறித்த ஆய்வைத் தமது கட்டுரையில் (18) பெ.இரவிச்சந்திரன் தந்துள்ளார்.

கும்பகோணம் கல்வெட்டுகளில் வணிகர்கள் குறித்த சான்றுகளினடிப்படையில் வணிகர்கள் எவ்வாறு நிலவுடைமை யாளராகவும் மாறினர் என்பது குறித்தும் வணிகத்தலங்களின் பெயர்கள் குறித்தும் தமது கட்டுரையில் (19) ஆ.துளசேந்திரன் விளக்குகிறார். நாகபட்டினப் பகுதி வணிக நடவடிக்கைகள் குறித்துப் ப.கலைச்செல்வன் (கட்டுரை 20), கடலூர்ப் பகுதி வணிகம் குறித்து ஜோ.இரா.சிவராமகிருஷ்ணன் (கட்டுரை 21) ஆகியோர் கல்வெட்டுச் சான்றுகளினடிப்படையில் தமது ஆய்வுரைகளைத் தந்துள்ளனர்.

ஆறகளூர் மகதேசின் பெருவழிக் கல்வெட்டின் அடிப்படையில் மகதேசின் என்பவர் நிருவாகத்திலும், வணிகத் திலும் பங்கேற்ற ஒருவராய் இருக்கலாம் என்ற கருதுகோளைக் க.கருப்பையா தமது கட்டுரையில் (22) முன்வைக்கிறார்.

இவ்வாய்வுத் தொகுப்பு நூலிலுள்ள கட்டுரைகள் பகுப்பாய்வு, தொகுப்பு, விளக்கம், கள ஆய்வு என்று பல நிலைகளில் அமைந்துள்ளன. சில கட்டுரைகள் வணிக வரலாற்றுச் சான்றுகளைத் தொகுத்தும், சில கட்டுரைகள் ஆய்வுக் களங்கள் குறித்த செய்திகளையும் அளிக்கின்றன. இக்கட்டுரைகள் இளம் ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுக் களத்தைத் தேர்ந்தெடுக்க உதவும் வகையில் உள்ளன. இளம் ஆய்வாளர்கள் தங்களது

ஆய்வினை எவ்வகையில் மேற்கொள்ள வேண்டும் என்பதை அறிய இந்நூலின் பகுப்பாய்வுக் கட்டுரைகள் மிகவும் உதவியாக இருக்கும். இக்கட்டுரைகள் தமிழக வணிக வரலாற்றாய்வுகளில் விடுபட்டுள்ள சில இடங்களை நிரப்பும் என்பதில் ஐயமில்லை. அதேவேளையில் ஆய்வுலகிற்கு இந்நூல் பயனுற அமையும் எனவும் நம்புகிறோம். இக்கட்டுரைகளில் காணப்பெறும் கருத்துகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்.

இந்நூலின் கட்டுரைகளைக் கணினியச்சிட்டளித்த நீரகழாய்வுத் துறை முனைவர் பட்ட ஆய்வாளர் செல்வி. **உ.அனுசியா** அவர்களுக்கு எங்களது நன்றி. இக்கட்டுரைத் தொகுப்பின்போது உடனிருந்து உதவிய நீரகழாய்வுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் **சு.இராசவேலு,** கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை உதவிப் பேராசிரியர்கள் முனைவர் **வீ.செல்வகுமார்,** முனைவர் திருமதி **மா.பவானி** அவர்களுக்கும் நன்றியுடையோம். எவ்விதப் பயனையும் எதிர்பாராது மெய்ப்புத்திருத்தம் செய்துதவிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை உதவிப் பதிப்பாசிரியர் (ஓய்வு), திரு. **மா.பாலகிருட்டினன்** அவர்களுக்கும் சோர்வடையும் போதெல்லாம் எங்களுக்கு நம்பிக்கையூட்டி இந்நூல் நன்முறையில் உரிய காலத்தில் வெளிவர உதவிபுரிந்த பதிப்புத்துறை இயக்குநர் திரு.**வை.கண்ணபுரக்கண்ணன்** அவர்களுக்கும் இந்நூலை அச்சிட்டளித்த **நித்தியாஸ்** அச்சகத்தாருக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றி.

**ந. அதியமான்**
**ஆ.துளசேந்திரன்**

# பொருளடக்கம்

*அணிந்துரை* - iii-iv

*பதிப்பாசிரியர் உரை* - v-ix

*கட்டுரையாளர்கள்* - xiii-xiv

*சொற்குறுக்கங்கள்* - xv

1. கடல்சார் வரலாறும் சங்க காலத் தமிழக வணிகர்களும்
   *-ப.சண்முகம்* *1*
2. தொன்மைத் தமிழகத்தின் செங்கடல் வணிகத் தொடர்பு
   *-சு.இராசவேலு* *13*
3. சங்க காலத் தமிழகத்தில் வெளிநாட்டு வணிகம்
   *-மா.பவானி* *25*
4. கரூரின் வணிகச் சிறப்பு
   *-ம.இராசசேகரதங்கமணி* *39*
5. கெனிசா தாள் ஆவணங்கள்
   *-வீ.செல்வகுமார்* *49*
6. மேலும் ஒரு சுமத்திரா தமிழ்க் கல்வெட்டு (13-ஆம் நூற்றாண்டு)
   *-எ.சுப்பராயலு* *57*
7. ஐஞ்ஞூற்றுவர் தூபக்கால்
   *-ஆறுமுக சீதாராமன்* *63*
8. செக்கார் வணிகச் சமூகம்
   *-நாக.கணேசன்* *65*
9. சமுத்திராபட்டி வணிகக் குழு வீரதாவளக் கல்வெட்டு
   *-வெ.வேதாசலம்* *79*
10. திருநெல்வேலிப் பகுதியில் சோழர் கால வணிகம்
   *- இ.மணமாறன்* *87*
11. பாண்டிய நாட்டுக் கடற்கரை, உள்நாட்டுப் பகுதிகளில் வணிக நடவடிக்கைகள்
   *-சு. கண்ணன்* *91*

12. புதுக்கோட்டைப் பகுதியில்
வணிகக் குழுக்களின்
சமுதாயப்பணி

-அ.சந்திரபோஸ் 103

13. வணிகக் குழுக்களின்
பெயரால் அழைக்கப்படும்
புதுக்கோட்டை வட்டாரக்
கோயில்கள்

-செ.கோவிந்தராஜ் 113

14. ஐயப்பொழில் நாச்சியாரும்
நகரத்தாரும்

- மு.காயத்திரிதேவி 117

15. நகரத்தாரும்
நார்த்தாமலையும்

- கரு.இராஜேந்திரன் 121

16. தஞ்சாவூர்ப் பகுதியில்
வணிகக் குழுக்கள்

- சீ.நீலாவதி 129

17. பெரம்பலூர் வட்டார
வணிகக் கல்வெட்டுகள்

- இல.தியாகராஜன் 135

18. வாலிகண்டபுரம்
கல்வெட்டுகளில்
மணிக்கிராமத்தார்

- பெ.இரவிச்சந்திரன் 149

19. கும்பகோணம்
கல்வெட்டுகளில்
வணிகர்கள்

- ஆ.துளசேந்திரன் 157

20. நாகபட்டினப் பகுதியில்
இடைக்கால வணிகம்

- ப.கலைச்செல்வன் 163

21. கடலூர் பகுதியில்
வரலாற்றுத் தொடக்ககால,
இடைக்கால வணிகம்

-ஜோ.இரா.சிவராமகிருஷ்ணன் 169

22. மகதேசின் பெருவழி

- க.கருப்பையா 175

# கட்டுரையாளர்கள்

முனைவர் **ப.சண்முகம்**
டி1/25 ஆனந்தா குடியிருப்பு
50, லாட்டீஸ் பிரிட்ஜ் சாலை
கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை
திருவான்மியூர்
சென்னை 600 041

முனைவர் **க. இராசவேலு**
இணைப் பேராசிரியர்
நீரகழாய்வுத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

முனைவர் **மா.பவானி**
உதவிப் பேராசிரியர்
கல்வெட்டியல் மற்றும்
தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

பேரா. **ம.இராசசேகரதங்கமணி**
பாண்டியர் நகர்
சின்னாண்டான் கோவில் தெரு
கரூர் 639 001

முனைவர் **வீ. செல்வகுமார்**
உதவிப் பேராசிரியர்
கல்வெட்டியல் மற்றும்
தொல்லியல்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

முனைவர் **எ.சுப்பராயலு**
பிரெஞ்சு நிறுவனம்
11, புனித லூயி தெரு
பாண்டிச்சேரி 605 001

திரு **ஆறுமுக சீதாராமன்**
12, ராஜராஜன் நகர்
மனோஜிப்பட்டி (தெற்கு)
மருத்துவக்கல்லூரி (அஞ்சல்)
தஞ்சாவூர் 613 004

திரு **நாக.கணேசன்**
தொல்லியல் அலுவலர்
கல்யாணசுந்தரம் தெரு
ஆமூர், முசிறி (வட்டம்) 621 221

முனைவர் **வெ.வேதாசலம்**
51/12,இ. ரத்தினசாமி நாடார்
சாலை
பி.பி. குளம்
மதுரை 625 002

திரு **இ.மணமாறன்**
உதவிப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
தொலைதூரக் கல்வி இயக்ககம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் 608 002

முனைவர் **சு.கண்ணன்**
உதவிப் பேராசிரியர் மற்றும்
தொடர்பு அலுவலர்
மதுரைப் படிப்பு மையம்
அண்ணாமலைப்
பல்கலைக்கழகம்
மதுரை 625 001

முனைவர் **ஆ. சந்திரபோஸ்**
உதவிப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
மாட்சிமை தாங்கிய மன்னர்
கல்லூரி
புதுக்கோட்டை 622 001

முனைவர் **செ.கோவிந்தராஜ்**
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
திருக்கோகர்ணம்
புதுக்கோட்டை 622 002

திருமதி **மு.காயத்திரிதேவி**
உதவிப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
அரசு மகளிர் கலைக்கல்லூரி
புதுக்கோட்டை 622 001

திரு **கரு.இராசேந்திரன்**
மேலப்பனையூர் (அஞ்சல்)
விராச்சிலை (வழி)
புதுக்கோட்டை 622 420

முனைவர் **சீ.நீலாவதி**
உதவிப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
அரசு மகளிர் கலைக்கல்லூரி
புதுக்கோட்டை 622 001

முனைவர் **இல.தியாகராசன்**
தலைவர், வரலாற்றுத்துறை
அரசு கலைக்கல்லூரி
அரியலூர் 621 713

முனைவர் **பெ.இரவிச்சந்திரன்**
உதவிப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
அரசுக் கலைக்கல்லூரி
அரியலூர் 621 713

முனைவர் **ஆ.துளசேந்திரன்**
உதவிப் பேராசிரியர்
கல்வெட்டியல் மற்றும்
தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

திரு. **ப. கலைச்செல்வன்**
உதவிப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
அண்ணாமலைப்
பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் 608 002

திரு **ஜோ. இரா. சிவராமகிருஷ்ணன்**
உதவிப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
அண்ணாமலைப்
பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் 608 002

முனைவர் **க.கருப்பையா**
துணைகண்காணிப்பாளர்
(கல்வெட்டு)
இந்திய தொல்லியல் அளவீட்டுப்
பிரிவு
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை 600 009

# சொற்குறுக்கங்கள்

| | |
|---|---|
| *இ.க.* - | *இந்தியக் கல்வெட்டுகள்*<br>(*Epigraphia Indica*) |
| *க.ஆ.அ.*- | *கல்வெட்டு ஆண்டறிக்கை*<br>(*Annual Report of Epigraphy*) |
| *தெ.இ.க.*- | *தென்னிந்தியக் கல்வெட்டுகள்*<br>(*South Indian Inscriptions*) |
| *பு.ச.க.* - | *புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுகள்*<br>(*Inscriptions of Pudukkottai State* ) |
| பொ.ஆ. | - பொது ஆண்டு<br>(Common Era, C.E) |

# 1. கடல்சார் வரலாறும் சங்க காலத் தமிழக வணிகர்களும்*

**ப. சண்முகம்**

இந்தியாவின் தெற்கேயுள்ள தக்காணப்பீடபூமி, இரு கடல்களுக்கு நடுவே நீண்டு ஒரு முக்கோண வடிவில் அமைந்துள்ளது. வடக்கு, தெற்காக நீண்டுள்ள பகுதியின் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள இருகடல்களும் தென்கோடி முனையில் இந்தியப் பெருங்கடலில் கலக்கின்றன. இயற்கையாக அமைந்துள்ள இந்நீண்ட கடற்பகுதிகள் கடல்வழித் தொடர்புகளை மேற்கொள்ளும் வாயில்களாக அமையப் பெற்றுள்ளன. இத்துடன் பூமியின் சுழற்சி வேகத்தால் இப்பகுதியில் வீசும் பருவக்காற்றுகள் கப்பல் போக்குவரத்துக்கு மிகுந்த துணைபுரிகின்றன. சில சமயம் இப்பருவக்காற்றுகள் அளவிட இயலாத சேதங்களை விளைவிக்கின்றன. இப்பகுதியின் தட்பவெப்ப நிலைகளும் இப்பருவக் காற்றுகளால் மாறுபடுகின்றன. இவற்றின் தாக்குதல்களால் தென்னிந்திய வரலாறு, அரசியல், பண்பாடு பொருளாதாரம், சமுதாயம் போன்ற பிற துறைகளில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

பொதுவாக, கடல்சார் வரலாறு புவியியலோடு மிக நெருங்கிய தொடர்புடையது. உலகத்தில் கடல்களின் தோற்றம், அவை தோன்றிய நிலைகள், காலம் மற்றும் அவை பெற்ற மாற்றங்கள் ஆகியன புவியியல் வல்லுநர்களால் அறிவியல்

---

* திருவள்ளுவர் ஆண்டு 2040, பங்குனி 4 (17.03.2009) அன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நீரகழாய்வு மையம் நடத்திய தமிழகக் கடல்சார் வரலாறு என்னும் தலைப்பிலான கருத்தரங்கத் தொடக்கவிழாச் சிறப்புரை.

பூர்வமாக ஆராயப்பெறும். கடலிலும், கடலாலும் ஏற்பட்ட மாறுதல்களும், அதன் விளைவாக அணித்தே உள்ள பகுதிகளில் ஏற்பட்ட புவியியல் மாற்றங்களும் இவர்களால் ஆராயப் படுவன. புவியியலார் ஆராயும் காலகட்டங்கள் மனிதகுலம் தோற்றமெடுக்காத மிகத் தொன்மையான காலமாகும். எனவே, புவியியலாரின் கடல்பற்றிய ஆய்வுகள் யாவும் மனித குலம் உலகில் தோன்றா நிலையில் கடலில் ஏற்பட்ட மாற்ற நிலைகளை அறிவியல் பூர்வமாக அறிந்திடும் தன்மையையே குறிக்கின்றன. இவ்வாறன்றி, கடல்சார் வரலாற்றின் முக்கிய நோக்கமே, கடல்களால் மனித குலத்திற்கும் மனிதகுலத்தால் கடல்களுக்கும் ஏற்பட்ட பயன்கள் மற்றும் தாக்கங்களை அறிவதே. இப்பண்புகளைத்தான் கடல்சார் வரலாறு, கடல்சார் தொல்லியல் ஆகிய துறைகள் வற்புறுத்துகின்றன.

கடல்களைப் பற்றிய பலவாறான கருத்துகள் தொல்மாந்தரிலிருந்து இக்காலம் வரை இருந்துள்ளன. உயர்ந்து சீறிப்பாயும் அலைகளை வீசும் அகன்று விரிந்த கடலை மிகுந்த அச்சத்துடன் தொல்மாந்தர் நோக்கியுள்ளனர். பரந்துபட்ட கடலுக்கு அப்பால் என்ன உள்ளது என்கிற தீவிரக் கற்பனை எல்லாத் தொல்குடிகளிடமும் இருந்துள்ளது. கடலைக் கடந்து சென்றால் இறுதியில் மாபெரும் பள்ளத்தை அடைவோம்; அப்பள்ளத்தில் விழுந்தோர் மீள்வது இயலாது என்பனபோன்ற அதீத கற்பனைகளும் சிலபகுதிகளில் இருந்துள்ளன. இந்தியா முதலிய பகுதிகளில் உள்ள சில குடிகள் கடலைக் கடந்து செல்வது கூடாது என்றும் கருதினர்.

கடல்கள் மீது மக்கள் இயற்கையிலேயே கொண்டிருந்த மிகுந்த அச்சம், வியப்பு, மதிப்பு ஆகியவற்றை மீறி மிகுந்த தாக்கத்தையும் பெரும் விளைவுகளையும் சமுதாயத்தின்மீது கடல்கள் ஏற்படுத்தியுள்ளன. மக்களின் பண்பாட்டு வளர்ச்சியில் கடல்வழி மக்கள் பல இடங்களுக்கும் குடியேறி, தம் பண்பாடுகளை விரிவாக்கியும் வளர்த்தும் உள்ளனர். தொல்குடிகளும், இடைக் காலத்தைச் சார்ந்த கடலோடிகளும், அண்மைக்காலக் கடலோடி களும் கடல் கடந்து சென்று புதிய நாடுகளையும் கண்டங்களையும் கண்டுபிடித்துள்ளனர். இவை மட்டுமன்றி மக்களின் பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கியமான அரிய பெருவழிகளாகக் கடல்கள் திகழ்ந்துள்ளன. நிலத்தில் கிடைக்கப்பெறும் தாவர, விலங்கினப் பொருள்களைப் பல நாடுகளுக்குக் கொண்டு செல்லும் பெரு

வழிகளாக இக்கடல்கள் காலங்காலமாக இருந்துள்ளன. இவை தவிர நிலத்தில் கிடைக்கும் கனிம, வேதியியல் பொருள்களும், அவ்வப் பகுதிமக்களால் ஆக்கப்பெற்ற மணிகள், பொன், ஆடை போன்ற சிறந்த வணிகப் பொருள்களும் இப்பெருவழியினூடே சென்றுள்ளன. இப்பெருவழி நிகழ்வுகள் தொல்பழங்காலம் முதல் வழக்கில் இருந்துள்ளன. இவற்றின் தன்மைகள் பலவற்றைத் தொல்லியல் ஆய்வாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். நிலத்திலும், கடலிலும் கண்டெடுக்கப்பட்ட பல தொல்பொருள்களைச் சான்றாகச் சுட்டி இக்கருதுகோள்களை நிலை நிறுத்துவர். மற்றொரு முக்கியக் கருத்தையும் கடல்சார் வரலாற்றில் நாம் கருதவேண்டியுள்ளது. மக்களுக்குத் தேவையான பல பயனீட்டுப் பொருள்களைக் கடல்கள் பெற்றுள்ளன. இப்பொருள்கள் கடலின் எல்லாப் பகுதிகளிலும் கிடைப்பதில்லை. சில பொருள்கள் விளைவதற்குத் தக்க சூழல் அவசியமாகிறது. முத்து, பவளம் போன்ற கடல் விளைபொருள் களுக்கு இச்சூழல் மிக அவசியமாகிறது. எனவே, ஒரு கடற் பகுதியில் கிடைக்கும் பொருள்களை வேறோரிடத்தில் உள்ள பயனீட்டாளர்களுக்குக் கொண்டு செல்லும் பெருவழியாகவும் இக்கடல்கள் பயன்பட்டுள்ளன. கடலில் கிடைக்கும் பொருள் களைக் கண்டெடுத்து வணிகப் பொருள்களாக மாற்றுவதும், அவை கிடைக்குமிடங்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வதும் இவ்வாய்வுகளின் பிற முக்கிய நோக்கங்களாகும்.

தென்னிந்தியாவில், குறிப்பாகப் பழந்தமிழகத்தில், கடல்சார் வணிகத் தொடர்புகள் பற்றி அறியப் பலவிதச் சான்றுகள் கிடைக்கின்றன. பழங்கற்காலத்தில் (Palaeolithic period) கடல்சார் வணிகத் தொடர்புகளை உறுதி செய்யச் சான்றுகள் இதுவரை கிடைத்திடவில்லை. எனினும், கடலின் முக்கியப் பல தன்மைகளையும் கடல்படு பொருள்களையும் மாந்தர் அறிந்திருக்க வாய்ப்புண்டு. குறுங்கற்கால (Mesolithic period) மக்களும் பின்னர் தோன்றிய புதிய கற்கால (Neolithic period) மக்களும் கடலோடிகளாக இருந்துள்ளமைக்குச் சில சான்றுகள் உள்ளன. முக்கியமாகக் குறுங்கற்கால மக்களில் ஒரு பகுதியினர் தமிழ்நாட்டின் தென்பகுதியில், கடலுக்கு அணித்தே உள்ள தேரிகளில் தம் குடியிருப்புக்களை ஏற்படுத்தியிருந்தனர். இந்தத் தேரிப் பகுதிகள் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் பல இடங்களில் உள்ளன. இவ்விடங்களில் அம்மக்கள் செய்து பயன்படுத்திய சிறு கற்கருவிகளில்

மீன்பிடிக்கப் பயன்படும் தூண்டில் முட்கள் பல கிடைத்துள்ளன. இவற்றை அருகே உள்ள கடலில் மீன் பிடித்துள்ளமைக்குச் சான்றாகக் கருதலாம். மீன் பிடித்தலோடு கடல் வளங்களைப் பயன்படுத்தவும் இவர்கள் அறிந்திருந்தனர் என ஊகிக்கலாம். மேலும் கடல்வழிப் பயணங்களையும் சில சமயம் மேற்கொண்டிருக்கலாம். பெருங்கற்காலத்தில் (Megalithic period) தமிழ்நாட்டுப் பகுதியிலிருந்து கடல்வழி வணிகம் மேற் கொண்டுள்ளனர். அணித்தே உள்ள இலங்கையில் கிடைத்த பெருங்கற்காலச் சான்றுகள் பலவும் கடல்வழி வணிகத்தை உறுதிசெய்கின்றன.

சங்க காலத்தில் கடல் வழி வணிகம் நடைபெற்றமைக்கு உறுதியான சான்றுகள் பல உள்ளன. சங்க இலக்கியங்கள், உரோமானிய இலக்கியங்கள், அகழாய்வுப் பொருள்கள், நாணயங்கள் இன்ன பிறவகைச் சான்றுகளை ஆராய்ந்த அறிஞர்கள் பலர் இக்கால வணிகத்தைப் பெரும்பாலும் முன்னின்று நடத்தியவர்கள் அயல் நாட்டு வணிகர்களே என்று பொதுவாகக் கருதினர். ஆயினும் இக்கருத்தை மறுக்கின்ற வகையிலான சான்றுகள் பல அண்மைக் காலங்களில் கிடைத்துள்ளன. கடல்கடந்து வணிக நடவடிக்கைகளைத் தமிழ்நாட்டு வணிகர்களும் மேற்கொண்டிருந்தனர் என்று இச்சான்றுகள் தெளிவாகப் புலப் படுத்துகின்றன.

கடல்சார் வணிகத்தின் தன்மை கருதி உள்ளூர் அல்லது தல வணிகர்களின் பணியை நாம் சிறப்பானதாகக் கருதவேண்டும். அயல்நாட்டு வணிகர்களுக்கு உள்ளூர் வணிகர்கள் சிலர் துணை புரிந்திருக்க வாய்ப்புண்டு. அயல்நாட்டு வணிகர்களின் முகவர்களாகவும் உள்ளூர் வணிகர்களில் சிலர் பணியாற்றியிருக்கலாம். முக்கியமாக வணிகப் பொருள்கள் விற்பனை செய்யப்படும் உள்ளூர் அங்காடிகள் அல்லது உற்பத்தி செய்யப்படும் இடங்கள் பற்றிய விவரங்களை உள்ளூர் வணிகர்களிடமிருந்தே அயல்நாட்டு வணிகர்கள் பெற்றிருக்க வேண்டும். முக்கிய அங்காடிகளுக்குச் செல்லும் நெடுவழிகள், தங்குமிடம் போன்ற தகவல்களையும் உள்ளூர் வணிகர்கள் மூலமே அறிந்திருப்பர். எனவே, இவர்கள் இவ்வகைச் செய்திப் பரிமாற்றங்களோடு உள்ளூர் வணிகர்களின் துணையைப் பெற்று வணிகப்பொருள் பரிமாற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம். மற்றொரு நிலையிலும் உள்ளூர் வணிகர்களின் சிறப்பான பணியினைக்

கணிக்கலாம். இவ்வகையில் தமிழ்நாட்டு வணிகர்கள் கடல்கடந்து சென்று அயல்நாடுகளில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டதும் ஒன்று. இவ்வகை நடவடிக்கைகளில் ஈடுபட்ட தமிழ்நாட்டு வணிகர்கள் சிலரைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அயல் நாடுகளில் கிடைக்கும் தமிழகத்துத் தொல்லியல் சான்றுகள் தமிழ்நாட்டு வணிகர்களை அடையாளம் காட்டும். ஆயினும் இவ்வகைச் சான்றுகள் மிகக் குறைந்த அளவிலேயே கிடைத்து உள்ளன.

கடல்வழி வணிகத்தைத் தமிழக வணிகர்கள் செவ்வனே நடத்துதற்கு ஏதுவான பல தன்மைகளைச் சங்ககாலத் தமிழகம் பெற்றிருந்தது. தமிழகத்தின் நீண்ட கடற்கரையும் அப்பகுதியில் அமையப் பெற்ற துறைமுகங்களும் கப்பல்கள் வந்து செல்லத்தக்க வசதியினையும், நங்கூரமிட்டுத் தங்குதற்கான மறைப்பையும் பெற்றிருந்தன. சில இடங்களில் ஆற்று முகத்துவாரத்தில் துறைமுகங்கள் அமையப் பெற்றிருந்ததும் கப்பல்கள் வந்து செல்வதற்கு ஏதுவாக அமைந்திருந்தன. கடல்வழிச் செல்லும் கலங்கள், அவற்றைக் கட்டும் பணியாளர்கள், கப்பலைச் செலுத்தும் மாலுமிகள் போன்றவர் களைப் பற்றிய பற்பல செய்திகள் கிடைக்கின்றன. இவற்றோடு ஏற்றுமதி செய்யப்படுவதற்கு உகந்த மிளகு, முத்து, மணிக்கற்கள், துணிவகைகள் போன்ற வணிகப்பொருள்கள் பல உற்பத்தியாயின. இவற்றோடு தென்கிழக்காசிய நாடுகள், இலங்கை, எகிப்து, உரோம் ஆகிய நாடுகளில் விலைபோகக் கூடிய பல பொருள்கள் தமிழகத் துறைமுகங்களில் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இவ்வணிக நடவடிக்கைகளை முன்னின்று நடத்தியவர்களில் தமிழக வணிகர்கள் பலர் இருந்ததற்கான வாய்ப்புகள் உள்ளன.

உள்ளூர் வணிகர்கள் மற்றும் கடலோடிகள் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியப் பாடல்கள் சில தருகின்றன. சோழ அரசன் கரிகாலனைக் குறிப்பிடும் *புறநானூற்றுப்* பாடல் (*66:1-3*) அவனை 'நளியிரு முந்நீர் நாவா யோட்டி வளிதொழி லாண்ட வுரவோன் மருக' என்று புகழ்கிறது. இவ்வரிகளிலிருந்து, காற்று வீசும் திசை அறிந்து கடலில் கலங்களைச் செலுத்தியவர்களின் வழித்தோன்றியவன் சோழ மன்னன் கரிகாலன் என்பது புலப்படும். 'முந்நீர்' என்ற சொல் கடலைக் குறிக்கும் என்பதால் 'நாவாய்' என்பதைக் கடலில் செல்லும்

கலம் என்றே கருதலாம். 'வளி தொழில்' என்பதைக் காற்றின் திசையறிந்து கலங்களைச் செலுத்துதல் எனக் கொள்ளலாம். முதன் முதலில் பருவக்காற்றின் இயக்கத்தை அறிந்து கப்பல் களைச் செலுத்திய திறமையாளனாக இப்பாலாசைப் (Hippalos) பொதுவாகக் கருதுவதுண்டு. ஆயினும் இப்பாலாசின் கண்டுபிடிப்பு (கி.பி. 47), மத்திய தரைக்கடல் மற்றும் உரோமானிய நாட்டுக் கடலோடிகளுக்குப் புதியதாக இருந்துள்ளதில் ஏதும் வியப்பில்லை. இப்பாலாசுக்கு முன்பே இந்தியக் கடலோடிகள் அரபிக்கடலைக் கடந்து சென்று அந்நாடுகளோடு வணிகத் தொடர்புகளை மேற்கொண்டதற்குப் பல சான்றுகள் உள்ளன. எனவே, மேற்கண்ட *புறநானூற்று* வரிகள் மூலம் கரிகாலனின் முன்னோர் பருவக்காற்று வீசும் திசைகளை அறிந்து, கடலில் கலங்களைச் செலுத்தியவர்கள் என்பது வெளிப்படும். இதன் மூலம் தமிழ்நாட்டு வணிகர்கள் பருவக்காற்றின் இயக்கத்தை யொட்டிக் கடலில் கலங்களைச் செலுத்தும் வல்லமை படைத்தவர்களென்பதும் புலப்படும்.

சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியப்பெறும் மற்றுமொரு முக்கிய செய்தி, சேர மன்னர்கள் கொண்டிருந்த கடற்படை பற்றியதாகும். சேரர்கள் பெரும் கடற்படையைக் கொண்டிருந்தனர் என்றும் அப்படை எதிரிகளைக் கடலுள் ஓட்டிவிடும் வலிமையை உடையது என்றும் *அகநானூறு* (212:15-20) குறிப்பிடும். சேரலாதன் என்ற சேர மன்னனின் கடற்படை பகைவர்களைக் கடலில் வெல்லும் தன்மையுடையது என்று *அகநானூற்றின்* மற்றொரு பாடல் (347:3-5) இயம்புகிறது. அயல்நாட்டுக் கலங்களின் வரவைச் சேரலாதனின் கடற்படை தடுத்து நிறுத்தியதாகப் *புறநானூற்றுப்* (126:14-16) பாடல் பறைசாற்றுகிறது. இப்பாடல்கள் மூலம் வலிமைமிக்க கடற்படையைச் சேர அரசர்கள் கொண்டிருந்தனர் என்பது புலப்படும். இப்படையால் அயல்நாட்டுக் கலங்களைத் தடுத்துள்ளமை அறியலாகும். இவ்வாறு பிறநாட்டுக் கலங்களைத் தடுத்து நிறுத்துவதற்கான காரணங்களில் மிக முக்கியமானதாக உள்ளூர் வணிகக் கலங்களைப் பாதுகாத்தலைக் குறிப்பிடலாம். அவ்வாறெனில், மேலைக் கடல் பகுதியில் உள்ளூர் வணிகர்களின் பங்கு மிக இன்றியமையாததாக இருந்திருக்கவேண்டும்.

தமிழ்நாட்டு வணிகர்கள், அயல்நாட்டு வணிகத்தில் ஈடுபட்டனர் என்பதை அறிய அண்மைக் காலங்களில் தொல்லியல் சான்றுகள் பல கிடைத்துள்ளன. வியன்னா அருங்காட்சியகத்தில் உள்ள பாப்பிரஸ் (Papyrus) காகித ஒப்பந்த ஆவணம் இவ்வகையில் துணை புரியலாம். இது முசிறித் துறைமுகத்திலிருந்து சரக்குகளை அலெக்சாந்திரியா (Alexandria) துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்காக இரு வணிகர் களிடையே ஏற்பட்ட வணிக ஒப்பந்தமாகும். இவ் ஆவணத்தின் காலம் கி.பி.2-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியெனக் கணித்துள்ளனர். முசிறித்துறையில் ஏற்றப்படவேண்டிய சரக்குகளில் தந்தம், துணிக்கட்டுகளோடு கங்கைப்பகுதி வெட்டிவேர் (Gangetic Nard) ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. உரோம் நாட்டுத் துறைமுகங்களில் செலுத்தவேண்டிய வரிவகைகள், சரக்குகளை ஏற்றி இறக்குதல், அவற்றின் போக்குவரத்துக்கான செலவுகள் யாவும் இவ்வொப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. முழு ஒப்பந்தம் கிடைக்கவில்லையாதலாலும், சில பகுதிகளுக்கு உரிய விளக்கங்கள் தேவைப்படுவதாலும், இவ்வொப்பந்தம் கையெழுத்தான இடம், வணிகர்களின் பெயர்கள் என முக்கியச் செய்திகள் பற்றி உறுதியாகக் கூற இயலவில்லை. ஆயினும், இவ்வொப்பந்தம் முசிறியில் ஏற்பட்டிருக்கலாம் எனப் பொதுவாகக் கருதுகின்றனர். இரண்டு வணிகர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பினும் அவர்களில் ஒருவரையேனும் தமிழ்நாட்டு வணிகராகக் கருத இயலாது. இருப்பினும், இவ்வொப்பந்தத்தில் குறிப்பிடப்பெறும் சரக்குகள் தமிழ் நாட்டிலிருந்தும், தமிழ்நாட்டுக்கு அணித்தாக உள்ள இடங் களிலிருந்தும், தொலைதூரப் பிரதேசமான கங்கைப் பகுதிகளிலிருந்தும் வந்தவை என்பது உறுதி. இவ்வகைச் சரக்குகளை ஓரிடத்திலோ, ஒரே வணிகரிடமிருந்தோ பெறுவது இயலாது. எனவே, அயல்நாட்டு வணிகர்கள் உள்நாட்டு வணிகர்களுடன் தொடர்பு கொண்டு இச்சரக்குகளைப் பெற்றி ருக்கலாம். இவ்வகையில் உள்நாட்டு வணிகர்கள் சிலரைத் தம் முகவர்களாக ஏற்பாடு செய்திருந்தனர் என்று ஊகிக்கலாம்.

செங்கடல் பகுதியில் அமைந்த எகிப்தியத் துறை முகங்களில் தமிழ்நாட்டு வணிகர்கள் இருந்தமை பற்றிய சான்றுகள் பல கடந்த ஆண்டுகளில் வெளிக் கொணரப் பட்டுள்ளன. குவைசர் அல் கதம் (Quseir al Qadim), பெரணிகே

(Berenike) ஆகிய துறைமுக நகரங்களில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளே முக்கியச் சான்றுகளாகும். குவைசர் அல்-கதத்தில் கிடைத்த மூன்று பானைச் சில்லுகளில் 'பனை ஓறி', 'சாதன்', 'கணன்' ஆகிய சொற்கள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் முதல் பெயரான 'பனை ஓறி' என்று எழுதப்பட்ட பானைச் சில்லு, கி.மு. முதல் நூற்றாண்டையும் பின்னிரண்டு பெயர்கள் (சாதன், கணன்) உடைய பானைச் சில்லுகள், கி.பி. முதல் நூற்றாண்டையும் சார்ந்தன. இப்பெயர்கள் யாவும் தமிழ்மொழிப் பெயர்கள் என்பதில் ஐயமில்லை. மேலும், இப்பெயர்களுள் 'சாதன்', 'கணன்' என்ற ஆள்பெயர்கள் வணிகக் கூட்டத்தாரைக் குறித்திடும் முக்கியச் சொற்களாகும். பெரணிகேயில் கண்டெடுக்கப்பட்ட பானைச் சில்லில் 'கொற்பூமான்' என்றுள்ளது. இதுவும் வணிகர் ஒருவரின் பெயராக இருக்க வாய்ப்புள்ளது.

மேலே குறிப்பிடப்பெற்றுள்ள பானைச் சில்லுகள் யாவும் செங்கடல் அல்லது உரோமானியப் பகுதிகள் சார்ந்தவை அல்லவென்றும், தமிழ்நாட்டிலிருந்து சென்ற பானைச் சில்லுகள் என்பதும், அச்சில்லுகளின் இயல்பையொட்டிக் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும், அவற்றின் மேல் எழுதப்பட்ட எழுத்துக்கள் கி.மு.1 முதல், கி.பி.1-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை எனக் கணித்துள்ளனர். தமிழ் பிராமியின் சிறப்பு எழுத்துக்களில் ஒன்றான 'ன்' இந்த ஆள்பெயர்களில் உள்ளது. எனவே, இத் தொல்பொருள்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவை என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவ்வடிப்படையில் தமிழ்நாட்டு வணிகர்கள் கடல் கடந்து வணிகம் நடத்தியுள்ளமை புலப்படும். இவ் வணிகர்கள் அன்றைய தமிழ்நாட்டின் எப்பகுதியிலிருந்து சென்றார்கள் என்பதையும், வணிகப்பொருள்கள் மற்றும் கடல் பயணத்திற்குப் பயன்படுத்திய கலங்கள் எவையென்பதையும் தற்போது கிடைக்கின்ற சான்றுகளைக் கொண்டு குறிப்பிட இயலாநிலை உள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் சான்றுகளும் தமிழ்நாட்டு வணிகர்கள் கடல்கடந்து வணிகத்தில் ஈடுபட்ட தன்மையை வலியுறுத்துகின்றன. தாய்லாந்தில், குவந் லுக் பத் (Khuan Luk Pat) என்ற பழந் துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட பொன் உரைகல் தமிழ் வணிகர் ஒருவரைச் சார்ந்தது. அவ்வுரைகல்லின் ஒரு பக்கம் 'பெரும் பதன் கல்' என்று எழுதப்பட்டுள்ளது. எழுத்தமைதியைக்

கருதி இவ்வுரைகல்லைக் கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். உரைகல்லில், 'பெரும் பதன்' என்ற பெயர் உள்ளபடியால், இவர், பொன் வணிகர் என உறுதி செய்யலாம். மேலும் 'பதன்' என்ற சொல், பிற்காலங்களில் வழங்கப்படும் பத்தர் எனப்படும் பொற்கொல்லர்களின் தொழிற்பெயரின் முந்தைய வடிவம் எனக் கருதலாம். மேலும் புலிச் சின்னம் பொறித்த சங்ககாலச் சோழர் காசும் அவ்விடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பிற்காலங்களிலும் தமிழ்நாட்டு வணிகர்கள் தென்கிழக்கு ஆசியாவுடன் வணிகத்தொடர்புகளை மேற்கொண்டிருந்தனர் என்பதற்குக் கூடுதல் சான்றாகப் பல்லவர்காலக் காசு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பு கயோ தாங் (Phu Khao Thong) என்ற மற்றொரு துறைமுக நகரில் கிடைத்துள்ள பானைச் சில்லு ஒன்றில் தமிழ்ப் பெயர் உள்ளதாகக் கருதப்படுகிறது. இப்பானைச் சில்லினை கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதுகின்றனர். இப்பானைச் சில்லில் காணப்படும் பெயரைத் 'துறவோ' எனப் படித்துள்ளனர். இப்பானைச் சில்லு இருபுறமும் உடைபட்டுள்ளதால் இப்பெயரின் தொடக்க மற்றும் இறுதிப் பகுதிகள் இல்லை. ஆயினும் இதுவும் ஒரு தமிழ்ப் பெயராக இருக்க வாய்ப்புள்ளது. பிற்காலத் தமிழ் வணிகர்கள் தென்கிழக்கு ஆசியாவிலும், மியான்மர், சீனா ஆகிய நாடுகளிலும் குடியேறிக் கடல்வணிகத்தில் ஈடுபட்டமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் பல கிடைத்துள்ளன.

தமிழகக் கடற்பகுதியை ஒட்டி இலங்கை அமைந்துள்ளதால் தமிழ்நாட்டு வணிகர்கள் இலங்கைக்குச் சென்று வருவது மிக இயல்பான ஒன்று. சங்ககாலத் தமிழ் வணிகர்கள் இலங்கையில் மேற்கொண்ட வணிக நடவடிக்கைகள் பற்றிய தொல்லியல் சான்றுகள் பல கிட்டியுள்ளன. இவற்றுள் முக்கியமானவை சங்ககாலத் தமிழரசுகளில் பாண்டிய, சோழ மன்னர்கள் வெளியிட்ட காசுகள் ஆகும். இக்காசுகள், வட இலங்கையில் யாழ்ப்பாணம், கந்தரோடை, மாந்தை, அனுராதபுரம் போன்ற பலபகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில காசுகளில் ஒரு பக்கத்தில் 'பெருவழுதி' என்ற பாண்டிய அரசனின் பெயரும் பின் புறத்தில் பாண்டியரின் இலச்சினையான கோட்டுருவ மீன் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. புலிச் சின்னம் உள்ள சோழர் காசுகளும் கிடைத்துள்ளன. இக்காசுகளைத் தமிழ்நாட்டு வணிகர்கள் கொண்டுசென்று இலங்கையில் பயன்படுத்தியிருக்கலாம்.

மேலும், இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட சில ஈயக்காசுகளில் தமிழ்பிராமி எழுத்துப்பொறிப்பு உள்ளது. இவற்றில் காணப்படும் எழுத்துக்கள் யாவும் தமிழ்நாட்டில் உள்ள பிராமி எழுத்துக்களைப் போல் உள்ளன. அக்காசுகளில் உள்ள 'சாதன்', 'உதிரன்', 'கபதி', 'கடலன்' ஆகிய பெயர்கள் தமிழ் ஆள் பெயர்களாகவே உள்ளன. இவற்றைத் தமிழ்நாட்டு வணிகர்களின் பெயர்களாகக் கருதலாம். எனவே, தமிழ்நாட்டு வணிகர்கள் இலங்கையோடு நேரடி வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதை இவற்றால் உறுதி செய்யலாம்.

கடல்சார் வரலாறு, தொல்பழங்காலத்திற்கு முன்பிருந்தே தொடங்குகிறது என்றபோதும், இதுபற்றிய ஆய்வுகள் 20-ஆம் நூற்றாண்டில்தான் தொடங்கின. தொல்லியல், ஆழ்கடல் அகழாய்வு போன்ற பல துறைகளின் ஈடுபாட்டால் இத்துறை ஆய்வுகள் ஊக்கம் பெற்றன. பல அறிவியல் துறைகளின் ஈடுபாடும் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளும், கடல்சார் வரலாற்றினை அறிவியல் பூர்வமாகப் புரிந்துகொள்வதற்குப் பெருந்துணை யாற்றியுள்ளன. உலகெங்கும் ஏற்பட்ட இவ்வளர்ச்சியின் தாக்கத்தால் உந்தப்பட்ட தமிழக வரலாற்று ஆய்வாளர்கள் பலர், கடல்சார் வரலாற்று ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர். இவ் வகையில், தமிழகத்தில் ஆழ்கடல் ஆய்வுகள் காவிரிப் பூம்பட்டினம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளன. ஆயினும், கடல்சார் வரலாற்றினை முறையாக அறிந்து கொள்ளவும், ஆய்வுகள் நடத்தவும் வரலாற்று ஆர்வலர்கள் மட்டுமன்றிப் பிற துறை அறிஞர்கள், முக்கியமாக அறிவியல், தொழில் நுட்பவியல் ஆய்வாளர்கள் முன்வரவேண்டும். பழந்துறைமுகங்கள், அவற்றின் கட்டுமானங்கள், மரபுவழிக் கப்பல் கட்டுமானத் தொழில் நுட்பங்கள், கப்பல் ஓட்டுதலில் உள்ள மரபு வழித் தொழில் நுணுக்கங்கள், துணைபுரியும் கருவிகள் ஆகியன பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப் படவேண்டியது முக்கியமாகும். கடலோடிகள், கடல்சார்ந்து வாழும் சமூகத்தார், அச் சமூக மக்களினப் பண்பாடுகள் போன்ற வற்றோடு, கடல் வணிகர்கள், அவர்களது சமூக நிலை போன்ற துறைகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். மேலும், இம்மக்களோடு பிற சமூகத்தாரின் தொடர்புகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும். தமிழகத்தில் ஏற்பட்ட தொன்மையான கடல்கோள்கள், அவற்றின் விளைவுகள் போன்றவற்றையும் நாம்

அறிவியல், வரலாறு ஆகிய துறைகளின் துணையோடு ஆய்தல் வேண்டும். இவ்வகை ஆய்வுகள், மத்திய அரசின் கடல்சார் ஆய்வு நிறுவனங்களோடும் மற்ற சார்பு நிறுவனங்களோடும் இணைந்து நடத்தப்பட்டால் மிகுந்த பலனை அளிக்கும்.

## சான்றுகள்


அதியமான், ந., ஜெயக்குமார், பா., (ப.ஆ.), 2006, *தமிழகக் கடல்சார் வரலாறு: அண்மைக்கால ஆய்வுகள்*, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இராகவன், ஆ., (முதல் பதிப்பு 1968, மறுபதிப்பு, 2005), *நம் நாட்டுக் கப்பற்கலை*, அமிழ்தம் பதிப்பகம், சென்னை.

ஐராவதம் மகாதேவன், 2006, "தாய்லாந்தில் தமிழ்-பிராமி பொறித்த பானை ஓடு", *ஆவணம்*, இதழ் 17, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக். 12-13.

நரசய்யா, 2005, *கடல்வழி வணிகம்*, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

ஜெயக்குமார், பா., 2001, *தமிழகத் துறைமுகங்கள்*, அன்பு வெளியீட்டகம், தஞ்சாவூர்.

Karashima, N., 2002, "Tamil Inscriptions in South Asia and China", In Noboru Karashima (ed.), *Ancient and Medieval Commercial Activity in the Indian Ocean: Testimony of Inscription and Ceramics-Sherds*, Taisho University, Tokyo, p.10.

Krishnamoorthy, R., 1997, *Sangam Age Tamil Coins*, Garnet Publications, Chennai, pp. 34-35.

Krishnamoorthy, R., and Senarath Wickramasinghe, 2005, *A Catalogue of the Sangam Age Pandya and Chola Coins in the National Museum, Colombo, Sri Lanka*, Department of the National Museum, Colombo.

Krishnamoorthy, R., and Senarath Wickramasinghe, 2005, "Sangam Age Pandya and Chola Coins from National Museum, Colombo", *Studies in South Indian Coins*, Vol.15., pp.43-52.

Krishnamoorthy, R., 2005, "Sangam Age Pandya coins with Legend Peruvaluthi in the National Museum, Colombo", *Studies in South Indian Coins*, Vol.15, pp.58-63.

Mahadevan, Iravatham, 2000, "Ancient Tamil Coins from Sri Lanka", *Journal of the Institute of Asian Studies*, Vol.xvii-2, pp.147-156.

Mahadevan, Iravatham, 2003, *Early Tamil Epigraphy*, Cre-A, Chennai, p.49.

Osmund Bopearachchi, 2004, "Ancient Sri Lankan and Tamil Nadu: Mari Time Trade", In *South Indian Horizons (F. Gross Felicitation Volume)*, eds. Jean Luc Chevillard and Eva Wilden, Institute Francais de Pondicherry, Pondicherry, pp.539-551.

Pushparatnam, P., 2002, *Ancient Coins of Sri Lankan Tamil Rulers*, Bavani Patippakam, Jaffna.

Salomon, Richard., 1991, "Epigraphical Remains of Indian Traders in Egypt", *Journal of American Oriental Society*, Vol.III-4, pp.731-736.

Shanmugam, P., 1996, "Ancient Tamil Brahmi Inscription from Thailand", *Journal of Epigraphical Society of India*, Mysore, Vol,22, pp.100-103.

Shanmugam, P., 2004, "Sangam Pandya Coins in Sri Lanka", *Journal of Numismatic Society of India*, Vol. xvi, p.36-42.

Shanmugam, P., 1994, "Two Coins of Tamil Origin from Thailand", *Studies in South Indian Coins*, Vol.iv, pp.97-98.

Sidebotham, S.E., 1992, "Ports of the Red Sea and the Arabia-India Trade", In eds. Vimala Begley and De Puma, *Rome and India: The Ancient Sea Trade*, Delhi, p.30.

Subbarayalu,Y., 2008, "Pottery Inscriptions of TamilNadu-A Comparative View", In *Airavthi (Sri Iravatham Mahadevan Felicitation Volume)*, Varalaru.com, Chennai, pp. 209-248.

Victor Rajamanickam, G. and Subbarayalu, Y. (eds.), 1998, *History of Traditional Navigation*, Tamil University, Thanjavur.

# 2. தொன்மைத் தமிழகத்தின் செங்கடல் வணிகத் தொடர்பு

சு.இராசவேல்

தமிழகத்தில் தொல்லியல் அடிப்படையில் அகழாய்வுகள் மேற்கொண்டதில், இரும்புக் காலம் என வரையறுக்கப்பட்ட பெருங்கற்படையல் சின்னக் காலத்தில் தமிழர் நாகரிகம் மிகச் சிறந்த நிலையை அடைந்திருந்தமையை அறிய முடிகிறது. இக்கால கட்டம் அகழாய்வுகளின் அடிப்படையில் ஏறக்குறைய கி.மு.1000 அல்லது அதற்கும் சற்று முற்பட்ட காலகட்டத்தில் தொடங்கி கி.மு.500 ஆண்டளவில் நன்கு மிளிர்ந்து படிப்படியாகப் பல்வேறு நிலைகளில் உயர் நிலையை அடைந்தது. கழகக் காலம் (சங்ககாலம்) என இலக்கியங்களில் குறிக்கப்படும் காலகட்டம் பிற்குறித்த உயர்நிலைக் கால கட்டமெனினும் இலக்கியங்களில் குறிக்கப்படும் பல்வேறு நிகழ்வுகள் இக்கால கட்டத்திற்கும் முற்பட்ட காலகட்டத்தில் நடந்த நிகழ்வுகளையும் உள்ளடக்கியது என ஆய்வாளர்கள் சிலர் சுட்டுவர்.

கழக இலக்கியங்களில், அக்காலத்தில் நடந்த கடல் வணிகம் குறித்த செய்திகள் விரவிக் கிடக்கின்றன. நீண்ட கடற்பயணத்திற்கு 'நாவாய்' எனப்படும் மரக் கலங்கள் பயன்படுத்தப்பட்டன[1]. சமீபத்தில் கேரளக் கடற்கரையில் முசிறி என அறியப்பட்ட இடத்தில் நடந்த அகழாய்வில் ஒரே மரத்தால் ஆன சிறிய வகைப் படகு போன்ற அமைப்புடைய கலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது[2]. இதன் மூலம் அயல் நாடுகளில் இருந்து வரும் நாவாய்களில் இருந்து பொருள்களை உள்ளூர் நகரங்களுக்கு எடுத்துச் செல்லக் கழிமுக ஆறுகளின் வழியாக இச்சிறிய அமைப்புடைய படகுகள் பயன்படுத்தப்பட்டமையை

அறிய முடிகிறது. எனவே மேலைக்கடற்கரைத் துறைமுகங்கள் கழகக் காலத்தில் கடல் வணிகத்தில் முன்னோடியாக விளங்கி வந்துள்ளன.

கழக இலக்கியங்கள் குறிக்கும் முசிறி, தொண்டி ஆகிய துறைமுகங்கள் மூலம் தமிழ் வணிகர்கள் செங்கடல் பகுதிக்கும் நடுநிலக்கடல் பகுதிகளில் உள்ள நகரங்களுக்கும் சென்றுள்ளனர். அவ்வாறு செல்லும்பொழுது தங்களுடன் எடுத்துச் சென்ற மட்கலங்களில் தங்களது பெயர்களைப் பொறித்துப் பயன் படுத்தியுள்ளனர்.

அக்காலத்தில் வட இந்தியாவின் சிறந்த நகரங்களிலிருந்தும் பொருள்கள் தருவிக்கப்பட்டுத் தமிழகத்தின் துறைமுகங்கள் வழியாக அவை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. கங்கை வரை வங்கம் எனும் கலம் சென்று வந்தமையை 'கங்கை வங்கம் போகுவர் கொல்லோ' என *நற்றிணை (189:5)* எடுத்தியம்பும்.

தமிழகத்தின் முக்கிய விளைபொருளான மிளகு மேலை நாட்டவரால் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. தமிழகத்திலும் கேரள மலைகளிலும் விளைந்த மிளகை உரோமானியர்களும் எகிப்தியர்களும் அதிக விலை கொடுத்து வாங்கினர். அண்மையில் கொடைக்கானல் அருகில் தாண்டிக்குடி என்னும் இடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வுகள் கொடைக்கானல் பகுதியில் இரும்புக் காலத்திற்கும் முன்னர் மக்கள் வாழ்ந்திருந்தனர் எனக்கருத இடம் தருகின்றன. இப்பகுதியில் மிளகு விளைச்சல் அதிகமாக இருந்துள்ளதால் இங்கிருந்து மிளகுப் பொதிகளைக் கழுதைகள் மூலம் ஏற்றப்பட்டு மேலைக் கடற்கரை நகரங்களுக்குச் சென்றிருக்கலாம் என்று அகழாய்வாளர்கள் கருத்துத் தெரிவித் துள்ளனர்[3]. மேலும், பழனிப் பகுதியில் பெருவாரியான உரோமானிய நாணயப் புதையல்கள் கிடைத்திருப்பதும் இவ்வுண் மையை வலுப்பெறச் செய்கின்றன[4]. *அகநானூற்றில்* (149:10) இதனைப் 'பொன்னொடு வந்து கறியொடு பெயரும்' எனப் புலவர் குறிப்பிடுகின்றார் .

மேலைக் கடற்கரைத் துறைமுகத்திலிருந்து சென்ற பல கப்பல்களையும் யவனர் கப்பல்களையும் அக்காலத்தில் மேலைக் கடலில் இருந்த தீவுகளில் வாழ்ந்த கடற்குறும்பர் எனும் கடற்கொள்ளையர் கொள்ளையிடுவர். அவர்களை அடக்கச் சேர மன்னன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தம் கப்பற்

படையினை அனுப்பி வணிகத்தை ஊக்குவித்தான் எனப் *பதிற்றுப்பத்தில்* (2-ஆம் பத்து;5-ஆம் பத்து) குறிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுடன் யவனர் கொண்ட வணிகத்தின் பொருட்டு உரோம் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்ததாகப் பிளினி என்னும் அறிஞர் குறிப்பிடுகின்றார். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் விலை உரோம் நகரங்களில் பெருவிலைக்கு விற்கப்பட்டதை அவர் குறிப்பிடுகின்றார்[5]. மேற்குறித்தவாறு, தமிழகத்தில் அண்மைக் காலங்களில் கிடைத்த பல தொல்லியல் தரவுகளும் கழக இலக்கியங்களில் குறிக்கப்பட்ட ஊர்களில் நடத்தப்பட்ட அகழாய்வுகளும், கழக இலக்கியங்களில் குறிக்கப்படும் வரலாற்று நிகழ்வுகளுக்கும் தமிழர் வாழ்வியல் கூறுகளுக்கும் அவர்தம் சமூகப் பொருளாதார சமயக் கூறுகளுக்கும் வலிவு சேர்ப்பனவாகவே அமைந்துள்ளன[6]. கழக இலக்கியங்களில் குறிக்கப்படும் மூவேந்தர்கள் குறித்த செய்திகளைத் தமிழ் நாட்டில் கிடைக்கின்ற தொன்மைத் தமிழ்க் (தமிழ்-பிராமி) கல்வெட்டுகளும் பெயர் பொறித்த நாணயங்களும் உறுதி செய்கின்றன. பண்பாட்டு வளர்ச்சி பெற்ற பல்வேறு உலக நாகரிகங்களுக்கு இணையான நாகரிகத்தைத் தமிழர்கள் பெற்றிருந்தனர் என்பது இத்தரவுகளின் மூலம் வெளிப்படையாக அறிய முடிகிறது. மேலும் வட இந்தியாவில் காலத்தால் முற்பட்டதாக, தமிழ்-பிராமி எழுத்துக்களுக்குப் பிற்பட்டதாகக் கருதப்படும் அசோக மாமன்னனின் கல்வெட்டுகள் தமிழகத்தை வலிமை மிக்க சோழர், பாண்டியர், சேரர், அதியர் ஆகிய மரபினர் தனித்து ஆட்சி செய்தமையைத் தெளிவாக விளக்குகின்றன. இவர்களைத் தவிரப் பல குறுநில மன்னர்களின் ஆட்சியும் தமிழகத்தில் நிலவி இருந்தது.

தமிழகத்தில் அரசுருவாக்கம் என்பது கழகக் காலத்தில் ஏற்படவில்லை என்ற வரலாற்று ஆசிரியர்கள் சிலரின் கருதுகோள்கள் தொல்லியல், கல்வெட்டுகள் மற்றும் நாணயங்கள் மூலம் பொய்யுரையாக்கப்பட்டுள்ள தன்மையை நம்மால் எளிதில் அறிய முடிகிறது. இக்கால கட்டத்தில் தமிழகம் பல்வேறு நாடுகளுடன் உறுதியான வணிகப் பரிமாற்றம் மேற்கொண்டு செயலாற்றி இருந்தமையையும் தமிழ் மன்னர்கள் அரசு முத்திரையுடன் நாணயங்கள் வெளியிட்டுள்ளமையையும் குறுநில மன்னர்களும் தங்களது பெயரில் நாணயங்கள் வெளியிட்டுள்ள மையையும் அரசு முத்திரைகளும் அரசுப் பெயரில் அளவுகளும்

எடைக்கற்களும் இருந்துள்ளமையையும் அண்மைக் காலக் கண்டுபிடிப்புக்கள் மூலம் நன்கு அறிய முடிகிறது. குறிப்பாகக் கொல்லிப்பொறை, கொல்லிரும்பொறை, மாக்கோதை, குட்டுவன் கோதை, பெருவழுதி மன்னர்களின் நாணயங்களும் தமிழகத்திலும் கேரளாவிலும் கிடைத்துள்ள உரோம, கிரேக்க நாணயங்களும் அயல் நாட்டு வணிக வளர்நிலைக்குச் சான்று பகர்வன[7].

ஒரு சார்புள்ள முடிவுகளை வைத்துக் குறிப்பாகக் கழக இலக்கியங்கள் சுட்டும் பெருவாரியான சமூக நிலைகளின் அடிப்படையில் அரசுருவாக்கம் கழகக் காலத்தில் இல்லை என உறுதிபடக் கூறலாகாது. இன்றைய சமூகத்திலும் நகர வாழ்க்கைத் தரத்திற்கும் சிற்றூர் வாழ்க்கைத் தரத்திற்கும் வேறு பாடுகள் காணப்படுகின்றன. இன்றளவும் மலையின மக்கள் நாகரிகத்தில் பின்தங்கியே உள்ளனர். இவற்றைப் பகுத்து வரலாற்றை எழுத வேண்டுமே தவிர, தமிழகத்தில் கிறித்தவ காலத்திற்கு முன் நிலையான அரசு என்பது இல்லை என்று கூறுதல் ஆகாது. இன்றளவும் சமூகத்தில் அடித்தட்டு வாழ்க்கையை படம்பிடித்துக் காட்டும் வழக்கமும் ஆர்வமும் மிகுந்த அளவில் இருப்பது போல் அன்றைய கழக ஆசிரியர்களுக்கும் அடித்தள மக்களின் அக, புற வாழ்க்கையும், குறுநில மன்னர்களின் பல்வேறு நடவடிக்கைகளும் சிறந்த கருப்பொருள்களாக இருந்துள்ளன. இருப்பினும் பெருவேந்தர்கள் பற்றிய குறிப்புகளும் பொருளாதார வணிக நடவடிக்கைகளும் ஆங்காங்கே மிகுந்த அளவில் சுட்டப்பெற்றுள்ளன. இத்தகு சமூக அமைப்பில் அரசு மிகச் சிறந்த நிலையில் இருந்துள்ளது. இதனால் தமிழர் கடல் கடந்து மேற்குத் திசை நாடுகளுக்கு அக்காலத்தில் கடல் வழி வணிகம் மேற்கொண்டு தமிழகப் பொருளாதாரத்தை ஊக்குவித்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

தமிழக அகழாய்வுகளில் குறிப்பாக அழகன் குளம்[8], அரிக்கமேடு[9], வசவசமுத்திரம்[10] தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்கிய மேலைக் கடற்கரை நகரமான முசிறி ஆகிய இடங்களில் நடந்த அகழாய்வுகளில் உரோமானிய மதுச் சாடிகளான ஆம்போரா சாடிகள் கிடைத்திருப்பதன் மூலமும் இத்தாலிப் பகுதியில் உள்ள அரிசோ எனப்படும் இடத்தில் தயாரிக்கப்பட்ட அரிட்டைன் எனப்படும் மட்கலன்கள் மூலமும் உரோமானியருடன் தமிழர்கள் கொண்டிருந்த வணிகத் தொடர்பை அறிய முடிகிறது[11]. மேலும் தமிழகத்திலும்

கேரளாவிலும் பெருமளவில் கிடைத்த உரோமானிய நாணயங்கள் மற்றும் மேலைநாடுகளின் குறிப்பாக, கிரேக்க நாணயங்கள் மூலம், தமிழகம் மேலைக் கடலில் தனது வணிக மேலாண்மையைச் செலுத்தியிருந்தமையை அறிய முடிகிறது[12].

உரோமானியரும் பிற நாட்டு வணிகர்களும் தமிழகத்திற்குக் கடல் வழியாக வந்து வணிகம் மேற்கொண்டது போல் தமிழர்களும் அந்நாடுகளுக்குச்சென்று வணிகம் மேற்கொண்டமையைச் செங்கடல் பகுதியில் குசிர் அல் குதாம், பெரணிகே ஆகிய இடங்களில் அண்மைக் காலங்களில் மேற் கொள்ளப்பெற்ற அகழாய்வுகளில் கிடைத்த தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புகள் உள்ள பானை ஓடுகள் மூலம் அறிய முடிகிறது[13].

கிறித்தவ ஆண்டு தொடங்குவதற்கு முன்பாகவே எகிப்து நாட்டின் மிகச் சிறந்த துறைமுகப்பட்டினங்களில் ஒன்றாகக் குசிர் அல் குதாம் என்னும் நகரம் விளங்கியது. இந்நகரத்தை அல் குசிர் என்றும் வழங்குவர். செங்கடல் பகுதிக்கு வரும் கப்பல்கள் இத்துறைமுகத்தில் தங்குவதற்கு ஏற்ப இத்துறைமுக நகரம் அமைந்திருந்தது. தாலமி இதனை வெள்ளைத் துறைமுகம் எனக் குறித்தார். இத்துறைமுகத்தில் வந்திறங்கும் சரக்குகளை எகிப்தின் உள்ளூர் நகரங்களுக்கு எளிதில் எடுத்துச் செல்லும் வகையில் இந்நகரம் நைல் நதியின் வெகு அருகில் அமைந் திருந்தது. நைல் நதியின் கரைகளில் அமைந்திருந்த நகரங்களைக் குறுகிய காலத்திற்குள் அடையக் கடல் வணிகர்கள் இத்துறை முகத்தில் தங்களின் கப்பல்களை நிறுத்துவர். இந்நகரத்தில் இறங்கியே மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள அலெக்சாந்திரியா விற்குத் தமிழ் வணிகர்கள் நைல் நதி வழியாகவும் பாலைவனத்தில் ஒட்டகங்களின் மீதமர்ந்தும் தங்களது வணிகப் பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

உரோமானியர் ஆட்சியின் பொழுது இத்துறைமுகம் இந்தியக் கப்பல்கள் பெருமளவில் வந்திறங்கும் பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதிக்கு முதன்மைத் துறைமுகமாக விளங்கியது. இத்துறைமுகத்திலிருந்து தமிழகத்தின் வாசனைப்பொருள்கள், பட்டுத் துணிகள், மருந்து வகைகள், முத்துக்கள் போன்றவை வந்திறங்கின. இந்நகரத்திலிருந்து உயர்வகை மது வகைகள்,

அழகும் வனப்பும் மிக்க மட்கலன்கள், அரிய உலோகப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இத்தகு சிறப்பு மிக்க துறைமுகமான குசிர் அல் குதாமில் அகழாய்வுகள் மேற்கொண்டதில் இதுவரை மூன்று பானை ஓடுகளில் தமிழ்-பிராமி எழுத்துக்கள் பொறித்த பெயர்கள் கிடைத்துள்ளன. முதலாவதாகக் கிடைத்த பானை ஓட்டில் 'சாதன்' என்றும் இரண்டாவது பானை ஓட்டில் 'கணன்' என்றும் தமிழ்ப் பெயர்கள் காணப்படுகின்றன[14]. இப்பெயர்கள் இரண்டும் இப்பானைகளுக்குரிய தமிழ் வணிகர்களின் பெயர்களாகும். முதல் பானை ஓடு 'சா' எழுத்திற்கு முன்பு உடைந்துள்ளதால் 'சாதன்' என்ற சொல்லிற்கு முன்பு எழுத்துக்களும் இருந்திருக்கலாம். 'கணன்' என்ற பெயர் உள்ள இரண்டாவது பானை ஓட்டில் இப்பெயர் இடைவெளி விட்டு எழுதப்பட்டுள்ளதால் இது தனிப்பெயராக இருக்கலாம். இவ்விரு எழுத்துப் பொறிப்புகளும் பானை ஓடுகளில் மிக ஆழமாக அழுத்தமாகக் கீறப்பட்டுள்ளன. தொல்லெழுத்தியல் அடிப்படையில் இவ்வெழுத்துக்களின் காலத்தை கி.மு. முதலாம் நூற்றாண்டிற்குக் கொண்டு செல்லலாம்.

மூன்றாவதாகக் கிடைத்த பானை ஓட்டில் 'பனைஒறி' என்ற தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்பு காணப்படுகிறது. இது மேற்கூறப்பட்ட இரண்டு எழுத்துப் பொறிப்புகள் போல் அல்லாது மிக மெல்லிய கோடாகக் கூர்மையான கருவி கொண்டு கீறப்பட்ட பொறிப்பாக உள்ளது. இப்பானை ஓட்டின் பட்டையான விளிம்பில் 'பனைஒறி' என்று கீறப்பட்டுள்ளது. இதே போன்று அதன் எதிர்ப் பக்கத்திலும் இச்சொல்லே மீண்டும் எழுதப் பட்டுள்ளது.

இதனைத் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் 'பானை ஒறி' என்று படித்துப் பானையைத் தொங்கவிடும் 'உறி' என்று பொருள் கொண்டுள்ளார். இவ்வெழுத்துப் பொறிப்பில் 'ப' விற்கான நெடில் காணப்படவில்லை. 'ப' எழுத்துக் குறிலாகத் தெளிவாக உள்ளது. மேலும் தமிழ்நாட்டிலும் பிற இடங்களிலும் இதுவரை கிடைத்துள்ள தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புகள் உள்ள மட்கலங்களில் ஆட்பெயர்களே காணப்படுகின்றன. தற்பொழுது கிடைத்துள்ள இப்பானையின் விளிம்புப் பகுதியை நோக்கும் பொழுது அதனை உறியில் இடும் அளவிற்கு அடி மற்றும் வாய் குறுகிய பானையாக இது காணப்படவில்லை.

இப்பானை தமிழகத்தில் பெருவாரியாகக் கிடைக்கின்ற கருப்பு சிவப்பு மட்கல வகையைச் சார்ந்த இரும்புக்கால மட்கல வகையாகும். இதனை ஆய்வு செய்துள்ள அகழாய்வர் இதனைச் சாடி அமைப்புடைய மட்கலன் என்று கூறியுள்ளார்[15]. மேலும் பானையில் உள்ள எழுத்துக்களின் கீறல்கள் தலைகீழாக உள்ளன. எழுத்துக்களின் நேர் வரிசை அடிப்படையில் பானையின் அடி விளிம்பு உண்மையில் வாய்ப்பகுதியாகும்.

இப்பானை நீள் வடிவத்தில் குடுவை போன்ற அமைப் புடையதாக விளங்குகிறது. இருபக்க விளிம்புகள் விரிந்து நடுவில் பட்டையுடன் குறுகிக் காணப்படுகிறது. குறிப்பாக, தமிழகத்தில் இரும்புக் காலத்தில் கிடைக்கின்ற இருபக்க வாய் உடைய பிரிமனை (Dish on stand) அமைப்பை ஒத்த நிலையில் இப்பானை உள்ளது. இது பிரிமனையாக இருப்பின் எழுத்தை எப்பகுதியிலும் எழுதலாம். இப்பானை, பிரிமனை இல்லை யெனில் எழுத்துக்கள் தலைகீழாகக் கீறப்பட்டுள்ளன. அவ்வாறு தலைகீழாக எழுதி உள்ள நிலையில் இப்பானையை உறியில் தொங்கவிட்டாலும் எழுத்துக்கள் தலைகீழாகத்தான் இருக்கும். எனவே, திரு.ஐராவதம் மகாதேவன் அவர்கள் கருதுவது போல் இச்சொல் பானை தொங்கும் உறியைக் குறிப்பதாகாது. நெடிலைக் குறிக்கின்ற கோடு இல்லாத 'ப' எழுத்தை வைத்துப் 'பானை ஒறி' என்று படிப்பதை விடுத்து இதனை ஆள் பெயராகப் 'பனை ஒறி' என்று படிப்பதே சரியாக அமையும்.

இச்சொல்லில் உள்ள பனை இடப்பெயராகவும் இருக்கலாம். 'பனைதுறை' என்ற ஊர்ப்பெயர் ஐவர் மலை தமிழ்-பிராமிக் கல்வெட்டில் ஆட்பெயர் 'வேஸன்' என்பதுடன் இணைந்து வந்துள்ளது[16]. 'பனைதுறை' என்பதின் விகுதியை நோக்கும் பொழுது இது ஒரு துறைமுக நகரமாகவும் இருக்கக் கூடும். எனவே பனை என்னும் இடத்திலிருந்து வணிகம் மேற்கொண்ட 'ஓறி' அல்லது 'ஒற்றி' என்பவர் பயன்படுத்திய கலமாக இதனை எடுத்துக் கொள்ளலாம் அல்லது 'பனை ஒறி'என்றே ஆள்பெயராகவும் படிக்கலாம்.

இது குறித்துத் *தமிழ் ஓசை* (22-11-07) நாளிதழில் திரு. நடன. காசிநாதன் தமது கருத்தை வெளியிட்டுள்ளார். இவரும் இச்சொல் ஆள் பெயராகவே இருக்கவேண்டும் எனப் பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் நிறுவியுள்ளார். இருப்பினும் இவர்

'ஓறி' எனக் குறிக்கப்பட்டுள்ள சொல்லை 'ஓரி' எனப் படித்தல் வேண்டும் எனக் கூறியுள்ளார். இதன் அடிப்படையில் பனை மாலையைக் கொண்டு கொல்லி மலைப் பகுதியை ஆண்ட வல்வில் ஓரி மன்னன் பெயரில் தரித்துக் கொண்ட கொல்லி மழவர் இவர் என்று நட்ன.காசிநாதன் கூறுகின்றார். இச்சொல்லில் இறுதி எழுத்தான வல்லின 'றி' மிகத் தெளிவாக உள்ளது. 'ரி' என்பதற்குப் பதிலாக வல்லின 'றி' எழுத வேண்டிய அவசியம் யாது?. தமிழ்-பிராமியில் 'ரி' எழுதுவது மிக எளிது. வல்லின 'றி' எழுதுவது சிறிது கடினம். 'றி' எழுதுவதில் தடுமாற்றம் ஏற்படுமே தவிர 'ரி' எழுதுவதில் படிப்பறிவு அற்றவரும் பானையில் பார்த்து எழுதுவது மிக எளிது. எனவே இந்த ஆள்பெயரை வல்வில் ஓரியுடன் இணைத்துச் சொல்வதும் ஏற்புடையதாகாது. 'ஓறி' அல்லது 'ஒறி' என்பதற்குச் சரியான பொருளைக் கொள்ளுதல் வேண்டும். 'ஒறி' என்பது 'ஒற்றி' என்பதன் சுருக்கமாகவும் இருக்கலாம். இவ்வகைச் சொற்கள் தமிழ்-பிராமிக் கல்வெட்டுகளில் விரவி வந்துள்ளன. எனவே, இச்சொல் 'பனை ஒறி' என்றோ அல்லது ஒற்றுடன் இணைத்துப் 'பனை ஒற்றி' என்றோதான் படிக்கப் படவேண்டும்.

மேற்குறித்த செங்கடல் துறைமுகப்பட்டினமான குசிர்அல் குதாம் நகரின் தெற்குப் பகுதியில் கடற்கரை நகரமாக விளங்கிய பிறிதொரு துறைமுகப்பட்டினம் பெரணிகே என்னும் நகரமாகும். தமிழக வணிகர்கள் இங்குச் சென்ற பின்பே வடக்கில் உள்ள குசிர் அல் குதாம் துறைமுகத்திற்குச் செல்வர். பெரணிகே நகரம் இப்பொழுது பெர்நைஸ் என வழங்கப்படுகிறது. இங்கு 1994-95-ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட அகழாய்வில் மதுச்சாடித் துண்டில் தமிழ் மொழியில் தமிழ்-பிராமி எழுத்தில் 'கொற பூமான்' என்று அழுத்தமான எழுத்துப் பொறிப்பு கண்டு பிடிக்கப்பட்டது. இவ்வெழுத்துக்களை அடுத்துத் தமிழகத்தின் இரும்புக்காலத்தைச் சார்ந்த இரண்டு குறியீடுகளும் காணப் படுகின்றன. இதனைக் 'கொற்ற பூமான்' என திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் வாசித்துள்ளார்[17]. மெய்யெழுத்துக்கள் இரட்டிப்பு பெறும் என்ற அடிப்படையில் இதனை அவ்வாறு படித்துள்ளார். இதன் காலம் கி-பி. 60-70 என இவ்வறிஞர் கருதுகின்றார். எனவே தமிழர் மேலைக் கடல் வணிகம் இரும்புக் காலத்தில் மிகச் சிறந்த நிலையை அடைந்திருந்தது என்பதை மிகத் தெளிவாக அறிய முடிகிறது.

இச்சான்றுகளுக்கெல்லாம் கட்டியம் கூறுவது போல் கிறித்தவத் தொடக்க காலத்தில் எழுதப்பெற்ற, வியன்னா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள பேப்பிரஸ் தாள் ஆவணத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை அண்மையில் இராசன் அவர்கள் வெளியிட்டுள்ளார்[18]. இது தமிழகத்தின் முசிறி துறைமுகத்திற்கும் உரோமானியர் துறைமுகமான அலெக்சாந்திரியாவிற்கும் இடையில் நிகழ்ந்த வணிகம் குறித்த செய்திகளைத் தரும் ஆவணமாகும். கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ள இவ்வாவணம் ஒரு வணிகர் தன் வணிகத்திற்காகக் கடனளித்தவருக்கு அளித்த கடன் ஒப்பந்தப் பத்திரம் ஆகும்[19]. இவ்விருவரின் பெயர்களை இவ்வாவணத்தின் மூலம் அறிய முடியவில்லை. இருப்பினும் அக்காலத்தில் நடந்த வணிக அமைப்பை இவ்வாவணம் தெளிவாகத் தெரிவிக்கின்றது. இவ்வாவணத்தில் உள்ள வணிகப் பொருள்கள் குறித்து ஆய்வு செய்த ஆய்வாளர் காஸன் என்பார் இப்பொருள்களின் மதிப்பீட்டு விலை மூலம் நைல் நதியில் வளமை மிக்க 2400 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை வாங்கலாம் எனக் குறிப்பதை இராசன் சுட்டியுள்ளார்.

வணிகர்கள் முசிறியில் இருந்து புறப்பட்டு மேலைக் கடற்கரையை ஒட்டியே தங்களது கப்பல்களைச் செலுத்தி, செங்கடலில் முதலில் பெரணிகே பகுதியை அடைந்து அதன் பிறகு குசிர் அல் குதாம் துறைமுகத்தை அடைந்துள்ளனர். அங்கிருந்து மேற்கே நைல் நதியின் கரையில் உள்ள கோபடஸ் நகரத்தைச் சாலை வழியாகக் கடப்பர். வணிகப் பொருள்களை ஒட்டகத்தில் ஏற்றி அந்நகரத்தில் சுங்க வரி செலுத்துவர். பின்னர் அங்கிருந்து படகுகளை வாடகைக்கு அமர்த்திப் பொருள்களை ஏற்றி நைல் நதியின் வடக்கு நோக்கிச் சென்று நைல்நதியின் மேற்குக் கரையை அடைந்து மீண்டும் அங்குச் சுங்கவரி செலுத்தி விட்டு நைல் நதியில் தங்களது பயணத்தைத் தொடர்வர். நீண்ட நெடும் படகுப் பயணத்திற்குப் பின் நைல் நதியின் கரையில் இருந்த பல நகரங்களை அடைந்து இறுதியாக நிலநடுக் கடலின் தெற்கில் அமைந்துள்ள அலெக்சாந்திரியா நகரத்தை அடைவர். இப்பயணங்கள் குறித்த ஒரு சான்றாக வியன்னா பெப்பரஸ் தாள் விளங்குகிறது.

இவ்வாவணத்தின் அடிப்படையிலும் மேற்குறித்த புதிய தொல்லியல் கண்டுபிடிப்புக்களின் அடிப்படையிலும் கழக

இலக்கியங்களில் பெருமளவில் சுட்டப்படும் வணிக நடவடிக்கைகளின் அடிப்படையிலும் தமிழர் மிகச் சிறந்த பொருளாதார நிலையை அடைந்திருந்தனர் என்பதையும் அக்கால கட்டத்தில் தமிழகம் சிறந்த அரசுருவாக்கத்தைப் பெற்றிருந்தது என்பதையும் தெளிவாக அறியலாம்.

## சான்றெண் விளக்கம்

---

[1] *சங்க இலக்கியங்களில் கடல் கடந்து செல்லும் நாவாய் என்னும் பெரிய கலங்கள் குறித்துப் பல இடங்களில் சுட்டப்பெறுகிறது.*

[2] Cherian, P. J., Selvakumar, V. and Shajan, K.P. 2007, "The Muziris Heritage Project Excavations at Pattanam", *Journal of Indian Ocean Archaeology*, Vol. 4, pp.1-10

[3] Rajan, K., Athiyaman, N., Rajesh, M., and Saranya,M., 2005, 'Excavations at Thandikudi, Tamil Nadu', *Man and Environment* XXX (2):49-65.

[4] Paula, J. Turner, 1989, *Roman Coins from India*, Institute of Archaeology, Occasional Publications No.12. Roman Numismatics Society, London.

[5] Majumdar, R.C. 1960, *Classical Accounts of India*, South Asia Books; Repr. 1960 edition (June 1980) p.274.

[6] *இராசுவேலு.சு. திருமூர்த்தி.கோ. 1995, தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள்,* பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை.

[7] Michael Mitchiner, 1995, *Coin Circulation in Southernmost India*, Indian Institute of Research in Numismatic Studies, Maharastra.; Sharma, T.K., 1992, *South Indian Coinage A Review of Recent Discoveries*, Tamil Nadu Numismatic Society, New Era Publications, Madras. p.16.; Krishnamurthy, R., 1994, "Coins from Phoenicia found at Karur", *Studies in South Indian Coins, Vol .IV;* Krishnamurthy, R. 1997. *Sangam Age Tamil Coins*. Garnet Publications, Madras; Paula, J. Turner, 1989, *Roman Coins from India*, Institute of Archaeology, Occasional Publications No.12. Roman Numismatics Society, London.

[8] Abdual Majeed, A., Thulasiraman. D., Vasanthi.S., 1992, *Alagankulam - A Preliminary Report*, Dept. of Archaeology, Chennai; Sridhar.T.S.(ed..), 2005, *Alagankulam-An Ancient Roman Port City of Tamil Nadu*, Tamil Nadu State Dept. of Archaeology, Chennai.

[9] Wheeler. R.E.M., Ghosh, A. and Krishna Deva. 1946, "ARIKAMEDU: An Indo-Roman Trading-station on the East Coast of India", *Ancient India*.vol. 2:17-124.

[10] Nagaswamy, R. and Abdul Majeed, A. 1978, *Vasava Samudram*, Tamil Nadu State Dept.of Archaeology, Chennai.

[11] Begley, V. 1991, "Ceramic Evidence for Pre-*Periplus* Trade from Arikamedu", In *Rome and India* (ed.), Begley, V. and Puma, R.D.D., Oxford University Press, Delhi.pp.157-196.

[12] Paula, J. Turner, 1989, *op.cit.,*; Sharma, T.K., 1992, *op.cit.*

[13] Sidebotham, S.E. 1991, "Ports of Red Sea and the Arabia-India Trade", In *Rome and India* (ed.), Begley, V. and R.D.D. Puma, Oxford University Press, Delhi.pp.157-196.

[14] Sidebotham, S. and Willemina W., 1996, *Berenike 95:Preliminary Report on the excavation of Berenike,* Leiden.

[15] Iravatham Mahadevan, "Tamil Brahmi Script in Egypt", *The Hindu*, 21.11.2007

[16] ஸ்ரீதர், தி. (ப.ஆ.), 2006, *தமிழ்-பிராமி கல்வெட்டுகள்*, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, பக்.56-57.

[17] ஐராவதம் மகாதேவன், 1998, "எகிப்து நாட்டில் தமிழில் எழுதிய தாழி", *ஆவணம்*, இதழ் 9, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக். 17-19.

[18] ராஜன், கா., 2006, "முசிறி- அலெக்ஸாண்டிரியா வணிக உடன்படிக்கை: ஒரு தொல்லியல் பார்வை" *தமிழகக் கடல்சார் வரலாறு: அண்மைக்கால ஆய்வுகள்,* (ப.ஆ.) அதியமான், ந., ஜெயக்குமார், பா., தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், பக்.33-45.

[19] வியன்னா அருங்காட்சிகயத்தில் வைக்கப்பட்டுள்ள முசிறியைக் குறித்த பேப்பிரசு ஆவணம் முன்னர் வணிக ஒப்பந்தம் எனக் கருதப்பட்டது. ஆனால் அதில் உள்ள செய்திகளை மீளாய்வு செய்த அறிஞர்கள் இவ்வாவணம் ஒரு வணிகருக்கு இந்தியாவில் வணிகம் மேற்கொள்ள உரோம் நாட்டைச் சார்ந்த பணக்காரர் ஒருவர் அளித்த கடன் பத்திரம் எனக் கருதுகின்றனர். இது வணிக ஒப்பந்தம் இல்லையெனினும் இவ்வாவணம் பழந்தமிழகத்திற்கும் உரோம் நாட்டிற்கும் இருந்த வணிகத்தொடர்பின் தன்மையை நன்கு விளக்குகிறது என்பதில் ஐயமில்லை (முனைவர் ந.அதியமான் அவர்களிடம் அறிந்த நேரடித் தகவல்).

# 3. சங்க காலத் தமிழகத்தில் வெளிநாட்டு வணிகம்

*மா.பவானி*

ஒரு நாடு தமது மக்களுக்கு வேண்டிய இயற்கை வளம் யாவற்றையும் பெற்றிருத்தல் இயலாது. அப்படியே தன்னிறைவு பெற்று விளங்கினாலும் உபரியாக உள்ளதைப் பிற மக்களுடன் பகிர்ந்தே வாழத் தலைப்படும். எனவே, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் பொருள் பரிமாற்றம் என்பது இன்றியமையாத ஒன்றாகும். அயல்நாட்டு வணிகமும், உள்நாட்டு வணிகமும் தமிழகத்தில் சிறப்பான முறையில் நடைபெற்றுள்ளன. தமிழர்கள் ஐரோப்பிய, ஆசிய நாடுகளுடன் கடல், தரை மூலமாக வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**கடல் வணிகம்**

தொன்மைக் காலம் தொட்டே கடல் கடந்து வணிகம் செய்தமைக்கு 'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி' என்ற புறப்பாடல் வரி சான்றாக அமைகிறது. தமிழர்கள் கடலோரமாகவும் நடுகடலிலும் பயணம் செய்து வணிகம் செய்துள்ளனர்[1]. நாட்டின் கரையோரங்களில் செல்வதற்குச் சிறு அளவிலான ஓடங்களையும், பிற நாட்டு வணிகத்திற்கு நுண்ணிய தொழில் நுட்பமிகுந்த பெரிய நாவாய்களையும் பயன்படுத்தியுள்ளனர் என அறிகின்றோம். 'நாவாய்' என்ற லத்தீனியச் சொல்லே தமிழகக் கப்பல்கள் மற்றும் யவனர்கள் வணிகத்துடன் கொண்டுள்ள தொடர்பினை விளக்கும் சான்றாக விளங்குகின்றது[2].

## வடஇந்தியாவுடன் வணிகம்

வேத காலத்திலிருந்தே, தென்னகத்துடன் வட இந்தியர்கள் தொடர்பு கொண்டுள்ளனர். ஆரிய முன்னோடிகள் தென்னாட்டிற்கு அமைதியான வழியில் ஊடுருவி வந்தனர்[3]. ஆயினும் அண்மைக்காலச் சான்றுகள் மேலைக் கடற்கரை வழி நடைபெற்ற வணிகத்தையே பெரிதும் புலப்படுத்துகின்றன. தொண்டி, முசிறி, பூம்புகார், கொற்கை, சோபட்டினம் முதலான தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலிருந்து நாவாய்களைச் செலுத்தி நெல்லூர், கலிங்கப்பட்டினம் ஆகிய தேசங்களுக்குச் சென்று பிறகு கங்கையாறு கடலில் கலக்கிற துறைமுகத்தின் ஊடே கங்கையாற்றில் நுழைந்து பாடலிபுரம், காசி ஆகிய ஊர்களில் வணிகம் செய்துள்ளனர். இது 'கங்கை வங்கம் போகுவர் கொல்லோ' என்ற *நற்றிணைப்* (189:5) பாடலிலிருந்து தெரிகிறது[4].

தமிழ் வணிகர் கலிங்கப் பகுதியிலும் வணிகம் செய்துள்ளனர். தமிழக வணிகச் சாத்து ஒன்று கி.மு.3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு.150 வரையில் அங்கு இருந்து வந்தது. அக்காலத்தில் கலிங்க தேசத்தை ஆண்ட காரவேலன் என்னும் அரசன் தமிழ் வணிகர்களால் தனது ஆட்சிக்கே ஆபத்து உண்டாகும் என்று அந்த வணிகச் சாத்தை அழித்துவிட்டதாக அவ்வரசனது ஹதிகும்பா கல்வெட்டு கூறுகிறது. கலிங்க நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட முக்கியமான பொருள் 'கலிங்கம்' என்னும் துணியாகும். கலிங்கத்திலிருந்து வந்தமையால் அது கலிங்கம்[5] என்றே பெயர் பெற்றது. இவையனைத்தும் கலிங்கத்தோடு தென்னகம் கொண்டிருந்த தொடர்பை அறிய உதவுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் இறங்கிய பொருள்கள் பற்றிக் கூறும் *பட்டினப்பாலை* வடமலைப் பிறந்த மணியையும், பொன்னையும் குறிப்பிடுகின்றது. கி.மு.5-ஆம் நூற்றாண்டிலிருந்து வட இந்தியாவில் புழக்கத்திலிருந்த முத்திரை, நாணயங்கள், தமிழ்நாட்டில் பல இடங்களில் குவியல்களாகவும், சிதறல்களாகவும் கிடைக்கப் பெற்றுள்ளன[6]. இத்துடன் மௌரியர் காலத்தில், வட இந்தியா முழுவதும் பரவலாகப் புழக்கத்திலிருந்த என்.பி.பி (Northern Black Polished Ware) மட்கலங்கள் கொற்கை, அழகன்குளம்[7], கரூர் போன்ற இடங்களில் கிடைப்பது கொண்டும், ஆந்திரப் பகுதியை ஆண்ட சாதவாகனர்களின் (நூற்றுவர்கன்னர்) நாணயங்கள் தமிழ்நாட்டில்[8] கிடைப்பதைக் கொண்டும், இக்கால கட்டங்களில் தமிழகம் தென்னிந்தியாவின் பிறபகுதிகளுடனும்

வட இந்தியாவுடனும் சிறந்ததொரு வணிக உறவைக் கொண்டிருந்தது என்பது தெளிவாகும்.

## வெளிநாட்டினருடன் வணிகத் தொடர்புகள்

தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, கடல் கடந்து சென்று வணிகம் செய்திருப்பதைப் பல இலக்கியச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறிமூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற்றுகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்
*(பட்டினப்பாலை 185-191)*

மேற்கணும் பொருள்கள் கடல் வழியாகக் கப்பல்களில் வந்தவை என கடியலூர் உருத்திரங்கண்ண்னார் குறிப்பிடுகின்றார். இவற்றின் வணிகம் குறித்து இங்கு விளக்கப்பெறுகிறது. 'நிமிர்பரிப்புரவிகள்' இந்தியாவிற்கு உரிய விலங்கு அன்று. எனவே இவை பாரசீகம், சிந்து போன்ற தேசங்களிலிருந்து கப்பல் வழியாகக் கொண்டு வரப்பட்டவையாகும்.

'கால்' என்பது காற்றைக் குறிக்கிறது[9]. காற்றின் உதவியினால் பாய்மரக் கலங்கள் மூலம் கடல் வழியாகக் கொண்டுவரப்பட்ட (கறி) மிளகு மூட்டையைக் குறிக்கிறது. சாவகநாட்டு மிளகு சேரநாட்டு மிளகைப் போல அவ்வளவு சிறந்ததன்று. சேரநாட்டு மிளகை யவனர்கள் பெரிய நாவாய்களில் வந்து பெருவாரியாக வாங்கிச் சென்றபடியால் அது பற்றாக்குறைப் பொருளாக இருந்தது. ஆகவே, கிழக்குக்கரைப் பகுதியிலிருந்த சோழநாட்டு வணிகர் சாவக நாட்டிலிருந்து மிளகைக் கொண்டு வந்து விற்றார்கள்[10]. இலத்தீன் மொழியில் 'பெப்பர் நிகரம்' (Paper Nigarum) என்று வழங்கப்படும் மிளகு வெள்ளை மிளகு, கறுப்பு மிளகு என இருவகைகள் உள்ளது. உரோமானியப் பேரரசர்கள் எகிப்தின் படையெடுப்பின் போதும், ஆசியா மைனரின் படையெடுப்பின் போதும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு அயல்நாடுகளில், செலாவணியாகும் மிளகையும், இலவங்கப் பட்டையையும் கண்டு அவற்றின் சுவை அறிந்து அவற்றைத் தங்கள் நாட்டிற்கு

வரவழைக்கத் தொடங்கினர். எகிப்தியர்களும் பாபிலோனியர்களும் கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரிருந்தே மிளகை அறிந்து பயன்படுத்தி வந்தனர். சீனா, கேரளத்து மிளகை கி.மு.3-ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இம் மிளகு வணிகமானது முற்கால வணிகர்களுக்குப் பெருஞ்செல்வத்தைக் கொடுத்தது. உரோமானியப் பேரரசிற்கும் இந்தியாவிற்கும் இடையே சென்ற கப்பல்களின் சரக்கில் முக்கால் பகுதி மிளகும் வாசனைத் திரவியங்களும் அரிய கல்மணிகளுமாகவே இருந்தன. இவை தென்னிந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. இம்மிளகு மருந்தாகவும், உணவாகவும் பயன்படுத்தப்பட்டதால் உரோம் நகரில் ஒரு பவுண்டு 15 தினாரி வரை விற்கப்பட்டது[11].

'வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்' என்பது, வடமலையிலிருந்து வந்தனவற்றைக் குறிக்கிறது. 'குடமலைப் பிறந்த ஆரமும், அகிலும்' என்பன மேற்குத் தொடர்ச்சி மலையில் உண்டான சந்தனம், அகில் இவற்றைக் குறிக்கின்றது. 'தென்கடல் முத்து' என்பது பாண்டியநாட்டு மன்னார் வளைகுடாவில் உண்டான முத்தாகும். 'குணகடல் துகில்' என்பது கிழக்குக் கரையிலிருந்து வந்த பவளமாகும், 'கங்கைவாரி' என்பது கங்கையாற்றங்கரை மேலிருந்த பாடலிபுரம், வாரணாசி முதலான ஊர்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பொருள்களாகும். 'ஈழத்து உணவு' என்பது இலங்கையில் உண்டான உணவு பொருள்களாகும். 'காழகம் 'என்பது தென்கிழக்காசிய நாடுகளின் ஸ்வர்ணம் விளையும் ஒரு பகுதியாகும்.

இந்நாடுகளுடன் மட்டுமன்றி வடஆப்பிரிக்க நாடான எகிப்து, ஐரோப்பிய நாடுகளான கிரேக்கம், உரோம், மேற்காசிய நாடுகள், சீனா, தென்கிழக்காசிய நாடுகள் ஆகியவற்றுடனும் தமிழர்கள் வணிகம் செய்து வந்துள்ளனர். கி.பி.1-2-ஆம் நூற்றாண்டுகளில்தான், இந்தியாவுடனான உரோமானிய வணிகம் சிறப்பான முறையில் நடைபெறத் தொடங்கியது. இக்கால கட்டத்தில் மேற்கு நாடுகளையும், மேற்காசிய நாடுகளையும், இணைத்ததில் அரேபியா, ஆசியாமைனர், வடகிழக்கு ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் பாலமாகத் திகழ்ந்தன. உரோமிற்கும் இந்தியாவிற்குமான வணிகத்தில் அலெக்சாண்டிரியாவின் கிரேக்கர்கள் (Alexandrian Greeks), சிரியாவின் யூதர்கள், ஆர்மெனியர்கள், அரேபியர்கள் போன்றோர் இடைத் தரகர்களாக செயல்பட்டு கிழக்கு

நாடுகளுடனான வணிகத் தரைவழியை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்ததன் மூலம், அதன் வணிகத்தையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர்.

இந்தியாவின் கடற்கரைக்கும், இத்தாலிய நாட்டிற்கும், சமதூரத்தில் அமைந்திருந்த அரேபிய, ஐரோப்பிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கான மத்திய வணிகத் தளமாக விளங்கியுள்ளது. பாரசீக வளைகுடாவும், செங்கடலும், மத்திய தரைக் கடலையும், இந்தியப் பெருங்கடலையும் வணிகம் மூலம் இணைப்பதற்கு உதவின. ஆசியாமைனரும், அரேபியாவும், மத்திய தரைக்கடலுடன் அதிகத் தொடர்பு கொண்டிருந்ததால் இந்தியப் பொருள்களை கொண்டு சென்று மேலை நாடுகளில் வணிகம் செய்துள்ளனர்[12]. முதலில் மத்திய தரைக்கடல் நாடுகளே வணிகத்தில் சிறந்து விளங்கியுள்ளன. கி.பி.முதல் நூற்றாண்டளவில்தான் உரோமானியப் பேரரசின் கட்டுப்பாட்டுக்கு இவ்வணிகம் மாறி யுள்ளது.

## எகிப்து

தமிழ்நாட்டு வணிகர்கள் எகிப்து முதலான வடஆப்பிரிக்க நாடுகளோடு வணிகம் செய்வதற்கு இடைத் தரகர்களாக அரேபியர்கள் விளங்கினர். தமிழ் வணிகர் பாரசீக வளைகுடா, ஏடன் பகுதியோடு தங்களது வணிகத்தை நிறுத்தி விட்டனர். அங்கு தமிழ் வணிகரிடமிருந்து மிளகு, ஏலம், இலவங்கம், இஞ்சி, அகில், சந்தனம், தங்கம், கருங்காலி, தேக்கு, முத்து முதலானவற்றையும், நூலும் பட்டும் கலந்து நெய்யப் பெற்ற சோழநாட்டு உறையூர்ப் பூந்துகிலையும் (Argaritic) நிரப்பிக் கொண்டு அவற்றை எகிப்தின் சிறந்த துறைமுகமான அலெக்சாண்டிரியா (சிரியாவின் தலைநகர்) டமாஸ்கஸ், பாக்தாத் (ஈராக் தலைநகர்) சிற்றாசியா போன்ற இடங்களுக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து, விலையுயர்ந்த பொன்னிழை ஆடைகள் டமாஸ்கஸின் புகழ்மிக்க பட்டாடை, வேலைப்பாடமைந்த கண்ணாடிப் பொருள்கள், பன்னீர், அத்தர் போன்ற பொருள்களைத் தமிழ்நாட்டு வணிகர்களுக்கு அளிப்பர். கிறித்தவ சகாப்தத்திற்கு முன்பே 2500 ஆண்டுகளுக்கு முன்னரே நறுமணப் பொருள்கள், சிறுத்தைப்புலி, தந்தம், நூலாடை, கருங்காலி, அரிசி முதலான பொருள்களை அவர்கள் விரும்பி வாங்கியுள்ளனர்[13]. மேலும் எகிப்துடனான வணிகத் தொடர்பை விளக்கும் மிகச் சிறந்த சான்றாக, எகிப்தின் செங்கடல்

கழிமுகத்தில் அமைந்துள்ள துறைமுகமான குசிர் அல் குவாதிம் நகரில் (Quseir-al-Quadim) கிடைக்கப்பெற்ற கி.பி.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த 'சாதன்' (சாத்தன்) என்றும் 'கணன்' என்றும் தமிழ்-பிராமி எழுத்து பொறிக்கப்பெற்ற பானை ஓடுகளும், 'கொற்றப்பூமான்' என்று பெயர் பொறிக்கப்பெற்ற பானை ஓடும் கிடைக்கப் பெற்றுள்ளன[14]. மேலும் அங்கு நடத்தப்பெற்ற அகழாய்வில் 'மிளகு' கிடைக்கப்பெற்றது இங்குக் குறிப்பிடத் தக்கது[15]. அதுமட்டுமன்றி அண்மைக்காலத்தில் இதே பகுதியில் 'பனை ஓறி' என்று தமிழ் பிராமி எழுத்தில் கிடைக்கப்பெற்ற பானை ஓடும் இதை உறுதி செய்யும்[16]. இந்திய ஆடைகள் பாலஸ்தீனியரால் பெருமளவில் இறக்குமதி செய்யப்பெற்றன. இந்தியப் பஞ்சு எகிப்திய மதகுருக்களால் அங்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பல புனிதப் பணிகளுக்குப் பருத்தியையும், நார் இழைகளையும் ஒன்று கலந்து பயன்படுத்தி உள்ளனர் என வார்மிங்டன் கூறுகின்றார். அதேபோல் இலவங்கம் எகிப்திற் கென்றே சிறப்பாக ஒதுக்கப்பட்டுள்ளது[17]. நாணயப் புழக்கம் அவர்களிடம் இல்லாததால் பொருள்களுக்குப் பதிலாகத் தங்கம் அல்லது செம்பு மோதிரங்களைத் தரும் வழக்கம் காணப் பட்டுள்ளது. இத்தகைய மோதிரப் பணப்புழக்கம் எகிப்தில் மட்டுமே வழக்கில் இருந்து வந்துள்ளது எனப் பண்டைய நாகரிகங்களின் வரலாற்றை மேற்கோளாகக் கூறி விளக்குகிறார் சசிவல்லி.

## அரேபியர்கள்

தமிழ்நாட்டிற்கு வடமேற்கிலிருந்து வந்த அரேபிய வணிகர் சேரநாட்டின் முசிறித் துறைமுகத்திற்கு வந்து வணிகம் செய்துள்ளனர். 'முசிறி' என்பது 'முசாரிபஸ்' என்ற அரபுச் சொல்லினடியாகப் பிறந்ததாகவும் கொள்ளலாம். 'முசாரிய' என்றால் 'பயணிகள் தங்கும் இடம்' என்று பொருள். இது முசாரியஸ் எனக் கூறப்படத் தொடங்கி, நாளடைவில் முசிறி என்றாயிற்று[18]. இவ்வாறு இடைத்தரகர்களாய் இருந்த அரேபியர்களின் வணிகத்தைக் கிரேக்கர்களும், உரோமானியர்களும் பற்றிக் கொண்டனர். அதன் பின்னர் மீண்டும் கி.பி.7-ஆம் நூற்றாண்டில் இவர்களது வணிகம் தொடர்ந்தது. 'இஞ்சி' இந்தியப்பொருள் எனத் தெரியாத அளவிலேயே அரேபிய இடைத் தரகர்கள் அதை அரேபிய ஏற்றுமதிப் பொருள் எனக் கருதும் அளவில் வணிகம் செய்ததாக வார்மிங்டன் விளக்குகிறார்.

மேற்காசிய நாடுகளுடனும் தமிழகம் நன்முறையில் வணிகத் தொடர்புகள் கொண்டுள்ளது. ஆரம்ப காலம் தொட்டே, மெசபடோமிய பள்ளத்தாக்கோடு சிந்துவெளி கொண்டுள்ள தொடர்பை செரீன் ரத்னாகர், தனது ஹரப்பன் என்கௌண்டர் என்னும் நூலில் விளக்கி உள்ளார். கி.மு.10 ஆம் நூற்றாண்டில், மன்னர் சாலமன் (பாலஸ்தீன்) காலத்தில் அவனது கலங்கள் மூன்றாண்டிற்கொருமுறை பொன், வெள்ளி, யானைத்தந்தம், சந்தன மரங்கள் போன்ற பொருள்களையும் வாலில்லாக் குரங்கு, மயில்களையும் வாரிவந்து வழங்கும் என அந்நாட்டு வரலாற்று நூல்கள் கூறுகின்றன. கடைசியாகக் கூறப்பெறும் இரு பொருள்கள் ஹிப்ருவேத நூலில் (Hibrew Bible) கபின், துகிம் (Kapin, Tukim) என்ற சொற்கள் தமிழ்ச் சொற்களான கவி, தோகை என்ற சொல்லிற்காக வழங்கப் பெற்றுள்ளன[19]. ஊர் என்ற இடத்திலுள்ள சந்திரக் கடவுள் ஆலயத்தை நெபுசேட்நேஸர், நிமிநிடன் இவர்கள் புனரமைப்புச் செய்வதற்காகப் பயன்படுத்திய தேக்கு மரங்கள் மலபார் கடற்கரையிலிருந்து[20] பெற்றவை என்ற செய்தி கொண்டும், மேலும், கரூரில் கிடைக்கப்பெற்ற பொனிசிய நாணயங்களிலிருந்தும்[21] மேற்காசியாவுடனான தமிழர் வணிக உறவுகளை அறியலாம்.

**கிரேக்கர்கள்**

கிறித்தவ ஆண்டு பிறப்பதற்கு முந்தைய 500 ஆண்டுகளில் ஐரோப்பாவுடனான இந்திய வணிகத்தில் கிரேக்கர்கள் இடைத்-தரகர்களாக செயல்பட்டனர். பல நாடுகளுக்கு இடையிலான இப்பரிமாற்றத்தால் வணிகப் பண்டங்களின் தமிழ்ப் பெயர்கள் கிரேக்க மொழியில் இடம் பெற்றுள்ளன. தமிழ்ச் சொல்லான அரிசியிலிருந்து 'ஓரைஸ்' என்ற பெயரும், இலவங்கப்பட்டையாம் 'கருவா'விலிருந்து 'கார்பியென்' என்ற பெயரும் தமிழ் 'இஞ்சி' யிலிருந்து 'ஜிஞ்சிபெரோஸ்' என்ற பெயரும் கிரேக்க மொழியில் பயன்பாட்டில் வந்துள்ளன. ஜூலியஸ்சீசரால், அலெக்ஸாண்டிரியா கி.மு.47-இல் கைக்கொள்ளப்பட்டுள்ள போதிலும் கடல் வணிகம் அரேபியாப் படகுகள் கடற்கொள்ளைக்காரர் மகனின் பிடியில் சிக்குண்டிருந்த கடற்கரையை ஒட்டி நடைபெற்று வந்திருந்தமையால் அக்கால வணிகம் சிறிய அளவில் நிலையற்ற தன்மையிலேயே நடைபெற்று வந்துள்ளது. அக்காலத்தில் ஐரோப்பாவிற்கு என்னென்ன ஏற்றுமதி செய்தாலும் அவை பெரும்பாலும் உரோமுக்குச் செல்லாமல், கிரேக்கத்திற்கே சென்றுள்ளன[22].

கி.மு.2-ஆம் நூற்றாண்டு அளவில்தான் தூரக்கிழக்கு நாடுகளின் பண்டங்கள் கணிசமான அளவு உரோமை வந்தடையலாயின. கிரேக்கர்கள் தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்துடன் வணிகம் செய்ததற்குச் சான்றாகக் கிரேக்க நாணயங்கள் தமிழகத்தில் கிடைக்கப் பெற்றுள்ளன[23]. கலங்கள் பற்றிக் குறிப்பிடும்போது, கிரிசி என்ற ஊருக்கும், கங்கை நதிக்கும் செல்லும் கப்பல்கள் கொலண்டியா என அழைக்கப் பட்டதாகப் *பெரிப்ளூஸ்* கூறுகிறது. தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்படும் யவனர்கள் என்ற சொல் கிரேக்க மொழியில் ஐயோனிஸ் (Ionaes) என்ற சொல்லிலிருந்து வந்ததாகும்.

கிறித்தவ ஆண்டு துவக்கத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, இந்தோசீனாவுடன் வணிகம் செய்வதற்கு வட இந்தியாவிலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் வணிகர்கள் நிலவழியாக பர்மா மூலம் அதன் தென் கடற்பகுதியை அடைந்து, அங்கே தங்கள் குடியிருப்புகளையும், வணிக நிலையங்களையும் நிறுவினர். தூரக்கிழக்கிற்கு நறுமணப்புகை தரும் பொருள்கள் அனுப்பப்பெற்றுப் பட்டு, சர்க்கரைக்காக பரிமாற்றப்பட்டன. தமிழகத்திற்குக் கிழக்கே ஆயிரம் மைல்களுக்கு அப்பால் சிறியதும் பெரியதுமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிழக்கிந்தியத் தீவுகள் உள்ளன. சங்க காலத் தமிழர் அக்காலத்தில் அந்தத் தீவுகளுக்குச் சென்று வணிகம் செய்தார்கள். அவர்கள் அந்தத் தீவுகளுக்குச் சாவகநாடு என்று பெயரிட்டிருந்தார்கள். *மணிமேகலைக்* காவியம் சாவகநாட்டைக் கூறுகிறது. இதைச் சூழ்ந்திருந்த மற்ற தீவுகளில், உற்பத்தியான பொருள்கள் எல்லாம் இத்தீவிற்குக் கொண்டுவரப்பட்டு விற்கப்பட்டன. தமிழ் நாட்டிலிருந்து சென்ற வணிகரும், வட இந்திய வணிகரும், சீன நாட்டிலிருந்து சென்ற வணிகரும், சாவகத் தீவுடன் வணிகம் செய்தனர். அக்காலத்தில் சாவகம் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே மத்திய வணிக நிலையமாக இருந்தது. மற்ற நாடுகளில் கிடைக்காத பளிதவகை இலவங்கம், சாதிக்காய், குங்குமப்பூ முதலான வாசனைப் பொருள்கள் அங்கு உண்டாயின என மயிலை சீனி வேங்கடசாமி கூறுகின்றார். இவரது கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் தாய்லாந்தில் சோழரது புலிச்சின்னம் பொறிக்கப் பெற்ற இரு நாணயங்களும், பெரும்பத்தன் கல்லும் (Touch Stone) விளங்குகின்றன[24].

சீனநாட்டுடனான தமிழர் வணிகம் வெகுகாலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இவ்வணிகம் குறித்து எழுத்து மூல ஆவணங்கள் சில இன்றும் அழியாமல் உள்ளன. *சிலப்பதிகாரம்* ஊர்காண் காதையில் வணிகப் பொருள்கள் பற்றிக் கூறுமிடத்து சீனக்கற்பூரம் என்ற ஒருவகைப் பொருள் குறிப்பிடப்படுகின்றது. இது, சீன நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக இருக்கலாம் அல்லது தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து சீனா பெற்று அதைத் தமிழகத்திற்குக் கொடுத்திருக்கலாம். கி.பி.முதல் நூற்றாண்டைச் சேர்ந்த பான் கௌவ் (Pan kou) என்ற சீன எழுத்தாளரது எழுத்து மூலமாக ஆவணங்கள் க்குவாங்-ட்ஸீ (Huang - Tse) விற்கும், சீனாவிற்கும் வூ-வின் காலம் தொட்டு வணிக உறவுகள் இருந்துள்ளதை வெளிப்படுத்துகின்றன. எனவே இவடா குறிப்பிடும் க்குவாஸ்-ட்ஸீ என்பது ஹன் அரசர்களது காலத்தில், சீனா வணிகத் தொடர்பு கொண்ட காஞ்சியே எனக் கருதப்படுகின்றது[25]. புதுக்கோட்டைக்கு அருகில் ஒலயக்குன்னம் என்ற இடத்தில் (San-Chu) சான்-சூ, (Sin-Chu) சின்-சூ என்ற கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீன அரசர்களது நாணயங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. சாந்தி என்று தமிழ் மொழியில் பொருள் தரும் ஹீயான் என்று சீன மொழியில் எழுதப்பட்ட வெண்கலமணி, நாகை மாவட்டம் மயிலாடுதுறை அருகில் தேரழுந்தூரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது[26]. சோழமண்டலக் கடற்கரையில் இருந்த பௌத்த விகாரத்திற்குச் சீனநாட்டு யாத்ரீகரோ, வணிகரோ, மாலுமியோ இம்மணியை அளித்திருக்கலாம் என வரலாற்று வல்லுநர்கள் கருதுவதிலிருந்தும், சீனா, தமிழகத்துடன் கொண்டுள்ள வணிக, சமயத் தொடர்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

கி.பி.2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க மொழியில் எழுதப்பெற்ற பேப்பிரஸ் (Papyrus Document) ஆவணம், ஆஸ்த்திரியா நாட்டின் தலைநகரான வியன்னாவில் உள்ள அருங்காட்சியகத்தில் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக அலெக்சாண்டிரியா, சேரரது முசிறித் துறைமுகத்துடன் உரோமனியர் காலத்தில் கொண்டிருந்த வணிகத் தொடர்புகளை அறியமுடிகின்றது[27].

மேற்கண்ட ஆதாரங்களைக் கொண்டு தமிழர்கள் ஐரோப்பா, மேற்கு, தெற்கு, கிழக்கு ஆசிய நாடுகளுடனும் ஆப்பிரிக்க நாடுகளுடனும் மேற்கொண்ட மிகச்சிறந்த வணிக

நடைமுறைகளை அறியமுடிகிறது. இங்கு அவர்களது வணிகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பெற்ற பொருள் களைப் பற்றி விளக்கப்பெறுகிறது.

சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில், அடியார்க்கு நல்லார் சோழ நாட்டின் வணிகப் பொருள்கள் பற்றிக் கூறுகின்றார். அவை: அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் எனப்பெற்ற அகிலின் தொகுதியும், கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், சித்திரக்கம்பி, குருதி, பேடகம், கரியல், பரியட்டக்காசு, வேதங்கள், புஸ்கர்காழகம், சில்கைதூரியம், பங்கம், வண்டை, சுவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பென்னெழுத்து, கிச்சர், தேவகிரி, சாத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்-பொத்தி எனப்பெற்ற துகிலின் தொகுதியும் மலையாரம், தீமுரன்பச்சை, கிழான்பச்சை, பச்சைவெட்டை, அரிசந்தனம், வேர், சுக்கொடி எனப்பெற்ற ஆரத்தொகுதியும் அம்ரேச்சம், கத்தூரி, சவ்வாது, சாந்து, குங்குமம், பன்னீர், புனுகு, தக்கோலம், நாகப்பூர இலவங்கம், சாதிக்காய், வசுவாசி, நிரியாகம், தைலம் எனப்பெற்ற வாசனைத் தொகுதியும் மலைச்சரக்கு, கலை, அடைவு, சரக்கு, ஆரூர்க்கால் வாறோசுச்சூடன், சீனச்சூடன் எனப்பெற்ற கற்பூரத் தொகுதியும், புகார் முதலிய நகரங்களில் வணிகம் செய்யப்பட்டனவாகக் குறிப்பிடப்படுகிறது[28]. மேற்குக் கரையில் ஏற்றுமதி செய்யப்பெறும் பொருள்களாகப் பின் வருவனவற்றைச் சிலப்பதிகாரம் உரைக்கிறது.

யானை வெண்கோடும், அகிலின் குப்பையும்
மான் மயிர்க் கவரியும், மதுவின் குடங்களும்
சந்தனக் குறையும், சிந்தூரக் கட்டியும்
அஞ்சனத் திரளும், அணியரி தாரமும்,
ஏல வல்லியும், இருங்கறி வல்லியும்,
கூவை நூறுங் கொழுங்கொடிக் கவரையும்,
தெங்கின் பழனும், தேமாங் கனியும்,
பைங்கொடிப் படலையும், பலவின் பழங்களும்

*(சிலப்பதிகாரம்: காட்சிக்காதை 37-44)*

*மதுரைக்காஞ்சி* குறிப்பிடும் ஏற்றுமதிப் பொருள்கள்

முழங்குகடல் தந்த விளங்குகதிர் முத்தம்
அரம்போழ்ந் தறுத்த கண்ணேர் இலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம்

இருங்கழிச் செறுவில்தீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்
விழுதிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கலன் உய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவி யொடு அனைத்தும்
வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப

(*மதுரைக்காஞ்சி*: 315-324)

இவற்றுடன் அருங்கலன் ஏற்றுமதி செய்யப்பெற்றதாக *மதுரைக்காஞ்சி* (52:3-4) கூறுகின்றது. மேலும் மிளகு, திப்பிலி, இலவங்கம், சோளம், சந்தனம், தந்தம் முதலியவை தொண்டி (திண்டிஸ்), முசிறி (முசிறிஸ்) துறைமுகங்களில் ஏற்றுமதி செய்யப்படுவதற்காகக் குவிக்கப்பெற்றன. மன்னார் வளைகுடாவில் முத்துக்களும், கொற்கை முத்தும், கோயம்புத்தூரில் உண்டான மிளகு, எலிமயிர், கம்பளங்கள், அகில், பெரில் போன்றவை தென்னிந்தியாவிலிருந்துதான் உலகின் அன்றைய பகுதிகளுக்கு ஏற்றுமதியாயினவே தவிர வேறெங்கிருந்தும் அவை அனுப்பப்பெற்றனவாகத் தெரியவில்லை என உரைக்கும் பெரிப்ளூஸ், பகாரேயில் இறக்குமதி, ஏற்றுமதிப் பொருள்களைப் பற்றி விளக்குவது கொண்டு, நாம் தென்னக ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களைத் தெளிவாக அறியமுடியும்[29]. இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பெற்றவைகளில் மிக முக்கியமானவை மிளகும், இலவங்கப் பட்டையுமாகும். உரோம் நகரில் இம்மிளகு ஒரு பவுண்டு 15 தினார் வரை விற்கப்பெற்றது. இந்தியாவில் இதன் விலை அரைமடங்குகூட இல்லை[30]. மிளகு தென்னிந்தியாவில் மலையாள நாட்டைத் தவிர வேறு எங்கும் பயிர்செய்யப் பெற்றது இல்லை. மிளகு தவிர பெருவாரியான அளவு முத்துக்களும், தந்தமும், பட்டுத்துணியும், கங்கைக்கரையிலிருந்து வரும் சடாமாஞ்சி, ஒளி ஊடுருவிப்பாயும் படிக்கற்கள் வகைகளும், வைரம், நீலக்கற்கள், ஆடை ஆகியனவும் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பெற்றுள்ளன.

## நாணயங்கள்

உரோமானியர்கள் நாணயங்களை உருவாக்குவதிலும், உறுதியான நாணயங்களைச் செய்வதிலும் பெயர் பெற்றிருந்தனர். இந்தியாவில் பொற்கட்டிகளை உருக்கி நாணயம் செய்யும் முறையை அறிந்திலர்போலும். இதன் காரணமாகவே பொற்கட்டிகளை உரோம் நகருக்கு அனுப்பி, அவற்றை

நாணயங்களாக ஆக்கித் திரும்பப் பெற்றனர். பொன் போன்று, வெள்ளிக்கட்டிகளும், அயல்நாடுகளில் வெள்ளி நாணயங்களாகச் செய்யப்பட்டு, இங்கு இறக்குமதி செய்யப்பெற்றன. சித்திரம் வரையப்பெற்ற நார்ப்பட்டுகள், நீலாஞ்சனக்கல், பவளம், சுதேசிக் கண்ணாடிகள், பித்தளை, தகரம், ஈயம், மதுபானக் குப்பிகள், குறைந்த அளவில் பட்டுத்துணிகள், பட்டு நூலிழைகள், மனோசிலை (Transparent Stone), அரிதாரம் (Orphiment), கோதுமை (இது வடநாட்டிலிருந்தும், சீனாவிலிருந்தும் தென்னாட்டிற்கு இறக்குமதி செய்யப் பெற்றுள்ளது). கோதுமை முதல் முதலில் சீனாவில்தான் உற்பத்தி செய்யப்பெற்றுள்ளது. இவையும் தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இவை மட்டுமன்றி வார்மிங்டன் யானை, வேட்டைநாய் (கதநாய்கள்), கிளி, பாம்புகள், மயில்கள் போன்ற உயிரினங்களும் விலங்குகள் தரும் பொருள்களில் தந்தம், பருத்தி, இஞ்சி, தேங்காய், அரிசி இவைகளும், மரவகைகளில் கருங்காலி, தேக்கு போன்றவைகளும், ஏற்றுமதி செய்யப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடுகின்றார்[31]. இந்தியாவிலிருந்து அடிமைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும், கூறப்பெறுகிறது. தங்கம், ரோம் நாட்டுடனான வணிகத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது. கோபிசெட்டிபாளையத்திற்கு வடக்கே உள்ள குன்றுகளில் தங்கம் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்பெற்றுள்ளது[32]. இவ்விதமாக தமிழகம் பல்வகைப் பொருள்களை ஐரோப்பிய மற்றும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதற்கு ஈடாகப் பல்வகைப் பொருள்களைப் பெற்றுள்ளமையை (இறக்குமதி செய்தமையை) அறியமுடிகிறது.

இவ்வணிகமே தமிழகத்தின் நாணயங்கள், பிற இடங்களிலும், பிற நாட்டின் நாணயங்கள், தமிழகத்திலும் கிடைக்கப் பெற வழி செய்துள்ளன. அவ்வாறு கிடைக்கப் பெற்றதில், வட இந்தியாவில் வெளியிடப்பெற்றுப் பெரும்பாலும் இந்தியா முழுவதும் வழக்கிலிருந்தவை முத்திரை நாணயங்கள் ஆகும்.

## சான்றெண் விளக்கம்

---

1 *மயிலை சீனிவேங்கடசாமி., 1992, பழங்காலத் தமிழர் வாணிகம் (சங்க காலம்),* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. பக். 38-40.

2 Purnalingam Pillai., 1963, *Tamil India,* Kazhagam, Chennai, p.77.

[3] சீனிவாச ஐய்யங்கார், பி.டி., 1989, *தமிழர் வரலாறு*, கா.கோவிந்தன் (மொழி பெயர்ப்பு), கழக வெளியீடு, திருநெல்வேலி. பக்.63.

[4] மயிலை சீனி வேங்கடசாமி., 1992, *முன்னர் சுட்டிய நூல்.*

[5] *மேலது.*

[6] கிருஷ்ணமூர்த்தி, இரா., 1986, *சங்ககாலச் சோழர் நாணயங்கள்,* கார்னெட் பதிப்பகம், சென்னை. பக்.27.

[7] Natana Kasinathan., 1995, "Date of Sangam Literature", *Paper Presented in the 8th International Congress, Seminar of Tamil Studies.* Thanjavur. p.11.

[8] .Sharma, T.K., 1992, *South Indian Coinage A Review of Recent Discoveries,* Tamil Nadu Numismatic Society. New Era Publications, Madras. p.16.

[9] மயிலை சீனிவேங்கடசாமி, 1992, *மு.சு.நூ.* பக்.80-81.

[10] *மேலது.* (இக்குறிப்பில் இவர், சாவகநாட்டு மிளகு, சேரநாட்டு மிளகைப்போன்று அவ்வளவு சிறந்ததன்று என்றும், சேரநாட்டு மிளகை யவனர்கள் கப்பல்களில் கொண்டு சென்றதால் அதற்கு இங்குப் பற்றாக்குறை ஏற்பட்டதால் சாவகநாட்டு மிளகை, சேர நாட்டு வணிகர்கள், இங்கு கொண்டு வந்து விற்றதாகவும் கூறுகின்றார். இதற்கான மூலச்சான்றுகளைக் குறிப்பிடாததால், இவரது கருத்துக்கள் ஐயப்பாட்டிற்குரியதாகக் கருதப் பெறுகிறது).

[11] இராகவன், வி.எஸ்.வி., 1997, *பெரிப்ளூஸ்,* மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம். பக். 234-235.

[12] Motichandra., 1977, *Trade and Trade Routes in Ancient India.* Abhinav Publications, New Delhi. p.109.

[13] சசிவல்லி, வி.சி., 1989, *பண்டைத் தமிழர் தொழில்கள்.* உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ப.217.

[14] Iravatham Mahadevan., 2003, *Early Tamil Epigraphy from the Earliest to the 6th Century A.D,* Cre-A, Chennai, p.16.

[15] இராசு, செ., 1995, "வெளிநாடுகளில் புதிய கல்வெட்டுக்கள்", *ஆய்வுச்சுருக்கம், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர்,* தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு, தஞ்சாவூர். ப.26.

[16] வேதாசலம்,வெ., 2008, "செங்கடல் துறைமுகப்பட்டினத்தில் தமிழ் பிராமி பானைப் பொறிப்புக் கண்டுபிடிப்பு", *ஆவணம். இதழ், 19.* தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.பக்.137-138.

[17] Warmington, E.H., 1928, *The Commerce between the Roman Empire and India,* Cambridge. p.121-122.

[18] இராகவன், வி.எஸ்.வி., 1997, *மு.சு.நூ.* பக்.223.

[19] Puranalingam Pillai, *op.cit.*, 1927. p.77.

[20] Rajan,K., 1997,"Roman Cion in Coimbatore Region", *Role of Universities and Research Institutes in Marine Archaeology,* (ed.), National Institute of Oceanography, Goa,pp. 177-178.

[21] Krishnamurthy, R., 1994, "Coins from Phoenicia found at Karur", *Studies in South Indian Coins, Vol .IV.* pp.19-20.

[22] *சீனிவாச ஐயங்கார், பி.டி., 1989, மு.சு.நூ.*

[23] Krishnamurthy, R., 1994, "Coins from Greek Islands, Rhotes and Crete found at Karur Tamil Nadu", *Studies in South Indian Coins, Vol .IV.* p.95.

[24] Nobru-Karashima., 1995, "Indian Commercial Activities in Ancient Medieval South East Asia", *Plenary Session, Paper Presented in the 8th International Conference.* Thanjavur.p.1.

[25] Shanmugam, P., 1994, "Two Coins of Tamil Origin from Thailand", *Studies in South Indian Coins, Vol .IV.*p.95. Natana Kasinathan., 1995, *Op.Cit.*, p.8.

[26] *ஆறுமுக சீதாராமன்., 1994, "பழங்காலச் சீனத்து வெண்கல மணி", தமிழகத் தொல்லியல் சான்றுகள், அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்,* தனலெட்சுமி பதிப்பகம். ப.21.

[27] ராஜன், கா., 1994, "முசிறித் துறைமுகம் சில செய்திகள்", *ஆவணம், இதழ்.4,* தமிழகத் தொல்லியல் கழகம். தஞ்சாவூர், ப.27.

[28] வேங்கடசாமி நாட்டார், ந.மு., 1957, *சோழர் சரித்திரம்,* நாட்டார் பதிப்பகம். சென்னை. ப.102.

[29] இராகவன், வி.எஸ்.வி., 1997, *மு.சு.நூ.* பக். 232-246.

[30] வித்யானந்தன், சு., 1954, *தமிழர் சால்பு,* பாரி புத்தகப் பண்ணை, திருவல்லிக்கேணி. ப.250-251.

[31] Warmington., *op.cit.*, 1928, pp.151-157.

[32] Michael Mitchiner, 1995, *Coin Circulation in Southernmost India,* Indian Institute of Research in Numismatic Studies, Maharashtra. pp.5-7.

# 4. கரூரின் வணிகச் சிறப்பு

*ம.இராசசேகரதங்கமணி*

தமிழகத்தில் வணிகச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் கொண்ட நகரங்கள், துறைமுகங்களில் மதுரை, உறையூர், கரூர், கொற்கை, பூம்புகார், முசிறி, தொண்டி, வசவசமுத்திரம், அழகன்குளம் போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றுள் வஞ்சி என அழைக்கப் பெறும் சேரர் தலைநகரான கருவூர் தனிச் சிறப்பும் புகழும் கொண்ட கோநகராகவும் புகழ்மிகு வணிக மையமாகவும் விளங்கியது.

## அமைவிடச் சிறப்பு

கரூர் நகரின் அமைவிடம், தமிழகத்தின் தலைசிறந்த வணிக மையமாக விளங்க வாய்ப்பாக இருந்தது. வணிக நகரங்களான கொடுமணல், காங்கேயம், சென்னிமலை, உறையூர், திருக்காம்புலியூர், மதுரை ஆகியனவும் தகடூர், பழனி ஆகிய தொன்மைப் பகுதிகளும் வணிக வழிகளால் கரூருடன் இணைக்கப்பட்டிருந்தமையும் கரூரின் வணிகம் பெருகத் துணைபுரிந்தன. அடுத்து மேலைக் கடற்கரையின் புகழ்மிகு துறைமுகமான முசிறியும்[1] கீழைக்கடற்கரைத் துறைமுகமான பூம்புகாரும் பண்டங்களின் ஏற்றுமதி, இறக்குமதிப் பணிகளில் வணிகர்களுக்குத் துணைபுரிந்தன. உள்நாட்டு, அயல்நாட்டு வணிகத்தை விரிவுபடுத்துவதில் வணிகக் குழுக்களும் வணிகப் பெருவழிகளும் உதவின.

## வணிகப் பெருவழிகளின் முக்கியத்துவம்

வணிகப் பெருவழிகள் உருவாவதற்கு முன்பு கொங்கு நாட்டுடன் வணிகம் புரிந்த உரோம் நாட்டு வணிகர்கள் முசிறித் துறைமுகப்பகுதியில் தங்கி மிளகு, கல்மணிகள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து, அவற்றைக் கப்பல் மூலம் குமரித் துறைமுகத்திற்குக் கொண்டு சென்று, அங்கிருந்து கீழைநாடுகளுக்குக் கொண்டு சென்றுள்ளனர். வணிகப் பெருவழிகளின் உருவாக்கத்திற்குப் பின்னர், முசிறித் துறை-முகத்திலிருந்து தரைவழியாகப் பாலக்காட்டுக் கணவாய் வழியாகக் கொங்கு நாட்டில் புகுந்து கரூர், உறையூர் வழியாகப் பூம்புகாருக்குச் சென்று அங்கிருந்து கீழை நாடுகளுக்குச் செல்ல ஆரம்பித்தனர். இதன் விளைவாக நேரமும் செலவும் மிச்சமாயின. மேலும் பல வணிகப் பெருவழிகள் சந்திக்கும் இடத்தில் கரூர் அமைந்திருந்ததால்[2] அதன் வணிகம் பெருகியது. கி.மு.4-ஆம் நூற்றாண்டு முதல் இப்பெருவழிகள் சுறுசுறுப்புடன் செயல்பட்டதாகத் தெரிகிறது[3].

கி.மு.30-இல் அகஸ்டஸ் எகிப்து நாட்டைக் கைப்பற்றிய பின்னர், உரோம் நாட்டிற்கும் தமிழகத்திற்கும் நேரடி வணிகத் தொடர்பு மலர்ந்தது[4]. அடுத்து இப்பாலஸ் (Hippalas) பருவக்காற்றின் இயக்கத்தை அறிந்து கப்பல்களை விரைவாக இயக்கும் உத்தியைக் கண்டுபிடித்ததால்[5] (கி.பி.47) தமிழக-உரோமானிய வணிகம் பெரிதும் விரிவடைந்தது. இதன் விளைவாக உரோமானியக் கப்பல்கள் இத்தாலியிலிருந்து ஆறு வாரங்களில் இந்தியாவை அடையமுடிந்தது[6]. எனவேதான் ஸ்டிராபோவும் (Strabo) கி.மு.25-இல் ஹார்மஸ் துறைமுகத் திலிருந்து இந்தியாவிற்குப் புறப்படத்தயாராக இருந்த 120 கப்பல்களைத் தான் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்[7]. மேற்கூறியவற்றால் தமிழக-யவன வணிகம் பல நூற்றாண்டுகளாக மிகச் சிறப்புடன் நடைபெற்றமை புலனாகும். இதனைக் கரூர், அமராவதிப் படுகையில் கிடைத்துள்ள ஆயிரக் கணக்கான உரோமானிய நாணயங்களும், நூற்றுக்கு மேற்பட்ட கிரேக்க நாணயங்களும், நூற்றுக்கணக்கான சீன நாணயங்களும் இருபதுக்கும் மேற்பட்ட பொனீஷிய நாணயங்களும் உறுதிப் படுத்துகின்றன[8].

கி.மு.1-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சுறுசுறுப்புடன் திகழ்ந்த உரோமானிய-தமிழர் வணிகம் கி.பி.3-ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது[9]. இருப்பினும் இவ்வணிகம் கி.பி.375-க்குப் பின்னர் மீண்டும் புத்துயிர் பெற்றது என்பதைக் கரூர் அமராவதிப் படுகையில் கிடைத்துள்ள ஏழாயிரத்திற்கு மேற்பட்ட உரோமானியச் செப்புக் காசுகளால் அறியலாம்[10]. பதினோரு வகையிலான இந்நாணயங்களைக் கொண்டு கி.பி.5-ஆம் நூற்றாண்டு வரை இவ்வணிகம் தொடர்ந்தது என்பதனை அறியலாம். இதனால் களப்பிரரின் ஆட்சிக்காலத்தில் கரூர் மிகச்சிறந்த வணிகத்தலமாக விளங்கி வந்தது புலனாகும்.

### வணிகர் பாதுகாப்புப் படை

வணிகக் குழுவினர் தாம் வணிகம் புரியச் செல்லுகையில், தக்க பாதுகாப்புடன் சென்றனர். அடுத்து சேர வேந்தர்கள் வலிமையான கப்பற்படையை வைத்திருந்ததால், கடற்கொள்ளையரின் தொல்லை தடுக்கப்பட்டது என்பது இலக்கியச் சான்றுகளால் அறியப்படுகிறது[11]. இதனால் சேரநாட்டு வணிகக் குழுவினர் சேரவேந்தரின் ஆதரவுடன் வணிகத்தை வளர்த்தனர். கரூர்ப் பகுதியில் வணிகக் குழுவினரின் கல்வெட்டுகள் கிடைத்திருப்பதால், அவர்கள் வணிகத்தை வளர்ப்பதில் முனைந்து செயல்பட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது.

### ஏற்றுமதிப் பொருள்கள்

கரூர்ப் பகுதிகளிலிருந்து முசிறி, பூம்புகார்த் துறைமுகங்களின் மூலம் வைரம், அக்வாமரீனா, பெரில், அகேட், சூதுபவளமணிகள், தங்கம், இரும்புப் பொருள்கள், பெண்களுக்கான விலையுயர்ந்த அணிகலன்கள், செம்பு, யானைத்தந்தம், குரங்கு, நல்லபாம்பு, ஆமையோடு, நேர்த்தியான துணி முதலான பண்டங்கள் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன. சங்கு வளையல்களும், சங்கு மணிகளும் கூட இங்கிருந்து ஏற்றுமதி யாயின. எனவே சங்கறுக்கும் தொழில் கரூரில் சிறப்புற் றிருந்தது என்பதை அறியலாம்[12].

கரூர், திருக்காம்புலியூர், கொடுமணல் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் இரும்பு

பொருள்கள், சங்கு மணிகள், சங்கு வளையல்கள், கண்ணாடி வளையல்கள், கண்ணாடி மணிகள், சூதுபவள மணிகள் போன்ற மணிக்கற்கள், நூல்நூற்கப் பயன்படும் தக்களி, பொன் காய்ச்சப் பயன்படும் மூசை ஆகியவை கிடைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்[13].

## இறக்குமதிப் பொருள்கள்

குதிரை, நுண்ணிய வேலைப்பாடுமிக்க பொன் ஆபரணங்கள், தரமிக்க மது, ஆலிவ் எண்ணெய் முதலானவை மேலை நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன[14].

## கரூர்ப் பகுதிகளில் கல்மணிகள்

கரூர் உப்பிடமங்கலத்திற்கு அருகில் உள்ள சேங்கல், பஞ்சப்பட்டி, மலைப்பட்டி, கீரனூர் ஆகிய பகுதிகளில் காக்கா நீலம் எனப்படும் அயோலைட் கற்கள் கிடைக்கின்றன. கத்திரிப்பூ வண்ணம் கொண்ட வெள்ளைக் கற்கள் காணியாளம் பட்டியில் கிடைத்துள்ளன. அக்வா மரினா எனும் கல் வகையும் இங்கே கிடைக்கின்றன. கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளியணை, உப்பிட மங்கலம், குறுணி குளத்துப்பட்டி ஆகிய பகுதிகளிலும் தரம் குறைந்த அக்வா மரினா கற்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கரூருக்கு மேற்கே உள்ள சின்ன தாராபுரம் பகுதியில் நீலம், கோரண்டம், நீல சபையர், மஞ்சள் சபையர் என அப்பகுதி மக்களால் அழைக்கப் பெறும் நீலக்கற்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன. பெரியதாராபுரம் பகுதிகளில் விலையுயர்ந்த சூரியக் கற்கள் (Sun Stone) கிடைக்கின்றன. வெள்ளக்கோயில் பகுதியில் வெள்ளைக் கற்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. ஈரோட்டிற்கு அருகில் உள்ள அறச்சலூரில் மணிகளை ஆய்ந்து சொல்லும் 'மணிவண்ணக்கன்' பற்றி அறச்சலூர் கல்வெட்டு குறிப்பிடுகின்றது[15]. எனவே இப்பகுதியில் மணிக்கற்கள் கிடைத்தன என்பது புலனாகிறது.

கொங்கு நாட்டு மணிக்கற்கள் வரலாற்றில் காங்கேயத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. புகழ்மிகு கொடுமணலும், படியூரும் இவ்வட்டத்தில் தான் அமைந்துள்ளன. கொடுமணல் அகழாய்வின் மூலம் அப்பகுதியில் அணிகலன்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றிருந்தது அறியப்படுகின்றது. படியூரில் விலையுயர்ந்த பெரில்

(Beryl) எனப்படும் பச்சைக்கற்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. காங்கேயத்திற்கு வடபுறம் உள்ள சிவன் மலையில், 'சபையர்' எனப்படும் நீலக்கற்கள் எடுக்கப்பட்டுள்ளன. குவார்ட்ஸ் எனப்படும் பளிங்குக் கற்கள் வெங்கமேடு, அரசம்பாளையம் பகுதிகளில் அதிகளவில் கிடைத்துள்ளன. இவை கொடுமணலுக்கு அருகில் உள்ளன என்பது சிறப்பாகும். காங்கேயத்தில் 'மூன்ஸ்டோன்' நிறைய கிடைக்கின்றன.

கரூருக்கு வடமேற்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ள புகளூரில் அக்வா மரினா கற்கள் கிடைத்துள்ளன. இராசிபுரம் வட்டத்திலுள்ள குஞ்சாம்பாளையம் பகுதிகளில் பச்சைக் கலந்த மஞ்சள் கற்கள் அகப்பட்டுள்ளன. இதனைப் போன்ற கற்கள் சேலம் எடப்பாடிப் பகுதியிலும் எடுக்கப்பட்டுள்ளன. கரூர் மாவட்டத்தின் தென் எல்லையில் அமைந்துள்ள கடவூர் மலைப் பகுதிகளில் சிவப்பு, பச்சைக் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன.

கரூருக்குத் தெற்கே அண்டை மாவட்டமாக உள்ள திண்டுக்கல் மாவட்டம், வட மதுரைக்கருகில் தங்கமாபட்டிப் பகுதியில் விலையுயர்ந்த எமெரால்டு எனப்படும் ஜாதிப் பச்சைக்கல் கிடைக்கின்றன. கொடுமணல் ஆபரணத் தொழிலுக்கு, குசராத் பகுதியில் கிடைத்த சூதுபவளங்களும் (கார்னீலியன்), ஆப்கானிஸ்தானத்திலிருந்து லெபிஸ் லஸூலி எனப்படும் விலையுயர்ந்த ஊதாக்கல்லும் இறக்குமதி ஆயின.

கரூர்ப் பகுதிகளில் இரும்பு தயாரிக்கும் தொழில் சிறப்புற்றிருந்ததாகப் புக்கானனின் குறிப்புகளால் அறியலாம். கரூரைச் சுற்றிலும் பல ஊர்களில் இரும்பு உருக்கப்பட்டதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. அகழாய்வுகளில் இரும்புத் துண்டுகள் கிடைத்தமை மீண்டும் சுட்டத்தகுந்தது. பிளினியும் சேரநாட்டு இரும்புப் பொருள்கள் உரோம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளதும் நினைவு கொள்ளத்தக்கது.

கரூர்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் மூலம் சங்கறுக்கும் தொழிலும் இங்கு நடைபெற்றதனை அறியலாம். அர்த்தசாஸ்திரமும் தாமிரபரணி முத்துக்களையும் படியூர் சங்குப் பொருள்களையும் குறிப்பிட்டிருப்பது இங்கு நினைவுக் கூரத்தக்கது[16].

கரூரில் பொன் ஆபரணம் செய்யும் தொழில் சிறப்புற்று விளங்கியதனைப் புகளூர் கல்வெட்டில் **'பொன் வாணிகன் நத்தி'** எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும் கரூர் அகழாய்வில் பொன்னை உருக்கப் பயன்படும் **'மூசை'** கிடைத்துள்ளதும் உறுதிப்படுத்துகின்றன. கரூருக்குக் கிழக்கில் அமைந்திருந்த உறையூரில் நேர்த்தியான மஸ்லின் துணிகள் தயாராயின.

மேற்கூறப்பட்ட பொருள்கள் கரூர் வணிகக் குழுவினராலும் வணிகத்தரகர்கள் வணிக முகவர்களாலும் சேகரிக்கப்பட்டு, முசிறித் துறைமுகம், பூம்புகார்த் துறைமுகம் மூலம் மேலை நாடுகளுக்கும் கீழை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

**கரூரில் வணிகர்கள் சங்கமம்**

கோநகராகவும் வணிகக்கேந்திரமாகவும் விளங்கிய கரூரில் வட இந்திய வணிகர்களும்[17], தக்காண வணிகர்களும், கிரேக்க, ரோமானிய, இலங்கை வணிகர்களும் தமது இருப்பிடங்களை அமைத்துக் கொண்டு வணிகம் புரிந்து வந்தனர் எனலாம். இதனை அமராவதி ஆற்றுப் படுகையில் கிடைத்துள்ள கிரேக்க, உரோமானிய, பொனிசிய, சீனக் காசுகளாலும், வட இந்திய அரசர்களின் அச்சுக்குத்தப் பெற்ற (குத்துக்குறி, Punch-Marked) நாணயங்களாலும் அறியலாம். அடுத்து சாதவாகனரின் பானை ஓடுகளும் (கயோலின்), உரோமானியரின் ஆம்போரா, ரௌலட்டட் பானை ஓடுகளும், சீனநாட்டுப் பானை ஓடுகளும் கரூரில் அதிக அளவில் கிடைத்துள்ளதால் கரூரின் அயலக வணிகம் உறுதி பெறுகிறது.

அடுத்து, தட்சசீல அகழாய்வில் கி.மு.4-ஆம் நூற்றாண்டிற்குரியதான பால நிலையில்[18] கொங்கு நாட்டின் நன்கு பட்டை தீட்டப்பட்ட பெரில் கற்கள் கிடைத்துள்ளதாலும், கி.மு.200-க்கும் கி.பி.200-க்கும் இடைப்பட்ட காலத்தில், தென் சீனாவின் ஹன் அரச மரபினரின் ஈமச் சின்னங்களில் தமிழ்நாட்டு மணிக்கற்கள்[19] கண்டெடுக்கப் பட்டுள்ளதாலும் கொங்கு நாட்டிற்கும் அயல் நாடுகளுக்கும் நிலவிய வணிக உறவு உறுதி செய்யப்படுகிறது.

மேலும் செங்கடல் பகுதியில் அமைந்திருந்த குசிர் அல் காதிம் (Quseir Al Qadim), பெரணிகே (Berenike) ஆகிய துறைமுக

நகரங்களில் கிடைத்துள்ள பானை ஓடுகளில்[20] 'சாதன்', 'கணன்' முதலான தமிழ்ப் பெயர்கள் காணப்படுகின்றன. இவை கொடுமணல் அகழாய்வில் கிடைத்துள்ள 'கண்ணன் அதன்', 'சாதன்' எனும் பானையோட்டு எழுத்துக்களுடன்[21] ஒப்பு நோக்கத்தக்கதாக உள்ளன. சாதன், கணன் எனும் பெயர்கள் சாத்தன், கண்ணன் எனும் பெயர்களைக் குறிக்கலாம். கொடுமணல் கரூர்ப் பகுதிக்கு அருகில் உள்ளது. இதனால் கரூர்ப் பகுதி வணிகர்கள் எகிப்து நாட்டுடன் மேற்கொண்ட வணிகத்திற்கு இப்பெயர்கள் சான்று பகர்கின்றன எனக் கொள்வது பொருத்தமே.

அடுத்து முசிறித் துறைமுகத்திலிருந்து அலெக்சாந்திரியத் துறைமுகத்திற்குக் கப்பலில் பொருள்கள் கொண்டு சென்றமை தொடர்பான பல செய்திகள் கொண்ட பேப்பிரசு ஆவணம் வியன்னா அருங்காட்சியகத்தில் உள்ளது[22]. இது தமிழகத்திலிருந்து கொண்டுசெல்லப்பட்ட பொருள்களையும் அவற்றின் மதிப்பையும் அறிய ஏதுவாக அமைகிறது.

இதுகாறும் கூறப்பட்டவற்றால் சங்க இலக்கியம், கரூர், அமராவதிப் படுகையில் கிடைத்த அயல் நாட்டார் நாணயங்கள், கொங்கு நாட்டின் வணிகப் பெருவழிகளில் கிடைத்துள்ள உரோம் நாட்டு நாணயங்கள், கொடுமணல், கரூர், திருக்காம்புலியூர் அகழாய்வுச் சான்றுகள், கரூர்ப் பகுதிகளில் இன்றும் கிடைத்திடும் கல்மணிகள், எகிப்தியத் துறைமுகப் பகுதிகளில் கிடைத்த தமிழ் வணிகர் பெயர்கள் போன்ற சான்றுகளின் அடிப்படையில் மேலைக்கடற்கரைத் துறைமுகமான பூம்புகாரையும் இணைக்கும் வணிகக்கேந்திரமாகக் கரூர்ப் பகுதி விளங்கியது என்பதனை அறியலாம். கரூரைச் சுற்றியுள்ள இடைப்புலப் பெருவழிகளும் பின்னிலங்களும் வணிகக் குழுக்களும் கரூருக்கும் மேலை நாடுகளுக்கும் தென்கிழக்கு நாடுகளுக்குமான வணிகத்தை வளர்ப்பதில் பெரும்பங்கு வகித்தன என்பது அறியப்படுகின்றது.

## சான்றெண் விளக்கம்

---

1 Musiris எனக் குறிக்கப் பெறும் இத்துறைமுகம் கேரளத்தில் அமைந்துள்ளது. இது கிராங்கனூர் அல்லது கோட்டயத்திற்கு அருகில் உள்ள நெல் சிந்தாவாக (Nelcynda) இருக்கலாம் எனக்

கருதப்பட்டது. ஆனால் பெரியாற்றின் தென்கரையில் பட்டணம் என்னுமிடத் திலிருந்ததாகத் தற்போது கண்டறியப்பட்டுள்ளது. தொண்டி (Tyndis) துறைமுகத்திலிருந்து இது 50 மைல் தொலைவில் இருந்தது. மேலைநாடுகளுடன் இது சிறப்பாக வணிகம் புரிந்தது.

2 பாலக்காட்டுக் கணவாயிலிருந்து மூன்று வணிகப் பெருவழிகள் பிற பகுதிகளுக்குப் பிரிந்து சென்றன. அவற்றுள் ஒன்று பேரூர், அவினாசி, ஈரோடு, சேலம், தகடூர், கோலார் ஆகிய நகரங்களுக்குச் சென்றன. இரண்டாவது பெருவழி வெள்ளலூர், சூலூர், கத்தாங்கன்னி, கொடுமணல், கரூர், வேலாயுதம்பாளையம் வழியாகச் சென்று உறையூரை அடைந்தது. அங்கிருந்து இறுதியாகப் பூம்புகார் சென்றது. மூன்றாவது பெருவழி ஆனைமலை, உடுமலை, கொழுமம், பழனி, தங்க்லா (திண்டுக்கல்), மதுரை ஆகியவற்றின் வழியாகச் சென்று இராமேஸ்வரம் மற்றும் கோடியக்கரையில் முடிவுற்றது. Kandasamy,S.P., "Kongu and the Roman Coins", *Journal of the Numismatic Society of India, Vol.LVI.* Part I&II. p.41. முதல் பராந்தகச்சோழன் காலத்திய கொங்குப் பெருவழி கரூரை உள்ளிட்ட பல வணிக நகரங்களை இணைத்தது. மகிஷ மண்டலப் பெருவழி, சத்தியமங்கலத்திற்கு அருகிலுள்ள கஜல்கட்டிக் கணவாய் வழியாகக் கரூருக்கு வந்தது. அடுத்து கர்நாடகத்திலிருந்து தொடங்கிய பெருவழி காவேரிபுரம் கணவாய், ஈரோடு, கொடுமுடி வழியாகச் சென்று கரூரில் முடிவுற்றது. வடமொழி இலக்கியங்களில் குறிக்கப் பெறும் 'தட்சிணபதா' எனக் குறிக்கப்பெறுவது இன்றைய N.H.7. ஆகும். இதுவும் கரூர் வழியாகவே சென்றது. தாலமி, *பெரிப்ளூஸ்* நூலின் ஆசிரியர் ஆகிய இருவரும் முசிறியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

3 Himashu Prabha Ray., 1986, *Monastery of Guild,* Oxford University Press, New Delhi, p.65.

4 Moti Chandra., 1977, *Trade Routes in Ancient India,* Abinav Publication, Delhi,

5 மத்தியதரைக்கடல் மற்றும் உரோமானியக் கடலோடிகளுக்கு இக்கண்டுபிடிப்பு புதிதாக இருப்பதில் வியப்பில்லை. இக்கண்டுபிடிப்பிற்கு முன்பே இந்திய மாலுமிகள் அரபிக்கடலைக் கடந்து அந்நாடுகளுக்கு வியாபாரத்திற்காகப் பருவக் காற்றை நம்பியே சென்றுள்ளனர். கரிகாற் சோழனைச் சிறப்பித்துப்பாடும் *புறநானூற்றுப்* புலவர், அவனை, "நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழிலாண்ட வுரவோன் மருக" *(66:1-3)* எனப்பாடியுள்ளார். காற்று வீசும் திசையறிந்து, கடலில் கலங்களைச் செலுத்தும் திறன் கொண்ட முன்னோரின் வழியில் தோன்றியவன் என்பது இதன் பொருளாகும். இதனால் இப்பாலசுக்கு முன்பே தமிழர் பருவக்காற்று வீசும் திசையறிந்து கலன்களைச் செலுத்தியமை புலனாகும்.

[6] Moti Chandra., *op.cit.*, p.117.

[7] Srinivasa Iyengar, P.T., 1982, *History of the Tamils,* Asian Educational Services, Chennai, p.195.

[8] Nagasamy,R., 1995, *Roman Karur,* Prakat Prakasham, Chennai; Krishnamurthy,R., 2000, *Non Roman Ancient Foreign Coins from Karur, India.* Garnet Publishers, Chennai; Krishnamurthy,R., 2009, *Ancient Greek And Phoenician Coins From Karur, Tamil Nadu, India,* Garnet Publishers, Chennai; இராசசேகரதங்கமணி,ம., *2006*, "தமிழ்நாட்டு வரலாற்றில் புதிய கண்டுபிடிப்புகள்", *தமிழ்நாட்டில் அயல் நாட்டார் நாணயங்கள்,* கொங்கு பதிப்பகம், கரூர். பக்.*8 -18.*

[9] உரோம் நாட்டிற்கும் இந்தியாவிற்குமான கப்பல்வழி மூடப்பட்டது. மீண்டும் இவ்வணிகம் அரேபியர் மற்றும் அகஸீமைட் (Auxmite) வணிகர்கள் வசம் வந்தது. சசானியர்கள் பாரசீக வளைகுடாவிலும், பட்டுத் தரைவழியிலும் (Silk route) தம் ஆதிக்கத்தைச் செலுத்தினர்.

[10] Krishnamurthy, R., 1995, *Late Roman Copper Coins from South India; Karur and Madurai,* Garnet Publishers, Chennai. pp.15-35.

[11] *அகநானூறு, 347:3-5, 126:14-16.* உள்ளூர் வணிகக் கலங்களைப் பாதுகாக்கவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

[12] Manimegalai,S., *Urbanisation In Ancient Tamil Nadu,* unpublished Doctoral Thesis, Sri Vasavi College, Erode. pp.84 - 85.

[13] துளசிராமன்,பி., *1992,* "கரூர் அகழாய்வு", கரூர் வரலாற்றுக் கருத்தரங்கம், பக்.*1-6;* இராசவேலு,சு., திருமூர்த்தி,கோ., *1995, தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள்,* பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை.பக்.*88-91; 136-140.*

[14] நேர்காணல் அரங்கராஜன், க., அமீர்ஜான், மு., கரூர்.

[15] **எழுத்துப் புணருத்தான் மணிய**
**வண்ணக்கன் தேவன் சாத்தன்.** மத்தியக் கல்வெட்டாய்வினர் வாசிப்பு.

[16] Moti Chandra., *op.cit.*, p.117.

[17] வட இந்திய வணிகர்கள் தமிழகத்தில் தங்கி வணிகம் புரிந்தனர் என்பதனைச் *சிலப்பதிகாரத்தால்* (புகார்க் காண்டம் *-4.* வரி.*37)* அறிகிறோம். அடுத்து தமிழ்-பிராமிக் கல்வெட்டுகளிலும், பானையோடுகளிலும் வருனி, விஷாசி, குஹரன், சந்தரிகன், செங்காயபன், அரிதன், காஸ்யபன் ஆகிய வட இந்தியரின் பெயர்கள் காணப்படுகின்றன. இவர்களுள் பலர் கரூரில் வாழ்ந்தனர். அடுத்து வட இந்திய வணிகர்கள் கொங்கு நாட்டுப் பகுதிகளுக்குக் குத்துக்குறி நாணயங்களையும், கருப்பு நிற மட்கலங்களையும் கொண்டு வந்தனர். இவற்றுள் பெரும்பாலானவை

கருப்பு ஓடுகள். இவை கரூர், கொடுமணல் அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. அமராவதி ஆற்றுப் படுகையில் எண்ணிறந்த குத்துக்குறி நாணயங்கள் கிடைத்துள்ளன. Nagasamy, R.(ed), *Damilica* Vol. 1. Tamil Nadi State Dept. of Archaeology, Chennai, p.52.

18 *Ibid., Damilica* Vol. 1. 1970. p.58. இது மௌரியர்களுக்கு முற்பட்ட காலத்திய மண்ணடுக்குகளில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

19 'ஹன்' மரபினரான 'வு' பேரரசர் இது போன்ற மணிகளை வாங்கிவரத் தென்சீனாவிற்கு ஆட்களை அனுப்பினார். அவர்கள் தாய்லாந்து, வியட்நாம் வழியாக சீனாவிற்குச் சென்றிருக்கலாம். தமிழ்நாட்டு மணிகளுடன் உரோம் நாட்டு மணிகளும் தென்சீனாவின் கேண்டன், நான்ஜிங் நகரங்களில் ஹன் வமிசத்தினரின் ஈமச்சின்னங்களில் கிடைத்துள்ளன. இவை உரோம் நாட்டிலிருந்து முசிறி வந்தடைந்துப் பின்னர் தரை வழியாகப் புகாருக்கு அனுப்பப்பட்டு, புகாரிலிருந்து தென் சீனாவிற்கு அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும்.

20 ராஜன், கா., 2006, *கல்வெட்டியல்,* மனோ பதிப்பகம், தஞ்சாவூர், பக்.192.

21 Kodumanal Excavation Report, Tamil University, Thanjavur

22 கா.ராஜன், 2006, "முசிறி- அலெக்ஸாண்டிரியா வணிக உடன்படிக்கை:ஒரு தொல்லியல் பார்வை", *தமிழகக் கடல்சார் வரலாறு: அண்மைக்கால ஆய்வுகள்,* (ப.ஆ.) அதியமான், ந., ஜெயக்குமார், பா., தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், பக்.33-45.:வியன்னா அருங்காட்சிகயத்தில் வைக்கப்பட்டுள்ள முசிறியைக் குறித்த பேப்பிரசு ஆவணம் முன்னர் வணிக ஒப்பந்தம் எனக்கருதப்பட்டது. ஆனால் அதில் உள்ள செய்திகளை மீளாய்வு செய்த அறிஞர்கள் இவ்வாவணம் ஒரு வணிகருக்கு இந்தியாவில் வணிகம் மேற்கொள்ள உரோம் நாட்டைச் சார்ந்த பணக்காரர் ஒருவர் அளித்த கடன் பத்திரம் எனக் கருதுகின்றனர். இது வணிக ஒப்பந்தம் இல்லையெனினும் இவ்வாவணம் பழந்தமிழகத்திற்கும் உரோம் நாட்டிற்கும் இருந்த வணிகத்தொடர்பின் தன்மையை நன்கு விளக்குகிறது என்பதில் ஐயமில்லை. (முனைவர் ந.அதியமான் அவர்களிடம் அறிந்த நேரடித் தகவல். )

# 5. கெனிசா தாள் ஆவணங்கள்

வீ.செல்வகுமார்

இந்திய வரலாறு குறித்த ஆவணங்கள் பெரிதும் கல்வெட்டுகளாகவோ செப்பேடுகளாகவோ காணப்படுகின்றன. இவை மட்டுமன்றி பானை ஓடுகளின் மீதும் எழுதப்பட்ட சான்றுகள் குறைந்த அளவில் கிடைக்கின்றன. நவீன காலத்திற்கு முந்தைய இந்தியாவில் பனையோலை பெருமளவில் ஆவணம் எழுதப்பயன்பட்டது. ஆனால் இவற்றில் பெரும்பாலானவை அழிந்துவிட்டன. இந்திய வரலாறு குறித்து அறியப் பல வெளிநாட்டு ஆவணங்களும் உதவுகின்றன. அவற்றில் வியன்னா தாள் ஆவணம்[1], பியூட்டிங்கேரியன் தரைப்படம்[2] ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். இதுபோல இடைக்காலத் தென்னிந்திய வரலாற்றை அறிய உதவும் ஆவணங்களில் முக்கியமானவை கெனிசா (Genizah) தாள் ஆவணங்களாகும். இக்கட்டுரையில் நான் கெனிசா ஆவணங்களைப் பற்றிச் சுருக்கமாக விவரிக்கின்றேன்.

## கைரோ கெனிசா

கைரோ எகிப்து நாட்டின் தலைநகராகும். கெனிசா என்பது யூதப்பள்ளியில் பழைய ஆவணங்களைச் சேமித்து வைக்கப்பயன்படும் ஓர் அறையாகும். இங்கு பழைய கைரோ (ஃப்யூஸ்டாட், Fustat) நகரில் உள்ள பென்எஸ்ரா என்ற பெயருடைய யூதர்களின் வழிபாட்டிடமான யூதப்பள்ளி அல்லது சினகாக்கில் (Synagogue) பல ஆவணங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. இடைக்காலத்தில் இந்த இடம் யூதர்களின் ஒரு முக்கியமான மையமாக விளங்கியது. இங்கு வாழ்ந்த யூதர்களில் முதன்மையானவர் மோஸஸ் மைமோனிடஸ் (Moses Maimonides 1135-1204) என்ற தத்துவ அறிஞர் ஆவார்[3]. பொ.ஆ. (பொது

ஆண்டு)[4] 1890-இல் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஆவணங்கள் உலகின் தலைசிறந்த ஆவணத் தொகுப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றன. இந்த ஆவணங்கள் ஹீப்ரு மற்றும் அராபிய மொழிகளில் உள்ளன. பென்எஸ்ரா யூதப்பள்ளி பொ.ஆ. 9-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். இங்குக் கிடைத்த ஆவணங்களில் சில இந்தியாவிற்கும் குறிப்பாக, மேற்குக் கடற்கரைக்கும் மேற்காசியாவிற்கும் உள்ள வணிகத் தொடர்பை வெளிப்படுத்து கின்றன. யூதர்களின் மரபு வழக்கப்படி கடவுளின் பெயெரெழுதப் பட்ட தாள்களை வெளியே எறிந்துவிடக்கூடாது. எனவே, அவை கெனிசாவில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. இந்த நம்பிக்கை யினாலும், எகிப்தின் வறட்சியான சுற்றுச்சூழ்நிலையாலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாள் ஆவணங்கள் இன்று நமக்குக் கிடைத்துள்ளன. இடைக்காலத்தில் அதாவது 10-ஆம், 12-ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் யூத வணிகர்களால் எழுதப்பட்ட இந்த ஆவணங்கள் குடும்பக் கடிதங்கள், வியாபாரக் கடிதங்கள், சட்ட ஆவணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இக்கால கட்டத்தில் பாத்திமிது பேரரசின் ஆட்சியில் நிலவிய அமைதியான சூழ்நிலை வணிகத்திற்குச் சாதகமாக இருந்தது. இந்த ஆவணங்கள் தாள், வெள்ளும் (தோல்), துணி, பாப்பிரஸில் ஆகியவற்றில் எழுதப்பட்டுள்ளன[5]. இந்த ஆவணத் தொகுப்பு சுமார் 250,000 கடிதத் துண்டுகளைக் கொண்டுள்ளது. இவ்வாவணங்களில் பெரும்பாலானவை (சுமார் 140,000 துண்டுகள்) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ளன. இவற்றை ஆராய டெய்லர்-ஷெக்டர் கெனிசா ஆய்வுப் பிரிவு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக நூலகத்தில் அமைக்கப் பட்டுள்ளது.[6] இவ்வாவணங்களில் சில ஜெருசலேம், இலண்டன், ஆக்ஸ்போர்டு, பாரிஸ், பிரான்க்பர்ட், புடாபெஸ்ட், லெனின்கிராடு மற்றும் பிலடெல்பியா ஆகிய இடங்களில் உள்ளன.[7]

## ஆய்வு வரலாறு

கெனிசா ஆவணங்களில் இந்திய வணிக வரலாறு குறித்த பல ஆவணங்கள் உள்ளன. இவையனைத்தும் அண்மையில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன[8]. 19-ஆம் நூற்றாண்டில் இந்த ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பிறகு, ஜெருசலேமில் தேசியப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் உள்ள ஆவண எண் MS H6-ன் அடிப்படையில் ஸ்டிராஸ் அவர்களால் பம்மா (பொம்மா, Bomma) என்ற ஓர் அடிமையைக்குறித்து ஒரு கட்டுரை

வெளியிடப்பட்டது[9]. பிறகு கோய்ட்டன் என்ற அறிஞர் இந்தியா குறித்த ஆவணங்களில் அதிக ஆய்வுகள் செய்துள்ளார். பிரிஸ்டன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்த இவர் **1954**-இலிருந்து பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். ஆனால், பல ஆண்டுகள் இந்தியா குறித்த ஆவணங்களில் ஆராய்ச்சி செய்த அவர், அந்த ஆய்வு முடிவுகளை வெளியிடும் முன்னரே இறந்துவிட்டார். அவருடைய ஆய்வு அண்மையில் நூலாக வெளிவந்துள்ளது[10]. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க எழுத்தாளர் அமிதாவ் கோஷ் இந்தியா குறித்த சில ஆவணங்களின் அடிப்படையில் ஆராய்ச்சி மேற்கோண்டு *'ஒரு பண்டைய நிலத்தில்'* (In an Antique Land) என்ற ஒரு பயண நூலை எழுதியுள்ளார்[11]. அவர் பென் யெஷு என்ற யூத வணிகனைப் பற்றியும் அவனுடைய அடிமையைப் பற்றியும் இந்தியா, எகிப்தில் பயணம் மேற்கொண்டு எழுதியுள்ளார். இந்நூலின் சில கூறுகள் அறிஞர்களால் குறை கூறப்பட்டுள்ளது[12]. அண்மையில் இவ்வாவணத் தொகுப்பிலிருந்து தேவநாகரியில் (குஜராத்தி?) எழுதப்பட்ட ஒரு கடிதத் துண்டு கிடைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது T-(S AS 159.247)[13].

## இந்தியாவுடன் தொடர்புடைய வணிகர்கள்

இந்தியாவுடன் தொடர்புடைய வணிகர்களில் மட்முன் பி.ஹசன் பந்தர் (Madmun B. Hassan Bundar), அபிரகாம் பென் யெஷு (Abraham Ben Yiju) ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். இவர்களின் கடிதங்கள் ஹீப்ரு மொழியில் உள்ளன. ஆனால் இவைகளில் மற்ற இந்திய வணிகர்கள் பற்றிய மறைமுகமான குறிப்புகளும் உள்ளன. இந்தியாவைச் சேர்ந்த நகோடா ரமிஷ்ட், நம்பியார் என்பவர்களைப் பற்றிய குறிப்பும் உள்ளது. இவ்வாவணங்களில் மேற்குக் கடற்கரை, குஜராத் பற்றிய குறிப்புகள் அதிகம் காணப்படுகின்றன[14]. மேலும், கர்நாடகக் கல்வெட்டுகளில் காணப்பெறும் பட்டணஸ்வாமி எனப்படும் நகரத்தலைவர் பற்றியக் குறிப்பும் உள்ளது[15].

## அபிரகாம் பென் யெஷு, மட்முன் பி. ஹசன் பந்தர்

இவ்வாவணங்களில் அபிரகாம் பென் யெஷுவின் கடிதங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். டுனூசியாவைச் சேர்ந்த இவ்வணிகனின் 70-க்கும் மேற்பட்ட கடிதத் துண்டுகள் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றில் பென் யெஷுவிற்கு வந்த கடிதங்கள்,

அவர் எழுதிய பதில்கள் ஆகியவை அடங்கும். இந்தியாவில் சில காலம் தங்கியிருந்த இவருக்கு மேலைக்கடற்கரையில் ஒரு வெண்கல/பித்தளைத் தொழிற்சாலை இருந்துள்ளது. இவருடைய செயற்பாடுகள் இன்றைய கேரளத்தின் வடக்குப் பகுதியிலும் கர்நாடகக் கடற்கரையின் தெற்குப் பகுதியிலும் இருந்தன. அவர் அஷு என்ற ஒரு நாயர் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அவருக்கு பம்மா (பொம்மா) என்ற ஓர் அடிமை இருந்தார். இந்த அடிமை துளு நாட்டைச் சேர்ந்திருக்கலாம் என அமிதாவ் கோஷ் கருதுகிறார். இவ்வணிகருடைய கடிதங்கள் பொ.ஆ. 1132 முதல் 1149 வரை நடந்த நிகழ்வுகளை எடுத்துரைக்கின்றன. 11 செப்டம்பர் 1149-இல் எழுதப்பட்ட இறுதிக் கடிதம் தன் மகளுடைய திருமணத்திற்காக எகிப்துக்குத் திரும்பிச் சென்றதைப் புலப்படுத்துகின்றது.

A. எண் 23, என்ற கடிதம் ஏடன் துறைமுக மேற்பார்வையாளராகவும் வணிகப்பிரதிநிதியாகவும் இருந்த மட்முன் பி. ஹசன் பந்தர் என்பவரால் அனுப்பப்பட்டது. இதில் அவர் அபிரகாம் பென் யெஷுவை 'ஐயா' என்று அழைக்கின்றார். இதிலிருந்து அவர் சமூகத்தில் ஓர் உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தார் என்பது புலனாகின்றது. இவர்களுக்கிடையேயான கடிதப் போக்குவரத்து இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களைப்பற்றி விவரிக்கின்றது. ஒரு கடிதத்தில் பென் யெஷு அனுப்பிய இரண்டு பூட்டுகள் மற்றும் வெள்ளைப் பாக்கு ஆகியவை கிடைக்கப்பெற்றதாக ஹசன் பந்தர் குறிப்பிடுகின்றார். மேலும், அவர் மிளகு, இரும்பு, இஞ்சி, ஏலக்காயுடன் ஒரு கப்பலை அனுப்புமாறும் குறிப்பிடுகின்றார்.

### வணிக வழி

வரலாற்று தொடக்க காலத்தில் இந்தியாவிலிருந்து சென்ற வணிக வழியானது செங்கடலின் கரையில் உள்ள பெரனிகே, குசேர் அல் காதிம் ஆகிய கடற்கரைப் பட்டினங்கள் வழியாக அமைந்தது. ஆனால், இடைக்காலத்தில் அரேபியத் தீபகற்பத்தில் ஏடன், ஆப்பிரிக்கப் பகுதியில் அய்தாப் ஆகிய துறைமுகங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்கின.

### மேலைக் கடற்கரையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள்

மேலைக் கடற்கரையிலிருந்து ஏற்றுமதியான பொருள்கள் பற்றிய தகவல்கள் கெனிசா ஆவணங்களிலிருந்து கிடைக்கின்றன.

## மிளகு

கருப்பு மிளகு (பெப்பர் நிக்ரம்) ஒரு முக்கியமான ஏற்றுமதிப்பொருளாக இருந்திருக்கின்றது. இது உரோமானியர்களால் விரும்பப்பட்டது போலவே இடைக்காலத்தில் தொடர்ந்து மேற்கத்தியர்களால் மிளகு விரும்பப்பட்டது இதன் வழி புலனாகின்றது. கெனிசா ஆவணம் ஒன்றில் மிளகின் விலை 1 பகாருக்கு 30 தினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது[16].

## இரும்பு

கெனிசா ஆவணங்கள் மேலைக் கடற்கரையிலிருந்து இரும்பு ஏற்றுமதி செய்யப்பட்டதைக் குறிப்பிடுகின்றன. ஐந்து இரும்பு வகைகள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. கேரளாவில் செம்பாறாங்கல் (Laterite) அதிக அளவில் காணப்படுகின்றது. இது இரும்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம். மேலும் கடித எண் A. No. 23-இல் இரண்டு பூட்டுகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இன்றும் கேரளாவின் சில பகுதிகளில் பழங்கால அமைப்பை உடைய இரும்புப் பூட்டுகள் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## பித்தளைப் பொருள்கள்

இவ்வாவணங்கள் வழியாக பென் யெஷு மேலைக் கடற்கரையில் ஒரு வெண்கல/பித்தளைத் தொழிற்சாலையை வைத்திருந்ததாகத் தெரிகின்றது. தென்னிந்தியாவில் குறிப்பாக, கேரளாவில் வெண்கல/பித்தளைத் தொழில் இரும்புக் காலத்திலிருந்தே சிறந்து விளங்கியது. இங்குள்ள கைவினைஞர்களின் திறமை, குறைந்த உற்பத்திச்செலவு, தென் கிழக்காசியாவிலிருந்து எளிதில் கிடைத்த மூலப்பொருள்கள் போன்றன இவர் இங்கு இத்தொழிற்சாலையை நிறுவிடக் காரணமாக இருந்திருக்கலாம்.

## பாக்கு

சிவப்பு, வெள்ளைப் பாக்கு வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் கெனிசா ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வகைப் பாக்குகள் இன்றும் கேரளாவில் உற்பத்தி செய்யப் படுகின்றன.

### ஏலக்காய்

ஏலக்காய் கேரளாவின் மலைப்பகுதிகளில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இப்பொருளும் அக்காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பது புலனாகின்றது. மேலும் தேங்காய், துணி, மருந்துப் பொருள்களும் இந்தியா விலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன[17].

### இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்

இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் சிலவும் இக்கடிதங்களில் குறிப்பிடப்படுகின்றன. குறிப்பாக, சில பொருள்கள் ,பென் யெஷுவின் தனிப்பட்டப் பயன் பாட்டிற்காக இறக்குமதி செய்யப்பட்டவையாகும்.

### பெர்பரா பாய்

பெர்பரா பாய், பென் யெஷுவின் பயன்பாட்டிற்காக மட்முன் பி. ஹசன் பந்தரால் அனுப்பப்பட்டவையாகும். இவ்வகைப் பாய்களும் மரப்பட்டை மற்றும் கயிறுகளால் செய்யப்பட்ட கூடைகளும் பெர்பரா என்ற சோமாலிய நகரில் உற்பத்தி செய்யப்பட்டன[18].

### தாள்

இந்தியாவில் எழுதுவதற்கு ஓலைச்சுவடிகளே பெரிதும் பயன்படுத்தப்பட்டன. எனவே, தாளில் எழுதிப் பழக்கப்பட்ட வெளிநாட்டு வணிகர்கள் தாளை இறக்குமதி செய்தது இதன் வழி புலனாகின்றது.

### டாபிகி துண்டு

டாபிகி (Dabiqi) துண்டு ஒரு வகையான விலை உயர்ந்த லினனும் பட்டும் இணைந்து நெய்யப்பட்டத் துணியாகும். இவ்வகைத் துண்டுகள் பென் யெஷுவின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வரவழைக்கப்பட்டன. இது வெள்ளை நிறம் கொண்டதாக இருக்கலாம் எனக் கொய்டன் கருதுகிறார்[19]. மேலும் சர்க்கரை, உலர்ந்த திராட்சை ஆகியவையும் இறக்குமதி செய்யப்பட்டதாகக் கடிதங்கள் குறிப்பிடுகின்றன.

**கருத்துகள்**

இந்த கெனிசா ஆவணங்கள் இடைக்கால வணிகத்தைப் பற்றி மட்டுமல்லாமல் அதற்கு முற்பட்ட கால வணிகம் எவ்வாறு நிகழ்ந்திருக்கவேண்டும் என்பதைப்பற்றி ஊகிக்கவும் உதவுகின்றன. இக்கடிதங்கள், வணிகர்கள் வணிகத்திற்கு மட்டுமன்றி தங்களது பயன்பாட்டிற்காகவும் பொருள்களை இறக்குமதி செய்தனர் என்பதைப் புலப்படுத்துகின்றன. மேலும், இவ்வணிகர்கள் தங்களுக்கென்று பணியாள்களையும், அடிமை களையும் கொண்டிருந்ததைப்போல, சங்க காலத்தில் வந்த உரோமானிய வணிகர்களும் உதவியாளர்களைக் கொண்டிருந் திருக்கலாம். இதன் வழி எகிப்தில் கிடைக்கும் கணன், சாத்தன், பனை ஓரி போன்ற தமிழ்-பிராமி பெயர்கள் தமிழ் வணிகர்கள் மட்டுமல்லாமல் தமிழகத்திலிருந்து சென்ற உதவியாளர்கள், அடிமைகள் போன்றவர்களுடையதாகவும் இருக்கலாம் என்ற ஒரு சாத்தியக்கூறையும் நாம் ஊகிக்கலாம். மேலும், இடைக் காலத்தில் இரும்பு ஏற்றுமதி செய்யப்பட்டது போல சங்க காலத்திலும் மேலைநாடுகளுக்கு இரும்பு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம் என்பதனையும் இக்கடிதங்கள் உணர்த்துகின்றன.

## சான்றெண் விளக்கம்

---

1 Rathbone, D., 2001, "The 'Muziris' papyrus (SB XVIII 13617): financing Roman trade with India", *Alexandrian Studies II in Honour of Mostafa el Abbadi, BSAA*, 46, pp.39-50.

2 http://www.euratlas.net/cartogra/peutinger/

3 http://www.lib.cam.ac.uk/Taylor-Schechter/guide.html#Par01

4 தற்போதைய ஆய்வுகளில் பொது ஆண்டு என்ற சொல்லாட்சி கிறித்தவ ஆண்டுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றது.

5 William J. Bernstein, 2008, *A Splendid Exchange How Trade Shaped the World*, Atlantic Monthly Press.

6 http://www.lib.cam.ac.uk/Taylor-Schechter/index.html

7 Alden Oreck, *The Cairo Genizah, Jewish Virtual Library: URL=http://www.jewishvirtuallibrary.org/jsource/History/Genizah.html,Accessed; 19-08-2009.*

[8] Shelomo D. Goitein and Mordechai Akiva Friedman, 2007, *India Traders of the Middle Ages:* documents from the Cairo Geniza 'India book', Leiden and Boston, MA, Brill.

[9] Amitav Ghosh, 1992, *In an Antique Land.*, Ravi Dayal Publisher, Delhi. p. 100.

[10] Shelomo D. Goitein and Mordechai Akiva Friedman, *op.cit.*

[11] Amitav Ghosh. *op.cit*

[12] Tangea Tansley, 2004, *Writings from the Shadow Lands: How cross Cultural Literature Negotiates the Legacy of Edward Said. Ph.D. Dissertation,. Murdoch University, USA;* Debbie Lisle, 2006., *The Global Politics of Contemporary Travel Writing.* Cambridge University Press, Cambridge, p. 299.

[13] *Genizha Fragments,* The Newsletter of Cambridge University's Taylor-Schechter Genizah Research Unit at Cambridge University Library, April 2008, 3.

[14] Ray, H.P., 2005, "Far-flung fabrics - Indian Textiles in Ancient Maritime Trade", Ruth Barnes edited, *Textiles in Indian Ocean Societies,* London: Routledge Curzon, London, p.24; Roxani Eleni Margariti, 2007, *Aden and the Indian Ocean trade: 150 years in the Life of a Medieval Arabian Port.* The University of North Carolina Press.

[15] Mugali, R. S., 2006, *The Heritage of Karnataka,* Satyassdhana Publishing House, Bangalore, p. 107.

[16] பகார் என்பது அரேபியாவில் வழக்கத்தில் இருந்த ஒரு எடை அளவை முறையாகும்.இதன் எடை இடத்திற்கு இடம் வேறுபட்டது. James Prinsep, 1840, *Useful tables, forming an appendix to the Journal of the Asiatic Society: part the first, Coins, weights, and measures of British India* (2nd ed.), Calcutta: Bishop's College Press, pp. 84-90.

[17] Efraim Lev And Zohar Amar, 2007, "Practice versus Theory: Medieval Materia Medica according to the Cairo Genizah", *Medical History,* Vol. 51, pp.507-526

[18] இவ்வகைப் பாய்கள் இன்றும் இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படுகின்றன. I. M. Lewis., 1994, *Blood and Bone: the call of Kinship in Somali Society,* Red Sea Press, Lawrenceville, NJ, p. 120.

[19] Shelomo D. Goitein, 1983, *A Mediterranean Society: The Jewish Communities of the Arab World as portrayed in the documents of Cairo Genizah,* Vol. 4 Daily Life, University of California Press, California, p.166.

# 6. மேலும் ஒரு சுமத்திரா தமிழ்க் கல்வெட்டு (13-ஆம் நூற்றாண்டு)

*எ.சுப்பராயலு*

வட சுமத்திராவில் அச்செ (Aceh) கீழ்க்கரையில் உள்ள கிரெயுங் ராய வளைகுடாவின் கீழ்க்கோடியில் உள்ள இக்கல்வெட்டுக் கொண்ட உயரமான பலகைக்கல் நேசு அச்செ (Neusu Aceh) என்னுமிடத்தில் இருந்தது. இது இப்போது நங்க்ரோ அச்செ (Nanggroe Aceh) மாநில அருங்காட்சியகத்தில் உள்ளது. 1996-இல் இல.தியாகராசன் செய்த இக்கல்வெட்டின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் பி.ஒய்.மாங்கேன் (P.Y.Manguin) அவர்கள் வழி பெற்று ஜான் வைஸ்மேன் கிறிஸ்டி (Jan Wisseman Christie) இடைக்காலத் தமிழ் மொழிக் கல்வெட்டுகள் என்ற தனது கட்டுரையில் சேர்த்து வெளியிட்டுள்ளார். இக்கல்வெட்டு குறித்து அவர் அளித்துள்ள குறிப்புரை பின்வருமாறு:

> கல்வெட்டின் காலம் அறியும் வகையில் இல்லை. ஆனால், எழுத்தமைதியின் அடிப்படையில் கி.பி 12-ஆம் நூற்றாண்டு எனலாம். கல்வெட்டின் முன்பக்கத்தில் மண்டபம் என்ற ஒரு சொல் தவிர மற்றவை படிக்கும் நிலையில் இல்லை. இம் மண்டபம் என்னும் சொல் கோயில் அல்லது அறப்பணியையோ தொடர்பு படுத்தலாம். நன்கு படிக்கும் நிலையில் உள்ள பின்புறக் கல்வெட்டு கீழ்க்காணும் செய்தியைக்கொண்டது.

> "[என்ன தடைநேர்ந்தாலும்] இதை நாங்கள் எடுத்துகொள்ள மாட்டோம் (கைக்கொள்ளக்கடவதல்ல). அரசு முத்திரையைப் பொறிப்பவர்கள் இதை வந்து எடுத்துச் செல்லாம் (பறிமுதல்?) மற்றும் இதன் பின்னர் பொலிசை பெறுவதோ கொள்ளுவதோ செய்யமாட்டோம். மேலும் என்றும் எம் மக்கள் இக்கல் வெட்டின் படி நடந்துகொள்வாராக. நலம் பெருகட்டும்"

மேற்காணும் செய்தியைக் கொண்டு இக்கல்வெட்டு வணிகம் குறித்த ஒழுங்குமுறைகளையும் வணிகப் பொருள்களின் இழப்பு, அவற்றிற்குப் பெறப்படும் வட்டி அதாவது அரசுக் கட்டணம் குறித்தது எனலாம். இதில் எவ்வகை வணிகக்குழு குறிக்கப்பெறுகிறது என்பதை அறிய இயலவில்லை. எனினும், 'நம்மக்கள்' என்று குறிப்பிடப்பெறும் சொல்லால் ஒருவகை வணிகக்குழு இக்கல்வெட்டுடன் தொடர்புடையது என அறிய-முடிகிறது. தென்னிந்தியாவில் இக்காலகட்டத்தைச் சேர்ந்த வணிகக்குழுவோடு தொடர்புடைய பல கல்வெட்டுகள் அறியப்பட்டுள்ளன. குறிப்பாக, ஐநூற்றுவர் வணிகக்குழு இந்து மற்றும் பௌத்த நிறுவனங்களுக்கு மண்டபம் அல்லது பிற கட்டடங்களுக்காக அளித்த கொடைபற்றி குறிப்பிடுகின்றன.

இதற்குப் பின் இதே கல்வெட்டின் ஒளிப்படத்தின் இரு படிகளையும் கல்வெட்டின் மைப்படி ஒன்றினையும் பாரிசிலுள்ள சமூக அறிவியல் உயராய்வுப் பள்ளியைச் சார்ந்த கிளாடு குயோ* அவர்களிடமிருந்து பெற்றேன். ஒளிப்படங்களின் அடிப்படையில் ஒரு குறிப்பைத் தயாரித்து அவரிடம் கொடுத்தேன். ஆனால் கல்வெட்டை வெளியிடவில்லை. 2007-நவம்பரில் சிங்கப்பூர் தேசிய நூலகம் நடத்த இருந்த 'காலசக்கரம்' கண்காட்சியில் தென்கிழக் காசியாவில் இந்தியப் பண்பாட்டுத்தாக்கம் தொடர்பாக அதன் அமைப்பாளர் நாராயணமூர்த்தி தூண்டுதலின் பேரில் இக்கல்வெட்டின் திருத்திய பாடத்தைச் செய்து கொடுத்தேன். இதற்காக அண்மையில் எடுக்கப்பெற்ற இரண்டு ஒளிப்படங்களையும் அவர் எனக்கு அனுப்பி உதவினார்.

கீழ்க்காணும் கல்வெட்டு வரிகள் பெரும்பாலும் குயோ அனுப்பிய ஒளிப்படங்கள் அடிப்படையில் தரப்படுகின்றன.

### நேசு அச்செ கல்வெட்டு

கல்வெட்டு இருபுறமும் எழுதப்பட்டுள்ளது. முன்பக்கம் உள்ள கல்வெட்டு முழுவதும் சிதைந்துள்ளது. மறுபுறமும் தேய்ந்துள்ளது. ஆனால், ஒருசில வரிகள் படித்தறியும்படி உள்ளன. பின்புறத்தில் காணப்பெறுவது கல்வெட்டின் கடைசி பகுதியாகும். கல்வெட்டுகள் சிதையாத பகுதியிலுள்ள பகுதியைக் கொண்டு இதன் காலத்தை அறிய இயலவில்லை. எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டு கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது எனலாம். இதன்

* Claude Guillot of Ecole de hautes etudes en sciences sociales, Paris.

*எழுத்தமைதி 1281-ச் சேர்ந்த சீனா, குவான்-சு தமிழ்க் கல்வெட்டை ஒத்துள்ளது.*

*முன்பக்கம்*

01) ... ... ...
02) ... ... ரு
3-11) ... ... ...
12) ... ...ராய
13) ...வ... எம
14) ... ... ...த்து
15) ... ... ...
16) ... த பாதெ...
17) ... ... ...
18) ...வராவ்...

*இரண்டாம் பக்கம்*

01) ... ... ...
02) வும் போவா
03) கவும் போக்கவு
04) ள்ளது கைக்-
05) கொள்ளக் கட
06) வதல்லதாக
07) வும் இதுக்கு
08) உரய் வ[ருந் த]-
09) ங்கல்லை [வா]-
10) கல் கம்ம[ய]லா-
11) ர் உள்ளிட்டு[ச-
12) வத்துடைய]வர்
13) கள் வந்து கொ
14) டு போக கடவர்-
15) களாகவும் பொ-
16) லிசை கொள்ளக்
17) கடவர் களல்
18) லவாகவும் பிற
19) கும் நம்மக்க
20) ள் இக்கல்வெ-
21) ட்டுக்கு கொக்-
22) கச் செய்யக்
23) கடவர்கள்
24) சுப$_4$மஸ்து

*கல்வெட்டின் தொடக்கப்பகுதி முற்றிலும் படித்தறிய முடியாத நிலையில் உள்ளதால் எந்த நோக்கத்திற்காக*

இக்கல்வெட்டினைப் பொறித்துள்ளனர் என்பது அறியப் படவில்லை. இருப்பினும் கிடைக்கும் சொற்களைக்கொண்டு தமிழில் வெட்டப்பெற்ற கல்வெட்டென்று அறியமுடிகிறது. முன்பக்கத்தில் இல.தியாகராஜன் குறிப்பிடும் 'மண்டபம்' என்ற சொல் இருப்பதாகப் படவில்லை. கல்வெட்டில் இரண்டாம் பக்கமுள்ள வரிகளில் வசூலித்தல் தொடர்பான சில வரையறைகள் சுட்டப்பெறுகின்றன எனலாம். இச்செய்தி கல்வெட்டின் முன்பக்கத்திலிருந்து தொடங்கியுள்ளது. இரண்டாம் பக்கம் 7 முதல் 15-ஆம் வரிகள் ஒரு முக்கியச் செய்தியைத் தருகின்றன. 8-9 வரிகளில் உள்ள 'உரய்வருந் தங்கல்லை' என்னும் தொடர் உரைப்பதற்குப் பயன்படுத்தும் ஒருவகையான கல்லைக் குறிப்பதாகலாம். இதனைப் பொன் பரிசோதகர்கள் பயன்படுத்தும் உரைகல்லாகக் கொள்ள இடமுண்டு.

வரி 7-15-இல் 'வாகல் கம்மயலார் உள்ளிட்ட சவத்துடையவர் உரைகல்லை எடுத்துச்செல்லாம்' எனக் குறிப்பிடப்படுகிறது. அதாவது பொன்பரிசோதகர்கள் உரை-கல்லை வாகல் கம்மயலார் உள்ளிட்ட சவத்துடையவர்களுக்குக் கொடுத்துவிடவேண்டும் என்பது புலப்படும். 'வாகல் கம்மயலார்' என்ற சொல் தமிழ் போல் தெரியவில்லை. ஜாவா கல்வெட்டில் காணப்பெறும் 'வர்க-கிலாலன்' (wargga-kilalan) என்னும் (வசூல் குத்தகை) சொல்லின் திரிபு வடிவமாக இருக்கலாம். மேலும் 'சவத்துடையார்' என்னும் சொல்லின் பொருளும் சரிவரத் தெரியவில்லை. இச்சொல்லின் கல்வெட்டுப் பாடத்தில் ஐய-முள்ளது. எனினும் 'சவத்து' என்பது ஏதோ உரிமை அல்லது அலுவலைக் குறிப்பதாகலாம். வரி 15-18 இல் வட்டி வசூலிப்பதில்லை என்ற உறுதியையும் 18-23 வரிகளிள் 'நம்மக்கள்' இக்கட்டளையை இப்பொழுதும் எதிர்வரும் காலங்களிலும் பின்பற்ற வேண்டும் எனவும் தெரிவிக்கின்றன.

'நம்மக்கள்' என்பது ஒரு குழுவைக் குறிப்பாக 'ஐநூற்றுவர்' குழுவினைக் குறிக்கலாம் எனக் கிறிஸ்டி கருதுவது சரியே. 'நம்மக்கள்' எனக் குறிப்பிடப்பெறும் சொல்லை அய்யப் பொழில் ஐநூற்றுவர் என்னும் பெயரிலமைந்த இடைக்காலத் தென்னிந்திய வணிகக் குழு என்பதற்கான நேரிடைச் சான்றாகவே கொள்ளலாம். 'நம்மகன்' என்னும் சொல்லின் பன்மை வடிவமே 'நம்மக்கள்'. சிறப்பு ஒருமையில் வழங்கப் பெற்ற 'நம்மகனார்' என்னும் சொல் ஏற்கெனவே அறிந்த மேற்குக்

கடற்கரையிலுள்ள வரோசு (Barus) கல்வெட்டில் காணமுடிகிறது. பெரும்பாலும் பன்மையில் அழைக்கப்பெறும் இச்சொல் வணிகக் குழுக்களின் பிரதிநிதிகள்/பணியாளர்கள் அல்லது காவல் வீரர்களைக் குறிக்கும் வகையில் பல கல்வெட்டுகளில் காணப்பெறுகிறது. எனவே, அய்யப்பொழில் ஐநூற்றுவர் வணிகக் குழுவினரால் இக்கல்வெட்டு வெட்டப்பட்டது என்பதை உறுதியாகக் கூறலாம்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இதுவரை கண்டுபிடிக்கப் பெற்றுள்ள எட்டு கல்வெட்டுகளில் நான்கு சுமத்திராவில் உள்ளன. வாரோசு (Barus, கி.பி. *1088*), பொர்லாக் தோலோக் (Porlak Dolok, கி.பி. ***1258/1265***), நேசு அச்செ (Neusu Aceh, *13*-ஆம் நூற்றாண்டு), பட்டு பாபட் (Batu Bapahat, *14*-ஆம் நூற்றாண்டு) ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகளில் வாரோசு, நேசு அச்செ கல்வெட்டுகள் ஒரே வணிகக் குழுவினைச் சார்ந்தவை. பழைய ஜாவா மொழியிலும் தமிழிலும் வெட்டப்பெற்ற இருமொழிக் கல்வெட்டு பொர்லாக் தோலோக்கில் உள்ளது. மத்திய சுமத்திரா பகுதியில் கிடைத்த கற்பூரம், தங்கம் (ஸ்வர்ணம்) போன்றன இவ்வணிகர்களை ஈர்த்துள்ளன என்பதை இக்கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. சுமத்திராவின் வடமேற்கு பகுதியில் உள்ள நேசு அச்செ கல்வெட்டின் செய்தியடிப் படையில் இங்கு கிடைக்கும் தங்கம் தமிழ் வணிகர்களின் நடவடிக்கைகள் இங்கு இருந்தமைக்குக் காரணமாயின எனலாம்.

## சான்றுகள்

---

Karashima, Noboru and Subbarayalu, Y. 2002, "Ainnurruvar A Supra-local Organization of South Indian and Sri Lankan Merchants", in: Karashima, 2002,pp.72-88.

Meera Abraham, 1988, *Two Medieval Merchant Guilds of south India*, Manohar, New Delhi.

Karashima, ed.2002. *Ancient and Medieval Commercial Activities in the Indian Ocean: Testimony of Inscriptions and Ceramic-sherds*, Taisho University, Tokyo.

Y. Subbarayalu, 1998, "The Tamil Merchant-Guild Inscription at Barus, A Rediscovery", In. Claude Guillot, ed. *Histoire de Barus, Sumatra, Le Site de Lobu Tua I: Etudes et Documents, Cahiers d 'Archipel 30,* Paris,pp,25-33.

P. Champakalakshmi, 1996, *Trade Ideology and Urbanization: South India 300 BC to AD 1300,* Oxford University Press, New Delhi


Subramanian, T.N..,1978, " A Tamil Colony in Medieval China", *South Indian Studies,* In (ed) R. Nagaswamy, Madras.

Jan Wisseman Christie, (1998), "The Medieval Tamil-language Inscriptions in Southeast Asia and China", *Journal of Southeast Asian Studies,* 29 , pp.251-252.

# 7. ஐஞ்னூற்றுவர் தூபக்கால்

ஆறுமுக சீதாராமன்

எழுத்துப்பொறித்த பித்தளையால் ஆன தூபக்கால் ஒன்று கும்பகோணத்தில் கிடைத்துள்ளது. இத்தூபக்காலில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு எழுத்தமைவில் 'அஞ்னூற்றுவன்' எனச் சோழர் காலத் தமிழ் எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்தில் அயல்நாடுகளுக்கும் சென்று வணிகம் புரிந்த வணிகக் குழுக்களில் ஐயப்பொழில் ஐநூற்றுவர் என்னும் வணிகக்குழு முக்கியம் வாய்ந்ததாகத் திகழ்ந்தது. இவ்வணிகக் குழுவைச் சார்ந்த ஒருவருக்குச் சொந்தமான தூபக்காலாக இதைக் கருதலாம் அல்லது ஐநூற்றுவர் வணிகக்குழுவைச் சார்ந்த ஒருவர் இதை ஏதேனும் ஒரு கோயிலுக்குத் தானமாக அளித்திருக்கலாம். பொதுவாக, கல்வெட்டுகள் வழியே அறியப்பெறும் இவ்வணிகக் குழு குறித்த சான்றுகளுக்கு மேலும், இத்தூபக்கால் துணைபுரிவதாக அமைகிறது.



படம் 8.1 அஞ்னூற்றுவன் தூபக்கால்



படம் 8.2 தூபக்காலுள்ள எழுத்துகளின் அண்மைக் காட்சிப்படம்

# 8. செக்கார் வணிகச் சமூகம்

**நாக.கணேசன்**

வரலாறு என்பது தற்செயலாக நிகழும் சம்பவங்களின் தொகுப்பன்று. சமுதாயத்தில் ஏற்படும் வளர்ச்சிகளும் மாற்றங்களும் சில திட்டவட்டமான நியதிக்கேற்ப அமைவதாகும். அது சமூக மாற்றங்களின் வளர்ச்சிப் போக்கினை அறிய உதவும் விஞ்ஞானம். மக்களின் வாழ்க்கை 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்ற சமூக இயக்கவியல் நியதிக்கேற்ப காலத்திற்குக் காலம் வளர்ச்சியையும் மாற்றத்தையும் பெற்றுவந்துள்ளதை வரலாற்றில் காணலாம். மக்களின் வாழ்க்கைத் தேவையின் அடிப்படையில் தொழிலும் தொழிலைச் சார்ந்த கருவிகளும் உருவாக்கப்பட்டன. கால மாற்றத்தின்பொழுது சமுதாயத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் பல படிநிலைகளையும், ஏற்றத்தாழ்வுகளையும், முரண்பாடு களையும் உருவாக்கின.

உயிர் வாழ்வதற்கான உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்களில் உபரி உற்பத்தியை எதிர்காலத் தேவைக்குச் சேமித்தபொழுது மிகுந்த சேமிப்பைக் கொண்டோர் உடைமையாளராகவும் சேமிப்பு இல்லாதோர் உடைமையற்றவ ராகவும் விளங்கினர். உற்பத்திக் கருவிகளை உடைமையாகப் பெற்றவர்கள் செல்வந்தர்களாகவும், பெறாதவர்கள் வறியவர்களாகவும் காணப்பட்டனர்[1]. மக்கள் தேவையின் நிர்பந்தத்தால் உருவான தொழில்கள் பிறகு பொருளீட்டும் அமைப்பாக உருமாறியது. இத்தகைய வளர்ச்சியும் முரண்பாடும் அனைத்துத் தொழிற் குடிகளிலும் காணப்பட்டன. இப்போக்கு பிற்காலத்தில் தொழிற்சார்ந்த சாதீய கட்டமைப்புகளாக வளர்ச்சிப் பெற்றன. செக்குத் தொழில் மேற்கொண்டோர் செக்கான் என்றும்,

வேளாண் தொழில் மேற்கொண்டோர் வேளாளன் என்றும் தொழில் சார்ந்த சாதீயப் பெயர்களால் மக்கள் அடையாளப் படுத்தப்பட்டனர். சாதியக் கட்டமைப்புகள் வலுப்பெற்றதால் தொழிற்குடிகளில் நிலவிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் முரண்பாடு கூர்மையடையவில்லை. இதனால் சாதியக் கட்டமைப் புகளுக்கிடையே நிலவிய ஏற்றத்தாழ்வு முரண்பாட்டுக் கூர்மை வலுவாகக் காணப்பட்டது. இதன் உச்சக்கட்ட வளர்ச்சியை கி.பி.13-ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழ்நாட்டு வரலாற்றில் அதிகம் காணலாம்.

தொடக்க காலத்தில் நாட்டின் வளர்ச்சி வேளாண் உற்பத்தியைப் பெரிதும் சார்ந்திருந்தது. பண்டமாற்றுமுறை படிப்படியாகக் குறைந்து அனைத்துப் பொருள்களையும் பணத்தைக் கொண்டு வாங்கமுடியும் என்ற நிலை ஏற்பட்ட பொழுது வணிகம் வளர்ந்து வேளாண் தொழிலுக்குப் போட்டியாக உருவெடுத்தது. வணிகர்கள் செல்வந்தர்களாகவும், நிலவுடைமை-யாளருக்குப் போட்டியாகவும் வளர்ச்சி பெற்றனர். நிலவுடைமைச் சமுதாயமும், வணிகச் சமுதாயமும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வடிவங்களையும், வளர்ச்சிப் போக்கினையும் கொண்டவை யெனினும் பண்டைய காலத்தில் ஒன்றையொன்று சார்ந்திருந்தன. வேளாண் தொழிலில் அரசின் பங்களிப்பும் செல்வாக்கும் அத்தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின[2]. வேளாண் தொழில் வளர்ச்சிப் பெற்றபொழுது தச்சர், கொல்லர், செக்கார், நெசவாளர் போன்றோர் மேற்கொண்ட வேளாண்மை சார்ந்த தொழில்களும் வளர்ச்சிப் பெற்றன. இக்கால கட்டத்தில் வேளாண் தொழிலைப் போன்று செக்குத் தொழிலும் மக்களின் அடிப்படைத் தேவையை நிவர்த்தி செய்யும் தொழிலாகக் கருதப்பட்டுள்ளது. இத்தகைய நிகழ்வுப்போக்கு கி.பி.10-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் அதிகமாகக் காணப்பட்டது.

உடல்நலம் காக்கும் உணவாகவும் இருள்நீக்கி ஒளி தரும் பொருளாகவும் எண்ணெயை அறிந்த மக்கள் அதனை உற்பத்தி செய்வதற்கு உருவாக்கிய கருவியே செக்கு எனப்படும். செக்கில் எண்ணெய் ஆட்டும் தொழிலை மேற்கொண்டவர் செக்கார் என்றழைக்கபட்டனர். செக்கார் எண்ணெய் வணிகம் மேற்கொண்ட வணிகச் சமூகத்தை சேர்ந்தவர்களாவர். இவர்கள் செக்காலியர், செக்காட்டி, செக்கான், செக்காத்தி, செக்கு வாணியர், ஜோதி நகரத்தார், திருவிளக்கு நகரத்தார், சங்கரபாடியார் என்று

அழைக்கப்பட்டுள்ளனர். செக்கார் வாழ்ந்த இடம் செக்காலச்சேரி என்றும் செக்குகளிருந்த இடம் செக்குமேடு, செக்காலை, செக்கடி, செக்கடிமேடு என்றும் அழைக்கப்பட்டுள்ளன[3].

> அவனி நாராயண பெருந்தெருவிற்
> செக்கார் ஒழுகைக்கு மேற்கும்.....[4]

> செக்காலைச்சேரி இருபதின் கழஞ்சு
> பொன் குடுத்து....[5]

என்ற கல்வெட்டுத் தொடர்களும்,

> தயில வினைத் தொழில் மரபில்
> சங்கரப்பாடி தெருவு....

என்ற *பெரியபுராண* அடிகளும் செக்கார் வாழ்ந்த இடங்களைப் பற்றி குறிப்பிடுகின்றன. செக்காரில் ஊரின் தேவைகளையும் கோயிலின் தேவைகளையும் பூர்த்தி செய்தவர்கள் செக்காலைச் சேரியிலும், செக்கிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயைப் பிற இடங்களுக்குக் கொண்டுச் சென்று வணிகம் மேற்கொண்டவர்கள் நகரம் அல்லது மணிக்கிராமத்திலும் வாழ்ந்துள்ளனர்.

சங்கால இலக்கியங்களில் செக்கார் பற்றிய செய்தி காணப்படவில்லையெனினும் சிலப்பதிகாரத்தில் 'ஓசுநர்' என்ற எண்ணெய் வணிகர்கள் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. கி.பி.4-5-ஆம் நூற்றாண்டில்தான் இம்மக்களைப் பற்றிய செய்தி கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் அதிகம் காணப்படுகின்றன. *திருவாய்மொழியிலும், திருத்தொண்டர் திருவந்தாதியிலும் பெரியபுராணத்திலும் நாலடியாரிலும் பிங்கல நிகண்டிலும்* காளமேகப் புலவர் பாடிய பாடலிலும் ஜெயங்கொண்டார் பாடலிலும் செக்கு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மக்களின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றுக்கு அடுத்தப்படியாக செக்குத் தொழிலும் கருதப்பட்டுள்ளது. எண்ணெயின் தேவையும் பயன்பாடும் மக்களின் அன்றாட வாழ்வில் அவசியமானதால் மக்களின் அடிப்படைத் தேவையை நிவர்த்திசெய்யும் உற்பத்திக் கருவிகளுள் ஒன்றாக செக்கு இருந்துள்ளது. அதனால் ஊரிருக்கையின் அருகிலும் கோயில்களினருகிலும் செக்கினை நிறுவி ஊர்மக்களின் எண்ணெய் தேவையையும் கோயில்களின் எண்ணெய் தேவை யையும் நிவர்த்தி செய்துள்ளனர்.

முதலாம் பராந்தகசோழனின் 15-ஆவது ஆட்சியாண்டில் திருவிடைமருதூருக்கருகில் ஐய்யப்பாடி என்ற ஊர் புதிதாக நிர்மாணிக்கப்பட்டபொழுது அவ்வூரில் அமைக்கப்பட வேண்டிய மாளிகை, மரங்கள், பூந்தோட்டங்கள் பற்றி குறிப்பிட்ட பிறகு பெருஞ்செக்கு நிறுவப்பட வேண்டும் என்று கல்வெட்டில் வலியுறுத்துவதிலிருந்து அக்கால கட்டத்தில் செக்கின் தேவையும் செக்கின் முக்கியத்துவமும் அறிய முடிகிறது.

> காவும் தெங்கும் இடபெறுவதாகவும் தமனகமும் இருவாசியும் மருவும் செண்பகமும் செங்கழுநீரும் மாவும் பலாவும் கமுகும் பனையும் உள்ளிட்ட...ருவில் பயன் மரமும் நடவும் இடவும் (பெறுவ) தாகவும் இட்ட தெங்கும்பனையும் ஈழமுடறபெறாததாகவும் பெருஞ்செக்கிட பெறுவதாக[6]

என்ற அக்கல்வெட்டில் செக்கின் முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளது.

வேளாண் நிலங்களை உடைமையாகப் பெற்றோர் பெருங்குடிகள், காணியுடையார், நிலக்கிழார், நில உடைமையாளர், உழுவித்துண்போர் என்றும் அவ்வேளாண் நிலங்களில் நேரிடையாக உழைப்பைச் செலுத்தி உற்பத்தி செய்தோர் உழுகுடிகள், உழவர், உழுதுண்போர், உடைமையற்றோர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய ஏற்றத்தாழ்வான படிநிலையைக் கொண்ட நிலவுடைமை சமுதாய அமைப்பு கி.பி.10-ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் இருந்துள்ளது. இத்தகைய நிலவுடைமை சமுதாய அமைப்புத் தொழிற்சார்ந்த சாதீய கட்டமைப்புக்குட்பட்ட நிலையில் அதிக முரண்பாட்டுக் கூர்மையுடன் காணப்பட்டது. இதனால் ஒரு குறிப்பிட்ட தொழிற்குடியில் உடைமையாளர் உயர்சாதியினராகவும் உடைமையற்றவர் தாழ்ந்த சாதியினராகவும் கருதப்பட்டுள்ளனர். இத்தகைய படிநிலை ஏற்றத் தாழ்வுகளும் முரண்பாடுகளும் உற்பத்தி சாதனங்களை உடைமையாகப் பெற்றிருந்த அனைத்துத் தொழிற்குடிகளிலும் வெளிப்பட்டன.

செக்குத் தொழிலிலும் செக்குகளை உடைமையாகப் பெற்ற செக்குடைமையாளர்களும், செக்குகளில் நேரிடையாக உழைப்பைச் செலுத்தி உற்பத்தி செய்த உடைமையற்ற செக்காரும் இருந்துள்ளனர். நிலங்களை தன் உடைமையாக வைத்திருந்த நிலவுடைமையாளரைப் போன்று செக்கினை உடைமையாக வைத்திருந்த செக்குடைமையாளரும் இருந்துள்ளதைக்

கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம் கூடலூர் நத்தமேட்டில் கண்டறியப்பட்ட செக்கின் உரல் பகுதியில்,

ஸ்ரீ பிடாரன் மல்லன் செக்கு

என்று பொறிக்கப்பட்டுள்ளது[7]. இக்கல்வெட்டின்படி பிடாரன் மல்லனை செக்குடைமையாளனாகக் கருத வாய்ப்புள்ளது. இதனைப் போன்று செஞ்சி வட்டம் ஏம்பலம் என்ற ஊரில் நத்தமேட்டுப் பகுதியில் காணப்படும் செக்கின்மீது,

ஸ்ரீ நொப்பிக்கலி
ஏறாழி மகன்
மாதேவன் செக்கு

என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் ஏறாழி என்பவனின் மகன் மாதேவன் என்பவன் செக்குக்குரியனவாகவும் செக்குடைமையாளனாகவும் காட்டப்பட்டுள்ளான்[8]. இதனைப் போன்று கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் நத்தமேட்டிலுள்ள செக்கின்மீது,

ஸ்ரீவடுகம்பட்டன் தன்னுடைய செக்கு வீசம்பட்டனுக்கு
நகர மறிய பேர்பெறு குடுக்க இந்நகரமறி பிடாரியிக்கு
திருவிளக்கினுக்கு நீர(க்)ட்டிக் குடுத்த(ற)ன் வீசம் பட்டன்
இச் செக்கு

என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் ஸ்ரீவடுகம்பட்டன் தன்னுடைய செக்கு என்று குறிப்பிடுவதன்மூலம் வடுகம்பட்டன் செக்குடைமையாளன் என்பதை உறுதிப்படுத்தலாம்[9]. செக்குடைமையாளனான வடுகம்பட்டன் தன்னுடைய செக்கினை தன்பெயர் நிலைத்து நிற்கும் பொருட்டு ஊரார் அறிய அவ்வூர் பிடாரிக் கோயிலுக்கு வீசம்பட்டன் மூலம் தாரை வார்த்துக் கொடுத்துள்ளான். வடுகம்பட்டன் பிடாரிக் கோயிலுக்கு தன் செக்கினை நேரிடையாக வழங்காமல் வீசம்பட்டன் மூலம் தாரை வார்த்துக் கொடுத்துள்ளதால் 'வீசம்பட்டன்' என்பவன் சங்கரபாடியானாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் கோயில் நிர்வாகத்தில் பங்குபெற்ற செக்காரான சங்கரபாடியாரே கோயில் விளக்குகளுக்குக் கொடைகளைப் பெறும் பணியினையும் அதனைப் பராமரிக்கும் பணியினையும் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.

வடுகம்பட்டன் செக்குடைமையாளன் என்ற நிலையிலிருந்து செக்குடைமையற்றவன் என்ற தாழ்ந்த நிலைக்குத் தள்ளப் பட்டபொழுது இந்நிகழ்வுகள் நடந்துள்ளதை கல்வெட்டின் மூலம் அறியமுடிகிறது. வடுகம்பட்டன் தனக்குப் பிறகு செக்கினைப் பராமரிக்க வாரிசில்லா சூழ்நிலையிலோ, வரி செலுத்த இயலாத சூழ்நிலையிலோ தனது செக்கினை வரிவிலக்குப் பெற்ற பிடாரிக் கோயிலுக்கு வழங்கி அதன் மூலம் தன் புகழ் நிலைக்கும்படி செய்திருக்கலாம். ஆட்சியாளர்கள் வரி செலுத்தாத மக்களிடம் 'மண்கலம்' தகர்ந்து வெண்கலம் பறித்து வரியினைப் பெற்றுள்ளனர். ஆட்சியாளர்களின் கடுமையான வரி விதிப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் வரிவிலக்குச் சலுகை வழங்கப்பட்ட கோயிலுக்குச் செக்கினை வழங்கியிருக்க வாய்ப்புள்ளது.

திருவண்ணாமலைக்கருகில் ஆலையூர் நத்தமேட்டில் காணப்படும் செக்கின்மீது கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு உள்ளது[10].

**சகர யாண்டு எண்ணூற் றெழுபத்தின் நேழு**
**வாண கோபாடில் பெந்னை வடகரை**
**க் காட்டாம் பூண்டியுடைய செக்கிழான்**
**உலகளந்தான் வீரட்டனி**
**ட்ட செக்கு இதி ரெட்டினான் தேவனார்**
**கொரு முறள் யெண்ணை**

என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் செக்கிழான் உலகளந்தான் வீரட்டன் என்பவன் 'செக்கிழான்' என்ற சொல்லின் மூலம் செக்குடைமையாளனாகக் காட்டப்பட்டுள்ளான். நிலவுடைமையாளன் நிலக்கிழான் என்று அழைக்கப்பட்டதைப் போன்று செக்குடைமையாளன் செக்கிழான் என்று அழைக்கப்பட்டிருப்பது செக்காரில் செக்குடைமையாளர் இருந்துள்ளதை உறுதிப் படுத்துகின்றது.

செக்குத் தொழில்மீது விதிக்கபட்ட வரிகள் அதன் வணிகத்தன்மைக்கேற்ப செக்குக்கடமை, செக்கார்பட்டம், செக்காயம், செக்கிறை, செக்குக்காணம் போன்ற பெயர்களில் வசூலிக்கபட்டன. கி.மு.3-ஆம் நூற்றாண்டில் உப்பளங்களில் அரசின் அனுமதிப் பெற்றே உப்புத் தயாரிக்கப்பட்டுள்ளது. அனுமதியின்றி உப்புத் தயாரிப்பது தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டுள்ளதென்று கௌடில்யர் தனது *அர்த்தசாஸ்திரத்தில்*

குறிப்பிட்டுள்ளார்[11]. பல்லவர் காலத்தில் 'உப்புக்கோச்செய்கை' என்ற தொழில் வரியை அரசுக்கு செலுத்திவிட்டு உப்பினை த்யாரித்துள்ளனர்[12]. இதனைப் போன்றே செக்குத் தொழிலுக்கும் 'செக்கு' என்ற பெயரில் தொழில்வரி வசூல் செய்யப்பட்டுள்ளதை கல்வெட்டில் காணமுடிகிறது. தனியார் செக்குகளை நிறுவிட வாய்ப்பளிக்கப்பட்டபோது செக்கார் சமூகத்திலிருந்த செக்குடைமை யாளர்கள் அரசின் அனுமதியினை உரிமக்கட்டணம் செலுத்தி செக்குத் தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

> ..........இருபதின்மர் சதுர்பேதிகளுக்கு பிரம்மதேயமாக கொடுத்து இவ்வூர் மனநயும் மநைப்படப்பும் ஊராள்ச்சியும் செக்கும் தறியும் கூலமும் தரகும் கத்திக்காணமும்..........

என்ற கல்வெட்டில் 'செக்கும் தறியும்' என்று பொறிக்கப் பட்டுள்ளது[13]. இங்குச் செக்கு என்பது செக்குத் தொழில் உரிமம் (Licence fee for Oil Crusher), தறி என்பது நெசவுத்தொழில் உரிமம் (Licence fee for Textile) ஆகும். கி.மு.3-ஆம் நூற்றாண்டிலும் கி.பி.7-ஆம் நூற்றாண்டிலும் வசூலிக்கப்பட்ட உப்புத்தொழில் உரிமத்தைப் (Licence fee for Salt Industry) போன்று 'செக்கு' என்ற பெயரில் உரிமக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு செக்குத்தொழில் உரிமம் வழங்கப்பட்டுள்ளதை இக்கல்வெட்டின் மூலம் அறியலாம். இங்குச் செக்கு என்று குறிப்பிடப்படுவது பொதுவாக செக்கிலிருந்து வெளிப்படும் எண்ணெய் மீது இடப்பட்ட வரியாக இருந்த-போதிலும் அது செக்கு இயந்திரங்களை (செக்கு) நிறுவுவதற்கு அரசால் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணமே ஆகும்[14].

செக்குடைமையாளர்கள் செக்கிலிருந்து உற்பத்தி செய்த எண்ணெயில் செக்காருக்கு வழங்கிய கூலிபோக எஞ்சிய பெரும்பகுதி எண்ணெயை செக்கு வாணியர் என்ற பெரும் எண்ணெய் வணிகர்களைக் கொண்டு வணிகம் மேற்கொண்டு உள்ளனர். இத்தகைய பெரும்வணிகச் செக்காரே பிற்காலத்தில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஊர் பொறுப்பும் கோயில் பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய செக்கார் சங்கரப்பாடியார் என அழைக்கப்படுவதை கல்வெட்டுகளில் காணலாம். இவர்களைப்போன்று அரச குடும்பத்திற்கு ஆடைகள் நெய்த 'பட்ட சாலியர்' என்ற நெசவாளர்களின் தொழில் சமூகப்பொருளாதார உயர்வினைக் கருத்தில் கொண்டு உத்தமசோழன் (கி.பி. 970-985) காலத்தில்

கோயில் நிதிக்கணக்குகளைப் பரிசோதிக்கும் பணி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது[15]. இத்தகைய நிகழ்வுகள் மூலம் ஒவ்வொரு தொழிற்குடியிலும் பொருளுடைமையைக்கொண்டே சமூக மதிப்பளிக்கப்பட்டுள்ளமை அறியமுடிகிறது. செக்கார் உயர்வு தாழ்வு ஏற்பட்டமை அச்சமூக மக்களிடையே பொருளுடைமை ஏற்படுத்திய மாற்றமே எனலாம்.

சங்கரப்பாடியார், வாணியர், மணிக்கிராமத்தார், திசையாயிரத்து ஐந்நூற்றுவர், அஞ்சுவண்ணத்தார், நானாதேசிகள் போன்ற வணிகக் குழுக்கள் கோயில் ஆட்சிக்குழுவில் பங்கெடுத்துக் கொண்டன. சங்கரப்பாடியார் என்ற செக்கார் கோயில் நிர்வாகத்தில் பங்குபெற்றதோடு கோயில் விளக்குகளுக்கு எண்ணெய் வழங்கி, நந்தாவிளக்களித்து அவற்றைப் பாதுகாக்கும் பணியினையும் செய்தனர். அவ்விளக்குகள் எரிவதற்காகக் கொடைகளைப் பெற்று அக்கொடைகளைப் பராமரிக்கும் பணியினையும் மெற்கொண்டனர்[16].

> திருக்கோயிலூர் சபையோக நகரந் திருக்கோயிலூர் சங்கரபாடியோம்[17]
>
> திருநெல்வேலிச் சுத்தவல்லிப் பெருந்தெருவிற் சங்கரன்பாடியார் எண்ணைய் அளப்பாராக[18]
>
> அமூர் கோட்டத்து மாமல்லபுரமாகிய சனனாதபுரத்துச் சங்கரபாடியான் கொள்ளம்பாக்கிழான் மாதேவன் எட்டி வைத்த திருநொந்தா விளக்கொன்று[19]

என்ற கல்வெட்டுத் தொடர்கள் இதனைப் புலப்படுத்துக்கின்றன.

> இறைக்குடிகளில் பொன்காணவல்லா ரெனப்படுவாரை நோக்கி மாடவிதியார் கூடிக் குடவோலை எழுதிப் புகவிட்டு தங்கள் சேரியில் நால்வரைக் குடவோலையில் பொந்தாரைக் கொள்வதாகவும் இப்பரி சே(ணை)யிலும் இருவரைக் கொள்வதாகவும் இப்பரிசெய் சங்கரப்பாடியிலும் மூவரை(க்) கொள்வதாகவும் இவர்களெல்லா ஜனத்துக்கு மொக்க பொன் காண்டாறுகளாகவும்[20]

என்ற கல்வெட்டுத் தொடர்கள் கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்ட பொன்னின் தரத்தைச் சோதிக்கும் குழுவில் சங்கரப்பாடியார் இடம்பெற்றிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. இக்கல்வெட்டுகள் மூலம் சங்கரபாடியார் என்ற செக்காருக்கு அளிக்கப்பட்ட உயர்வையும் மதிப்பையும் அறியலாம். கோயில்களுக்குப் பொருள் காணிக்கை செலுத்தவதைப் போன்று

மக்கள் செக்குக் காணிக்கையும் செலுத்தியுள்ளனர். கரூர் வட்டம் வெள்ளியனை என்ற ஊரின் நத்தமேட்டுப் பகுதியிலுள்ள செக்கின்மீது '

ஸ்வஸ்திஸ்ரீ சோமூர் மஹா தேவர்க்கு
ஐநூற்றுவர் இடுவிச்ச செக்கு[21]

என்று பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் சோமூர் கோயிலுள்ள இறைவனுக்கு விளக்கு எரிப்பதற்காகும் எண்ணெயை ஆட்டுவதற்காக வெள்ளியனையிலிருந்த ஐந்நூற்றுவர் வணிகக் குழு செக்குகளைத் தானமாக வழங்கியுள்ளது. இவ்வாறு கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்ட செக்குகளை மானியமாகவோ வாரமாகவோ செக்காரிடம் விட்டு அவர்கள் கோயிலுக்கு வழங்க வேண்டிய எண்ணெய் அளவினை நிர்ணயம் செய்து அதனைக் கண்காணிக்கும் பணியினையும் கோயில் நிர்வாகத்திலிருந்த சங்கரபாடியார் எனும் செக்கார் மேற்கொண்டனர். செக்குகளில் எண்ணெய் ஆட்டுவோரிடமிருந்து செக்குக்கடமை என்ற வரி வசூலிக்கப்பட்டுள்ளது. கடமை என்பது அரசு அல்லது ஊர் நிலங்களை அளந்து உழவர்களிடம் வாரமாகவோ மானியமாகவோ வழங்கி அதன் விளைவுகளுக்கு ஏற்ப பெற்ற வரியாகும். அவ்வாறு ஊர்ப் பொதுவில் அமைக்கப்பட்ட செக்குகளையோ அரசுக்குத் தேவையான எண்ணெயை ஆட்டுவதற்காக அமைக்கப்பட்ட செக்குகளையோ, கோயிலுக்குத் தானமாக வழங்கிய செக்குகளையோ செக்காரிடம் மானியமாகவோ வாரமாகவோ வழங்கி அவர்களிடமிருந்து பெற்ற வரியே செக்குக்கடமை ஆகும்.

அரசு ஆடைகளை நெய்த நெசவாளர்கள் செலுத்திய வரி தறிக்கடமையாகும். தறிக்கடமை செலுத்திய நெசவாளர்கள் தறி ஒன்றுக்கு ஆறு பணம் ஆண்டு வரியாகச் செலுத்தியுள்ளனர். செக்காரும் செக்கு ஒன்றுக்கு ஆறு பணம் ஆண்டு வரியாக செலுத்தியுள்ளது கல்வெட்டுகளின் மூலம் அறியப்படுகிறது. அவ்வரியை கோயில் மானியம் என்ற பெயரில் எண்ணெயாகக் கோயிலுக்கு வழங்கிவிட்டு உழைப்பிற்கான ஊதியமாகப் பெற்ற எண்ணெயைப் பண்டமாற்று முறையில் கொடுத்து விட்டு தங்கள் தேவைக்கான உணவுப்பொருட்களை மாற்றாகப் பெற்று சிறு வணிகச்செக்கார் வாழ்க்கை நடத்தியுள்ளனர்.

நாதற் கொளி விளக்கேற்ற குடலிலனாய்க்
கும்பத் தயிலம் விற்றுஞ் செக்குழன்றுங்
கொள் கூலியனாய்[22]

என்று உடைமையற்ற செக்கார் எண்ணெய் ஆட்டும் கூலித் தொழிலாளர்களாக வாழ்ந்துள்ளதை *திருத்தொண்டர் திருவந்தாதி* குறிப்பிடுகின்றது. எண்ணெய் வணிகம் மேற்கொண்ட சிறு வணிகர்களான செக்காரும், கூலித் தொழிலாளரான செக்காரும் பொருளாதாரத்திலும், சமூகத்திலும் தாழ்ந்த நிலையில் இருந்துள்ளனர்.

எண்ணெய் ஆட்டும் தொழிலையும் எண்ணெய் விற்கும் தொழிலையும் மேற்கொண்ட உடைமையற்ற கூலிச் செக்காரும், சிறு செக்காரும், சிறுவணிகச் செக்காரும் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்டதோடு அவர்கள் எதிரே வந்தால் கெட்ட சகுனமாகவும் எண்ணெய் ஆட்டுவதும், எண்ணெய் விற்பதும் பாவமென்றும் அதனை செக்காரே செய்வது தகுமென்றும் கருதப்பட்டுள்ளது. செக்கார் உவச்சோ, பறையோ தங்கள் இல்ல நன்மை தீமைகளில் கொட்டிக் கொள்ள கூடாதென்று சமூகக் கட்டுப்பாடுகளும் இருந்துள்ளன.

ஸ்ரீகாஞ்சி மாநகரில் செப்பேட்டுப்படி செக்கார் செய்யக் கடவ முறைமை
எண்ணைய்யும்னவாயிலே கூறி விற்கக் கடவந் இவனுக்கு உவச்சும் பறையும்
கொட்டக் கடவதல்ல ஒரு துறையில் நிருவண்ணக் கடவ னல்லந்[23]

என்ற கல்வெட்டுத் தொடரிலும்

செக்கூர்ந்து கொண்டாரும் செய்த பொருளுடையார்
அக்காரம் அன்னார் அவர்க்கு[24]

என்ற *நாலடியார்* பாடலிலும்

ஆடுவதுஞ் செக்கே யளப்பதுவு மெண்ணெயே
கூடுவதுஞ் சக்கிலியக் கோதையே-நீடுபுகழ்க்
கச்சிச் செப்பேட்டிற் கணிக்குங்காற் செக்கார்தாம்
உச்சிக்குப்பின் புகாரூர்[25]

என்ற ஜெயங்கொண்டார் பாடலிலும் இக்கருத்து உணர்த்தப் படுகின்றது.

அனைத்து தொழிற்குடிகளிலும் உடைமையாளர், உடைமையற்றவர் என்ற பாகுபாடும், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற ஏற்றத்தாழ்வும் நிலவியது. இதில் உடைமையாளர் உயர்ந்தவர்களாகவும் உடைமையற்றவர் தாழ்ந்தவர்களாகவும் கருதப்பட்டனர். இத்தகைய ஏற்றதாழ்வுகள் பொருளுடைமையின் அளவைப்பொறுத்தே அமைந்தன. வேளாண் தொழிற்குடியில் நிலவுடைமையாளராக விளங்கியோர் உயர்ந்தவர்களாகவும், நிலமற்ற உழுகுடிகள் தாழ்ந்தவர்களாகவும் கருதப்பட்டதைப் போன்று செக்குத்தொழிற்குடியில் செக்குடைமையாளராக விளங்கியோர் உயர்ந்தவர்களாகவும், உடைமையற்ற செக்கார் தாழ்ந்தவர்களாகவும் கருதப்பட்டுள்ளதை மேற்காணும் நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

வேளாண் தொழிற்குடியில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்ட நிலவுடைமையாளர்களுக்கு ஊர் மற்றும் கோயில் நிர்வாகத்தில் பொறுப்பளிக்கப் பட்டதைப்போன்று செக்குத் தொழிற்குடியில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்ட செக்குடை மையாளருக்கு ஊர், கோயில் நிர்வாகத்தில் பொறுப்பளிக்கப்பட்டமை அனைத்துத் தொழிற்குடிகளிலும் உடைமையாளர் உயர்ந்தவர்களகவும் மதிப்புமிக்கவர்களாகவும் உடைமயற்றவர் தாழ்ந்தவர்களாகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும், இருந்துள்ளதையே காட்டுகிறது. பொருளுடைமைத்தான் அனைத்து ஏற்றத்தாழ்விற்கும் அடிப்படைக் காரணம் என்ற வரலாற்று உண்மை இத்தகைய சமூக நிகழ்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

வேளாளர் என்றும், செக்கார் என்றும் தொழில்சார்ந்த சாதீயப்பெயர்களால் மக்கள் அடையாளப்படுத்தப்பட்டாலும், அத்தொழிற்சாதிகளில் பொருளு டைமையே ஏற்றத்தாழ்வு களையும், முரண்பாடுகளையும் உருவாக்கியது. நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றிய தொழிற்குடிகளில்தான் இந்நிகழ்வுகள் அதிகம் வெளிப்பட்டன. செக்குத்தொழிற் குடியில் அதன் பங்களிப்புத் தன்மைக்கேற்பவே இந்நிகழ்வுகள் அமைந்தன என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

## சான்றெண் விளக்கம்

---

1 ஏங்கெல்ஸ். பி., 2008, *குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்*, கருத்தப்பட்டறை, மதுரை.

2 ராசுகுமார்.மே.து., தமிழ்நாட்டின் சமூக பொருளியல் வரலாறு- சில குறிப்புகள் (பதிப்பிக்கப்பெறாத கலந்துரையாடல் குறிப்பு).

3 இராசகோபால், 1977, "வர்ாலாற்றில் செக்கு", *கல்வெட்டு*, இதழ்,9, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.பக்.21-22

4 *தெ. இ. க . 17 /588*

5 *தெ. இ. க . 19 /92*

6 *தெ. இ. க . 19 /344*

7 கணேசன்,நாக., 2002, "கரூர் மாவட்டத்தில் புதிய கண்டுபிடிப்புகள்", *ஆவணம்* இதழ்.13, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்,ப.55.

8 நம்பிராசன், எம்., 2000, "ஏம்பலம் செக்குக் கல்வெட்டு", *ஆவணம் இதழ்-11*, தமிழக தொல்லியல் கழகம், தஞ்சாவூர், ப.17.

9 கணேசன்,நாக., 2002, "கரூர் மாவட்டத்தில் புதிய கண்டுபிடிப்புகள்", *ஆவணம்*,இதழ்.13, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்,ப.55.

10 சுபாஸ்சந்திரபோஸ், 2002, லெ., "திருவண்ணாமலை ஆடையூர் செக்குக் கல்வெட்டு", *பழங்காசு*, காலாண்டிதழ், 6, பக்.18

11 Minakshi. C., 1938, *Administration and Social Life under the Pallavas*, University of Madras, Madras.

12 காசிநாதன், நடன., 1981, "உப்பு", தமிழ் நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு (1979), வரலாற்றுப் பேரவை, சென்னை, பக்.18-85

13 *தெ. இ. க . 1/151.* கூரம் செப்பேடு 6பி

14 Meenakshi., 1938, *op.cit.*

15 அப்துல் மஜித், 1978, "நெசவுத்தொழிலும் காஞ்சியும்", செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, வரலாற்றுப் பேரவை, பக்.69

16 கிருஷ்ணன்.அ., 1991, *கல்வெட்டில் வாழ்வியல்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பக்.225-226.

17 *தெ. இ. க . 1/55*

18 *தெ. இ. க . 8/705*

19 *தெ. இ. க . 23/98*

20 *தெ. இ. க . 6/295*

---

21 கணேசன், நாக., 2002, "ஐந்நூற்றுவர் செக்குக் கல்வெட்டு", *ஆவணம்,* இதழ்.11, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், ப.25

22 நம்பியாண்டார் நம்பி அருளிய *திருத்தொண்டர் திருவந்தாதி,* பாடல்.54

23 *தெ. இ. க.* 7/865

24 *நாலடியார்,* பாடல் 374

25 இராசகோபால், சு., 1977, "வரலாற்றில் செக்கு", *கல்வெட்டு,* இதழ்,9, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை. பக்.22.

# 9. சமுத்திராபட்டி வணிகக்குழு வீரதாவளக் கல்வெட்டு

வெ.வேதாசலம்

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் வட்டத்தில் சமுத்திராபட்டி உள்ளது. நத்தத்திற்குக் கிழக்கே கொட்டாம்பட்டி செல்லும் வழியில் சிறிது தூரம் சென்று அங்கிருந்து வடகிழக்கு நோக்கிச் செல்லும் சாலையில் சென்றால் இவ்வூரை அடையலாம். பாண்டிய நாட்டின் வட எல்லையில் இது அமைந்துள்ளது. சமுத்திராபட்டியிலிருந்து வடகிழக்கு நோக்கிச் சென்றால் சிறுகுடி வழியாகத் துவரங்குறிச்சியை அடையலாம். துவரங்குறிச்சியிலிருந்து நத்தம் வழியாக மதுரை மாநகருக்குச் செல்லும் பண்டைய பெருவழியிலேயே நத்தத்திற்கு அருகில் சமுத்திராபட்டி அமைந்திருக்கிறது.

## மதுரைப் பெருவழிகள்

*சிலப்பதிகாரத்தில்* கொடும்பாளூரிலிருந்து மதுரைக்குச் செல்லும் மூன்று பெருவழிகள் மாங்காட்டு மறையவன் என்ற பாத்திரத்தின் வாயிலாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன[1]. கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் உறையூரிலிருந்து மதுரை நோக்கிச் செல்லும்போது மாங்காட்டு மறையவனைக் கொடும்பாளூருக்கு முன்பாகச் சந்தித்து மதுரைக்கு வழி கேட்ட போது சிவபெருமானின் ஆயுதமான திரிசூலம் போன்ற கொடும்பாளூர் குளத்திலிருந்து மூன்று வழிகள் மதுரை நோக்கிச் செல்கின்றன என்று மாங்காட்டு மறையவன் கூறுகின்றான். இதில் முதலாவது இடப்புறம் திருமால்குன்றம் (அழகர் கோவில்) வழியாக மதுரைக்குச் செல்லும் வழியாகும்,

இரண்டாவது, வலப்புறம் சிறுமலையையொட்டி அதன் மேல்புறம் மதுரைக்குச் செல்லும் வழியாகும், மூன்றாவது காட்டின் வழியாகச் செல்லும் நடுவழியாகும் என்று மாங்காட்டு மறையவன் விளக்குகின்றான். இடப்பக்க வழி இன்று துவரங் குறிச்சியிலிருந்து மதுரை நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலை யாகும். வலப்பக்க வழி மணப்பாறை திண்டுக்கல் வழியாகச் சிறுமலையைக் கிழக்கே வைத்து மதுரை நோக்கிச் செல்லும் இன்றைய நெடுஞ்சாலையாகும். மூன்றாவதாக, உள்ள நடுவழி துவரங்குறிச்சியிலிருந்து சிறுகுடி வழியாக மலைகள் சூழ்ந்த காட்டுப் பாதையில் நத்தத்தைக் கடந்து மதுரை நோக்கிச் செல்லும் வழியாகும். இப்பாதையிலேயே நத்தத்திற்கு அருகில் சமுத்திராபட்டி அமைந்துள்ளது.

## வணிகக்குழு கல்வெட்டு

சமுத்திராபட்டி ஊருக்கு அருகில் மலையடிவாரத்தில் தனிக்கல்லில் பொறிக்கப்பட்ட கல்வெட்டாகச் சமுத்திராபட்டி வணிகக்குழு கல்வெட்டு உள்ளது[2]. இது திசையாயிரத்து ஐநூற்றுவர் என்று அழைக்கப்பட்ட வணிகக்குழுவிற்குரியது. தென்னிந்தியாவில் இடைக் காலத்தில் புகழ்பெற்று விளங்கி இலங்கை, கிழக்காசிய நாடுகளுக்கு சென்று வணிகம் நடத்திய வணிகக் குழுவினர்க்குரியது. இக்கல்வெட்டு தனிக்கல்லில் இருபுறமும் தமிழ்மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் பாண்டிய நாட்டை ஆண்ட விக்கிரமசோழபாண்டியன் என்ற சோழப்பேரரசின் பாண்டிய ஆளுநர் (பிரதிநிதி) கல்வெட்டு ஆகும். கி.பி.1050 என்று இதன் காலத்தினைக் கணித்துக் கூறலாம்.

ஐநூற்றுவர் கல்வெட்டுகள் முன்னர் கூறப்பட்ட சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்கு வரும் பண்டைய பெருவழிகளில் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மலம்பட்டி[3], துவரங்குறிச்சி[4], கோவில்பட்டி[5], பிரான்மலை[6], நத்தம்[7] போன்ற இடங்களில் இவை கிடைத்துள்ளன. இவற்றில் மலம்பட்டி, பிரான்மலை, நத்தம் ஆகிய இடங்களிலுள்ள கல்வெட்டுகள் திசையாயிரத்து ஐநூற்றுவர் மெய்க்கீர்த்தியுடன் கிடைத்துள்ளன. பிரான்மலைக் கல்வெட்டு கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. மலம்பட்டி, நத்தம் கல்வெட்டுகள் முறையே கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. எனவே, இப்பகுதியில் கிடைத்த

வணிகக்குழு கல்வெட்டில் மிகப் பழமையானது சமுத்திராபட்டி கல்வெட்டு எனலாம். பாண்டிய நாட்டில் கிடைத்த வணிகக்குழுவின் மெய்க்கீர்த்தியுடன் கூடிய வட்டெழுத்தில் அமைந்த மிகப் பழமையான கல்வெட்டு கமுதி அய்யனார் கோயில் பகுதியில் கிடைத்த கல்வெட்டாகும்[8]. ஆனால் இக்கல்வெட்டு முழுமையாகக் கிடைக்கவில்லை. இதன் நோக்கத்தையும் அறியமுடியவில்லை. திசையாயிரத்து ஐநூற்றுவர் மெய்க்கீர்த்தியுடன் கூடிய கல்வெட்டுகளில் தமிழ்நாட்டில் மிகப் பழமையான கமுதி கல்வெட்டிற்கு அடுத்த பழமையான கல்வெட்டு சமுத்திராபட்டி கல்வெட்டாகும். தென்னிந்தியாவில் பழமையான, முழுமையான வணிகக்குழு மெய்க்கீர்த்தி கல்வெட்டுகளில் குறிப்பிடத்தக்கது சமுத்திராபட்டி வணிகக்குழு கல்வெட்டாகும்.

சமுத்திராபட்டி வணிகக்குழுக் கல்வெட்டு அவ்வூர்ப் பகுதியில் இருந்த 'பனியாநாடு' என்ற ஊரினை வணிகவீரர் குழுவினர் காக்கும் 'நானாதேசி எறிவீரப்பட்டணம் என்ற பெயரில் எறிதளமாக மாற்றியதைத் தெரிவிக்கிறது. மலம்பட்டி வணிகக்குழு கல்வெட்டும் அங்கு வீரதாவளம் ஏற்படுத்தியதைத் தெரிவிக்கிறது. அரசன், நாட்டார், ஊரார் ஆகியோரின் பாதுகாப்பை நம்பாது வணிகவீரர்களின் பாதுகாப்பில் விளங்கும் நகரமாகத் திசையாயிரத்து ஐநூற்றுவர் வணிகக்குழுவினர் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் இதுபோன்ற காவல் நகரங்களை உருவாக்கியுள்ளனர். இவை எறிவீரப்பட்டணம், எறிவீரதளம், வீரதாவளம், எறிபடைநல்லூர், தேசிஎறிவீரப் பட்டணம் என்று பலவாறாக அழைக்கப்பட்டன. பாண்டிய நாட்டில் அமைக்கப்பட்ட எறிவீரப்பட்டணங்களில் மிகப் பழமையானது சமுத்திராபட்டி பகுதியிலேயே அமைக்கப் பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட எறிவீரப் பட்டணங்களிலும் இது பழமையானது.

முழுவதுமாக வணிகவீரர் குழுவின் பாதுகாப்பில் அமைந்த இந்நகரம் பெருவழிகளில் வந்த சரக்குகளைப் பாதுகாத்து வைக்கப் பயன்பட்டிருக்கின்றது. இந்நகரங்கள் நாடுகள் சந்திக்கும் இடங்களிலும் இரு எல்லைப்புறங் களையொட்டியும் பண்டைய பெருவழிகளிலேயே உருவாக்கப் பட்டிருக்கின்றன. கி.பி. 11-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு நத்தம், ஆத்தூர், பெரியகுளம், இடைவழி (சாயல்குடிப்பகுதி),

திருவாலீஸ்வரம் போன்ற இடங்களில் பாண்டிய நாட்டில் இந்நகரங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன[9]. கல்லிடைகுறிச்சி[10], தேவிபட்டினம்[11] முதலிய இடங்களில் தளம் என்ற பெயரில் வணிக நகரங்கள் சிறிய அளவில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவை நகரம், புரம், பெருந்தெரு, பேரங்காடி, பட்டணம், பட்டினம் என்று அழைக்கப்பட்ட உள்நாடுகளிலிருந்த வணிக நகரங்களிலிருந்து வேறுபட்டவையாகும். இவை உள்நாடுகள், ஊர்களைக் கடந்து சென்று வணிகம் நடத்திய திசையாயிரத்து ஐநூற்றுவர் வணிகக் குழுவினருக்குரியது. இவர்களது மெய்க்கீர்த்தி அறுபத்துநான்கு தாவளங்களுக்குச் (வீரதாவளம்) சென்று வணிகம் நடத்தியதைத் தெரிவிக்கிறது.

சோழப் பேரரசு தென்னிந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வந்த காலத்தில் வணிக வளர்ச்சி உச்சகட்ட வளர்ச்சியை எட்டிய நிலையில் சுயாட்சி படைத்த இவ்வணிக நகரங்கள் அரசு ஆதரவுடன் தொடங்கப்பட்டிருக்கின்றன. முதலாம் இராசராசன் தனது பெருமையையெல்லாம் தொகுத்துப் பாடல் வடிவில் அமைந்த மெய்க்கீர்த்தியை கி.பி.10-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தமிழ்க் கல்வெட்டுகளில் பொறிக்கத் தொடங்கினான். அரைசர், பின்னோர் என்று அழைக்கப்பட்ட வணிகர்களும் தங்கள் பெருமையைத் தொகுத்துக் கூறும் தமிழ் மெய்க்கீர்த்தியைக் கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டுகளிலிருந்து கல்வெட்டுகளில் பொறிக்கத் தொடங்கினர்.

சமுத்திராபட்டி கல்வெட்டில் கிரந்த எழுத்துக்களில் வடசொற்கள் கலந்த தமிழ்மொழியில் திசையாயிரத்து ஐநூற்றுவர் மெய்க்கீர்த்தி பொறிக்கப்பட்டுள்ளது. பஞ்சசத சாசனம் (ஐநூற்றுச் சாசனம், ஐநூற்றுவர் சாசனம்) பெற்றவர்கள் தங்களிடத்து இலட்சுமிதேவி குடியிருக்கிற பெருமை உடையவர்கள், புவனம் முழுவதும் வீரம் பொருந்திய வாசுதேவன் கண்டழி மூலபத்திரன் ஆகியோரது வழிவந்தவர்கள், அய்யப்பொழில் என்ற சாளுக்கியரின் தலைநகரில் (அய்ஹோளே) இருக்கின்ற அய்யப்பொழில் பரமேஸ்வரிக்கு மக்களாகி விளங்குகின்றவர்கள், பழபட்டாராகிக்குத் துணைவராகி (பணி செய்கின்றவர்கள் ) நிற்பவர்கள், 18 பட்டணங்கள், 32 வேளாபுரங்கள் (வளர்புரங்கள்), 64 கடிகைத் தாவளங்களில் இருந்து வணிக ஆட்சி நடத்துகின்றவர்கள் என்று திசையாயிரத்து ஐநூற்றுவரின் பெருமைகளைச் சமுத்திராபட்டிக் கல்வெட்டு தொகுத்துக் கூறுகிறது. இவ்வணிகக்குழுவில் பல

தொழில் செய்கின்றவர்களும் பலதரப்பட்ட வணிகம் செய்கின்ற பல்வேறு சமூகத்தினரும் பல்வேறு வணிகக்குழுவும் அவர்களைக் காக்கின்ற வீரர்களும் வீரர்குழுவினரும் வணிகர்களுக்கு வேண்டிய குற்றேவல் புரிகின்ற ஏவல் மக்களும் இருந்திருப்பதையும் இம்மெய்க்கீர்த்தி தெரிவிக்கின்றது[12]. இதில் கீழ்க்காண்பவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

| வ.எண் | வணிகரின் பெயர் | விவரம் |
|---|---|---|
| 1 | செட்டிபுத்திரன் | வணிகக்குழு |
| 2 | கவறை | வணிகக்குழு |
| 3 | காத்தரிவன் | தளவணிகர், வெற்றிலை வணிகர் |
| 4 | காமுண்டசுவாமி | நில உரிமையாளர் |
| 5 | கொற்றக்குடைபன்மை முன்னூற்றுவர் | வீரர்குழு |
| 6 | கொங்கவாள் எழுநூற்றுவர் | வீரர்குழு |
| 7 | அங்ககாறன் | ஒருவகை வீரர்குழு |
| 8 | ஆவணக்காரன் | கடைவணிகர் |
| 9 | உலகன் | ஏவலாளன் |
| 10 | உள்பசும்பைகாறன் | வணிகர் பணப்பையைச் சுமப்பவன் |
| 11 | தொழில்வாரியன் | ஏவலாளன் |

மேற்கண்ட அனைவரும் ஒன்றாகத் திசைகள் அனைத்திற்கும் சென்று அறம் வளர, கலி ஒழிய வணிகம் நடத்தியதாக இம்மெய்க்கீர்த்தி தெரிவிக்கின்றது.

**பனியாநாட்டை நானாதேசி எறிவீரப்பட்டணமாகச் செய்தல்**

சமுத்திராபட்டி வணிகக்குழு கல்வெட்டில் இரு முக்கியச் செய்திகள் கூறப்படுகின்றன. இக்கல்வெட்டுள்ள

சமுத்திராபட்டி பகுதி பழங்காலத்தில் பனியாநாடு என்று அழைக்கப்பட்டது. இதனை வணிகவீரர்களின் காவல் நகரமான நானாதேசி எறிவீரப்பட்டணம் என்ற பெயரில் வீரதளமாக உருவாக்கியதை ஒரு செய்தி தெரிவிக்கிறது. வணிகக்குழுவின் பகைவர்களையும் வழியில் அவர்களைத் தடுத்து நிறுத்திப் பயணத்திற்கு இடையூறு செய்தவர்களோடு போரிட்டு அழித்த வீரர்களுக்கும் வீரர் குழுவினருக்கும் எறிவீரதளத்தில் பல்வேறு மரியாதையும் உரிமையும் பெருமையும் அளிக்கபட்டதையும் மற்றொரு செய்தியாகத் தெரிவிக்கிறது. கீழ்க்காண்பவர்கள் ராஜராஜபாண்டியநாட்டு ராஜேந்திர சோழவளநாட்டில் இருக்கும் பனியாநாட்டின் அஞ்ஞூற்றுவன் புளியமரத்தின் கீழ் கூடி இம்முடிவுகளை எடுத்து கல்வெட்டுப் பொறித்து நட்டுள்ளனர்.

1. நான்குதிசை பதினெண்பூமி நானாதேசித் திசையாயிரத்து அஞ்ஞூறுவர்
2. பனியாநாட்டுத் திசையாயிரத்து அஞ்ஞூற்றுவர்
3. நாட்டுச் செட்டிகள்
4. திசைச்செட்டிகள்
5. பதினெண்பூமி குழுவினருக்குப் பணி செய்கின்றவர்
6. அழகியபாண்டிய பெருநிரவிக்குப் பணிசெய்கின்றவர்கள்

மேற்படி அனைவரும் சேர்ந்தே இம்முடிவுகளை எடுத்துள்ளனர். இம்முடிவின்படி வணிகர் பகைவரை ஒழித்து அவர்களைப் போரிட்டு வென்ற வீரர்களுக்கு வீரபாவாடை வரவேற்பு அளித்து நாள்தோறும் உணவிற்கும் உடைக்கும் தேவையான பொருள்களையும் காசுகளையும்அளித்ததையும் இச்சமுத்திராபட்டி கல்வெட்டு தெரிவிக்கின்றது. இதில் முடிவெடுத்துக் கையொப்பம் இட்டவர்களாகப் பின்காண்பவர்கள் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர்.

1. பாண்டியகுலபதி நாட்டுச் செட்டிகள்
2. அந்தரி சூற்றியான வீரக்குடி கோதுகுலச் செட்டிகள்
3. முனைவன் திருக்குமரன் தேசி அடைக்கலத்து தேச கண்டநாட்டுச் செட்டிகள்
4. ஜெயங்கொண்ட சோழபுரத்தில் வெண்ணி வல்ல திருமாலான் நாநாதேசிய் தளசெட்டியான திருமலாதரன் ஆன அரம்மடி அஞ்ஞூற்றுவர்
5. .......... த்திரன்
6. வாரணவாசி ஆண்டான்

7. வீரகன் ஆண்டான்
8. திருவாலி மணிக்கிராமத்தான் கொங்க வாளையன்
9. சாணி சுற்றி ஆன நாநாதேசி ஆண்டான்
10. ஆப்பிதேவனாந அய்யப்பொழில் ஆண்டான்
11. மதுராந்தக அறங்காடியான்

கல்வெட்டின் இறுதியில் வீரதளத்தில் நடைபெறும் நடைமுறையில் தடையேற்பட்டால் பன்றியாக மாறுவோம், நாய் பிணமாவோம் என்று கூறப்பட்டுள்ளது.

## வணிகர்-நாட்டுத் தலைவர் முரண்பாடு மோதல்

சமுத்திராபட்டி வணிகக்குழு கல்வெட்டின் முக்கியமான செய்திகளில் ஒன்று வணிகக் குழுவினர் நாடுகளிடையே சென்று வணிகம் செய்யும் போது ஏற்படும் இடையூறுகளைப் பற்றிக் கூறுகிறது. வணிகர்கள் உள்நாடுகளில் வணிகம் செய்யும் போதும் அவற்றின் வழியாகப் பயணம் செய்யும்போதும் ஆங்காங்கே அதிகாரத்தில் இருந்த நாட்டுத் தலைவர்கள், குடித்தலைவர்கள் தங்கள் ஆதிக்கத்தினை நிலைநாட்டும் முறையில் வணிகக் குழுவினருக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளனர். இவர்களுக்கும் வணிகக்குழுவினருக்கும் ஒன்றுபட்ட இணக்கமான ஒப்பந்தம் ஏற்படாத நிலையில் மோதல் ஏற்பட்டிருக்கிறது. இது சிறு சண்டையாக மாறியுள்ளது. அதில் வணிகர்கள் போரிட்டு நாட்டுத்தலைவர், குடித்தலைவர் ஆகியோரை வென்று பகைவரை முறியடித்துள்ளனர். சிலரைக் கொன்றும் உள்ளனர். அதன் பின்னர் வணிகவீரர்களை வணிகக்குழுவினர் போற்றி எறிவீரதளங்களில் பெருமையும் மரியாதையும் செய்துள்ளனர் என்பதையே சமுத்திராபட்டி கல்வெட்டு உணர்த்துகிறது.

பாண்டிய நாட்டின் எல்லையில் வெள்ளாற்றிற்குத் தெற்கே மதுரை செல்லும் பெருவழியில் உள்ளது திருமயம் என்ற ஊர். இவ்வூரில் நடைபெற்ற சண்டையில் வணிகக்குழுக்கள் கலிநாயநான பரகேசரி மூவேந்தவேளானை வெற்றி கண்டனர். சாலிய ஆண்டான், கைக்கோள ஆண்டான் என்ற இரு வணிகரைக் (நெசவு வணிகர்கள்)காத்து நின்றனர் என்று சமுத்திராபட்டிக் கல்வெட்டு தெரிவிக்கிறது. உள்நாடுகளில் வணிகக்குழுபயணம் செய்யும் போது ஏற்பட்ட இதுபோன்ற மோதல்கள் பற்றியும் வெற்றி பெற்ற வணிகவீரர்களின் சிறப்பைப் பற்றியும் மலம்பட்டி, சிங்களாந்தபுரம்[13], வெம்பத்தி[14]

முதலிய இடங்களிலுள்ள தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளும் இலங்கையிலுள்ள வாஹல்கட, புதுமுத்தாவை, விஹாரேஹின்ன[15] கல்வெட்டுகளும் கர்நாடகத்திலுள்ள வணிகக்குழு வீரசாசனக் கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன.

எனவே, சமுத்திராபட்டி வணிகக்குழு கல்வெட்டு இடைக்காலத் தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளை உணர்த்தும் முக்கிய ஆவணமாக விளங்குகிறது எனலாம்.

## சான்றெண் விளக்கம்

---

1 *சிலப்பதிகாரம்,* காடுகாண்காதை, அடி 70-147.

2 வேதாசலம், வெ., இராசகோபால், சு., சாந்தலிங்கம், சொ., போசு. செ., 1992, "பாண்டி நாட்டில் சில புதிய கல்வெட்டுகள்", *ஆவணம்* ,இதழ் 2,தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக். 6-8

3 நளினி, மு., 2009, "மலம்பட்டி வணிகக்குழு கல்வெட்டுகள்", *ஆவணம்,* இதழ்-20, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக். 6-8

4 *க.ஆ.அ.* 296/1964-65

5 *மேலது.*

6 *தெ.இ.க.* 8/442

7 இராசகோபால், சு., வேதாசலம், வே., 1993, "நத்தம் கல்வெட்டுகள்", *ஆவணம்,* இதழ் 3, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், பக். 34-37

8 *க.ஆ.அ.* 96/1974-75

9 ஆத்தூர் கல்வெட்டு நேரில் படிக்கப்பட்டது; பெரியகுளம் *தெ.இ.க.* 33/413,414; திருவாலிசுவரம் *க.ஆ.அ.* 360/1916

10 *தெ.இ.க.* 33/95

11 *தெ.இ.க.* 8/405

12 Nobru karashima (Ed.), 2002, *Ancient Medieval Commercial Activities in the Indian Ocean: Testimony of Inscription and Ceramic Sherds,* Taisho University, Tokyo, pp. 72 -87

13 *க.ஆ.அ.* 237/1943-44

14 *க.ஆ.அ.* 213/1976-77

15 பத்மநாதன், சி., 2002, *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்,* இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, பக். 422-427

# 10. திருநெல்வேலிப் பகுதியில் சோழர் கால வணிகம்

இ. மணமாறன்

இடைக்காலத்தில் சோழப் பேரரசு தோன்றிய ஒரு நூற்றாண்டிற்குள் பாண்டிய நாடு, சேர நாடு, தொண்டை நாடு, நுளம்பாடி, கங்கவாடி, இரட்டபாடி ஆகிய பகுதிகளை இணைத்து இறுதியில் வடக்கே துங்கபத்திரை வரை பரவி விரிவடைந்ததுடன் கடல்கடந்து தெற்கில் இலங்கையையும், கிழக்கில் கடாரத்தையும், மேற்கில் மாலத்தீவுகளையும் இலட்சத் தீவுகளையும் தன்னுள் கொண்டுவிளங்கியது. தமிழகத்தின் தெற்கில் பாண்டிய நாட்டில் சுமார் எழுபது ஆண்டுகாலம் நிலைபெற்று விளங்கிய சோழர் ஆட்சிக்காலத்தில் திருநெல் வேலிப் பகுதியில் செயல்பட்ட சோழர்கால வணிகர், வணிகக் குழுக்கள் பற்றி கல்வெட்டுகளில் காணப்படும் சான்றுகளின டிப்படையில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திருநெல்வேலிப் பகுதியில் சோழரது கல்வெட்டுகள்

திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், மன்னார்கோயில், குற்றாலம், ஸ்ரீவைகுண்டம், ஆத்தூர், கங்கைகொண்டான், சேரன்மாதேவி, சீவலப்பேரி, பெருங்குளம் போன்ற பல ஊர்களில் சோழர் காலத்தைச் சார்ந்த சுமார் 200 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகள் சோழரது ஆட்சிமுறை, சோழமயமாக்கல், சதுர்வேதிமங்கலங்கள், வணிகக்குழுக்கள், சமூக அமைப்புகள் தொடர்பான செய்திகளைத் தருகின்றன. இவற்றில் பன்னிரெண்டு கல்வெட்டுகள் வணிகர்கள், வணிகக் குழுக்கள் தொடர்பான செய்திகளைத் தருகின்றன.

## இடைக்கால வணிகக் குழுக்கள்

சோழப் பேரரசுக்குட்பட்ட பெருவாரியான ஊர்களில் வணிகர்கள் இருந்துள்ளனர். இவர்கள் வியாபாரிகள், வணிகர்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் உற்பத்தியுடன் வணிகத்தில் ஈடுபட்டவர்கள், உற்பத்தியில் ஈடுபடாமல் வணிகத்தில் மட்டுமே ஈடுபட்டவர்கள் என இருநிலைகளில் காணப்பட்டனர்[1].

உள்நாட்டு, அயல்நாட்டு வணிகத்தை நானாதேசி, திசையாயிரத்து ஐந்நூற்றுவர், மணிக்கிராமத்தார், அய்யாப் பொழில், அஞ்சுவண்ணம், வளஞ்சியர் ஆகிய வணிகக் குழுக்கள் சிறப்பாக மேற்கொண்டனர்[2]. இவர்கள் வணிகத்துடன் கோயில்களுக்கு அறப்பணிகள் செய்தல், கோயில்களை நிர்வாகம் செய்தல் போன்ற பல பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். மேலும், வணிகர்களும் வணிகக் குழுக்களும் கோயில்களுக்கு நிலதானங்கள் அளித்தும், பிறர் வழங்கிய தானங்களுக்கும் அறச்செயல்களுக்கும் பாதுகாவலராக இருந்தும், நிலங்கள் அளித்தும், பரம்பரை பரம்பரையாக வரும் காராண்மை உரிமையைப் பெற்று அனுபவித்தும் வந்துள்ளனர் என்பதையும் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

## திருநெல்வேலிப் பகுதியில் வணிகர்களும் வணிகக் குழுக்களும்

காவிரிக்குத் தெற்கில் உள்ள திரைமூர் நாட்டு வீரநாராயணன் பல்லவரையன் மகன் குமாரமார்த்தாண்ட புரத்தைச் சேர்ந்த வணிகன், அரசன் உறையூர் என்ற சோழிய மயிலட்டி என்பவன் அம்பாசமுத்திரத்தில் உள்ள கோயில் ஒன்றுக்கு விளக்கு ஒன்றை அளித்துள்ளான்[3].

திருச்சாலைத்துறை (அம்பாசமுத்திரம்) திருமூலஸ்தானத்து மகாதேவர் கோயிலுக்குச் சேந்தன் நம்பி நங்கை என்பவள் விளக்கு எரிப்பதற்கு நிவந்தம் வழங்கியுள்ளாள். அந்த நிவந்தத்திற்கு சத்திரியசிகாமணிபுரத்தைச் சேர்ந்த வணிகன் சேந்தன் இருகையன் என்பவன் பொறுப்பாளராக இருந்துள்ளான்[4].

இராசராச சதுர்வேதிமங்கலம் இராசேந்திரசோழப் பெருந் தெருவில் இருந்த நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவர், நலன் சிறக்க திருச்சாலைத்துறை ஆழ்வாருக்கு நிலம் தானமாக சோலை ஐந்நூற்றுவன் என்பவனால் வழங்கப்பட்டுள்ளது[5].

முள்ளிநாட்டைச் சேர்ந்த நிகரிலிச் சோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையானது இராசேந்திர சோழபுரத்தைச் சார்ந்த நகரத்து திருநீலகண்டச்செட்டி என்பவனுக்குத் தேவதான குளத்தின் மீது பரம்பரை காராண்மை உரிமையைக் கொடுத்துள்ளது[6]. நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவரைச் சேர்ந்த பராந்தகன் நிரைஞ்சன் என்பவன் நிகரிலிச் சோழ விண்ணகர ஆழ்வார் கோயில் காவலாளிகளுக்கு நிலம் தானமாக வழங்கியுள்ளான்[7].

கழுகு மலையில் சோழநாட்டு இராசராச வளநாட்டின் இராசராச சூளாமணிபுரத்தைச் சேர்ந்த வணிகன் கல்யாணம்பலம் என்பவன் நேச்சுர நாட்டு பெருஞ்சுர ஊராரிடம் நிலம் ஒன்றை வாங்கி அவ்வூர் கோயிலுக்குத் தானமாக வழங்கியுள்ளான்[8]. முதலாம் குலோத்துங்கனின் 28-ஆவது ஆட்சியாண்டில் (கிபி.1098) பவித்திரமாணிக்கபுரத்தைச் சேர்ந்த வணிகன் ஒருவன் சோழேந்திர சிங்க சதுர்வேதிமங்கலத்து மகாசபையாரிடம் நிலம் ஒன்றை விலைக்கு வாங்கி அதனைச் சந்திரசேகர ஈஸ்வரம் உடையார் கோயிலுக்கு திருநந்தவனபுரமாகத் தானம் அளித் துள்ளான்[9]. மணிக்கிராமத்து சடையங்கவையன் என்ற தர்மசெட்டி என்பவன் குற்றாலத்து பெருமானடிகள் ஆலயத்திற்கு விளக்கிற்காக 30 பசுமாடுகளைத் தானமாக அளித்துள்ளான்[10]. ஆத்தூரில் உள்ள ஒருகல்வெட்டில் வேலன் என்ற புருஷமாணிக்கச் செட்டி என்ற பெயர் மட்டும் காணப்படுகிறது[11].

திருக்கோளூரில் முதலாம் இராசராசனின் 24-ஆவது ஆட்சி ஆண்டில் (கி.பி.1009) உலகசிந்தாமணிபுரம் என்ற நித்யவிநோதபுரத்தைச் சேர்ந்த சோலைக் கணபதி என்ற வணிகன் ஐம்பது ஆடுகளை ஜலசயனத்துக்கிடந்தருளின எம்பெருமான் ஆலயத்திற்கு தூங்கா விளக்கெரிக்க தானம் அளித்தான். இவன் கொடுத்த ஆடுகளில் 25 ஒருவனிடமும் பிற 25 ஆடுகளை காரி என்ற படைத்தலைவனிடமும் ஒப்படைத்து விளக்கெரிக்கத் தினமும் நெய்யை வழங்குவதற்கான ஏற்பாட்டையும் செய்து உள்ளான்[12]. சீவலப்பேரியில் முதலாம் இராசராசனது 29-ஆவது ஆட்சி ஆண்டில் (கி.பி.1114) களக்குடி நாட்டுக் கரவந்தபுரத்தைச் சேர்ந்த வணிகன் ஒருவன் கீழ்க்காலக் கூற்றம் தென்திருமா-லிஞ்சோலை நின்றருளின கருமாணிக்கத் தேவர் ஆலயத்திற்கு விளக்கு ஒன்றைத் தானமாக அளித்துள்ளான்[13].

திருநெல்வேலியில் முதலாம் இராசேந்திர சோழனது 8-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1020) திருநெல்வேலிக் கோயிலில் நடைபெற்றப் பணிகள் குறித்து பிரம்மஸ்ரீகிழார் என்ற அதிகாரி விசாரணைகள் செய்து புதிய ஏற்பாடுகளைச் செய்தார். அதன்படி அவ்வூர் வளஞ்சியர் கோயிலுக்கு சாம்பிராணி, சந்தனம் போன்ற பொருள்களை வழங்க வேண்டும் என முடிவுசெய்யப்பட்டது. மேலும், இவ்வளஞ்சியர் கண்ணனூர் என்ற இடத்தில் உள்ள கோயில் நிலங்கள் மீது காணி உரிமை பெற்றிருந்தனர். அதனால் அந்த நிலங்களுக்கு நாள் ஒன்றிக்கு 22 காசுகள் சிறப்புக் குடிமையாக வழங்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டது[14].

திருநெல்வேலிப் பகுதியிலிருந்து கிடைத்துள்ள கல்வெட்டுகளின் அடிப்படையில் வணிகர்கள் தனியாகவும் வணிகக் குழுக்களாகவும் பல அறப்பணிகளைக் கோயில்களுக்கு செய்துள்ளனர். நிலக்கொடை, விளக்குக்கொடை, காராண்மை உரிமை போன்றவற்றை அவர்கள் பெற்ற உரிமைகள் என்பதை இவற்றிலிருந்து உணரலாம்.

## சான்றெண் விளக்கம்

---

1 தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, *தமிழ்நாட்டு வரலாறு-சோழப்பெருவேந்தர் காலம்*. நான்காம் தொகுதி (இரண்டாம் பகுதி). பக். 217

2 *மேலது*. ப.227

3 *தெ.இ.க. 13 / 241*

4 *தெ.இ.க. 13 /134*

5 *தெ.இ.க. 13/146*

6 *தெ.இ.க. 15/614*

7 *தெ.இ.க. 14/153*

8 *தெ.இ.க. 5 /307*

9 *தெ.இ.க. 8/445*

10 *தெ.இ.க. 13/241*

11 *க.ஆ.அ. 439/1917*

12 *க.ஆ.அ. 392/1929*

13 *க.ஆ.அ. 350/1960*

14 *தெ.இ.க. 5/449*

# 11. பாண்டிய நாட்டுக் கடற்கரை, உள்நாட்டுப் பகுதிகளில் வணிக நடவடிக்கைகள்

சு. கண்ணன்

பாண்டிய நாட்டில் சங்ககாலம் தொடங்கி முன் இடைக்காலம் வரை சிறந்து விளங்கிய கடல்சார் வணிகமும் உள்நாட்டு வணிகமும் பிற்காலப் பாண்டியர்களின் எழுச்சியை ஒட்டி கி.பி.12-14-ஆம் நூற்றாண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டன. இக்கால கட்டத்தில் அரசின் ஆதரவு பெற்ற பலதரப்பட்ட வணிகக் குழுக்கள் அயல்நாட்டு, உள்நாட்டு வணிகத்தில் சிறப்பாக ஈடுபட்டுப் பாண்டிய நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தன. பாண்டிய நாட்டின் பரந்த நிலப்பரப்பு, நீண்ட கடற்கரைப்பகுதி, மிகுதியான ஆற்று முகத்துவாரங்கள் ஆகியவை இங்கு நிலவிய கடல்சார், உள்நாட்டு வணிக நடவடிக்கைகளுக்குப் பெரிதும் துணைபுரிந்தன. இந்தப் பின்னணியில் பாண்டிய நாட்டின் முக்கியக் கடற்கரைப் பகுதியான இராமநாதபுரம் வட்டாரத்திலும், அதனை ஒட்டிய உள்நாட்டுப் பகுதியான சிவகங்கை வட்டாரத்திலும் இடைக்காலத்தில் (கி.பி.13 முதல் 16-ஆம் நூற்றாண்டு வரை) செயற்பட்ட வணிகக் குழுக்களைப் பற்றியும், வணிகத்தைப் பற்றியும் கல்வெட்டுச் சான்றுகளின் வாயிலாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கடற்கரைப் பகுதி

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கடற்கரைப் பகுதிகளான தீத்தாண்டதானபுரம், தேவிபட்டினம் ஆகிய ஊர்களிலுள்ள 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளும்,

கீழக்கரையிலுள்ள 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகளும் இராமநாதபுரம் வட்டாரக் கடற்கரைப் பகுதிகளில் இருந்த வணிகக் குழுக்கள், வணிகர்கள், பட்டினங்கள், வணிக நகரங்கள், அங்காடிகள், பெருந்தெருக்களைப் பற்றிய செய்திகளையும், வணிகக்குழுக்கள் வணிகம் செய்த பொருள்கள், அவர்களின் சரக்குப் போக்குவரத்துச் சாதனங்கள் பற்றிய குறிப்புகளையும் தருகின்றன.

**வணிகக் குழுக்கள்**

பிற்காலப் பாண்டியர்களின் காலத்தில் (13-ஆம் நூற்றாண்டு) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்திலுள்ள தீத்தாண்டதானபுரம், பல்வேறு வணிகக் குழுக்கள் வாழ்ந்த சிறந்த வணிக நகரமாக விளங்கியுள்ளது. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு இவ்வூரை முத்தூற்றுக் கூற்றத்திலிருந்த தீத்தானம் என்று குறிப்பிடுகிறது[1]. முதலாம் சடையவர்மன் வீரபாண்டியனின் (கி.பி.1253-1283) காலத்தில் இவ்வூரில் பதினெண்விசயத்தார், அஞ்சுவண்ணத்தார், மணிக் கிராமத்தார், தென்னிலங்கை வளஞ்சியர், கைக்கோளர், திருமலை மாதாக்கள் (பிரான்மலை வணிகர்கள்), சாமந்த பண்டசாலி, தோயாவத்திரச் செட்டிகள் (தோதபத்திரகார செட்டிகள்) முதலிய வணிகக் குழுக்களும், வணிகர்களும் குடியேறி வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர்[2]. இவர்கள் தீத்தாண்ட தானபுரத்திலிருந்த சர்வதீர்த்த உடைய நாயனார் கோயிலின் இடிந்த மண்டபத்தை மீண்டும் கட்டுவதற்கான செலவிற்காக இவ்வூரில் விற்க அல்லது வாங்கப்படும் பொருள்களின் மீது ஒரு பகுதியை வரியாக வாங்கி தானமாக வழங்கியுள்ளனர். மேலும் தீத்தாண்டதானபுரத்திலுள்ள பிற்காலப் பாண்டிய மன்னர்கள் மாறவர்மன் வீரபாண்டியன் மற்றும் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் ஆகியோரின் கல்வெட்டுகள் இவ்வூரிலிருந்த வணிகர்களான கைக்கோளர்களும் செட்டிகளும் இங்குள்ள கோயிலுக்குச் சில தானங்கள் அளித்ததைக் குறிப்பிடுகின்றன[3].

இராமநாதபுரம் வட்டத்திலுள்ள கடற்கரை ஊரான தேவிபட்டினம் பிற்காலப் பாண்டியர்களின் காலத்தில் கடல்சார் வணிகத்தில் சிறந்த துறைமுகப்பட்டினமாக இருந்து வந்துள்ளது. இவ்வூர், 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் கல்வெட்டில் செவ்விருக்கை நாட்டிலிருந்த சீறிளங்கோமங்கலமான உலகமா

தேவிபட்டினம் எனவும், 14-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் ஸ்ரீவல்லபட்டினம் எனவும் குறிப்பிடப்படுகிறது[4]. 13-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நகரத்தார்கள், நானாதேசிகள் ஆகிய வணிகக் குழுக்கள் இவ்வூரில் தங்கியிருந்து தங்களின் வணிகத்தை மேற்கொண்டுள்ளனர்[5]. குறிப்பாக இவர்களில் பன்னாட்டு வணிகக்குழுவினரான நானாதேசிகள் பல மண்டலங்களிலிருந்து வந்த சரக்குகளைக் கடல் வழியாகத் தொலைதூர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளனர். 14-ஆம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டிய மன்னன் இரண்டாம் சடையவர்மன் விக்கிரம பாண்டியனின் ஆட்சிக்காலத்தில் தேவிபட்டினம் துறைமுகத்திலிருந்து கடல்வழியாகப் பல்வேறு தேசங்களுக்கு வணிகப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளன. இத்துறைமுகத்தில் பல பகுதிகளிலிருந்து வந்த வணிகப்பொருள்கள் இறக்குமதியும் செய்யப்பட்டுள்ளன[6]. தேவிபட்டினத்தில் வணிக நிமித்தம் தங்கியிருந்த நானாதேசிகள் அங்கிருந்த சிவன்கோயிலில் தங்கள் வணிகக் குழுவின் பெயரில் கட்டவிருந்த வாசலுக்கான (நானாதேசி வாசல்) செலவிற்காகத் தேவிபட்டினத் துறைமுகத்திற்கும், செவ்விருக்கை நாட்டிலிருந்த பிற துறைமுகங்களுக்கும் வந்து செல்லும் வணிகப் பொருள்களின் மீது வரி விதித்துள்ளனர்[7].

இராமநாதபுரம் வட்டத்திலுள்ள கீழக்கரை 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் முத்து வணிகத்தில் புகழ்பெற்ற இடமாகவும் வணிகத் துறைமுகப் பட்டினமாகவும் திகழ்ந்துள்ளது. இவ்வூர் 16-ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் 'செம்பிநாட்டிலுள்ள அனுத்தொகைமங்கலம்' என்றும் 'கீழக்கரையான நினைத்தது முடித்தான் பட்டினம்' என்றும் அழைக்கப்படுகிறது[8]. இக்கால கட்டத்தில் இவ்வூரிலும், இவ்வூருக்கு அருகிலிருந்த மூன்று துறைமுகப் பட்டினங்களிலும் இடைக்கால தமிழகத்தின் முக்கிய வணிகக் குழுவினரான பதினெண் விசயத்தார் முத்து வணிகத்தில் ஈடுபட்டிருந்துள்ளனர்[9]. இவர்கள் செம்பி நாட்டு அனுத்தொகைமங்கலத்திலிருந்த (கீழக்கரை) நினைத்தது முடித்தான் பிள்ளையார் கோயில் திருப்பணிக்கும், பூசைக்கும் தாங்கள் விற்கும் நூறு முத்துக் களுக்கு அரைப்பணம் வீதம் தானம் கொடுத்துள்ளனர்[10].

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்திலுள்ள இராதானூரில் நெசவுத்தொழிலிலும், துணி வணிகத்திலும்

ஈடுபட்ட மதுரையைச் சேர்ந்த கைக்கோளர்கள் அப்பகுதியில் தங்கியிருந்து வணிகம் மேற்கொண்டிருந்தனர்[11].

**வணிகர்கள்**

இராமநாதபுரம் மாவட்டக் கடற்கரைப்பகுதியில் உள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் இப்பகுதி வணிகக் குழுக்களை மட்டுமன்றித் தனி வணிகர்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. ஆனால் அவர்களைப் பற்றிய செய்திகள் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன. தீத்தாண்டதானபுரத்தில் கைக்கோளர்களும், செட்டிப்பிரிவைச் சேர்ந்த வணிகர்களும் இருந்தது முன்னரே குறிப்பிடப்பெற்றது. இதைத் தவிர திருவாடானை வட்டம் இராதானூரிலுள்ள கல்வெட்டு செம்பொன்மாரியைச் சேர்ந்த அவ்வைப்பெருந்தெரு வணிகன் சம்பந்தன் பள்ளியாழ்வான் என்ற மிதிக்குணநாயகன் அங்கிருந்த சிவன் கோயிலுக்குத் தூண் ஒன்றைத் தானமாக வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகிறது[12].

**எறிவீரப்பட்டினம்**

பிற்காலப் பாண்டியர் காலத்தில் இராமநாதபுரம் வட்டாரக் கடற்கரைப் பகுதிக்கும் உள்நாட்டுப் பகுதிக்கும் இடையிலுள்ள முதுகுளத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள திருமாலுங்கண்டார்கோட்டை என்ற ஊர் எறிவீரர்களால் பாதுகாக்கப்பட்ட வணிக நகரமாக இருந்துள்ளது. கல்வெட்டில் இவ்வூர் இடைவழியாகிய எறிவீரப்பட்டினம் என்று குறிப்பிடப்படுகிறது[13]. இங்கு வணிகர்களையும் அவர்களது உடைமைகளையும் முனைவீரர்கள் அல்லது எறிவீரர்கள் பாதுகாத்ததாகத் தெரிகிறது. இதற்குச் சான்றாக இவ்வூரிலுள்ள கல்வெட்டு இங்குள்ள சிவன் கோயிலை முனைவீரர்களோடு தொடர்புபடுத்தி 'முனைவாலீஸ்வரம்' என்று அழைக்கப் படுவதைச் சுட்டலாம்.

**பட்டினங்களும் வணிக நகரங்களும்**

பிற்காலப் பாண்டியர் ஆட்சிக்காலத்தில் இராமநாதபுரம் வட்டாரக் கடற்கரைப் பகுதியில் தேவிபட்டினம், பெரியபட்டினம், கீழக்கரை, தொண்டி ஆகியவை முக்கிய துறைமுகப் பட்டினங்களாக இருந்து வந்தன[14]. இப் பகுதிகளில் தங்கியிருந்த பலதரப்பட்ட வணிகக்குழுக்கள் இத்துறைமுகங்களை மையமாகக் கொண்டு தங்களின் வணிக நடவடிக்கைகளை

மேற்கொண்டனர். மேற்கூறிய துறைமுகப் பட்டினங்களைத் தவிர இராமநாதபுரம் மாவட்டத்தின் உள்பகுதிகளில் உள்ள தீத்தாண்டதானபுரம், இராதானூர், திருமாலுங்கண்டார்கோட்டை ஆகிய இடங்களும் பல்வேறு வணிகக் குழுக்களும் வணிகர்களும் வணிக நிமித்தம் தங்கியிருந்த வணிகத் தலங்களாக இருந்துள்ளன.

### அங்காடி மற்றும் பெருந்தெரு

பிற்காலப் பாண்டியர்காலக் கல்வெட்டுகளில் இராம நாதபுரம் வட்டார கடற்கரைப் பகுதிகளில் இருந்த அங்காடிகள், பெருந்தெருக்கள் பற்றிய குறிப்புகள் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன. இருப்பினும் தேவிபட்டினத்தில் அங்காடியும், தீத்தாண்டதானபுரத்தில் முகமழகியான் பெருந்தெரு என்ற வணிகர்களின் குடியிருப்பும் இருந்துள்ளதை இவ்வூர் களிலுள்ள கல்வெட்டுச் சான்றுகள் தெரிவிக்கின்றன[15].

### வணிகப் பொருள்கள்

இராமநாதபுரம் மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளிலுள்ள பிற்காலப் பாண்டியர்கள், விஜயநகர-நாயக்கர்க்கால கல்வெட்டுகள் இப்பகுதிகளில் வணிகம் செய்யப்பட்ட பொருள்களைப் பற்றிய சில குறிப்புகளைத் தருகின்றன. 13-ஆம் நூற்றாண்டில் தேவிபட்டினத்தில் புடவை, பாக்கு, மிளகு, கருஞ்சரக்கு (உலர்ந்த நறுமணப் பொருள்கள்) போன்றவை அயல் நாடுகள் பலவற்றுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன[16]. இத்துறைமுகப் பட்டினத்திற்கு பல மண்டலங்களிலிருந்து சரக்குகள் வந்து பின்னர் அவை பல பகுதிகளுக்குச் சென்றுள்ளன. மேலும் இங்கு ஏறுவன, இறக்குவன, எடுப்பன, நிறுப்பன, விரிப்பன, பிடிப்பன, அளப்பன, முகப்பன ஆகிய தன்மைகளையுடைய பலதரப்பட்ட வணிகப்பொருள்கள் வணிகம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது[17]. 16-ஆம் நூற்றாண்டில் கீழக்கரையின் முக்கிய வணிகப் பொருளாக முத்து இருந்திருக்கிறது[18].

### வணிகப் போக்குவரத்து

பிற்காலப் பாண்டியர் காலத்தில் இராமநாதபுரம் வட்டாரக் கடற்கரைப் பகுதியில் நிலவிய கடல்சார் வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சாதனங்கள் சிலவற்றைப் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைத்துள்ளன. தேவிபட்டினம்

துறைமுகத்தில் சிற்றுரு, தோணி போன்ற கலங்கள் கடல்வழி வணிகத்தில் சரக்குப் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்-பட்டுள்ளன[19]. மேலும் இங்கு வணிகப் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல ஆட்களும் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

## உள்நாட்டுப் பகுதி

பாண்டிய நாட்டின் கடற்கரைப்பகுதியான இராமநாதபுரத்தை ஒட்டிய உள்நாட்டுப் பகுதி சிவகங்கை வட்டாரமாகும். இங்குள்ள திருமலை, பிரான்மலை, பிள்ளையார்பட்டி, அளகாபுரி, சிவபுரி ஆகிய இடங்களிலுள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் 13, 14-ஆம் நூற்றாண்டில் இப்பகுதிகளில் செயல்பட்ட பல்வேறு வணிகக் குழுக்கள், வணிகர்களைப் பற்றியும், வணிகக் குடியிருப்புகள், வணிக நகரங்கள் வணிகப் பொருள்களைப் பற்றியும் மிகுதியான செய்திகளை அளிக்கின்றன.

## வணிகக் குழுக்களும் வணிகர்களும்

உள்நாட்டு வணிகத்தில் பெரிதும் ஈடுபட்ட வணிகக் குழுவான நகரத்தார்கள் சிவகங்கை மாவட்டத்தில் பிரான்மலை, திருமலை, அளகாபுரி, அருவியூர், பிள்ளையார்பட்டி ஆகிய இடங்களில் வணிக நகரங்களை ஏற்படுத்தி அங்கு தங்களின் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். கடல்சார் வணிகத்தில் மிகுதியாக ஈடுபட்டு கடல்கடந்த தேசங்களுக்குச் சென்ற மற்றொரு வணிகக்குழுவான பதினெண்விசயத்தார் பிரான்மலையில் பிற வணிகக் குழுக்களான திசையாயிரத்து ஐந்நூற்றுவர், நகரத்தார் ஆகியோருடன் சேர்ந்து அங்குள்ள சிவன் கோயிலின் வழிபாட்டிற்கும், பராமரிப்பிற்கும் தாங்கள் வணிகம் செய்யும் பொருள்களின் மீது ஒரு குறிப்பிட்ட பகுதியை வரியாக விதித்து அதைத் தானமாக வழங்க முடிவு செய்துள்ளனர்[20]. சிவபுரியில் கொடும்பாளூர் மணிக்கிராமத்து வணிகக் குழுவைச் சார்ந்த வணிகர் ஒருவர் இருந்ததை அங்குள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது[21]. சிவபுரிக்கு மிக அருகிலுள்ள அருவியூரில் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் வணிகக் குழுவின்கீழ் ஒரு பிரிவாகச் செயல்பட்ட நானாதேசிகள் என்ற வணிகக் குழு குடியேறி இருந்தனர்[22]. திருமலையிலிருந்த பஞ்சவன்மாதேவி பெருந் தெருவில் தன்மடாவளவர் என்னும் எண்ணெய் வணிகர்கள் வசித்து வந்தனர்[23]. சோழபுரத்திலுள்ள 13-ஆம் நூற்றாண்டைச்

சார்ந்த பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு அவ்வூரிலிருந்த வணிகன் நக்கன் அப்பனான அமரகோன் என்பவனைக் குறிப்பிடுகிறது[24].

**வணிக நகரங்கள்**

13-ஆம் நூற்றாண்டில் சிவகங்கை வட்டாரத்தில் நகரத்தார்கள் குடியேறியிருந்த வணிக நகரங்கள் மிகுதியாக இருந்தன. இவ்வணிக நகரங்கள் பாண்டிய நாட்டின் உள்நாட்டு வணிகத் தொடர்பில் முக்கியப் பங்கு வகித்தன. பிரான்மலை கல்வெட்டு (கி.பி.1300) சிவகங்கை வட்டாரத்தில் அருவியூர் (அருவிமங்கலமான குலசேகரப்பட்டினம்), பிரான்மலை (புறமலைநாட்டு புதுத்தெருவான சேரநாராயணபுரம்), திருக்-கோஷ்டியூர் (திருக்கோட்டியூர் மணியம்பலம்), அளகாபுரி (அளகாபுரியான செழிய நாராயணபுரம்), திருமலை (அளகைமாநகரமான ஜயங்கொண்ட சோழப்பெருந்தெரு) ஆகிய இடங்கள் வணிகத்தில் சிறப்புற்று விளங்கிய நகரங்களாக இருந்ததைத் தெரிவிக்கிறது[25]. மேலும் இப்பகுதியிலுள்ள பிள்ளையார்பட்டி (மருதங்குடியான இராஜநாராயணபுரம்), காரைக்குடி (காரிகுடி ஐந்நூற்றுவன் பெருந்தெரு) ஆகிய ஊர்களும் நகரத்தார்கள் தங்கியிருந்து வணிகம் செய்த முக்கிய வணிக நகரங்களாக இருந்துள்ளன[26]. பிள்ளையார்பட்டியிலுள்ள பிற்காலப் பாண்டியர்களின் கல்வெட்டுகள் இவ்வூரிலும், இதற்கு அருகிலுள்ள அளகாபுரியிலும் நகரத்தார்கள் நிலங்கள் வாங்கிப் புதிதாக வணிக நகரங்கள் அமைத்ததைக் குறிப்பிடுகின்றன[27]. சிவகங்கை வட்டாரத்திலிருந்த பிற்காலப் பாண்டியர் கால வணிக நகரங்களுக்கிடையே மிக நெருக்கமான வணிகத் தொடர்பு இருந்துள்ளது. பிள்ளையார்பட்டி கல்வெட்டுகளில் திருமலை, அளகாபுரி, நியமம் (நேமம்) ஆகிய நகரங்களின் வணிகர்களும், காரிகுடி நகரத்தார்களும் குறிப்பிடப் படுகின்றனர். திருக்கோஷ்டியூர், திருப்பத்தூர் கல்வெட்டுகளில் முறையே அருவியூர் நகரத்தாரும் வணிகர்களும் சுட்டப் பெறுகின்றனர். அளகாபுரி வணிக நகரத்திலிருந்த சிவன் கோயிலின் இறைவன் இவ்வூரின் வணிகத் தொடர்பின் காரணமாக 'வணிகை நாராயணமுடைய நாயனார்' என்று அழைக்கப்பட்டார்[28].

### வணிகக் குடியிருப்புகள்

சிவகங்கை வட்டாரத்திலுள்ள கல்வெட்டுகள் இப்பகுதியிலிருந்த வணிக நகரங்களில் நகரத்தார்கள் அல்லது வணிகர்கள் குடியிருந்த பெருந்தெருக்கள் அல்லது தெருக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவற்றில் பிரான்மலை புதுத்தெரு[29], திருமலை ஜயங்கொண்ட சோழப் பெருந்தெரு[30], அருவியூர் நானாதேசி பெருந்தெரு[31], காரிகுடி ஐந்நூற்றுவன் பெருந்தெரு[32], போன்ற நகரத்தார்கள் வசித்த குடியிருப்புப் பகுதிகளாகச் சுட்டப்படுகின்றன. இதைத்தவிர திருமலையில் தன்மடாவளவர் என்னும் எண்ணெய் வணிகர்கள் இருந்த குடியிருப்புப் பகுதியாக பஞ்சவன் மாதேவிப் பெருந்தெரு குறிப்பிடப்படுகிறது[33].

### வணிகப் பொருள்கள்

பிரான்மலை கல்வெட்டு (கி.பி.1300) சிவகங்கை வட்டாரத்திலும், அதனைச் சுற்றியுள்ள பாண்டிய நாட்டின் உள்நாட்டுப் பகுதிகளிலும் மற்றும் பிற பகுதிகளிலும் விற்கப்பட்ட வணிகப்பொருள்கள் பற்றிய குறிப்புகளைப் பட்டியலாகத் தருகிறது[34]. இதன் மூலம் உப்பு, நெல், அரிசி, பயறு, அவரை, துவரை, ஆமணக்கு, பாக்கு, மிளகு, மஞ்சள், சுக்கு, வெங்காயம், கடுகு, சீரகம், நெல்லி, இரும்பு, பருத்தி, நூல், பரும் புடவை (கனத்த துணி), நென்புடவை (மெல்லிய துணி), உலண்டு பீலி (பட்டுநூல்?), மெழுகு, எள், கோணிகைப்பட்டு (சணல் அல்லது பட்டு நூல்), சந்தனம், தேன், அகில், பட்டு பட்டாவளம் (பட்டு), பன்னீர், சவுரிமயிர், கற்பூர தைலம், சாந்து, புனுகு (வாசனைப் பொருள்), சவ்வாது, செமாடு (ஆடு), குதிரை, யானை முதலிய பொருள்களை இப்பகுதியில் பதினெண்விசயத்தார், திசையாயிரத்து ஐந்நூற்றுவர், நகரத்தார் ஆகிய வணிகக் குழுக்கள் வணிகம் செய்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. திருமலையிலுள்ள கல்வெட்டு தன்மடாவளவர் என்ற எண்ணெய் வணிகர்களைப் பற்றிக் குறிப்பிடுவதால் உள்நாட்டு வணிகத்தில் எண்ணெயும் ஒரு முக்கியப் பொருளாக இருந்திருக்கிறது. பிரான்மலைக் கல்வெட்டு வணிகப் பொருள்களின் மொத்த அளவை பொதி (2 1/2 கலம் கொண்ட பெரிய மூட்டை), பாக்கம் (சிறு மூட்டை), தலைச்சுமை, வண்டி என்று குறிப்பிடுகிறது.

கி.பி.13-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் பாண்டிய நாட்டின் கடற்கரைப் பகுதியான இராமநாதபுரம் வட்டாரத்திலும், அதனை ஒட்டியுள்ள உள்நாட்டுப் பகுதியான சிவகங்கை வட்டாரத்திலும் முறையே கடல்சார் வணிகமும், அதற்கு ஆதாரமாக விளங்கிய உள்நாட்டு வணிகமும் பலதரப்பட்ட வணிகக் குழுக்களின் முயற்சியால் பெருகி சுறுசுறுப்புடன் செயல்பட்டு வந்துள்ளன. ஆனால், ஏறத்தாழ ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக வேகமாக வளர்ச்சியடைந்த இவ்விரு வணிகமும் கி.பி.14-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் பாண்டிய நாட்டில் நிலவத் தொடங்கிய அசாதாரண அரசியல் சூழ்நிலையைத் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி அடுத்த சில நூற்றாண்டுகளில் வீழ்ச்சி அடைந்ததாகத் தெரிகிறது. இருப்பினும் பன்னாட்டு வணிகத்தில் ஈடுபட்டிருந்த வணிகக் குழுவான பதினெண்விசயத்தார் மட்டும் கி.பி.16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை கீழக்கரைப் பகுதிகளில் கடல்சார் வணிகத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளனர்.

கி.பி.13-14-ஆம் நூற்றாண்டில் இராமநாதபுரம் வட்டார கடற்கரைப் பகுதியில் அஞ்சுவண்ணத்தார், மணிக்கிராமத்தார், தென்னிலங்கை வளஞ்சியர், நகரத்தார், நானாதேசிகள், பதினெண்விசயத்தார், கைகோளர்கள் ஆகிய வணிகக் குழுக்கள் தேவிபட்டினம், பெரியபட்டினம், கீழக்கரை, தொண்டி ஆகிய கடற்கரை துறைமுகப்பட்டினங்களையும் தீத்தாண்டதானபுரம், இராதானூர், திருமாலுங்கண்டார் கோட்டை முதலிய கடற்கரையை ஒட்டிய பகுதிகளையும் மையமாகக் கொண்டு கடல்சார் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இதே காலகட்டத்தில் இராமநாதபுரம் வட்டாரத்தை ஒட்டிய உள்நாட்டுப் பகுதியான சிவகங்கை வட்டாரத்தில் பெரும்பாலும் நகரத்தார்களே உள்நாட்டு வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் பிரான்மலை, திருமலை, பிள்ளையார்பட்டி, திருக்கோஷ்டியூர், அருவியூர், காரைக்குடி, அளகாபுரி ஆகிய பகுதிகளில் தங்களின் வணிக நகரங்களை அமைத்துக்கொண்டு செயல்பட்டு வந்தனர்.

இராமநாதபுரம் வட்டார கடற்கரை துறைமுகப் பட்டினங்களுக்கும் இலங்கை, அரேபிய நாடுகளுக்கிடையேயும் மிக நெருக்கமான கடல்சார் வணிகத்தொடர்பு இருந்துள்ளது. இவ்வணிகத் தொடர்பில் தென்னிலங்கைச் சார்ந்த வளஞ்சியரும்

இசுலாம் சமயத்தைச் சார்ந்த அரேபிய வணிகர்களான அஞ்சு வண்ணத்தாரும் ஈடுபட்டிருந்தனர்.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவாடானை, முதுகுளத்தூர் பகுதிகள் இராமநாதபுரம் வட்டார கடற்கரைப் பட்டினத் துறைமுகங்களையும், சிவகங்கை வட்டார உள்நாட்டு வணிக நகரங்களையும் இணைக்கும் பகுதிகளாக இருந்துள்ளன. மேலும் உள்நாட்டு கடல்சார் வணிகத்தொடர்பில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்த இப்பகுதியில் வணிகர்களின் பாதுகாப்பிற்காக திருமாலுங்கண்டார் கோட்டையில் எறிவீரப் பட்டினமும் அமைக்கப்பட்டிருந்தது.

13-ஆம் நூற்றாண்டில் பிள்ளையார்பட்டியிலும் அளகாபுரியிலும் நகரத்தார்கள் புதிதாக வணிக நகரங்களை அமைத்துள்ளமை இக்கால கட்டத்தில் சிவகங்கை வட்டாரப் பகுதியில் உள்நாட்டு வணிகம் பெற்றிருந்த செல்வாக்கையும் அதனின் பரவலாக்கத்தையும் உணர்த்துகிறது. மேலும் உள்நாட்டு வணிகத்தில் வணிக நகரங்களிடையே மிக நெருக்கமான வணிகத் தொடர்பு நிலவி வந்துள்ளது.

கடற்கரைப் பகுதிகள் மற்றும் உள்நாட்டுப் பகுதிகளிலிருந்த பலதரப்பட்ட வணிகக் குழுக்கள் குழு அமைப்பில் இயங்கியதனால் தாங்கள் வணிகம் செய்த பகுதிகளிலிருந்த கோயில்களின் வழிபாட்டிற்கும் பராமரிப்பிற்கும் கொடைகள் வழங்கும்போது தங்களின் வணிகம் தொடர்பான தீர்மானங்களைக் கூட்டாகவே எடுத்துள்ளனர்.

## சான்றெண் விளக்கம்

---

1 *க.ஆ.அ. 599/1926-27*

2 Noboru Karashima,(ed.), 2002, *Ancient and Medieval Commercial Activities in the Indian Ocean: Testimony of Inscriptions and Ceramic-sherds,* Taisho University, Tokyo.p.269.

3 *க.ஆ.அ. 599, 601/1926-27*

4 *தெ.இ.க. 8/404, 403*

5 *தெ.இ.க. 8/405, 404*

6 *தெ.இ.க. 8/403*

[7] *தெ.இ.க. 8/405*

[8] *தெ.இ.க. 23/396, 398*

[9] கீழக்கரையிலுள்ள கி.பி.16ஆம் நூற்றாண்டு கல்வெட்டொன்று (தெ.இ.க.*23/396*) முத்து வாணிபத்தில் ஈடுபட்டிருந்த நான்கு பட்டினங்களின் பதினெண்விசயத்தாரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்த நான்கு பட்டினங்களும் நினைத்தது முடித்தான் பட்டினம் (கீழக்கரை), தேவிபட்டினம் (உலகமாதேவி பட்டினம்), பவித்திர மாணிக்கப்பட்டினம் (தொண்டிப்பட்டினம்), பெரியபட்டினம் (பவித்திர மாணிக்கப்பட்டினம்) முதலியவையாகும்.

[10] *தெ.இ.க. 23/396*

[11] Mahalingam, T.V., 1978, *A Topographical List of Inscriptions in the Tamil Nadu and Kerala States*, Vol. VI, S.Chand & Co., New Delhi. p.410.

[12] *Ibid* ., p.411

[13] *Ibid* ., p.224

[14] ஜெயக்குமார், பா., 2001., *தமிழகத் துறைமுகங்கள் (இடைக்காலம்)*, அன்பு வெளியீட்டகம், தஞ்சாவூர்.

[15] *தெ.இ.க. 8/403;* Noboru Karshima (ed), *op.cit.*, p.269

[16] *தெ.இ.க. 8/405*

[17] *தெ.இ.க. 8/403*

[18] *தெ.இ.க. 23/396*

[19] *தெ.இ.க. 8/405*

[20] *தெ.இ.க. 8/442*

[21] *தெ.இ.க. 14/235*

[22] Mahalingam, T.V., *op.cit.*, p.356

[23] *க.ஆ.அ. 20/1924*

[24] சேதுராமன். கு., வேதாசலம்.வெ., 2008, "சோழபுரம், குடியூர் கல்வெட்டுகள்", *ஆவணம்,* இதழ்.19, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், ப.63.

[25] *தெ.இ.க. 8/442*

[26] கணேசன், சா., 1995, பிள்ளையார்பட்டி தல வரலாறு, பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் நகரத்தார் அறநிலை, பிள்ளையார்பட்டி, கல்வெட்டு எண்.9 (ப.38) மற்றும் 8 (பக்.35-36)

[27] *க.ஆ.அ.150,152/1935-36*

[28] Mahalingam, T.V., *op.cit.* p.293

[29] *தெ.இ.க. 8/442*

[30] *மேலது.*

[31] Mahalingam, T.V., *op.cit.* p356.

[32] *க.ஆ.அ. 150/1935-36*

[33] *க.ஆ.அ. 20/1924*

[34] *தெ.இ.க. 8/442*

# 12. புதுக்கோட்டைப் பகுதியில் வணிகக் குழுக்களின் சமுதாயப்பணி

அ. சந்திரபோஸ்

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடிக்கு அருகில் உள்ள கருக்காக்குறிச்சி என்னும் ஊரில் 1898-ஆம் ஆண்டு கிணறு வெட்டும்போது 501 உரோமானியப் பொன் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன[1]. பெரு வணிகர் இந்நாணயங்களைப் புதைத்து வைத்திருக்கக்கூடும் என்னும் கருத்து ஆய்வாளர்களிடையே நிலவுகின்றது. அகஸ்டஸ் சீசர் போன்ற 10 உரோமானிய மன்னர்களின் விவரங்கள் இந்த நாணயங்களில் கிடைத்திருக் கின்றன. புதுக்கோட்டை வணிகர்கள் உரோம் நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது இதன் மூலம் விளங்குகின்றது. இடைக்காலத்தில் கடல் கடந்து வணிகம் செய்துவந்த வணிகக் குழுக்கள் அய்நூற்றுவர், முன்னூற்றுவர், வளஞ்சியர், நகரத்தார் என பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

புதுக்கோட்டை நகரின் கிழக்குப் பகுதியில் உள்ள கலசமங்கலம் சங்க கால ஊராகும். இங்கு செனிகுலமாணிக்க புரம் என்ற பெரு வணிகர்களின் குடியிருப்பு இருந்ததை குலோத்துங்க சோழனின் 30-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி 1099-1100) கல்வெட்டு கூறுகின்றது[2]. புதுக்கோட்டைப் பகுதியில் நார்த்தாமலை, குடுமியான்மலை குன்றாண்டார்கோயில், சுந்தரம், திருவரங்குளம், கொடும்பாளூர், கூடலூர் போன்ற பல ஊர்களில் நகரம் என்ற நிருவாக அமைப்புச் செயல்பட்டுவந்துள்ளது. இதிலிருந்து புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள பல ஊர்களுடன் வணிகக் குழுக்களுக்குத் தொடர்பு இருந்திருக்கின்றன என்பதை

அறியமுடிகின்றது. வணிக நோக்கத்தில் பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்துவந்த வணிகக் குழுக்கள் சமுதாயப் பணிகளையும் செய்துவந்துள்ளனர் என்பதை இவர்தம் கல்வெட்டுகளின் வாயிலாக அறியமுடிகின்றது. இந்த வணிகக் குழுக்கள் என்னென்ன சமுதாயப் பணிகளைச் செய்து வந்துள்ளன என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. குறிப்பாக வணிகக் குழுக்கள் ஏற்படுத்திய ஏரி/குளங்கள், நிலதானம் பற்றியும், வணிகக் குழுவினர் நடுவர் மன்றமாக செயலாற்றிச் செய்த சமூகப் பணி, அவர்கள் செய்த கோயிற்பணி-நிருவாகம், ஊர்கள் அவர்களுக்கு வழங்கிய மரியாதை, அவர்தம் பெயரால் எற்பட்ட ஊர், படை ஆகியன பற்றியும் இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்படுகின்றன.

**வணிகக் குழுக்கள் ஏற்படுத்திய ஏரி, குளங்கள், நிலதானம்**

கோப்பரகேசரி சோழனின் 20-ஆம் (கி.பி.870) ஆட்சியாண்டைக் குறிப்பிடும் கல்வெட்டு ஒன்று முனிசந்தையில் உள்ள அய்நூற்றுவர் கண்மாயின் கரையில் கிடந்தது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் கோப்பரகேசரி வர்மன் முதலாம் விசயாலயனாக இருக்கலாம். முனிசந்தையில் அய்நூற்றுவர் பெயரால் எடுப்பிக்கப்பட்ட பேரேரியைச் சீரமைக்க வளஞ்சியர் மற்றும் அய்நூற்றுவர் இரண்டு காசுகளை வழங்கியுள்ளனர்[3].

மாறவர்மன் முதலாம் குலசேகரப் பாண்டியனின் (கி.பி. 1268-1311/12) ஏழாவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1275) கல்வெட்டு ஒன்று திருமெய்யம் வட்டம் பில்லமங்கலம் ஆகமசீலீசுவரர் கோயில் கருவறையின் தென் சுவரில் உள்ளது. மேற்குறிப்பிட்ட ஆண்டில் சுந்தரபாண்டியபுரத்து நகரத்தார்கள் அய்நூற்றுவன் பெயரால் அமைக்கப்பட்ட குளத்தினை வெள்ளைநல்லூரு டையானான திருச்சிற்றம்பலமுடைய திருத்தளியாண்டார் விற்பனை செய்துள்ளார். இக்குளம் இறைவன் பெயரால் வாங்கப்பட்டிருக்கின்றது. இக்கல்வெட்டு அய்நூற்றுவர் குழு இவ்வூரில் ஒரு குளத்தை எற்படுத்தியிருக்கின்றது என்பதைத் தெரிவிக்கின்றது[4].

மேற்கண்ட மன்னனின் 32-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி1299) அதே கோயிலின் வடபுறச் சுவரில் உள்ளது. இக்கல்வெட்டு கல்வாயில் நாட்டு சுந்தரபாண்டிய

புரத்திலுள்ள ஆகமசீலீசுவரமுடைய நாயனாற்கு விருதராஜ பயங்கர வளநாடாகிய கானாட்டில் உள்ள சோழபாண்டியபுரத்து நகரத்தார்கள் நான்கு எல்லைகளும் குறிப்பிட்ட நிலத்தையும் குளத்தையும் குளவாய்த் தலைகளும் மரமும் கிணறும் விற்பனை செய்துள்ளனர் என்பதைப் பதிவு செய்துள்ளது[5]. இந்த நிலத்திற்கும் குளத்திற்கும் விதிக்கப்பட்டிருந்த பல்வேறு வகையான வரிகளை கானாட்டு நாட்டார் நிருவாக அமைப்புத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருப்பதை அதே ஆண்டு எழுதப்பட்ட மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது[6]. எனவே, இந்த விற்பனை கோயிலுக்குச் செய்யப்பட்டிருக்கின்றது என அறியலாம். மேற்கண்ட மாறவர்மன் குலசேகரப் பாண்டிய மன்னன் காலத்தில் 1275-ஆம் ஆண்டு விற்கப்பட்ட குளம் வேறு ஒன்றாகும். இந்தக் குளத்திற்கும் அதற்கும் தொடர்பில்லை.

**நடுவர்களாக, நீதிமான்களாக வணிகக் குழுவினர்**

சுந்தர சோழன் இரண்டாம் பராந்தகனின் (கி.பி.956-973) ஆட்சிக் காலத்தில் கொடும்பாளூரில் ஒரு வழக்கைத் தீர்த்து வைப்பதற்கு இரண்டு வகை நகரத்தார்களும் நடுவர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்பதைக் கொடும்பாளூர் முசுகுந்தேசுவரர் கோயில் கருவறையின் முன் மண்டபத்தின் பட்டியில் உள்ள கல்வெட்டுத் தெரிவிக்கின்றது[7]. இரண்டு வகை நகரத்தார் என்பது வளஞ்சியர், அய்நூற்றுவர் ஆகலாம்.

கி.பி 1466-ஆம் ஆண்டைக் குறிக்கும் பூவாலைக்குடி புஷ்பவனேசுவரர் கோயில் வாசற்படிக்கு வடபுறம் உள்ள கல்வெட்டு, வலங்கை, இடங்கை பிரிவுகளுக்கிடையிலான மக்கள் சண்டையிட்டு வெட்டிக்கொண்டதைத் தொடர்ந்து காரையூர் வேளாளரும் சுந்தர சோழபுரத்து நகரத்தாரும் செவலூர் ஊரார்களும் செவலூர் பஞ்சவராயர் நரசிங்க தேவரும் சோழ-கோனார் பல்லவராயரும் நடுவர்களாக இருந்து இவ்வழக்கை தீர்த்து வைத்தனர் என்று கூறுகின்றது[8].

பிலவங்க வருசம், பங்குனி மாதம் பொன்னமராவதி நாட்டில் வடக்குப் பகுதியிலிருக்கும் பனையூர், குளமங்கலம் ஆகிய ஊர்களுக்கிடையில் பனையூர் (மேற்கு) ஞானபுரீசுவரர் கோயில் தொடர்பாக எழுந்த சர்ச்சைகளைக் கோனாட்டு வெள்ளாளர்களும் இளையாத்தங்குடி நகரத்தார்களும் இணைந்து நடுவர்களாக இருந்து இருதரப்பு வாதங்களையும் கேட்டுத்

தீர்ப்புக் கூறி இருவரையும் சமாதானம் செய்து வைத்தனர். அறிவீசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு கூடலூர் வயலில் நிலமும் சொல் சுதந்திரமும் மலைக்கோயில் ஈசுவரற்கு ராராபுத்த வயலில் நிலமும் கட்டும் (ஊர் சபை) சொல் சுதந்திரமும் இத்தீர்ப்பில் வழங்கப்பட்டன[9]. இறைவன் ஞானபுரீசுவரர் என்றும் அறிவீசுவரர் என்றும் கல்வெட்டுகளில் அழைக்கப் படுகின்றார்.

**வணிகர்களின்/ வணிகக் குழுக்களின் கோயில் பணிகள்**

கோயிலூர் பாலபுரீசுவரர் கோயில் கருவறையின் தென்புறம் உள்ள கல்வெட்டு ஒன்று கி.பி. 1472-ஆம் ஆண்டில் இராசேந்திரபுரம் என்ற மரமடக்கியில் திருப்பானூர் மன்றர் வணிகச் சக்கரவர்த்தி இக்கோயிலுக்கு இறைவனையும் சுந்தரரையும் தானமாகக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகின்றது[10]. இவை இரண்டும் செப்புத்திருமேனிகளாக இருக்கலாம் .

அதேபோன்று ஆலங்குடி தெற்குத் தெருவில் வசித்துவரும் நகரத்தார்கள், பேரூர் (ஆலங்குடி) ஆண்ட நாயனார் கோயிலின் எட்டு நாள் திருவிழாவின்போது வலம் வரும் இறைவன் (பெரிய முதலி), இறைவி (நாச்சியார்) ஆகியோர்-களின் உருவங்களைச் செய்து கோயிலுக்குத் தானமாக வழங்கியுள்ளனர். இச்செய்தியுள்ள கல்வெட்டு ஆலங்குடி நாமபுரீசுவரர் கோயிலின் தென்புறச் சுவரில் உள்ளது. இக்கல்வெட்டு எழுதப்பட்ட ஆண்டு சகா 1428 (கி.பி. 1506)[11]. இக் கல்வெட்டின் அருகே உள்ள மற்றொரு கல்வெட்டு 1521-ஆம் ஆண்டில் ஆலங்குடி நகரத்தார்களில் சிலர் தர்மம் செய்து திருவிழாக்கள் நடத்தினர் என்று கூறுகின்றது[12].

கி.பி.1500-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று செவலூர் திருப்பூமிசுவரமுடையார் கோயில் வடபுறச் சுவரில் உள்ளது. இக்கோயிலில் உள்ள இறைவன் இளையாத்தங்குடி நகரத்தார்களால் எடுப்பிக்கப்பட்டார் என இக்கல்வெட்டு கூறுகின்றது[13].

பனையூர், குலமங்கலம், ஒல்லையூர் கூற்றத்திலுள்ள சுந்தரசோழபுரம் நகரத்தார்கள் இணைந்து பனையூர் (மேற்கு) ஞானபுரீசுவரர் கோயிலில் உள்ள அகிலாம்பிகை அம்மன் கோயில் கருவறையினை எடுப்பித்ததுடன் இறைவனையும்

தானமாக வழங்கியுள்ளனர். இச் செய்தியுள்ள கல்வெட்டு அம்மன் கோயில் கருவறையின் மேற்குப்புறச் சுவரில் எழுதப்பட்டுள்ளது[14].

## கோயில் நிருவாக உரிமை

குமார வெங்கள நாயக்கர், சுந்தரம் நகரத்தார்களுக்கு தெய்வதாயப் பட்டயம் எழுதிக்கொடுத்த செய்தி இக்கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி சந்தரத்திலுள்ள சுயம்பிரகாசமூர்த்தி கோயிலுக்கு அமக்கனிக்குளமும் வயலும் அதனைச் சூழ்ந்த நான்கெல்லைகளும் மாவடை, மரவடை, பாசிப்பட்டு ஆகியன 30 கலிப்பொன் பெற்றுக்கொண்டு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டின் மூலம் கோயிலின் நிருவாக உரிமை நகரத்தார்கள் வசம் இருந்தது என அறியமுடிகின்றது. இக் கல்வெட்டில் காலம் குறிப்பிடப் படவில்லை[15].

## சமணக்கோயிற் பணி

காயாம்பட்டியிலுள்ள அய்நூற்றுவப் பெரும்பள்ளி எனப்பட்ட கோயிலின் முன் பகுதியைச் சீரமைத்தவன் சயவீரப்பேரிளமையான் என்று குளத்தூர் வட்டம் காயாம் பட்டியில் உள்ள வெண்ணாவிக்குளத்தின் கரையில் உள்ள சமணத்திடலில் உள்ள தனிக்கல் எழுத்துப்பொறிப்பு கூறுகின்றது. அய்நூற்றுவப் பெரும்பள்ளி என்ற இப்பள்ளியின் பெயரிலேயே இது வணிகக் குழுவினால் ஏற்படுத்திய பள்ளி என்பது விளங்கும். சமணசமயத்திற்கும் வணிகக்குழு தொண்டு செய்துள்ளது என அறிய முடிகின்றது[16].

## பொது நிகழ்ச்சிகளில் நகரத்தார்களுக்கு முன்னுரிமை

பேரையூர் நாகநாதசுவாமி கோயிலின் கீழ வாசற்படிக்குத் தென்புறம் சுவரிலுள்ள மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 13-ஆம் ஆட்சியாண்டுக் (கி. பி. 1229) கல்வெட்டு உள்ளது. கோயில் நிருவாகிகளும் ஊரார்களும் சேர்ந்து செய்த ஒரு நில விற்பனையை இக் கல்வெட்டில் பதிவு செய்துள்ளனர். இந்த நில விற்பனை நகரத்தார் முன்னிலையில் நடைபெற்றிருப்பதைக் கல்வெட்டு உணர்த்துகின்றது[17].

கி. பி 1500-ஆம் ஆண்டில் பொன்னமராவதி நாட்டில் வடபகுதியில் உள்ள செவலூர் திருப்பூமீசுவரமுடைய நாயனார்

கோயில் பண்டாரத்தாரும் ஊரார்களும் கூடி திருவிழா நடத்துவது என முடிவு செய்தனர். இத்திருவிழாவில் கலந்து கொள்ள நகரத்தார்களுக்கு அழைப்பு விடுத்தனர். இந்த அழைப்பை ஏற்று நகரத்தார்களில் மூப்பானவர்கள் (வயது முதிர்ந்தவர்கள்) திருவிழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்று கோயில் பண்டாரத்தாரும் ஊரார்களும் தீர்மானம் நிறைவேற்றினர். இச்செய்தியைப் பதிவு செய்யும் கல்வெட்டு செவலூர் திருப்பூமீசுவரர் கோயில் சுவாமி கொயிலின் வாசற்படிக்குத் தென்புறம் சுவரில் உள்ளது[18]. நகரத்தார்களில் வயதானவர்களை ஊரார்கள் கௌரவிக்கும் விதமாக இக்கல்வெட்டுச் செய்தி உள்ளது.

### அய்நூற்றுவநல்லூர்

திருமெய்யம் வட்டம் மேமியாற்று நாட்டில் உள்ள அய்நூற்றுவநல்லூர் என்ற மாளவமாணிக்கம் என்ற ஊர் வாளவர்மாணிக்கம் என்று அங்குள்ள கைலாசநாதர் கோயில் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது. அய்நூற்றுவர் என்ற பெயரால் ஓர் ஊர் ஏற்படுத்தப் பட்டுள்ள செய்தி இக்கல்வெட்டின் மூலம் விளங்குகிறது[19].

### ஐந்நூற்றுவப்படை

வணிகக் குழுக்கள் தங்களுடைய விற்பனைப் பொருள்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டுத் தனியே ஒரு படையை நிருவகித்துவந்தனர். குடுமியான்மலை மேலைக்-கோயிலில் உள்ள முன் மண்டபத்துக் கீழ்புறம் சுவரில் உள்ள முதலாம் குலோத்துங்கச் சோழனின் 36-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி.1106) கல்வெட்டு அய்நூற்றுவர் படையை 'இந் நாட்டுப் படை பழியிலி ஐந்நூற்றுவர்' எனக் குறிப்பிடுகின்றது. இப்படை எவ்வித பழிச்சொல்லுக்கும் ஆட்படாத படையாகச் செயல் பட்டதைக் குறிப்பிடுகின்றது[20].

### கொங்குதேசத்தில் புதுக்கோட்டை வணிகர்கள்

புதுக்கோட்டைப் பகுதி வணிகர்கள் கொங்கு நாட்டில் உள்ள சில கோயில்களுக்கு தர்மகாரியங்கள் செய்துள்ளனர். குறிப்பாக, ஈரோட்டுக்கு அருகில் உள்ள சிகார்பாளையம் கல்வெட்டு ஒன்று கொடும்பாளூர் மாணிக்கபுரத்து அய்நூற்றுவ வணிகக் குழுவைச் சேர்ந்த வணிகர் பற்றிய செய்திகளைத்

தருகின்றது. இதே கல்வெட்டு தெலுங்ககுலகாலபுரம் என்னும் குலோத்துங்கசோழப்பட்டணத்து வணிகன் ஒருவனையும் குறிப்பிடுகின்றது. இவ்வூர் நார்த்தாமலையாகும். கொடும்பாளூர் மணிக்கிராமத்தைச் சேர்ந்த வணிகன் மஞ்சன் மணியத்தண்டன் சேலத்தில் உள்ள சுகவனேசுவரர் கோயிலுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளான்[21].

வணிகக் குழுக்கள் வணிகம் செய்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்டிருந்தாலும் அவ்வப்போது ஏரி/குளங்களைச் சீரமைத்தல் மூலம் மக்களுக்குச் சமுதாயப் பணியாற்ற மறக்கவில்லை என்பதை இதன்வழித் தெரிந்துகொள்ள முடிகின்றது. மேலும் மன்னர்களைப் போல கோயிலுக்கு நிலதானம் செய்வதால் ஒரு சமுதாய நிறுவனமாகச் செயல்பட்டுவந்த கோயிலின் மீது மக்களின் நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. கோயில்கள் காலங்காலமாக கடன் கொடுத்தும் ஏழைகளுக்கு உதவியும் வந்திருப்பதை இவ்விடத்தில் நினைவு கூறலாம்.

வணிகர்கள் உள்ளூர்த் தலைவர்களுடன் இணைந்து வழக்குகளை விசாரணை செய்து தீர்த்துவைத்ததிலிருந்து நீதி விசாரணை என்பது உள்ளூர் பெருமக்களால் தீர்த்துவைக்கக் கூடிய ஒன்று என்பதாகும். எல்லா வழக்குகளும் மன்னர் மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதில்லை. அவை பெருவாரியாக உள்ளூரிலேயே தீர்த்து வைக்கப்படுள்ளன என்பதையும் அறியமுடிகிறது.

வணிகர்கள் கோயில்களுக்கு ஏரி, குளம், நிலம் சீரமைப்பதற்குத் தானமாக வழங்கியது மட்டுமன்றி கோயில்களுக்கு உள்ளேயும் பல சேவைகளைச் செய்துள்ளனர். வணிகர் தெய்வத்திருமேனிகளை கோயிலுக்கு வழங்குவது, திருவிழாக்கள் நடத்துவது என இவர்தம் பணிகள் நீண்டுகொண்டு செல்கின்றன. குறிப்பாக, வணிகக்குழு சமணப்பள்ளி ஏற்படுத்தி பிற மதத்தை சமமாக பாவித்தனர் எனலாம்.

சொத்துவிற்பனை, திருவிழாக்கள் போன்ற பொதுநிகழ்ச்சிகளில் வணிகர்கள் பார்வையாளர்களாகவும் பங்கேற்பாளர்களாகவும் ஆற்றிய பணி அவர்தம் கௌரவத்தை மேலும் உயர்த்தியுள்ளதாகவே கருதவேண்டும். பொதுவாக

நிலம் போன்ற அசையாச் சொத்துக்கள் விற்கப்படும்போது வணிகர் முன்னிலையில் அவை நடத்தப்பட்டுள்ளன. அய்நூற்றுவர் குழு அய்நூற்றுவநல்லூரை ஏற்படுத்தியிருக்கின்றது. வணிகக் குழுக்கள் புதிய ஊர்களையும் ஏற்படுத்தியிருப்பது விளங்குகின்றது.

வணிகக் குழுக்கள் பொருள்களின் பாதுகாப்பிற்காக ஒரு படையை வைத்திருந்திருக்கின்றன. அந்தப்படை 'நாட்டுப்படை பழியிலி ஐநூற்றுவர்' என்று அழைக்கப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. 9-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆட்சி செய்த மன்னன் ஒருவன் பழியிலி முத்தரையன் என அழைக்கப்பட்டான். இவன் பழியிலி ஈசுவரம் என்ற குடைவரைக் கோயிலை நார்த்தாமலையில் எடுப்பித்துள்ளான். 'பழியிலி அய்நூற்றுவர் படை' குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டின் காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு ஆகும். எனவே, இந்த அய்நூற்றுவர் படை எந்தவிதமான பழிச்சொல்லுக்கும் ஆட்படாத படையாகச் செயல்பட்டு வந்திருக்கின்றது என்று எடுத்துக்கொள்ளுதல் பொருத்தமாக அமைகின்றது. இவ்விடத்தில் பழியிலி முத்தரையனைத் தொடர்புபடுத்துதல் கூடாது. அதேபோன்று பழிச்சொல்லுக்கு ஆட்படாத முத்தரையனாக அவன் விளங்கியிருப்பான் என்ற பொருளில் அவனுக்குப் பெயரிடப்பட்டிருந்ததாக எடுத்துக்கொள்ளலாம்.

## சான்றெண் விளக்கம்

---

1 *ராஜா முகமது, ஜெ., 2004, புதுக்கோட்டை மாவட்ட வரலாறு,* இயக்குநர், அருங்காட்சியகம், சென்னை. பக்.12-14

2 *புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுகள் (பு.ச.க.)* 122.

3 *பு.ச.க. 61*

4 *பு.ச.க. 390,363*

5 *பு.ச.க. 408*

6 *பு.ச.க. 409*

7 *பு.ச.க. 82*

8 *பு.ச.க. 815*

9 *பு.ச.க. 944*

[10] *பு.ச.க. 808*

[11] *பு.ச.க. 839*

[12] *பு.ச.க. 846*

[13] *பு.ச.க. 834*

[14] *பு.ச.க. 1004*

[15] *பு.ச.க. 941*

[16] *பு.ச.க. 1083*

[17] *பு.ச.க. 288*

[18] *பு.ச.க. 833*

[19] *பு.ச.க. 1022*

[20] *பு.ச.க. 125*

[21] ராஜா முகமது, ஜெ., 2004, *மு.சு.நூ.*, ப.32.

# 13. வணிகக் குழுக்களின் பெயரால் அழைக்கப்படும் புதுக்கோட்டை வட்டாரக் கோயில்கள்

செ.கோவிந்தராஜ்

நகரத்தார், வளஞ்சியர், மணிக்கிராமத்தார் போன்ற பல வணிகக் குழுக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வணிகத்தை மேற்கொண்டனர். திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்பது இவ்வணிகக் குழுக்கள் அனைத்தையும் இணைத்துக் குறிப்பிடும் சொல் எனக் கருதப்படுகிறது. இவ்வணிகக் குழுக்கள் குறித்த ஏராளமான செய்திகள் புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

ஐந்நூற்றுவரைப் பற்றி குறிப்பிடும் மிகவும் பழமையான கல்வெட்டாக முனிசந்தைக் கல்வெட்டுக் கருதப்படுகிறது. இது கி.பி.9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியை சேர்ந்ததாகும். முனிசந்தை என்றும் ஊர்ப் பெயர் வணிகக் குழுக்களின் படைவீரர்களான முனைவீரர்களின் குடியிருப்பைக் குறிப்பதாகும். அய்நூற்றுவர் குறித்த கல்வெட்டுகள், பொன்னமராவதி, கீரனூர் போன்ற இடங்களில் கிடைக்கின்றன. மணிக்கிராமம் பற்றி கொடும்பாளூர் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது[1]. குடுமியான் மலைக் கல்வெட்டு பழியிலி அய்நூற்றுவர் என்ற வணிகக் குழுக்களின் படைவீரர்களைக் குறிப்பிடுகிறது.

நார்த்தாமலையில் உள்ள சமணகுடகு என்றழைக் கப்படும் விஷ்ணுகோயில் பதினெண்பூமி விண்ணகரம் என்றழைக்கப்பட்டது[2]. இது ஐந்நூற்றுவர்கள் வாழ்ந்த 18 நகரங்களைக் குறிக்கும் சொல்லாகும். நார்த்தாமலைக்கருகில்

உள்ள சேந்தமங்கலம் என்ற ஊரில் உள்ள விஷ்ணுகோயில் சித்திரமேழி விண்ணகர எம்பெருமான் என்றழைக்கப்படுகிறார்[3].

பில்லமங்கலத்தில் உள்ள குளம் ஐந்நூற்றுவன் குளம் என்றழைக்கப்பட்டது[4]. கூடலூருக்குப் பழைய பெயர் அய்நூற்றுவமங்களம் என்பதாகும்[5]. வளரமாணிக்கம் என்ற ஊரின் பழம்பெயர் நாற்பத்தெட்டாயிர நல்லூர் என்பதாகும்[6]. பின்னர் இவ்வூர் ஐந்நூற்றுவநல்லூர் என்று அழைக்கப்பட்டது[7]. இக்கோயிலின் தேவி நானாதேசி நாச்சியார் என்றழைக்கப் படுகிறார்[8]. செட்டிப்பட்டியில் அமைந்திருந்த சமணப்பள்ளி ஐந்நூற்றுவப் பெரும்பள்ளி என்றழைக்கப்பட்டது. கள்ளம்பட்டியில் உள்ள கோயில் தேவியின் பெயர் ஐயம்பொழில் நாச்சியார் என்பதாகும். இது நகரத்தாரின் குலதெய்வமாக விளங்குகிறது.

வயலோகம் சிவன்கோயில் இறைவன் ஆயிரம் ஈஸ்வரமுடைய நாயனார் என்பதாகும்[9]. திருவப்பூரில் உள்ள விஷ்ணு கோயில் கடவுள் நாற்பத்தெண்ணாயிர விண்ணகர எம்பெருமான் என்றழைக்கப்படுகிறார்[10].

இவ்வாறு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஊர், குளம், சிவன் கோயில், விஷ்ணுகோயில், தேவி, சமணக் கோயில்கள் ஆகிய பலவும் வணிகக் குழுக்களின் பல பெயர்களைக் கொண்டமைந்துள்ளன. இப்பெயர்கள், இவர்கள் இக்கோயில்களுக்கு மிகப் பெரிய அளவில் தானம் கொடுத்ததால் அல்லது இவர்களே இக்கோயில்களைக் கட்டியதால் இக்கோயில்களுக்கு வணிகக் குழுக்களின் பெயர்கள் சூட்டப்பட்டிருக்க வேண்டும்.

மானசாரம் என்ற சிற்ப சாத்திரம் விமான சிகர அமைப்புகளைக் கூறும்போது சதுரத்தை நாகரம் என்றும் எட்டுப் பட்டையை திராவிடம் என்றும் வட்டத்தை வேசரம் என்றும் குறிப்பிடுகிறது. மேலும் சதுரவடிவ சிகரம் பிராமணர்களுக்கு உரியது என்றும் எட்டுப்பட்டை வடிவம் சத்திரியர்களுக்கு உரியது என்றும் வட்ட வடிவ சிகரம் வணிகர்களுக்கு உரியது என்றும் குறிப்பிடுகிறது[11]. இவர்களால் கட்டப்படும் அல்லது இவர்கள் குடியிருக்கும் இடங்களில் கட்டப்படும் கோயில்களின் சிகர வடிவம் மேற்குறிப்பிட்டவாறு அமையும் என்று பொருள் கொள்ளலாம்.

சிற்ப சாத்திரம் கூறும் இலக்கணம் நடைமுறையில் பின்பற்றப்பட்டனவா என்பதை விரிவான கள ஆய்வுக்குப் பின்னரே முடிவு செய்ய இயலும் என்றாலும், வணிகர்களின் நகரமான நார்த்தாமலையில் உள்ள விஜயாலயச் சோழீச்சுரம், கடம்பர் கோயில் ஆகிய சிகரங்கள் வட்ட வடிவத்தில் உள்ளவை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

## சான்றெண் விளக்கம்

---

1 *தென்னிந்தியக் கல்வெட்டுகள் 4/147*

2 *புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுகள் 281*

3 *பு.ச.க. 171*

4 *பு.ச.க. 363*

5 *பு.ச.க. 393*

6 *பு.ச.க. 324*

7 *பு.ச.க. 1022*

8 *பு.ச.க. 324*

9 *பு.ச.க. 338*

10 *பு.ச. க. 371*

11 Acharya, P.K., 1993, *An Encyclopaedia of Hindu Architecture*, Munshiram Manoharlal, Manasara Series : Vol. VII, Reprint, New Delhi.

# 14. ஐயப்பொழில் நாச்சியாரும் நகரத்தாரும்

மு.காயத்திரிதேவி

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதிக்கு வடக்கில் சுமார் 10 கி.மீ. தொலைவில் நகரப்பட்டி என்ற ஊர் உள்ளது. இவ்வூருக்கு தென்புறத்திலும் கள்ளம்பட்டிக்கு வடக்கிலும் உள்ள ஓர் ஊரணியின் கரையில் திருமதீச்சுரமுடையார் கோயில் என்ற சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலிலுள்ள இரண்டாம் இராஜராஜனின் 11-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று ஒல்லையூர் கூற்றத்து விணதுக்கியான இராஜேந்திர சோழபுரத்து மஹாதேவர் திருமதீச்சுரமுடையார் என இவ்வூரையும் இக்கோயிலையும் குறிப்பிடுகிறது[1].

மேலும் இக்கோயிலிலுள்ள மற்றொரு கல்வெட்டு வாயிலாக நகரத்தார்களது ஊரான நகரத்தை (அதாவது இன்றைய நகரப்பட்டியை) இக்கோயில் சேர்ந்தது என்பதை அறிய முடிகிறது[2]. அடுத்ததாக உள்ள மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு ஒன்று விணதுக்கியான இராஜேந்திர சோழபுரத்து ஐயப்பொழில் நாச்சியார்க்கு அமுதுபடிக்கு நிஷதராஜன் கொடுங்குன்ற முடையானான நிலமையழகிய தேவன் கரிப்பற்றிலுள்ள குளத்தையும் குளப்பரப்பையும் நகரத்தூர் வரையும் கூட கொண்டு குடிநீங்கா தேவதானமாக செய்தமையைக் குறிப்பிடுகிறது[3]. அடுத்ததாக உள்ள மாறவர்மன் குலசேகர தேவர் கல்வெட்டு "ஒல்லையூர் கூற்றத்து விணதுக்கியான இராஜேந்திர சோழபுரத்து நகரம் குமாத்தகுடி ஊரவரோம்" என்பதால் இக்கோயிலுக்கு பக்கத்தில் இன்று நகரப்பட்டி என வழங்கும் ஊர் முன்பு நகரத்தார்கள் வாழ்ந்து

வந்த ஊர் என்பதைக் காட்டும்[4]. நகரத்தார் வாழ்ந்த ஊர்கள் நகரம் என அழைக்கப்பட்டதை பல கல்வெட்டுகள் காட்டுகின்றன[5].

கால ஓட்டத்தின் பரிணாம வளர்ச்சியில் தமிழகத்து வணிக மக்கள் ஐநூற்றுவர் அல்லது திசையாயிரத்து ஐநூற்றுவர்[6], நானாதேசிகள்[7], வளஞ்சியர்[8], பதினெண் விஜயத்தார்[9] என்ற பெயர்கள் இவர்கள் குழுக்களாக இயங்கி வந்ததைக் காட்டுவனவாகும். இவ்வணிகக் குழுக்களில் ஐநூற்றுவர் வணிகக் குழுவைப் பற்றி முதன் முதலில் கர்நாடக மாநிலத் திலுள்ள ஐஹோலே இடத்திலுள்ள கல்வெட்டும், தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டம் முனிசந்தையிலுள்ள கல்வெட்டு களும் நமக்குத் தெரிவிக்கின்றன. ஐஹோலே என்ற சொல்லின் திரிந்த தமிழ் வடிவமே ஐயப்பொழில் அல்லது ஐம்பொழில் என்ற பெயர் என்பது பல்வேறு அறிஞர்களின் பொதுவானக் கருத்து. பிரான்மலையிலுள்ள வணிகக்குழு கல்வெட்டொன்றில் இவ்வணிக மக்கள் தங்களை "ஐம்பொழில் பரமேஸ்வரிக்கும் பூமிதேவிக்கும் மக்களாகி" எனக் குறிப்பிடுவதால் வணிக மக்கள் தங்கள் இஷ்ட தெய்வமாக ஐயப்பொழில் பரமேஸ்வரி என்ற தெய்வத்தையும் பூமிதேவியையும் வணங்கி வந்ததை அறியமுடிகிறது[10].

## ஐயப்பொழில் நாச்சியார்

பரமேஸ்வரி, பராசக்தி, உமை, ஈஸ்வரி என்ற பெயர்கள் சிவன்கோயில் பெண் தெய்வத்திற்கு உரியனவாக இருந்தாலும் பரமேஸ்வரி, பராசக்தி என்ற சிவன் தொடர்புடைய காளி அதாவது பிடாரி அம்மனைக் குறிப்பதாகக் கருதலாம். பராசக்தி, பரமேஸ்வரி என்ற பெயர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரும்பான்மையாக பிடாரி அம்மனையும் மிகக் குறைவாக வேறு சில அம்மன் தெய்வங்களையும் மக்கள் குறிப்பிடு கின்றனர்.

கள்ளம்பட்டி சிவன் கோயில் சிறிய கோயிலாகும். இங்கு சிவன் இலிங்க வடிவிலும் உமை நின்ற திருக்கோலத்திலும் உள்ளது. இவை தவிர சுப்பிரமணியர், பைரவர் போன்ற தெய்வங்கள் மட்டுமே இங்கு உள்ளதைத் தவிர மற்ற பெண் வடிவத் தெய்வங்கள் இல்லை. ஆனால் மேற்படி சிவன்கோயில் ஊரணிக்கு வடபுறத்தில் உள்ள ஓர் ஓட்டுக் கட்டடத்தில் தற்போது மூன்று துண்டுகளாக உடைந்த ஒரு காளி(பிடாரி)

அம்மன் சிலையை ஒன்று சேர்த்து வைத்து அதற்கு சிவப்பு நிற ஆடையினைக் கட்டி வைத்துள்ளனர். இப்பிடாரி அம்மன் எட்டுக் கைகளை உடையதாகவும் காலில் அசுரனை மிதித்தவாறு காளிக்குரிய வடிவமைப்பில் உள்ளது. இதை இவ்வூர் மக்கள் ஐயப்ப பிடாரி என்றும் அழைக்கின்றனர். கள்ளம்பட்டி திருமதிச்சிரமுடையார் கோயில் மற்றொரு கல்வெட்டு பிடாரி ஐயப்பொழி(ல்) நாச்சியாரை திருப்பிரதிட்டை பண்ணி என்று குறிப்பிடுவதால் காளி அதாவது பிடாரி அம்மனே ஐயப்பொழில் நாச்சியார் என அறியலாம். காளியான பிடாரி அம்மனே ஐயப்பொழில் நாச்சியார் என்பதை அறிவதற்கு மேலும் ஒரு நிகழ்வைக் கூறலாம்.

தமிழகத்து வணிகக் குழுக்களில் இன்றைய நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் ஒரு பிரிவினர் ஆவர். இவர்கள் ஒன்பது நகர சிவன்கோயிலின் தெய்வத்தை குலதெய்வமாக கொண்ட ஒன்பது பிரிவினர். இவர்கள் ஐந்நூற்றுவர் வணிகக் குழுவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தங்கள் வீட்டு திருமணங்களுக்கு அவரவர் கோயிலிலிருந்து கோவில் மாலை வாங்கி திருமணம் செய்தாலும் தாங்கள் வாழும் ஊர்களிலுள்ள அல்லது அவ்வூர்களுக்குப் பக்கத்திலுள்ள பிடாரி அம்மனை இஷ்ட தெய்வமாகக் கொண்டாடுகின்றனர். அதாவது இந்நகரத்தார் பெருமக்கள் வாழும் ஊர்களின் பக்கத்திலுள்ள பிடாரி அம்மன் கோயில்கள் அந்தந்த ஊர்களிலுள்ள கள்ளர், மறவர், வல்லம்பர் மக்களது ஆளுமையிலிருந்தாலும் அக்கோயில்களின் திருவிழாவிற்கு இந்நகரத்தார்கள் புள்ளிவரி கொடுக்கின்றனர். மாடு, வண்டி, மகிழ்வுந்து வாங்கினாலும் தங்கள் வீட்டில் திருமணம் நடந்தாலும் தங்கள் வீட்டில் குழந்தை பிறந்தாலும் மாப்பிள்ளை, பெண், குழந்தைகளை தங்களுக்குரிய பிடாரி அம்மன் கோயிலுக்கு அழைத்துச் சென்று வணங்கிய பிறகே பிற இடங்களுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இது வணிகப் பெருமக்கள் காளியான பிடாரி அம்மனையே தங்கள் இஷ்ட தெய்வமாக அதாவது ஐயப்பொழில் பரமேஸ்வரியாக கொண்டாடியதைக் காட்டுவதாகும்.

## சான்றெண் விளக்கம்

---

1 *புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுகள் 133*

2 *பு.ச.க. 134*

3 *பு.ச.க. 134*

4 *பு.ச.க. 387*

5 *பு.ச.க. 148,189*

6 *பு.ச.க. 61*

7 *பு.ச.க. 134*

8 *பு.ச.க. 61*

9 *பு.ச.க. 134*

10 *பு.ச.க. 586*

# 15. நகரத்தாரும் நார்த்தாமலையும்

கரு.இராஜேந்திரன்

புதுக்கோட்டைக்கு வடமேற்கில் சுமார் 16 கி.மீ. தூரத்தில் மலைகள் சூழ்ந்த ஊராக நார்த்தாமலை விளங்குகிறது. நார்த்தாமலையைச் சுற்றி மேலமலை, கோட்டைமலை, ஆளுரிட்டிமலை, பொம்மாடிமலை, மண்மலை என பல மலைகள் அமைந்துள்ளன.

இங்குள்ள மேலமலையில் பழியிலி ஈஸ்வரம் என்ற சிவன் குடவரைக் கோயிலும் தலைவர் சிங்கம் என்ற நீர்ச்சுனைக்குள் மற்றொரு குடவரைக்கோயிலும், பதினெண்பூமி விண்ணகரம் என்ற திருமால் குடவரையும், கலசம் வரை முற்றிலும் கருங்கல்லாலான விஜயாலய சோழீஸ்வரம் என்ற கட்டுமானக் கோயிலும் ஆளுரிட்டி மலையின் அடிவாரத்தில் கி.பி.10-ஆம் நூற்றாண்டளவில் முழுமையும் கருங்கல்லால் கட்டப்பட்ட திருமலைக் கடம்பர் கோயில் என்ற கற்றளியும், இக்கற்றளிக்கு அருகில் கட்டப்பட்ட நகரீஸ்வரம் என்ற சிவன் கோயிலும், ஊரின் மத்தியிலுள்ள திருவானைக்கா ஈஸ்வரம் என்ற சிவன் கோயிலும் ஊரின் வடக்கில் அமைந்துள்ள மாரியம்மன் கோயிலும் இந்த ஊரின் பெருமைக்கும் சிறப்புக்கும் அணி செய்கின்றன.

## ஊரின் பழமையும் பெருமையும்

வரலாற்றுச் சிறப்பிற்குரிய நார்த்தாமலைக்கு அருகிலுள்ள தாயனூர் என்ற தாயினிப்பட்டிக் குளத்திற்கு உள்ளாகவும் நார்த்தாமலைக்கு கீழ்ப்புறமுள்ள இரயில் நிலையத்திற்கு அருகிலும் உள்ள பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள்

இந்த ஊரின் பழமைக்குச் சான்றாகும். அதற்கடுத்து நார்த்தாமலையிலுள்ள கல்வெட்டுகள் மற்றுமுள்ள பிற்கால ஆவணங்கள் சுமார் ஈராயிரம் ஆண்டுகளாக மக்கள் இங்குத் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்ததைக் காட்டுகின்றன.

**ஊரும் பேரும்**

இன்றைக்கு இவ்வூருக்கு நார்த்தாமலை என்று பெயர் வழங்கி வருகிறது. நார்த்தாமலையின் பெயர்க் காரணத்தை கூறும்போது நாரதரோடு நார்த்தாமலையை தொடர்புபடுத்திக் கூறுவர். அதாவது நாரதர்மலை-நார்த்தாமலை என்று ஆகிவிட்டதாகவும் அதற்குச் சான்று பெருங்களூர் தலபுராணத்தில் கூறப்பட்டுள்ளதாகவும் கூறுவர்[1].

நார்த்தாமலையின் வரலாற்றிற்கு எழுத்துச் சான்றாக விளங்கும் நார்த்தாமலைக் கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியது கி.பி.8-ஆம் நூற்றாண்டிற்குரிய அணிமத ஏரியிலுள்ள தமிழதியரையன் பற்றிய கல்வெட்டு ஆகும். இக்கல்வெட்டு மற்றும் இங்குள்ள பழயிலி ஈஸ்வரம் ரிஷபக் கொட்டிலுள்ள பல்லவ மன்னன் நிருபதுங்கன் கல்வெட்டு, விஜயாலய சோழீஸ்வரம் சாத்தம் பூதியின் கல்வெட்டு ஆகியவற்றில் இவ்வூர்ப் பெயர் பற்றிய குறிப்புகள் ஏதுமில்லை. ஆனால் நார்த்தாமலையிலுள்ள திருமலைக் கடம்பர் கோயிலுள்ள முதலாம் இராஜராஜனின் 22-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் அக்கோயில் இறைவனைக் குறிக்குமிடத்து 'மலைக் கடம்பூர் தேவற்கு'[2] என்பதால் இவ்வூர் கி.பி.10-ஆம் நூற்றாண்டளவில் மலைக் கடம்பூர் என்ற பெயரைப் பெற்றிருந்ததை அறியமுடிகிறது. அதற்கு அடுத்தபடியாக இதே கோயிலின் வடபுறத்துப் பாறையிலுள்ள முதலாம் இராஜராஜனின் 28-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வூரைக் குறிக்குமிடத்து 'கேரளாந்தக வளநாட்டு கோனாட்டு அண்ணல் வாயில் கூற்றத்து தெலிங்கு குலகால புரத்து நகரத்தோம்'[3] என்பதால் இன்றைய நார்த்தாமலை அந்தக் காலத்தில் தெலுங்கு குலகாலபுரம் என்றழைக்கப்பட்டதோடு கோனாட்டின் ஓர் ஊராகவும் இருந்து வந்ததை அறியலாம். முதலாம் இராசராசனுக்குப் பிறகு முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதித்தன் காலம் வரை நார்த்தாமலை, தெலிங்ககுலகாலபுரம் என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டதை நார்த்தாமலையிலுள்ள சில கல்வெட்டுகள்

தெரிவிக்கின்றன[4]. அதற்கு பின்புள்ள பிற்காலச் சோழ பாண்டியர்களின் கல்வெட்டுகளில் இவ்வூர் 'தெலிங்க குலகாலபுரமான குலோத்துங்க சோழப்பட்டணம்'[5] என்று கூறப்பட்டுள்ளது. அதாவது நார்த்தாமலை தெலிங்ககுல காலபுரம் என்ற பெயரோடு குலோத்துங்க சோழபட்டணம் என்று கூடுதல் பெயரால் அழைக்கப்பட்டது தெரிகிறது. மலைக்கடம்பூர் தெலிங்ககுலகாலபுரம், தெலிங்ககுலகாலபுரமான குலோத்துங்க சோழபட்டணம் என்று அழைக்கப்பட்ட நார்த்தாமலை கி.பி.17-ஆம் நூற்றாண்டளவில் நகரத்தார்மலை என்றழைக்கப்பட்டதோடு நகரத்தார்மலை சீர்மை[6] என்றும் பெயர் பெற்றிருந்ததைத் திருவானைக்கா ஈஸ்வரம் என்ற நார்த்தாமலை ஜம்புகேஸ்வரக்கோயில் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.

வணிகக்குழு தொடர்பான பிரான்மலைக் கல்வெட்டொன்று நகரத்தார்களைப் பற்றிக் கூறும்போது 'பொங்கு மாடவீதி பதினெட்டுப் பட்டினமும் முப்பத்திரண்டு வளர்புறமும் அறுபத்து நான்கு கடிகை தாவளமும், தாவளத்திலிருந்து தன்மை வளர்க்கும் செட்டியும், செட்டி சிறப்புத்தானும் எட்டு வட்டை இடை வட்டைகளில் விளங்கு திசைவிளக்கு திசையாயிரத்து ஐந்நூற்றுவரோமும், அற்றை வட்டை அறு வட்டை நாத்தரை நால்வத்தரை திசை விளங்கு திசையாயிரத்து ஐந்நூற்றுவரோமும்', 'நாடு நகரங்களில் திசை விளங்கு திசையாயிரத்து ஐந்நூற்றுவரோமும்' என்று நகரத்தார்களைப் பற்றியும் நகரத்தாருடன் தொடர்புடை யவையாகப் பட்டினம், வளர்புரம், கடிகை, தாவளம், வட்டை, நகரம் முதலியனவும் கூறப்பட்டுள்ளன. நகரத்தார்களை செட்டி என்று சிறப்புடன் அழைத்ததையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது[7]. நகரத்தார்கள் வாழ்ந்த தெருக்கள் 'பெருந்தெரு' என்றழைக் கப்பட்டதை வேறு சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன[8].

கி.பி.10-ஆம் நூற்றாண்டு முதல் இங்குள்ள கல்வெட்டுகளில் இவ்வூர் நகரத்தார் பற்றிய குறிப்புகளில், நகரத்தாரை நகரத்தோம்[9] எனப் பன்மைச் சுட்டாக குறிக்கப்படுகிறது. நகரத்தார்கள் இங்குப் பெருமளவில் வாழ்ந்ததன் காரணமாக தெலிங்க குலகாலபுரமான குலோத்துங்க சோழபட்டணம் என்று மன்னர்களின் பட்டப் பெயர்களோடு காலமுற்பகுதியில் புரம், பட்டணம் என்ற பின் ஒட்டு சேர்க்கப்பட்டும் காலப்பிற்பகுதியில் நகரத்தார் என்ற சொல்லோடு மலை என்ற பின் ஒட்டு சேர்க்கப்பட்டும் நகரத்தார்

மலை என்ற பெயரில் அழைக்கப்பெற்றது. நகரத்தார்மலை என்ற பெயரே தற்போது நார்த்தாமலை என்று மருவி வழங்கப் படுவதாகக் கருதலாம்.

## செட்டிகளும் சிறப்பான அறக்கொடைகளும்

பொதுவாக, நகரத்தார்கள் வணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டிய தன்மையால் தாம் ஈட்டிய பொருளில் ஒரு பகுதியை அறக்கொடை செய்கின்ற வள்ளண்மை மிக்கவர்களாக வாழ்ந்து வந்தனர். மற்ற இடத்து நகரத்தார்களைப் போல நார்த்தாமலையிலிருந்த நகரத்தார்கள் பல அறக்கொடை களையும் கோயில் திருப்பணிகளையும் செய்தனர் என்பதை இங்குள்ள கல்வெட்டுகள் காட்டுகின்றன[10].

நார்த்தாமலைத் திருமலைக் கடம்பர் பாறையிலுள்ள முதலாம் இராஜராஜனின் 28-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு தெலிங்ககுலகாபுரத்து நகரத்தார்கள் வாச்சன் அரங்கன் விலன் கடம்பர் கோயிலில் உவச்சுக் கொட்ட, மெடி வயல், அரங்கனேரி வயல்களில் நிலங்களைக் கொடையாகக் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கிறது[11]. மேற்படி கடம்பர் கோயில் பாறையிலுள்ள முதலாம் இராஜேந்திர சோழனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, தெலிங்க குலகாலபுரத்து நகரத்தார்களில் திருவன் அமுதன், பள்ளி கொண்ட செட்டி குன்றன், மதுராந்தக இராஜேந்திர சோழ பிரஹச் செட்டி, கங்கை கொண்ட அணுக்க சிலை செட்டி, கடராங்கொண்ட சோழ செட்டி, ராஜராஜ தன்ம செட்டி முதலானவர்களுக்குக் குன்றத்தூர், கீழத்தாய நல்லூர் முதலான ஊர்களில் மேற்படி கோயிலுக்கு அர்ச்சனாபோக நிலம் தொடுத்தனர்[12]. மேற்கண்ட பாறையிலுள்ள மற்றொரு முதலாம் இராஜேந்திரனின் 8-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு திருமலைக் கடம்பர் கோயிலுக்கு திருமஞ்சனக் குடம் ஐந்து அளிக்க நகரத்தார்கள் கொடுத்த கொடையைக் குறிப்பிடுகிறது[13]. நார்த்தாமலைத் திருமலைக்கடம்பர் கோயில் தம்பிராட்டி யாருக்கு உச்சியம் போதுக்கு அமுது படைப்பதற்கு நெல்லளக்க தெலிங்க குலகாலபுரத்து நகரத்தார்கள் கொடை கொடுத்தனர் என்பதை நார்த்தாமலை கல்வெட்டுகளில் ஒன்று தெரிவிக்கிறது[14]. நார்த்தாமலை திருமலைக் கடம்பர் கோயில் வடபுரம் பாறையிலுள்ள முதலாம் குலோத்துங்கனின் 27-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இங்குள்ள நகரத்தார்கள் இவ்வூர்,

வியாபாரி பரம்பூருடையான் செங்குடியான் என்ற கங்காதரர் இவ்வூர் கயிலாய முடைய மஹா தேவருக்கும் மேற்படி கங்காதரர் எழுந்தருளுவித்த திருவானைக்கா கோயில் நாயனாருக்கும் தேவதானமாக பள்ளிவயலில் உள்ள திருமானைமலை அருகதேவர் என்ற சமணக் கோயிலுக்குரிய நிலம் நீக்கி பங்சலாகை அச்சு பணம் நூற்று முப்பதரையும் கங்காதரிடம் பெற்றுக் கொண்டு வரி நீக்கிக் கொடுத்தனர்[15].

திருமலைக் கடம்பர் கோயில் பாறையிலுள்ள மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையும் காஞ்சியும் கொண்டு மதுரையில் விஜயாபிஷேகம் செய்து கொண்ட திரிபுவன வீரதேவரின் 33-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு நார்த்தாமலை நகரத்தார்களால் இவ்வூரில் இருந்த வணிகர்களில் பரம்பை-யூருடையான் பெரியான் என்ற தனபாலர்க்கும் பழவூருடையான் உதையன் பெரியதேவருக்கும் குன்றத்தூர் வயலில் இறையிலி நிலம் விட்டுக் கொடுக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது[16].

மேற்படி கடம்பர் கோயில் முன்புள்ள மங்கள தீர்த்தப் பாறையிலுள்ள சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியன் கல்வெட்டில் நகரத்தார்கள் இருஞ்சிறையுடையான் முடிகொண்ட சோழத் தெலிங்கராயனுக்கும் அவன் மகனுக்கும் நார்த்தாமலை செங்கன் ஏரியில் திருமலை கடம்பர் கோயில் நாயனாருக்கு திருநாமத்துக் காணியாகவும் குடி நீங்காத் தேவதானமாகவும் நிலக்கொடை கொடுக்கப்பட்டது என்பதை அறிய முடிகிறது[17].

மேற்படி மங்கள தீர்த்த பாறையிலுள்ள இதே சுந்தரபாண்டியனின் மற்றொரு கல்வெட்டு நார்த்தாமலை நகரத்தார்கள், திருமலைக் கடம்பர்கோயில் திருக்காமகோட்ட நாச்சியாருக்கு கற்றளி செய்து மேற்படி நாச்சியாரை எழுந்தருளுவித்த பெரியதேவன் உதையன் என்ற பெரிய தேவன், பெரியதேவன் புகலிவேந்தன் ஆகியவர்களுக்கு பாலாவயல் ஆறுமா மாகாணி நிலத்தை திருப்படி மாற்றுக்கு விற்றுக் கொடுத்தனர் என்று தெரிவிக்கிறது[18].

மேற்கண்ட பாறையில் இதே சோணாடு வழங்கிய சுந்தரபாண்டியனின் 12-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் நார்த்தாமலை வியாபாரி பழுவூருடையான் பெரியான் உதையன் பெரியதேவன், பரம்பையூருடையான் என்ற திருமூலத்தான முடையான் ஆகிய இருவரும் திருமலைக் கடம்பூர் நாயனார்

கோயில் கூத்தாடு தேவருக்கும் திருவானைக்கா நாயனாருக்கும், அமுது படைக்கவும், திருமலைக் கடம்பர் கோயிலில் நாச்சியாரை எழுந்தருளுவித்து திருக்காரை சாத்தியமைக்கவும் திருப்படி மாற்றாக குன்றத்தூர் வயலின் வருவாயைக் கொண்டு நெல்லளக்கவும் ஒப்புக்கொண்டனர் என்றுள்ளது[19].

திருமலைக் கடம்பர் கோயிலுக்கு அருகிலுள்ள நகரீஸ்வரம் என்ற மற்றொரு சிவன் கோயில் மேல்புறச் சுவரிலுள்ள கல்வெட்டில் நகரீஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்கு குடிநீங்கா தேவதானமாக இவ்வூர் வியாபாரி செங்குழி ஆளுடையான் என்ற இருநிதி குபேரனுக்கு நொச்சி வயல், பசும்பிறை வயலினை கொடையாக நார்த்தாமலை நகரத்தார்கள் கொடுத்தனர் என்றுள்ளது[20].

இதே மங்கள தீர்த்த பாறையிலுள்ள சோணாடு வழங்கிய சுந்தரபாண்டியனின் கல்வெட்டில் குலோத்துங்க சோழ பட்டணம் என்ற நார்த்தாமலை நகரத்தார்கள் அவ்வூர் வியாபாரி பழூவூருடையான் உதையன் பெரியதேவனுக்கும் பரம்பூருடையான் அருள் பெற்றானுக்கும் இவ்வூர் அருள் பெற்றான் குடிக்காட்டு குளத்துக்கு முன்பாகவுள்ள நிலங்களை இறைகழித்துக் கொடுத்தனர் என்றுள்ளது[21].

மேற்படி பாறையிலுள்ள மேற்கண்ட சுந்தரபாண்டியனின் 37-வது ஆட்சியாண்டு கல்வெட்டு நார்த்தாமலை வியாபாரி பழூவூருடையான் எழுந்தருளுவித்த திருமலைக் கடம்பர் கோயிலின் திருக்காமக் கோட்ட நாச்சியாருக்கும் இவ்வூர் திருவானைக்கா கோயில் நாயனாருக்கும் கீழைக்குறிச்சி அரையன் வருடைப் பெருமாளான குலசேகர கடம்பராயனால் பெருமுடிவயல் சிவமங்கலத்து வயல்களில் திருநாமத்துக் காணியாகக் கொடுக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது[22].

நார்த்தாமலையிலுள்ள நகரத்தார்களது கல்வெட்டுகள் அனைத்தும் முதலாம் இராஜராஜன் காலம் முதல் நகரத்தோம்[23] என நகரத்தார்களை பன்மையில் கூறுவதால் இங்கு நகரத்தார்கள் கி.பி.10-ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை பெருமளவில் வாழ்ந்து வந்துள்ளதை அறியலாம். இங்குள்ள நகரத்தார்கள் கோயில்களுக்கு நிலக்கொடை கொடுத்தது மட்டுமல்லாது இங்குக் கோயில்களை கட்டியும், கோயில்களில்

தெய்வச் சிலைகளை நிறுவியும், தெய்வத்திற்கு திருக்காரை போன்ற அணிகலன்களை செய்தும் கொடுத்துள்ளனர்.

தமிழகத்திலுள்ள மற்ற இடங்களிலுள்ள நகரத்தார்களைப் போல இங்குள்ள நகரத்தார் திசையாயிரத்து ஐந்நூற்றுவர், நானாதேசிகள், வளஞ்சியர், மணிக்கிராமத்தார் போன்ற வணிகக் குழுக்களில் எதிலும் இருந்ததற்கான கல்வெட்டு ஆதாரங்கள் இல்லை. ஆனால் நார்த்தாமலையில் வாழ்ந்த வணிகர்களில் சிலர் பரம்பையூருடையான், வெளியாற்றூருடையான், பழவூருடையான், இருஞ்சிரைவுடையான் என தங்கள் பெயருக்கு முன் ஒட்டாக ஊர்ப்பெயர்களை கூறிக் கொள்வதால் இவர்களோ, இவர்களது முன்னோர்களோ வெளியிலிருந்து இங்கு வந்தவர்கள் என்பதைத் தெரிவிக்கின்றன. இங்குள்ள நகரத்தார்களது கல்வெட்டுகளில் ஜெயங்கொண்ட சோழ செலை செட்டி, கடாரங்கொண்ட சோழ செட்டி, இராஜாதிராஜ சோழ செலச் செட்டி, ராஜேந்திர சோழ செல செட்டி, குலோத்துங்க சோழ செல செட்டி என சோழ மன்னர்களின் பெயர்களை கொண்டவர்களாகவே உள்ளனர். ஒரே ஒரு கல்வெட்டு மட்டும் அழகிய பாண்டிய செலசெட்டி என பாண்டியர் பெயர் கொண்டிருந்ததையும் தெரிவிக்கின்றது.

தமிழகத்துக் கல்வெட்டுகளில் நாட்டுக்கணக்கு, ஊர்க்கணக்கு, கோயில் கணக்கு, படைக் கணக்கு, நகர் கணக்கு என்ற குறிப்புகள் காணப்படுவதுபோல நார்த்தாமலைக் கல்வெட்டு ஒன்றில் நகர் கணக்கு என்ற குறிப்புக் காணப்படுவதும் நார்த்தாமலையில் நகரவை இருந்த செய்தியையும் தெரிவிக்கிறது.

நகரத்தோம் பணிக்க என்ற அளவிற்கு மிக்க செல்வாக்குடனும் கோயில்களைக் கட்டி அறக்கொடைகள் வழங்கும் நிலைக்கு மிகுந்த செல்வச் செழிப்புடனும் சுமார் 700 ஆண்டுகள் நார்த்தாமலையில் வாழ்ந்து வந்த நகரத்தார்களில் ஒருவர் கூட இன்றைக்கு இவ்வூரில் இல்லை.

## சான்றெண் விளக்கம்

---

1 *புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுகள்* தொகுதி **2**, பகுதி **2**, *பக்.1067*

[2] *பு.ச.க. 86*

[3] *தெலிங்க குலகாலபுரம் பு.ச.க. 91, 112,113, 158,164.*

[4] *தெலிங்க குலகாலபுரமான குலோத்துங்க சோழபட்டணம். பு.ச.க.170, 173, 271*

[5] *பு.ச.க. 279, 280, 445, 621*

[6] *பு.ச.க. 922*

[7] *தெ.இ.க. 8/442*

[8] பெருந்தெரு *பு.ச.க.*

[9] *பு.ச.க. 271, 279, 283*

[10] *பு.ச.க. 173,271,279,445,621*

[11] *பு.ச.க. 91*

[12] *பு.ச.க. 112*

[13] *பு.ச.க. 113*

[14] *பு.ச.க. 114*

[15] *பு.ச.க. 158*

[16] *பு.ச.க. 170*

[17] *பு.ச.க. 271*

[18] *பு.ச.க. 279*

[19] *பு.ச.க. 279*

[20] *பு.ச.க. 283*

[21] *பு.ச.க. 325*

[22] பு.ச.க. *53*

[23] *பு.ச.க. 112,113,114,158*

# 16. தஞ்சாவூர்ப் பகுதியில் வணிகக் குழுக்கள்

சீ.நீலாவதி

வணிக சமூகத்தினரின் குடியேற்றங்கள் நகரம், மாநகரம், புரம், பெருந்தெரு பேரங்காடி, மடிகை, பட்டினம் என்று பலவாறான பெயருடன் முன், பின் ஒட்டுகளாக கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இத்தகைய பெயர்களைக் கொண்டு கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள வணிக நகரங்கள், வணிகக் குழுக்கள் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

### வணிக நகரங்களின் வளர்ச்சியும் போக்கும் (கி.பி. 846-1350)

சோழநாட்டில் குறிப்பாக தஞ்சாவூர்ப் பகுதியில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து வணிகர்கள், வணிகக் குழுக்கள் பற்றி பல குறிப்புகள் கிடைத்துள்ளன. இத்தகைய சான்றுகளில் கும்பகோணம் வட்டம் திருநாகேஸ்வரத்தில் கிடைத்துள்ள கல்வெட்டில் காணப்படுகின்ற 'திரைமூர் நாட்டைச் சார்ந்த குமாரமாத்தாண்டப்புரம்' என்ற வணிக நகரமே தஞ்சைப் பகுதியில் காணப்படுகின்ற முதல் சான்றாகக் கொள்ளவேண்டும்[1]. இது முதலாம் ஆதித்த சோழன் காலத்தை சார்ந்த கல் வெட்டாகும். கி.பி. 985-ஆம் ஆண்டு முதல் முதலாம் இராஜராஜன் காலத்தில்தான் வணிக நகரங்களின் வளர்ச்சியினை முழுமையாகக் காணமுடிகின்றது. ஏனெனில், இக்கால கட்டத்தில் பேரங்காடி, பெருந்தெரு, புரம், பட்டினம் போன்ற வணிக மையங்களும் பரவலாக இடம் பெற்றுள்ளன .

### புரம்

தஞ்சாவூர் நகரில் 'புரம்' என்ற பெயருடன் கூடிய ஊர்களே அதிகளவு காணப்படுகின்றன. இத்தகைய ஊர்கள் அரசி, அரசு அதிகாரிகள், அரசன் ஆகியோரின் பெயர்களையே முன் பின் ஒட்டுகளாகக் கொண்டுள்ளன. இப்பகுதியில் வணிகத் தொழில் மேற்கொண்டிருந்த வணிகர்கள், வணிகக் கூட்டத்தோடு பிற கைத்தொழில் செய்யும் மக்களும் சேர்ந்து வாழ்ந்துள்ளனர். எ.கா. 'கிழார்கூற்றத்து பரகேசரிப்புரத்து நகரத்தார்[2], 'குமாரமார்த்தாண்டப்புரத்து வியாபாரி ஒப்பன்[3] என்ற கல்வெட்டு வரிகள் தெளிவுப்படுத்துகின்றன. புரம் பற்றி கிடைத்துள்ள 27 கல்வெட்டுகளில் 24 கல்வெட்டுகளில் 'வியாபாரி' என்ற சொல்லை முன்னொட்டாகக் கொண்டுள்ளதை அறியமுடிகிறது.

### பட்டினங்களும் வணிகக் குழுக்களும்

பொதுவாக, கடற்கரைப் பகுதியில் இருந்த வணிகக் கூட்டங்கள் 'பட்டினம்' என்ற பகுதியில் வசித்துள்ளன. கி.பி 1210-ஆம் ஆண்டைச் சார்ந்த உம்பள நாட்டு கானத்தூர் நாட்டு கல்யாணபுரம் கொண்ட சோழப்பட்டினம்[4], மூன்றாம் இராஜராஜன் காலத்தில் காணப்பட்டுள்ள குலோத்துங்க சோழப்பட்டினம்[5], சுந்தரபாண்டியன் காலத்தில் காணப்பட்டுள்ள குலேசேகரப்பட்டினம்[6], நாகபட்டினமாக சோழகுலவல்லிபட்டினம்[7] போன்றவற்றை எடுத்தக்காட்டலாம். இதனை பார்க்கும்போது ஆற்றங்கரை ஓரங்களிலும் கடலோரப்பகுதிகளிலும் மட்டுமே இக்குழுக்கள் பட்டினம் என்னும் பின்னொட்டுள்ள இடங்களில் வாழ்ந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

### பேரங்காடி, மடிகை

வணிகக் குழுக்கள் பேரங்காடி, மடிகை என்ற வியாபாரத் தலங்களை ஏற்படுத்தி அதன் அருகிலேயே வசித்துள்ளனர். இதனைச் சுட்டும் வகையில் தஞ்சாவூர்ப் புறம்படி தெருவில் இருக்கும் திருபுவன மாதேவி பேரங்காடி, மும்முடிச்சோழப் பேரங்காடி, வீரசிகாமணி பேரங்காடி, நித்தவினோத பேரங்காடி என்று கல்வெட்டுக் குறிப்புகள் கிடைத்துள்ளன[8]. இவ்வாறே கி.பி. 1315-ஆம் ஆண்டில் கிடைத்துள்ள மூன்றாம் சுந்தரபாண்டியன் காலத்தில் வெளியிடப்பட்டுள்ள மன்னார்குடியில் காணப்பெறும் இரு

கல்வெட்டுகளில் இராஜராஜ சதுர்வேதி மங்கலத்து சாரிகைக்கோட்டையின் புவனகவிரண்டிகை[9], விக்கிரமபாண்டியன் மடிகை எனக்குறிக்கப்பெறுகின்றன. இவை கோட்டையின் உள்பகுதியில் அமைந்துள்ள முக்கிய வியாபாரத் தலமாக இருந்துள்ளன.

**நகரம்**

பெரும்பாலான ஊர்கள் நகரம் என்ற சொல்லுடன் சுட்டப்பெற்று அப்பகுதி வணிகக்குழுக்களின் குடியேற்றமாக இருந்துள்ளன. 'சோழவிஜயாதிர சதுர்வேதிமங்கலம்' என்ற ஊர் முன்னர் நகரம் என்று கூறப்பட்டுள்ளதிலிருந்து இவை நகரமாக இருந்து பிற்காலத்தில் பிராமணக் குடியேற்றமாக மாறியுள்ளது[10].

**வணிகக் குழுக்கள்**

தஞ்சாவூர்ப் பகுதியில் வணிகம் செய்த பெரிய வணிகர்கள் வணிகக் குழுவின் அடைமொழியுடன் வழங்கப்பெறாமல் வணிகர், வியாபாரி, சங்கரப்பாடி என்ற பெயரில் சுட்டப்பெற்றுள்ளனர். ஒரு குறிப்பிட்டப் பொருளை வணிகம் செய்யும்போது அந்தப் பொருளின் பெயர்கொண்டு அவ்வணிகர்கள் அழைக்கப்பெற்றனர். பொன் வணிகன், உப்புவணிகன் போன்ற வணிகர்கள் கல்வெட்டுகளில் சுட்டப் பெறுகின்றனர். வணிகர்கள் நகரத்தோம், நகரத்தார், பெரும்நகரத்தார் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளனர்[11].

பொதுவாக, வியாபாரி[12], செட்டி[13], வணிகர், அறுவை வணிகர்[14], மாணிக்க வணிகர்[15], சங்கரப்பாடியார்[16] என்ற பெயர்கள் கல்வெட்டுகளில் சுட்டப்பெறுகின்றன. வியாபாரி என்ற சொல் பல காலகட்டங்களில் வணிகரைக் குறிக்கும் பொதுப்பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளன. 'செட்டி' என்ற சொல் வணிகக் குழுவிற்குரிய பட்டப் பெயராக *சிலப்பதிகாரத்தில்* இடம்பெற்றுள்ளது. 'சிரேட்டி' என்ற வடசொல் தமிழில் 'சிலேட்டி', 'செட்டி' என வழங்கப்பெற்றது. தமிழ் நிகண்டுகள் 'வைசியர்' என்னும் சொல் வணிகரை குறிப்பதாகக் கொள்கின்றன. செட்டி என்ற சொல்லிற்கு சேனவைசியர், தனவைசியர், பூவைசியர் என்று *பிங்கல நிகண்டு* வணிகர்களின் பட்டப்பெயர்களுக்கு பொருள் கூறுகின்றது, செட்டி என்ற

பட்ட பெயர் இருப்பினும் 'வியாபாரி' என்ற பொதுப்பெயரே வழக்கத்தில் இருந்துள்ளது.

செக்கார் என்று அழைக்கப்பட்ட எண்ணெய் வணிகர்கள் கோயில்களுக்கு விளக்கெரிக்க எண்ணெய் அளிக்கும் பணியினை மேற்கொண்டு வந்துள்ளனர். எண்ணெய் வணிகர் என்ற அழைக்கப்படும் இவர்களே சங்கரப்பாடியர், சங்கரன்பாடியார், சங்கரப்பாடியான் என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றனர். எண்ணெய் வணிகக்குழு 'மாயிலாட்டி' என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை 'சங்கரப்பாடியான கண்ணன் கீரனாள குன்றறே மாயிலாட்டி' என்ற கல்வெட்டுத் தொடர் தெளிவுப்படுத்துகிறது[17].

சோழிய வணியர் என்ற மரபினராகவும், சைவ நெறியுடன் சிவத்தொண்டு புரியும் இயல்பினராகவும் இருந்துள்ளனர். தமிழகத்தில் குழுவாக வாழ்ந்திருந்த வணிகருள் ஒரு பிரிவினராகவும் இருந்துள்ளனர். 'திருமணஞ்சேரி பரமசுவாமிக்கு சோழிய வணியரான முண்டரங்களாகிய திருமணஞ்சேரி நாற்பத்தொண்ணாயிர பன்மாயேஸ்வர', 'மாயிலாட்டியார் பன்மாவோஸ்வர ரக்ஷை' என்று கல்வெட்டுத் தொடர் குறிப்பிடுகிறது[18]. இதை நோக்கும்போது எண்ணெய் வணிகர்கள் பெரிய குழுக்களாக இருந்துள்ளதை அறியலாம்.

சங்கரப்பாடியார் சோழநாட்டில் மிகவும் செல்வம் படைத்தவராகவும், அரசியலில் கரணத்தான், ஸ்ரீகாரியம் ஆகிய பதவிகள் பெற்றவர்களாகவும், திருக்கோயில்களுக்குத் திருவிளக்கு நிவந்தம் பல செய்தவர்களாகவும் இருந்துள்ளனர். இவர்களைப் பற்றி பெரியபுராணத்தில் 'நாயனார்' வரலாற்றில் எண்ணெய்களை உண்டாக்கும் தொழில் புரியும், மரபில் செக்கின் வலமை வலம் சுழன்று வருங்கால் எழும் ஒலியை பாடல் திகழும் தெருவில் நாயனார் வாழ்ந்தார் என்று கூறப்பட்டள்ளது[19]. சங்கரபாடி என்னும் தொடரே சங்கரன்பாடி எனத் திரிந்து அத்தொழிலுடையார் சங்கரப்பாடியார் என பெயர் பெற்றுள்ளனர். சான்றாகக் கும்பகோணம் வட்டம் திருவிடைமருதூர் கல்வெட்டில் 'திரைமூர் நாட்டு குமாரமாத் தாண்டப்புரத்து சங்கரப்பாடியோர்' என்று சுட்டப்பெற்றுள்ளது[20].

சங்கரப்பாடியார் என்று அழைக்கப்பட்டுள்ள எண்ணெய் வணிகக்குழு அதிகளவில் கும்பகோணம் பகுதியில் இடம்-

பெற்றுள்ளனர். ஏனெனில், திருக்கோயில்கள் அதிகம் உள்ள பகுதியில் இவர்களின் தாக்கம் அதிகளவில் இருந்துள்ளது. அவ்வாறே பொன் வணிகர்கள் போன்ற வணிகக் குழுக்களின் தாக்கம் கடற்கரைப் பகுதியான நாகப்பட்டினம் பகுதியிலும், பெரிய வணிகர்கள் தஞ்சை நகரின் மையப்பகுதிலும் பெரிய அளவில் அங்காடிகள் ஏற்படுத்தி தங்கள் வணிகத்தை மேற்கொண்டுள்ளது தெளிவாகிறது.

## சான்றெண் விளக்கம்

---

1 *தெ. இ. க . 3/91*

2 *தெ.இ.க. 5 /91*

3 *தெ. இ. க . 5/ 623*

4 *தெ. இ. க . 17/458*

5 *மேலது.*

6 *தெ. இ. க . 22/51*

7 *இந்தியக் கல்வெட்டுகள் 22/34*

8 *தெ. இ. க . 2 /24,37*

9 *தெ. இ. க . 6/ 40*

10 *தெ. இ. க . 2 /93*

11 *தெ. இ. க . 14 /135, 155, 77, 23 ,78* மற்றும் *இ.க . 5 /ப.47*

12 *தெ. இ. க . 8 /245 ; 200, 201*

13 *தெ. இ. க . 8/245 ,7/246, 588, 23/ 212*

14 *தெ. இ. க . 8/ 23*

15 *தெ. இ. க . 8 / 245*

16 *தெ. இ. க . 8/ 245*

17 *தெ. இ. க . 19 /99*

18 *மேலது.*

19 *பெரியபுராணம் கலியநாயனார் பாடல் -5*

20 *தெ. இ. க . 23 /227*

# 17. பெரம்பலூர் வட்டார வணிகக் கல்வெட்டுகள்

இல. தியாகராஜன்

சோழர் காலத்தில் பெரம்பலூர் பகுதியில் இருந்த (இன்றைய அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களின் இணைந்த பகுதி) வணிக நகரங்களுக்கும் திருச்சி அருகே உள்ள திருப்பைஞ்ஞீலிக்கும் மலைமண்டலத்தையும் துளுராஜ்யத்தையும் சேர்ந்த (கேரள, கர்நாடகப் பகுதி) வணிகர்களும் குதிரைச் செட்டிகளும் வந்து வணிகம் செய்துள்ளனர். திருமழபாடி, காமரசவல்லி, நக்கசேலம், திருப்பைஞ்ஞீலி ஆகிய ஊர்க் கல்வெட்டுகளில் மலைமண்டல வணிகர்களும் குதிரைச் செட்டிகளும் குறிப்பிடப்படுகின்றனர். இவ்வூர்களில் உள்ள கோயில்களுக்கு கொடைகளும் வழங்கியுள்ளனர். மலை மண்டலம் என்பது தற்போதைய மேற்கு கடற்கரைப் பகுதியைக் குறிக்கும். குதிரைச் செட்டிகள் என்ற குதிரை வணிகர்கள் திசையாயிரத்து ஐநூற்றுவர் என்ற வணிக அமைப்பில் உள்ள ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இப்பகுதியோடு மலை மண்டல வணிகர்களுக்கு இருந்த தொடர்பு பற்றி இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

முதலாம் இராஜேந்திர சோழன் கி.பி. 1023-இல் கங்கைவரை படையெடுத்து வென்றதுடன் தன் வெற்றியின் நினைவாகக் கங்கைகொண்டசோழபுரம் என்னும் பெரிய நகரத்தை கி.பி. 1025-இல் நிறுவி அங்குக் கங்கை கொண்ட சோழீஸ்வரம் என்னும் சிவன் கோயிலையும் (கி.பி. 1025-1036) கட்டியுள்ளார். அத்துடன் தஞ்சாவூரிலிருந்த சோழப் பேரரசின் தலைநகரத்தையும் தான் அமைத்த புதிய நகரத்திற்கு மாற்றிக் கொண்டார். இம்மாற்றத்தின் விளைவாக அரியலூர், பெரம்பலூர் பகுதிகளில் ஏராளமான வணிக நகரங்களும் ஊர்களும்

பிரம்மதேயங்களும் பெருவழிகளும் ஏற்ப்பட்டன என்பதைக் கல்வெட்டுகளின் மூலம் அறிய முடிகிறது.

சோழர் காலத்தில் இருந்த பன்னாட்டு வணிகக் குழுக்களில் மணிக்கிராமத்தார், வளஞ்சியர், ஐநூற்றுவர், திசையாயிரத்து ஐநூற்றுவர், அஞ்சுவண்ணத்தார் ஆகியவை முக்கியமானவை. சோழ மன்னர்கள் கேரளா, கர்நாடகம், இலங்கை, தென்கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளைக் கைப்பற்றியது பற்றி அவர்களின் மெய்க்கீர்த்திகளின் மூலம் அறியமுடிகிறது. இத்தகைய வெற்றிகளால் சோழ நாட்டுக்கும் அப்பகுதிகளுக்கும் அரசியல் உறவுகள் ஏற்பட்டதுடன் வணிகம் வளரவும் இவை துண்ணைநின்றன. இதன் காரணமாக கேரளா, கர்நாடகா (மலைமண்டலம், துளுராஜ்யம்) ஆகிய நாடுகளைச் சேர்ந்த வணிகர்களும் அங்கிருந்து மேலை நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்த குதிரை வணிகர்களும் சோழ நாட்டுக்கு வந்துள்ளனர்[1]. இத்தகைய வணிகர்களைப் பற்றியக் குறிப்புகள் அரியலூர், பெரம்பலூர் பகுதிகளில் உள்ள கோயில்களிலிருந்தும் வணிக நகரங்களில் அமைந்துள்ள கோயில்களிலிருந்தும் கிடைக்கின்றன. இதனால் மேலைக் கடற்கரைப் பகுதியில் இருந்த வணிகர்களுடன் உள்நாட்டுப் பகுதிகளில் அமைந்த நகரங்கள் கொண்டிருந்த வணிகத் தொடர்பை அறிய முடிகிறது.

### துளுராஜ்ஜிய வணிகர்கள்

துளு ராஜ்யம் என்பது மேற்குக் கடற்கரையை ஒட்டிக் கருநாடக மாநிலத்தில் அமைந்துள்ள பகுதியாகும். துளு ராஜ்ஜியத்து மானாபரணநல்லூரில் வாழ்ந்த தபசினிவிக்கிரமாதித்தன் வலையநாயக்கன் என்பவர் மூன்றாம் இராஜராஜனின் 29-ஆம் ஆட்சியாண்டில் (கி .பி 1245) திருமழபாடி இறைவனுக்குக் காவிரி ஆற்றிலிருந்து தினமும் திருமஞ்சனநீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்ய, திருமஞ்சனப்புற திருநாமத்துக் காணியாக முக்காலே மூன்று மா முக்காணி நிலம் கொடையாக வழங்கியுள்ளார். இவர் அந்நிலத்தை ராஜராஜ மங்கலம் என்ற ஊரில் இருந்த பிராமணப் பெண்மணி ஒருவரிடமிருந்து விலைக்கு வாங்கி வழங்கியுள்ளார்[2]. இக்கல்வெட்டால் துளுராஜ்ஜியத்துடன் திருமழபாடிப் பகுதி கொண்டிருந்த வணிகத் தொடர்பை அறியமுடிகிறது.

## மலை மண்டலத்து வணிகர்கள்

இதன்பின் மூன்றாம் இராஜராஜனின் 27-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி 1243) மலை மண்டலத்து (கேரளம், கருநாடக கடற்கரைப் பிரதேசம்) எருசபுரத்தைச் சேர்ந்த வணிகர் திருவாலவாயுடையான் தேவன் அம்பலவாண மண்டல வியாபாரி என்பவர் இக்கோயில் மூன்றாம் பிரகாரத்துத் திருவாசலின் தென்பக்கத்தில் அன்பர்கள் பாத சுத்தி செய்து கொள்வதற்காகக் கிணறு வெட்டித் தொட்டி வைத்து அதில் நீர் இறைத்து ஊற்ற ஓர் ஆளும் நியமிக்க ஏற்பாடு செய்துள்ளார். இதற்கு அவர் கோயில் கருவூலத்தில் முதலீடாக 6,000 காசுகளைக் கொடையாக வழங்கியுள்ளார். இக்காசுக்குப் பொன்னார்மேனி விளாகத்தில் அரைக்காணி நிலம் வாங்கப்பட்டு அதில் ஒரு பகுதி (அரைக்காணி முந்திரிகை) வரி செலுத்தவும்(இறை) மீதியைத் தொட்டிக்கு நீரிறைப்பவர்க்கு ஜீவனத்துக்கும் கொடுக்கப்பட்டது. மேலும், இவ்வூரில் இருந்த வைச்சியநாதப் பெருந்தெருவில் இருந்த வணிகர் நியமங்கிழான் முகமறியும் பெருமாள் என்பவரும் திருமஞ்சனப்புறமாக நிலம் வாங்கி வழங்கியுள்ளார்.

துளுராஜ்ஜியம் மற்றும் மலைநாட்டு வணிகர்கள் திருமழபாடிக்கு வந்துள்ளமையால் இவ்வூர் சிறந்த வணிகத் தலமாக மேற்குக் கடற்கரைப் பகுதியுடன் தொடர்பு கொண்டிருந்தது என்பது புலனாகிறது. சோழர்காலத்தில் திருமழபாடியின் ஒரு பகுதி வணிக நகரமாகத் திகழ்ந்துள்ளது. இவ்வூருக்கு ஜீனசிந்தாமணி நல்லூர் என்னும் மற்றொரு பெயர் இருந்தது. இங்கு ஐய்யபொழில் பெருந்தெரு, வைச்சியநாதப் பெருந்தெரு என்னும் பெயர்களில் வணிகர்கள் வாழ்ந்த பெருந்தெருக்கள் இருந்ததைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன[3]. மேலும் இவ்வூரில் உப்பு வணிகர்கள் வாழ்ந்ததை வீரராமநாதனின் கல்வெட்டு தெரிவிக்கிறது[4]. இவ்வூர் வழியாகக் குலோத்துங்கசோழன் பெருவழி என்னும் வணிகப்பெருவழி சென்றதையும் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது[5].

## காமரசவல்லியில் மலைமண்டல மாதாக்கள்

அரியலூர் அருகே காமரசவல்லி என்னும் சிற்றூர் உள்ளது. சோழர் காலத்தில் இவ்வூர் மிகப்பெரிய பிரம்மதேய கிராமமாகத் திகழ்ந்தது. இவ்வூரின் ஒரு பகுதியில் வணிகர்கள் குடியேறி வாழ்ந்துள்ளனர். உத்தமசோழனின் 8-ஆம் ஆண்டுக்

கல்வெட்டு இவ்வூரில் இருந்த வளஞ்சியர் என்னும் வணிகக் குழுவைச் சேர்ந்தவனுக்காக ஐய்யபொழில் ஐநூற்றுவர் ஒன்று சேர்ந்து கோயிலில் விளக்கு வைத்துள்ளனர் என்று குறிப் பிடுகிறது[6]. இவ்வூரில் இருந்த ஜீனசிந்தாமணிப் பெருந்தெரு, திருச்சிற்றம்பலப் பெருந்தெரு ஆகிய தெருக்களில் செக்கு வாணியர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

கி.பி.1263-இல் எழுதப்பட்ட முதலாம் ஜடாவர்மன் வீரபாண்டியன் கல்வெட்டு எழுபத்தொன்பது வளநாட்டு பதினெண் பூமி பதினெண் விஷயத்தார் என்னும் வணிகக் குழுவினர் இவ்வூரில் ஒன்றுகூடி அளப்பன, நிறுப்பன, மடிப்பன, உரைப்பன, எடுப்பன வகையைச் சேர்ந்த பொருள்களுக்கு, புடவைக்கட்டு ஒன்றுக்குக் கால்பணம், மிளகுப் பொதி ஒன்றுக்குக் கால்பணம், பாக்குப்பொதி ஒன்றுக்குக் கால் பணம், உரைக்கும் பொன் ஒன்றுக்குக் கால்பணம் நிறைப்பொருளுக்கு ஒரு காசு, அரிசிப் பொதி ஒன்றுக்கு இரண்டு காசு, நெல் பொதி ஒன்றுக்கு ஒரு காசு, தலைச்சுமைக்கு ஒருகாசு என மகமை விதித்து அதை வசூலித்து இவ்வூர்க்கோயிலைத் திருப்பணி செய்வது என முடிவு செய்தனர். இம்முடிவை நகரக்கணக்கு அலுவலர் ஐந்நூற்றுவர் வேளான் என்பவர் எழுதியுள்ளார். மலை மண்டல மாதாக்கள் என்னும் மலை நாட்டு வணிகர்களும் கையொப்பமிட்டுள்ளனர்[7]. இக்கல்வெட்டு மூலம் மேற்குக் கடற்கரைப் பகுதி (மலைநாடு) வணிகர்கள் இவ்வூரில் வணிகம் செய்துள்ளனர் என அறிகிறோம்.

**நக்கசேலத்தில் மலை மண்டல வணிகர்கள்**

பெரம்பலூருக்கு அருகே நக்கசேலம் என்னும் சிற்றூர் உள்ளது. இங்குள்ள தாராபுரீஸ்வார் கோயிலில் எழுதப்பெற்றுள்ள மூன்றாம் இராஜராஜ சோழனின் 25-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி.பி. 1241) இவ்வூர்ப் பெயர் நெடுமதுரை எனவும் இங்குள்ள சிவன் கோயில் கடவுள் இராஜராஜ ஈஸ்வரமுடைய நாயனார் எனவும் குறிப்பிடுகிறது[8]. மேலும், இவ்வூர் மலை மண்டலத்தைச் சேர்ந்த வணிகர் நாகபுரத்துக் கொடிமன்றச்சநம்பி என்பவருக்கு ஜீவிதமாக இருந்துள்ளது. சோழர் காலத்தில் மன்னர்களால் அரசு உயர் அலுவலர்கள், படைத்தளபதிகள், வருவாய்த்துறை அலுவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட நிலங்கள், ஊர்கள் ஆகியவை ஜீவிதக் காணி, ஜென்மக் காணி என்ற பெயர்களால்

அழைக்கப்பட்டன. இத்தகைய காணிகள் வணிகர்களுக்கும் வழங்கப்பட்டன என்பதை இக்கல்வெட்டால் அறிகிறோம். கொடிமன்றச்சநம்பி என்ற வணிகர் மலை மண்டலத்தில் இருந்த நாகபுரம் என்ற ஊரைச் சேர்ந்தவர். அவர் இவ்வூருக்கு வந்து சோழ அரசின் ஆதரவுடன் வணிகம் செய்துள்ளார். அவருக்கு இவ்வூர் முழுவதும் ஜீவிதமாக வழங்கப்பட்டுள்ளது. இவர் இவ்வூரில் நிலம் வாங்கிக் கோயிலுக்குத் தேவதானமாகக் கொடுத்துள்ளார். இவ்வூரின் தெற்கே ஒரு குளமும் வெட்டியுள்ளார். இவருக்கு நிலம் விற்றவர்கள் நெடுமதுரை காணியுடைய நான்கு மன்றாடிகள் ஆவர். அவர்கள் நெடுமதுரையுடையான் நம்பி அந்தராயன் பெரியகோயில் நம்பி, பகுவாயன் மறைகலந்தான் வலிகையராயன், சொண்டன்தெற்றி யாதவரதயன், சொண்டன் பெரியான் ஆவர். இக்கல்வெட்டு மலைமண்டலத்து வணிகர்களுக்குச் சோழ மன்னர்கள் கொடுத்திருந்த ஆதரவைக் காட்டுகிறது. மேற்குக் கடற்கரைப் பகுதியுடன் இன்றைய பெரம்பலூர், நக்கசேலம் பகுதிகள் கொண்டிருந்த வணிகத் தொடர்பை இக்கல்வெட்டால் அறிகிறோம்.

**திருப்பைஞ்ஞீலியில் மலை மண்டல வணிகர்கள்**

திருச்சி அருகே உள்ள திருப்பைஞ்ஞீலி சோழர் காலத்தில் (கி.பி.1174) பாண்டியனை மென்கொண்ட சோழபுரம் என அழைக்கப்பட்டது. இங்கு இராஜராஜன் பெருநிரவியாக வளர்கின்ற இரண்டுகரை நாட்டு வாணிய நகரத்தார்கள் நாற்பத் தெண்ணாயிரப் பெருந்தெருவில் வாழ்ந்தனர் என்பதையும் இவர்கள் தங்களுக்கு இவ்வூரில் இருந்த இரண்டு செக்குகளில் இருந்து கிடைக்கும் வருமானத்தைக் கோயிலில் திருவிளக்கு ஏற்றக் கொடுத்தனர் என்பதையும் மூன்றாம் இராஜராஜனின் 9-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி.1225) மூலம் அறியமுடிகிறது[9].

இவ்வூருடன் மலைமண்டலத்துக் குதிரைச் செட்டிகள் கொண்டிருந்த தொடர்புகளை அங்குள்ள கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. மூன்றாம் இராஜராஜனின் 32-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி.பி.1248), குளமுக்குப் புகழன் திருத்தால மணவாளன் என்பவர் திருப்பைஞ்ஞீலி சிவன் கோயிலில் திருத்தாலீஸ் வரமுடைய நாயனார் என்னும் பெயரில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜை வழிபாட்டுக்கு நிலம் வழங்கியுள்ளதைக் குறிப் பிடுகிறது[10]. இவரே மூன்றாம் இராஜேந்திரனின் 4-ஆம் ஆண்டில் (கி.பி. 1250) தான் எழுந்தருளிவித்த தித்தாலீஸ்சவரமுடைய நாயனார்

பூஜை வழிபாட்டுக்கு நூறாயிரம் காசுகள் (ஒருலட்சம் காசுகள்) வழங்கியுள்ளார்[11]. மலைமண்டலத்துப் பூந்துறை நாட்டு மங்கலம் என்ற ஊர் இம்மன்னரின் மற்றொரு கல்வெட்டில் (கி.பி.1251) குறிப்பிடப்படுகிறது[12]. குளமுக்கு என்ற இடம் தற்பொழுது பள்ளிப்புரம் என அழைக்கப்படுகிறது. இது கேரளாவில் பாலக்காடு மாவட்டத்தில் பரதூர் பஞ்சாயத்தில் உள்ளது. குளமுக்கிலிருந்து ஆறு வழியாகக் கடற்கரையில் உள்ள பொன்னானி என்ற துறைமுகத்தை அடையலாம்[13].

**மலை மண்டல வணிகர்கள் பற்றிக்கூறும் கல்வெட்டுகள்**

***வரிசை எண் .1***

*இடம் : திருமழபாடி (அரியலூர் வட்டம்- அரியலூர் மாவட்டம்) வைத்தியநாத சுவாமி கோயில் உற்சவமூர்த்திகள் சன்னிதி மேற்கு, தெற்குச் சுவர்கள்*

*மன்னன் :மூன்றாம் இராசராசன்*

*ஆட்சியாண்டு : 27*

*காலம் : கி.பி. 12 43*

*க. ஆ .அ. 25/1920,* நேரில் *பார்த்துப் படிக்கப்பட்டது .*

1) ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீறாஜறாஜ தேவற்கு யாண்டு உயசா வது எதிராமாண்டு (27) கற்கடக நாயற்று அபரபக்ஷத்து த்ரயோதஸியும் நாயற்றுக் கிழமையும் பெற்ற புணர்பூசத்து நாள் றாஜறாஜ வள

2) நாட்டுப் பொய்கை நாட்டு உடையார் திருமழபாடி உடைய நாயனார் திருக்கோயில் மூன்றாம் பிரகாரத்து திருவாசலுக்கும் தெற்கு மலை மண்டலத்து எருசபுரத்து வியா

3) பாரி திருவாலவாயுடையான் தேவன் அம்பலவனான மண்டல வணிகர் பாதசுத்தி பண்ண இட்ட இடுவித்த துரவுந் தொட்டிக்குமி நீர் இறைக்கும் அவனுக்கு

4) ஜீவனத்துக்கு நிலங்கொள்ள ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கின காசு ஆறாயிரத்துக்கு கொள்வதான ஊர்படி நிலம் காணி முந்திரிகை இதில் இறைக்கு நீக்கின நிலம் அரை

5) க்காணி முன்திரிகை நீக்கி நிலம் அரைக்காணி இந்நிலம் அரைக்காணிக்கும் திருநாமத்துக் காணியில் விட்ட பொன்னார்மேனி விளாகத்து கண்டராதித்தவதிக்கு மேற்கு

6) குலமாணிக்க வாய்க்காலுக்கு வடக்கு ஆறாங் கண்ணாற்றும் ஏழாங் கண்ணாற்றும் முதல் சதிரத்து வயிச்சியநாதப் பெருந்தெருவில் வியாபாரி நியமங்கிழ

7) யான் முகமறியும் பெருமான் திருமஞ்சனப்புறமாகக் கொண்டு விட்ட நிலத்து இறைக்கு விட்ட நிலமாய் விட்ட ஊற்படி நிலம் அரைக்காணி இன்நிலம் அரைக்காணியும் தொ

8) ட்டிக்கு நீர் இறைக்கும் அவனுக்கு ஜீவனத்துக்கு உடலாக சந்திராதித்தவற் இறையிலியாக செல்வதாகக் கல்வெட்டித்து இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

***வரிசை எண்.2***

*இடம் : திருமழபாடி வைத்தியநாத சுவாமி கோயில் ஜுரஹரேஸ்வரர் சன்னிதி மகாமண்டப வடக்குச் சுவர்*

*மன்னன் : மூன்றாம் இராசராசன்*

*ஆட்சியாண்டு: **29***

*காலம் : கி.பி. **1245***

*க. ஆ .அ. **43/ 1920**, நேரில் பார்த்துப் படிக்கப்பட்டது.*

1) ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள்
2) ஸ்ரீ இராஜஇராஜ தேவர்க்கு யாண
3) டு உயஅ வதின் எதிராமாண்டு (29) மீன நாயற்
4) று பூர்வபட்சத்து சதுதஸியும் திங்
5) கள் கிழமையும் பெற்ற உத்திரத்து நாள் வடகரை இராஜ ராஜ
6) வளநாட்டுப் பொய்கை நாட்டு உடையார் திரும
7) ழபாடி உடைய நாயனாற்) க்கு காவேரியில் திருமஞ்ச
8) னம் எடுப்பதாக துளு இராஜ்ஜியத்து மானாபரணநல்லூர் த
9) பசினி விக்கிரமாதித்தன் வலைய நாயக்கன் கொண்டு விட்ட
10) ஸ்ரீகண்டராதித்த சதுர்வேதிமங்கலத்து பிடாகை விக்கிரம சோழ ந
11) ல்லூர் பிறிந்த ராஜறாஜ மங்கலத்து காணியுடைய திருநிலத்துக்கு சில(ரச)
12) னம் இளையாழ்வான் ஸ்ரீ சேரமுத்திரித் தில்லைநாயக நம்பியும் இவே
13) ன முதுகண்ணாக இவன் மாதா உடைய அமுதாண்டாள் சானியு
14) ம் பக்கல் விலைகொண்டு விட்ட செம்பியமாதேவி வதிக்கு கிழக்
15) கு குலமாணிக்க வாய்க்காலுக்கு வடக்கு உ ஞ்சதிரத்து நிலம் ங (3) மா இதி

16) ல் மேக்கடைய நிலம் உ (2) மா ஆக நிலம் -நீக்கி இதன் கிழக்கு நிலம்-
17) -இதில் கிழக்கடைய- நீக்கி இதன் மே
18) ற்கடைய நிலம் உ இந்நிலம் காணிக்கும் முக்காலே
19) மூன்று மா முக்காணியும் மஞ்சனப் புறத்துக்கு திருநா
20) மத்துக் காணியாக கொண்டு விட்டமையில் இந்நிலத்துக்கு
21) ஊரவர் ஈந்த கடமை குடிமை இறுத்து இறை மிகுதி கொண்டு
22) சந்திராதித்தவரை எடுப்பதாக கல்வெட்டிக் குடுத்தேன் வ
23) (ல்)லை நாயகனேன் இதில் இக்குடம் சுமக்கிற திருத்தொண்
24) டர்களுக்கு திருஅமுதுக்கும் வெட்டிக்கும் இறுப்பு நீக்கி இறை
25) யிலி ஆக விட்ட நிலம் - இப்படி கல்வெட்டிக் குடு
26) த்தமைக்கு (முற்றுப் பெறவில்லை)

*வரிசை எண்.3*

*இடம் : காமரசவல்லி(அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம்) சௌந்தரேஸ்வரர் கோயில் முதற்கோபுர வாயில் கிழக்குச் சுவர்*

*மன்னன் : முதலாம் ஜடாவர்மன் வீரபாண்டியன் 1253-1283*

*ஆட்சியாண்டு : 10*

*காலம் : கி.பி. 1263*

*க.ஆ. அ. எண்: 89/1914 , நேரில் பார்த்துப் படிக்கப்பட்டது.*

1) ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மர் திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு
2) யாண்டு ய (10) வது கும்பநாயற்று விக்கிரமசோழ வளநாட்டு விறைக் கூற்றத்து ஸ்ரீகாமதவ
3) ல்லிச் சருப்பேதிமங்கலத்து உடையார் திருக்காற்கோடீசுரமுடைய நாயனார் கோயி
4) ல் திருப்பணிக்கும் எழுபத்தொன்பது வளநாட்டு பதினெண்பூமி பதினெண் விஷைய
5) த்தோம் ரக்ஷையாக நிறைவற நிறைந்து நிச்சயித்தபடி அளப்பன நிறுப்பன மடிப்ப
6) ன உரைப்பன எடுப்பன இவையிற்றுக்கு புடவைக்கட்டு ஒன்றுக்கு பணம் காலும் மிள
7) கு பொதிஒன்றுககு பணம் காலும் நிறைக்கு காசு ஒன்றும் அரிசிப் பொதி ஒன்றுக்கு பணம் காலும் உரைப்பன

8) பொன் ஒன்றுக்கு பணம் காலும் நிறைக்கு காசு ஒன்றும் அரிசிப் பொதி ஒன்றுக்கு காசு இர
9) ண்டும் நெல்பொதி ஒன்றுக்கு காசு ஒன்றும் தலைச்சுமைக்கு காசு ஒன்றும் இவை யி
10) ற்றால் வருவனவும் வாங்கிக் கொண்டு இத்திருப்பணி சந்திராதித்தவரை செல்லக் கடவதாக
11) பதினெண் விஷையத்தார் எல்லாருங் கூடி சம்மதித்துக் குடுத்தோம் இப்படி பணி
12) யால் நகரகணக்கு அஞ்ஞூற்றுவ வேளான் எழுத்து இப்படிக்கு மலைமண்டல மாதாக்கள்
13) எழுத்து இந்த பதினெண் விஷையத்தார் நாங்கள் நியமித்தபடியே திருப்பணிக்காரியமாக எழு
14) தவேணும் என்று வெண்டிக் கொளள எழுதினேன் இமைய வட்டத்து சுரகுரு நாட்டு கயிலாய கிழவனான எயில் குலத்து
15) புரந்தரசன் பாண்டிகுலபதி வளநாட்டு எயில் நாட்டு பூதமங்கலமுடையான் நமச்சிவாய தேவன்

*வரிசை எண்.4*

*இடம் : நக்கசேலம் (குன்னம் வட்டம் -பெரம்பலூர் மாவட்டம்) தாராபுரீஸ்வரர் கோயில் கருவறை அர்த்தமண்டபத் தென்சுவர் முப்பட்டைக் குமுதம்*

*மன்னன் : மூன்றாம் இராசராசசோழன் 1216-1257*

*ஆட்சியாண்டு : 25*

*காலம் : கி.பி. 1241*

*புதிய கல்வெட்டு*

1) ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் சீறாசறாச தேவற்கு யாண்டு உயச வதின் எதிராமாண்டு (25) நெடுமதுரை உடையார் இரார ஈஸ்வரமுடைய நாயனாற்கு நெடுமதுரை காணிஉடைய மன்றாடி நெடுமதுரை உடையான் நம்பி அந்தராயன் பெரிய கோயில் நம்பியும் நெடுமதுரை யுடையான் பகவாயன் மறைகலந்தான்

2) வலிகையராயனும் நெடுமதுரை உடையான் சொண்டன் தெற்றி இயாதவராயனும் நெடுமதுரை உடையான் சொண்டன் பெரியானும் இந்நால்வோம் கல்வெட்டிக் குடுத்த பரிசாவது இவ்வூர் ஜீவிதம் பெற்ற மலைமண்டலத்து வியாபாரி நாகபுரத்துக் கொடி மன்றச்சநம்பி எங்களூரில் தெற்கில் குளமும் ,......

3) கால் நீர்பாயும் நன்செ நிலத்து இக்...... நிலம் குடி நீங்காத் தேவதானமாக கல்வெட்டிக் குடுப்பதென்று கொடிமன்றச்ச நம்பி எழுத்தும் இட்டுத்தந்த விலைய்படி இக்குளமும் இத்தால் நீர்பாயும் நன்செ நிலம் தேவதானமாக இட்டுக் கல்வெட்டிக் குடுத்தோம்

4) இப்படிக்கு இவை நெடுமதுரை உடையான் நம்பி அந்தராயன் பெரிய கோயில் நம்பி எழுத்து இப்படிக்கு இவை நெடுமதுரை உடையான் பகுவாயன் மறைகலந்தான் வலிகையராயன் எழுத்து இப்படிக்கு இவை நெடுமதுரை உடையான் சொண்டன் தெற்றி இயாதவராயன் எழுத்து இவை நெடுமதுரை உடையான் சொண்டன் பெரியான் எழுத்து.

*வரிசை எண் .5*

*இடம் :திருப்பைஞ்ஞீலி (மண்ணச்சநல்லூர் வட்டம்,திருச்சி மாவட்டம்) நீலிவனநாதசுவாமி கோயில் காசி விஸ்வநாதர் சன்னிதி அர்த்த மண்டபத் தென்சுவர்*

*மன்னர் : மூன்றாம் இராசராசன் 1216-1257*

*ஆட்சியாண்டு : 32*

*காலம் : கி.பி. 1248*

*க. ஆ.அ. 186/1938-39, நேரில் பார்த்துப் படிக்கப்பட்டது*

**கல்வெட்டு**

1) திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராச
2) றாச தேவற்கு யாண்டு ஙயஉ- (32)வது வை
3) ய்காசி மாதம் இருபத்து நாலாந் திய
4) திநாள் (மலைமண்டலத்து குதிரைச்)
5) (செட்டி) களில் குளமுக்குப் புகழன் திருத்
6) தா (ல மணவாள)நேன்வடகரை றாறாவள
7) நாட்டு உடையார் திருப்பை
8) ஞ்ஞீலி உடைய நாயனார் கோ
9) யிலில் நான் ஆஸ்ரயலிங்கமாக எழுந்
10) தருளிவித்த உடையார் திருத்தாலீ
11) ஸ்வரமுடையனாயனார்க்குப் பூசைக்குந்
12) திருப்பணிக்கும் உடலாக இற்றை நா
13) ......................
14) ......................(நி)
15) லமாவது இன்னாட்டு உடையார் திருப்பை
16) பஞ்ஞீலியுடைய நாயனார் தேவதானஞ் செ
17) ............... மங்கலமுடை
18) ......................
19) ய பெருமாளான பொய்கை னாட்டு வி

20) முப்பரையனும் வெண்ணையுண்ட பெ
21) ருமாளான அழகிய மணவாள வேளானும் ப
22) க்கல் நான் விலை கொண்டு என்னுதாய் நான்
23) அனுபவித்து வருகிற புன்செய் நிலத்துக்
24) கு கீழ் பாற்கெல்லைஉடையார் திருப்பைஞ்ஞீலி
25) உடைய நாயனார் தேவதானம் பிள்ளையாண்டா
26) ன் குறிச்சி எல்லைக்கு மேற்குந் தென்பா
27) ற்கெல்லை செட்டி மங்கலத்து விளை நிலத்து
28) க்கும் இன்னாயநார் திருநாமத்துக் காணி திருத்தெ
29) தாண்டத் தொகை நல்லூர் விளை நிலத்துக்கு
30) ம் நெல்வேலி எல்லை வடக்கும் மீ பாற்கெல்
31) லை உலகனங்கக்காறன் எல்லைக்கும் இன்னாய
32) னார் தேவதானம் திருநாமத்து
33) க் காணி சோழங்கநல்லூர் எல்லை
34) க்கு கிழக்கும் வடபாற்கெல்லை இன்
35) னாயனார் திருநாமத்துக் காணி திரு
36) ப்பைஞ்ஞீலி எல்லைக்குத் தெ
37) ற்கும் ஆக இசைந்த பெருநா
38) ன் கெல்லைக்கு உட்பட்ட நிலம்
39) ............ பாயும் நன்செய்
40) நிலமு நத்தப்புன்செயும் இதுக்
41) ....................
42) ல் நோக்கின மரமும் கீழ்நோக்கின கி
43) ணறும் மற்றும் எப்பேற்பட்ட உரிமை
44) களும் உள்பட நான் எழுந்தருளிவித்த
45) உடையார் திருத்தாளீஸ்வரமுடைய நா
46) னாற்குப் பூசைக்குந் திருப்பணிக்கும்
47) உடலாக திருநாமத்துக் காணியாக நீர்வா
48) த்துக் குடுத்தேன் இப்படி சந்த்ராதித்தவரை
49) திருநாமத்துக் காணியாக குடுத்தேன் இப்படி ச
50) நிதிராதித்தவரை கல்லிலும் செம்பிலும் வெட்டி
51) க் கொள்ளக் கடவதாகவும் இப்படி சம்மதித்து திரு
52) நாமத்துக் காணியாக திருமுன்பே நீர்வாத்துக் கு
53) டுத்தேன் குதிரைச் செட்டிகளில் குளமுக்குப் பெரிமுன்
54) திருத்தாலையனேன் இவை என்னெழுத்து
55) இப்படிக்கு இவூர் கணக்குப் பூலாங்குடை
56) யானெழுத்து இது பன்மாஹேஸ்வர
57) ரக்ஷை

**வரிசை எண்.6**

*இடம் :திருப்பைஞ்ஞீலி (மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்) நீலிவன நாதர் சுவாமி கோயில் காசி விசுவநாதர் சன்னிதி அர்த்த மண்டப வடக்குச்சுவர்*

*மன்னன்* : *மூன்றாம் இராசேந்திரன் 1246-1279*

*ஆட்சியாண்டு* : *4*

*காலம்* : *கி.பி. 1250*

*க. ஆ. அ. 185/1938-39*, நேரில் பார்த்துப் படிக்கப்பட்டது

**கல்வெட்டு**

1) ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்க
2) ரவத்திகள் ஸ்ரீ றாஜேந்த்ர சே
3) ாழ தேவற்கு யாண்டு ச-(4) வது உடை
4) யார் திருப்பைஞ்ஞீலி உடையார்
5) கோயில் ஆதி சண்டேஸ்வ
6) ர தேவர்கன்மிகளோம்
7) மலை மண்டலத்துக் கு
8) திரைச் செட்டிகளில் கு
9) ளமுக்குப் புகழன் திருத்தால
10) மணவாளந் ஆஸ்ரய (லிங்க)மாக எழு
11) ந்தருளிவித்த உடையார் திருத்தா
12) லீஸ்வரமுடைய நாயனார்க்கு திருப்ப
13) டி மாற்றுக்கு பலபணி நிவந்
14) த காறர்க்கும் இவ்வாட்டை ஐப்பசி
15) விஷுவ முதல் நாள் ஒன்றுக்கு ஆரண்
16) ய விடங்கன் மரக்காலால் கலமாக வ
17) ந்த நெல்லு செலுத்தக் கடவதாக இம்மா
18) தத்து கோட்டு நாள் நூற்றொருபதி
19) னால் ஸ்ரீ பண்டராத்திலே நூறாயிரங்
20) காசு இவர் ஒடுக்கையில் இக்காசு
21) க்கு உபையமாக இப்படியால் வந்த
22) நெல்லு ஸ ந்த்ராதித்யவத் பூசை செலுத்த
23) க் கடவதாக சம்மதித்தோம் ஆதி ச
24) ண்டேஸ்வர தேவர்கன்மிகளோம் இப்ப
25) டிக்கு இவை கோயியற் கண
26) க்கு திருவெள்ளறை
27) (உடை) யான் திருப்பணி.....
28) ..................
29) திருஞான சம்பந்த வே
30) ளான் எழுத்து இப்படிக்கு
31 இவை கங்காணி கணக்கு
32) (செட்டி) மங்கலமுடையான் எ
33) (முத்து)

**வரிசை எண் .7**

இடம் : திருப்பைஞ்ஞீலி(மண்ணச்சநல்லூர் வட்டம்) நீலிவன நாத சுவாமி கோயில் விசாலாட்சி அம்மன் சன்னிதி அர்த்த மண்டபத் தென்சுவர்

மன்னன் :மூன்றாம் இராசேந்திரன் 1246-1279

ஆட்சியாண்டு : 5

காலம் :கி.பி. 1251

*க. ஆ. அ.169/1938-39.* நேரில் பார்த்துப் படிக்கப்பட்டது

**கல்வெட்டு**

1) ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராசேந்திர சோழ தேவற்கு யாண்டு ரு- (5)வது

2) கற்கடக நாயற்றுபூர்வ பக்ஷத்து பஞ்சமியும் பெற்ற உத்திராடத்து

3) நாள் உடையார் திருப்பைஞ்ஞீலி உடைய நாயனாற்கு திருநாமத்துக் காணியாக.....

4) (மலை ம) ண்டலத்து பூந்துறை நாட்டு மங்கலம்

## சான்றெண் விளக்கம்

---

1 ஜெயக்குமார், பா., 2001, *தமிழகத் துறைமுகங்கள் (இடைக்காலம்)*, அன்புவெளியீட்டகம், தஞ்சாவூர், பக். 178-187

2 நில அளவுகள் குறியீடாகத் தரப்பட்டுள்ளது. *க.ஆ.அ. 43/1920*

3 *க.ஆ.அ. 185/1927-28, 82/1920, 92,91,22/1920*

4 *தெ.இ.க. 5/627*

5 *தெ.இ.க. 5/632*

6 இக்கட்டுரையாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டு

7 *க.ஆ.அ. 89 /1914*

[8] இக்கட்டுரையாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டு

[9] இக்கட்டுரையாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டு

[10] *க.ஆ.அ. 186 /1938- 39*

[11] *க.ஆ.அ. 185/1938- 39*

[12] *க.ஆ.அ. 169/1938 -39*

[13] ஜெயக்குமார், பா., *மு.சு.நூ. பக். 180-181*

# 18. வாலிகண்டபுரம் கல்வெட்டுகளில் மணிக்கிராமத்தார்

பெ .இரவிச்சந்திரன்

பல்லவர், சோழர் ஆட்சிக் காலங்களில் தமிழ்நாட்டில் பல்வேறு உள்நாட்டு, அயல்நாட்டு வணிகக் குழுக்கள் வணிகம் செய்தது குறித்துக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இத்தகைய வணிகக் குழுக்களில் குறிப்பிடத்தக்கவை மணிக்கிராமத்தார், வளஞ்சியர், திசையாயிரத்து ஐநூற்றுவர் ஆகிய பன்னாட்டு வணிகக் குழுக்களாகும். இவ்வணிகக் குழுக்கள் பற்றிப் பல்வேறு அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். இக்குழுக்களில் வாலிகண்டபுரத்தில் மணிக் கிராமத்தார் என்னும் வணிகக் குழுவினர் தங்கி வணிகம் செய்தனர். இக்குழுவின் செயற்பாடு பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது[1].

## மணிக்கிராமத்தார்

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டத்தில் அமைந்துள்ளது வாலிகண்டபுரம் என்னும் வரலாற்றுச் சிறப்புடைய ஊர். இங்கு கி.பி.9-ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்ற வாலீஸ்வரர் கோயில் என்னும் சிவாலயம் உள்ளது. சோழர் காலத்தில் இவ்வூர் மிகப்பெரிய வணிக நகரமாகத் திகழ்ந்தது. இங்கு சங்கரப்பாடியார் என்னும் உள்நாட்டு எண்ணெய் வணிகக் குழுவினரும் வளஞ்சியர், திசையாயிரத்து ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார் என்னும் பன்னாட்டு வணிகக் குழுவினர்களும் தங்கி வணிகம் செய்துள்ளனர் என்பதை இங்குள்ள கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது.

மணிக்கிராமம் என்பது உள்நாட்டிலும் கடல் கடந்த நாடுகளிலும் வணிகம் செய்த பன்னாட்டு வணிகக் குழுவாகும். இவர்களைப் பற்றி கி.பி. 938 முதல் 1018 வரை எழுதப்பெற்ற 6 கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன (அட்டவணை). இவர்கள் கொடையாளர்களிடமிருந்து பொன்னை முதலீடாகப் பெற்று வாலீஸ்வரர் கோயிலுக்கு விளக்கு எரிக்கும் நிருவாகப் பொறுப்பேற்றுச் செயற்பட்டுள்ளனர்.

கி.பி.965-ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டு சேனையார் என்ற மற்றொரு குழு இவர்களுடன் இணைந்து செயற்பட்டதைக் காட்டுகிறது[2]. பிற்காலக் கல்வெட்டுகளில் சேனை அங்காடிகள், கோயில் அங்காடிகள், சேனைக்கடையார் என்று குறிக்கப்பெறும் வெற்றிலை வணிகர்களே இச்சேனையார் ஆவர் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். மணிக்கிராமத்தார் தனித்தும் சங்கரப் பாடியாருடன் சேர்ந்தும் இவ்வூர்க் கோயில் நிருவாகத்தில் பங்கேற்றுள்ளனர்[3]. இக்குழுவைச் சேர்ந்த வியாபாரிகள் கி.பி. 1018-இல் இவ்வூரிலிருந்த அருமொழித்தேவ ஜீனாலயத்துக்குக் கொடை வழங்கியதுடன் அதன் நிருவாகத்திலும் பங்கேற்றனர்[4].

## திசையாயிரத்து ஐநூற்றுவர், வளஞ்சியர்

திசையாயிரத்து ஐநூற்றுவர் என்போர் கருநாடக மாநிலத்தில் ஐயவொளே (Ayyavole) என்ற இடத்தைத் (இவ்விடம் தமிழ் கல்வெட்டுகளில் ஐய்யபொழில் எனக் குறிக்கப்படுகிறது) தாயகமாகக் கொண்டு உள்நாட்டிலும் கடல் கடந்த நாடுகளிலும் வணிகம் செய்த பன்னாட்டு வணிகக் குழுவினர் ஆவர். அதேபோல் தென் இலங்கையை நடுவமாகக் கொண்டு பல்வேறு நாடுகளில் வணிகம் செய்த மற்றொரு வணிகக் குழுவினர் வளஞ்சியர் ஆவர்.

கி.பி.965-ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டு இந்நகரத்திலிருந்த வளஞ்சியர் மற்றும் திசையாயிரத்து ஐநூற்றுவர் பற்றிக் கூறுகிறது[5]. இறந்துவிட்ட வளஞ்சியன் ஒருவனுக்காகப் பல மண்டலத்து வீரவளஞ்சியர் சார்பில் திசையாயிரத்து ஐநூற்றுவர் வாலீஸ்வரர் கோயிலில் இரண்டு விளக்குகளை ஏற்றினர். இதற்காக 15 கழஞ்சு பொன்னை மணிக்கிராமத்தார், சேனையார் ஆகியோரிடமும் முதலீடாகக் கொடுத்தனர். அவர்களும் அதனைப் பெற்றுக் கொண்டு நாள்தோறும் 1 உரி எண்ணெய் ஊற்றி அவ்விளக்குகளை ஏற்றிப் பராமரிக்க ஒப்புக் கொண்டனர்.

இதிலிருந்து வளஞ்சிய வீரர்கள் ஐநூற்றுவர் குழுவின் கீழ் பணியாற்றியதை அறிய முடிகிறது. வீரவளஞ்சியர் என்ற அடைமொழி இவர்கள் போர்த்தொழிலில் வல்லார் என்பதைக் காட்டுகிறது. இதே காலத்தைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு பாண்டிய நாட்டு ஐய்யபொழில் செட்டி ஒருவர் இவ்வூர் கோயிலுக்குக் குங்கிலியம் வழங்கப் பொற்கொடை அளித்ததைக் கூறுகிறது. மேலும் பாண்டிய நாட்டிற்கும் வாலிகண்டபுரத்திற்கும் இடையே நிலவிய வணிக உறவையும் இக்கல்வெட்டு காட்டுகிறது. கி.பி. 989-ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு கொங்கவாளர் பற்றிக் கூறுகிறது[6]. கொங்குநாட்டைச் சேர்ந்த வாள் வீரர்களான இவர்கள் ஐநூற்றுவர் குழுவில் படைவீரர் களாகப் பணிசெய்தனர் என்பதைக் கல்வெட்டுகள் குறிப்பிடு கின்றன[7]. இதிலிருந்து ஐநூற்றுவர் வாலிகண்டபுரத்தில் தங்களின் காவற்படை வீரருடன் தங்கி வணிகம் செய்தனர் என அறிய முடிகிறது. கி.பி. 989-க்குப் பிறகு ஐநூற்றுவர் பற்றிய குறிப்பு நமக்கு 13-ஆம் நூற்றாண்டில் தான் கிடைக்கிறது.

இந்த நீண்ட இடைவெளிக்கான காரணத்தைத் தற்போது அறியமுடிய-வில்லை. கிபி 1207-இல் எழுதப்பெற்ற மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு பதினெண்பூமி வாணிய நகரத்தார், (வாலிகண்டபுரம்) அடிகீழ்த்தளமான ஆறகளூர் வாணிய நகரத்தார், பதினெண் பூமிக்குச் சமைந்த வீரசோழநல்லூர் வாணிய நகரத்தார் (தற்போதைய வீரகனூர்) ஆகிய மூன்று வணிகக் குழுவினரும் இணைந்து உறத்தூர் கைலாசநாதர் கோயிலிலிருந்த தன்மதாவளன் திருக்கா வணத்தில் கூட்டம் கூடிப் பின்வரும் முடிவுகளை எடுத்தனர்[8]. வாலீஸ்வரர் கோயில் தங்களின் நகரக்காணி என்றும் இக்கோயிலில் நாள்தோறும் 27 சந்திவிளக்குகள் ஏற்றவும் ஆண்டுச் சிறப்பு விழாவின்போது 145 விளக்குகள் ஏற்றவும் தீர்மானித்தனர். இதற்காக இவ்வூரில் இயங்கிவந்த அவர்களின் செக்கு மூலம் 200 நாழி எண்ணெய் வழங்குவதென முடிவு செய்தனர். மேலும் வணிகக் குடிமக்களால் வருகின்ற அமஞ்சி (வரி)மூலம் கிடைக்கும் வருமானத்தையும் கொடுத்தனர்.

### அட்டவணை 19.1 மணிக்கிராமம் பற்றி கூறும் கல்வெட்டுகள்

| வ.எ ண் | மன்னன் | கொடையாளர் | கொடைப் பொறுப்பு ஏற்ற வணிகக் குழு, பிற குழு | கொடை/விளக்கு எரிக்க/பலிசை | குறிப்பு க.ஆ.அ |
|---|---|---|---|---|---|
| 1 | பராந்தகன் I (கி.பி. 938) | குமாரடி திருவரங்கன், வன்னாடு நாட்டார் தேவரடியார், நகரத்தார், பன்மாகேஸ்வரர் | வாலிகண்டபுரத்து மணிக்கிராமத்தார் | 14 பொன்/2 விளக்கு /உரி எண்ணெய் | 261 /1934-44 |
| 2 | பராந்தகன் I (கி.பி. 946) | வன்னாட்டுச் செங்குன்ற முடையான் கெசன்காரி | 2 நகரமும் மணிக்கிராமத்தார், சங்கரப்பாடியார் | 7 பொன்/1 விளக்கு / 1 உழக்கு நெய் | 247/ 1943-44 |
| 3 | ராஜகேசரி வர்மன் (கண்டராதித்தன்) (கி.பி. 954) | தஞ்சாவூர் கண்டர் கண்டா பெருந்தெரு மாறன் மாசாது | மணிக்கிராமத்தார் | 7 1/2 பொன்//1 விளக்கு / 1 உழக்கு நெய் | 305 /1964-65 |
| 4 | ராஜகேசரி வர்மன் (சுந்தரசோழர்) (கி.பி. 965) | வன்னாட்டுத் திசையாயிரத்து ஐந்நூற்றுவர், பல மண்டல வீர வளஞ்சியர் | மணிக்கிராமத்தார் சேனையார் | 15/2 விளக்கு / 1 உரி நெய், எண்ணெய் | 308 / 1964-65 |
| 5 | இராஜகேசரி வர்மன் (சுந்தரசோழர்) (கி.பி. 968) | வன்னாடுடையார் | மணிக்கிராமத்தார் | 3/4 பொன்/ 1/2 விளக்கு /1 ஆழாக்கு | புதிய கல்வெட்டு |
| 6 | இராசேந்திரன் I (கி.பி. 1017-18) | மோடன் ஐய்யாறன் மணிக்கிராமத்து வியாபாரிகள் | மணிக்கிராமத்து நகரத்தார்,சங்கரப் பாடி நகரத்தார் | 14 பொன்/ 2 விளக்கு /.... | புதிய கல்வெட்டு |

மேலும், இவ்வூரைச் சூரதளமாக ஆக்குவதெனவும் (சூரர் -படைவூரர்-சூரதளம்- படைவீரர்களால் பாதுகாக்கப்படும் கோட்டையுடன் கூடிய நகரம்) இவ்வூர் வாணியர் வாணவ தரையருக்கு செய்கின்ற அமஞ்சி (செலுத்துகின்ற வரி), சூரதளத்தால் வருகின்ற வருமானம் ஆகியவற்றைக் கொண்டு இக்கோயிலுக்கு நாட்டு வாணியர் செய்து கொடுத்த தேரைப் பராமரிப்பது எனவும் முடிவெடுத்தனர்.

இக்கல்வெட்டிலிருந்து முன்னர் இங்கிருந்த ஐநூற்றுவர் ஆறகளூர், வீரசோழநல்லூர் முதலிய இடங்களுக்கு, குடிபெயர்ந்து விட்டனர் என உணரமுடிகிறது. இருப்பினும் மீண்டும் அவர்கள் தங்கள் பழைய வணிகத் தலத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு வணிகத்தைப் புதுப்பிக்க மேற்கொண்ட நடவடிக்கையை இக்கல்வெட்டு காட்டுகிறது. இதையே நகரக்காணி என்ற சொல் காட்டுகிறது. இதே போன்று தஞ்சை நகரத்தார் தங்கள் வணிக நடவடிக்கைகளைக் கரந்தையில் புதுப்பித்துக் கொண்டதை கி.பி. 1173-ஆம் ஆண்டு கல்வெட்டொன்றால் அறிய முடிகிறது[9]. கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு இவ்வூரில் மதுரை சாத்தந்தை குலத்துச் செட்டி ஒருவர் தருமதாவள விநாயகர் கோயில் கட்டியது பற்றிக் கூறுகிறது. தாவளம், தர்மதாவளம் ஆகியவை ஐநூற்றுவர் வணிகர் தங்கி வணிகம் செய்த இடங்களைக் குறிப்பனவாகும். இதிலிருந்து வாலிகண்டபுரமும் வணிகத் தாவளமாக 18-ஆம் நூற்றாண்டு வரை விளங்கியது எனலாம்.

இங்கு ஆய்வு செய்யப்பெற்ற கல்வெட்டுகள் வாலிகண்ட புரத்தை ஒரு சிறப்பான வணிக நகரமாகச் சித்தரிப்பதை அறியமுடிகிறது. இது மிகப்பெரிய சங்கரப்பாடி நகரமாகத் திகழ்ந்தது. இங்கு மணிக்கிராமத்தார், சேனையார், வளஞ்சியர், திசையாயிரத்து ஐநூற்றுவர் முதலிய பல்வேறு வணிகக் குழுக்கள் தங்கி வணிகம் செய்தனர். இவர்கள் சிலகாலத்திற்குப் பின் இங்கிருந்து சென்று பிற இடங்களில் வணிகம் செய்தனர். பின் மீண்டும் வாலிகண்டபுரத்துக்கு வந்து தங்களின் வணிகத்தைப் புதுப்பித்துக் கொண்டனர்.

சோழர் காலத்துக்குப்பின் விஜயநகர காலத்தில் இவ்வூர் நெசவு வணிகத்திற்கு முக்கியத்துவம் பெற்ற இடமாகப் புத்துயிர் பெற்றது. இவ்வூரில் அதிக எண்ணிக்கையில் சோழ, விஜயநகர

காலத்துக் காசுகள் கிடைப்பதும் இதன் வணிகச் செழிப்பை உணர்த்துவதாக உள்ளது.

இவ்வூர் வணிக நகரமாகச் சிறந்து விளங்கியமைக்குப் பல காரணங்கள் கூறலாம். முதலாவதாக இதன் அமைவிடமாகும். சோழநாட்டு வட எல்லையில் கொங்கு, தொண்டை நாடுகளுக்குச் செல்லும் வழியில் இவ்வூர் அமைந்துள்ளது. மேலும், இங்கு முதலாம் பராந்தகன் காலத்தில் சோழப் படைகளின் தளபதியான இராஜாதித்தனும் அவன் அதிகாரியும் தங்கியிருந்ததைச் சில கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன[10]. மேலும் இப்பகுதியை ஆட்சி செய்த வன்னாடுடையார் என்ற சிற்றரசு குடும்பத்தினரின் நேரடி ஆதரவை இவ்வூர்க் கோயில் பெற்றிருந்ததைப் பல கல்வெட்டுகள் காட்டுகின்றன.

இவ்வாறு இராணுவ மற்றும் அரசியல் முக்கியத்துவம் பெற்ற இடமாக இவ்வூர் திகழ்ந்தது. மேலும் இவ்வூர் அமைந்துள்ள பிரதேசம் மலைப்பாங்கான, வளம்மிக்க கருமண் நிறைந்த புன்செய் நிலப் பகுதியாகும். இங்கு எண்ணெய் வித்துக்களான கொட்டைமுத்து, உளுந்து, பயறு, எள், கடலை, கம்பு, சாமை, மஞ்சள், இஞ்சி, கொடிப்பயிர், வெங்காயம் ஆகியவை அதிகம் விளைந்தன[11]. இதனால் இவ்வூர் சங்கரப்பாடியார் நகரமாக நெசவுத் தொழில் வளர்ந்த இடமாக விளங்கியது எனலாம். இன்று, கைக்கோள முதலி சாதி மக்கள் அதிக எண்ணிக்கையில் வாலிகண்ட புரத்திலும், இதனைச் சுற்றியுள்ள சிற்றூர்களிலும் வாழ்கின்றனர்[12].

## சான்றெண் விளக்கம்

1 வாலீஸ்வரர் கோயிலிலிருந்து தான் நேரில் படித்துவைத்திருந்த மணிக்கிராமத்தார், பிற வணிகர் பற்றிக்கூறும் கல்வெட்டுகளை எனக்கு வழங்கி இக்கட்டுரையை உருவாக்கவும் உதவிய பேராசிரியர் இல.தியாகராஜன் அவர்களுக்கு நன்றி.

2 *க.ஆ.அ. 308/1964-65*

3 *க.ஆ.அ. 247/1943-44, 1964 -65*, புதிய கல்வெட்டுகள் *(கி.பி. 968, கி.பி. 1017- 1018)*

---

[4] தியாகராஜன், இல., *1998* , வாலிகண்டபுரம் ஒரு வணிகநகரம், *11, 12-07- 1998, ஆவணம், 9*-ஆவது இதழ் வெளியீட்டு விழாக் கருத்தரங்கம், புதுக்கோட்டை , பக் *13.*

5 *க.ஆ.அ. 308/1964-65*

6 தியாகராஜன், இல. , *மு.சு.நு.* பக் 12.

7 *க.ஆ.அ. 159/1895, 5/1939-40*

8 *க.ஆ.அ. 264/1943-44*

[9] தியாகராஜன், இல., *1997*, தஞ்சாவூர்-ஒரு சோழர் கால வணிக நகரம், *8.6.1997* (கருத்தரங்கக் கட்டுரை )

10 *க.ஆ.அ.* 2 55,261/1943-44 மற்றும் 2 புதிய கல்வெட்டுகள்

11 *க.ஆ.அ. 286/1943- 44*

12 இல. தியாகராஜன், *1998* , வாலிகண்டபுரம் ஒரு வணிகநகரம், *11,12-*07- *1998, ஆவணம்,* 9-ஆவது இதழ் வெளியீட்டு விழாக் கருத்தரங்கம் , புதுக்கோட்டை, பக். 6-7.

# 19. கும்பகோணம் கல்வெட்டுகளில் வணிகர்கள்

ஆ.துளசேந்திரன்

இடைக்கால வரலாற்றில் கும்பகோணம் வட்டாரக் கல்வெட்டுகளில் வணிகக் குழுக்களின் சமுதாய நடவடிக்கைகளை இக்கட்டுரை இடைக்கால சோழர் கல்வெட்டுகளினடிப்படையில் ஆய்வு செய்கிறது. தமிழகத்தில் பிற பகுதிகளைப் போலவே, வணிகர்கள் குழுக்களாக வணிகம் மேற்கொண்டதோடு சமுதாய நடவடிக்கைகளிலும் பங்கேற்றனர்.

சோழப் பேரரசின் தலைநகரப் பகுதியான பழையாறை, கும்பகோணம் பேரங்காடிப் பகுதிகளில் மட்டும் நான்கு வணிகக்குழுக்கள் செயல்பட்டுள்ளன. முக்கியமான தலைநகரப் பகுதிகளிலும், ஆற்றுப்பாசனங்கள் நிறைந்த கரையோரப் ஊர்களிலும் வணிகக் குழுக்கள் தங்களின் குடியேற்றங்களை ஏற்படுத்தியதோடு வணிகப் பெருக்கத்திற்கு ஏற்ற இடமாகவும் தேர்ந்தெடுத்துள்ளன.

சோழர்காலத்தில் தலைநகரப் பகுதிகளிலும், முக்கிய நகரப்பகுதிகளிலும் பெருந்தெரு, பேரங்காடி, அங்காடி, மடிகைப் போன்ற இடங்களில் நகரத்தாரின் ஆளுமை அதிகளவு இருந்துள்ளது. தங்களின் வணிகப் பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் பொருட்டு இக்குழுக்கள் வணிகத்தலமாக இவ் இடங்களைப் பயன்படுத்தி உள்ளன. இத்தகைய வணிக ஆட்சிக்குழு கி.பி.9-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.14-ஆம் நூற்றாண்டு வரையில் நடைமுறையில் இருந்துள்ள போதிலும், கி.பி.9-ஆம் மற்றும் 10-ஆம் நூற்றாண்டுகளில் அதிக எண்ணிகையில் காணப்படுகின்றன. கி.பி.13-ஆம் நூற்றாண்டு

முதல் இவ்வணிக ஆட்சிக்குழு பலவகை வணிகத்தினை மேற்கொண்டு நிலவுடைமையாளர்களாக மாறியுள்ளது. வேளாண்குடி நிலவுடைமையாளர்களும், பல்வகைக் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள மற்ற வர்க்கத்தினர்களும், அந்தணர்களும் நகர ஆட்சிமன்றமான நகரத்தார் மன்றத்தில் உறுப்பினர்களாக மேற்கொண்டு பெரியளவில் வணிகம் செய்தவர்கள் மாச்சாத்துவணிகன்[1], வணிக சூரியன்[2], வணிக சக்கரவர்த்திகள்[3] போன்ற பட்டங்களை அரசர்கள் வழங்கியோ அல்லது தாங்களே வைத்துக் கொண்டுள்ளனர்.

ஊரார் என்று அழைக்கப்படும் ஊராட்சிமன்றம் வணிகத்தில் ஈடுபட்டு வணிக நகரமாக மாறும்போது ஏற்கெனவே நிலவுடைமையாளர்களாக விளங்கியவர்கள், கைத்தொழில் செய்கின்ற பிற கூட்டத்தினர் அடங்கிய ஒரு புதிய குழுவாகவே அமைக்கப்பெற்றுள்ளனர். இக்குழுவில் இடம் பெற்றுள்ள வணிகர்கள் வேளாபுரம் என்று அழைக்கப் பெறுகின்றனர். இவர்கள் பெருந்தெரு, பட்டினம் போன்ற நகரங்களியிருந்த வணிகக் குழுக்களுடன் தொடர்புகொண்டு வெளியூரிலிருந்து சரக்குகளை இவ்வணிக நகரத்திற்குக் கொண்டு வந்து சேர்த்துள்ளனர். இந்நகரங்கள் மூலமாகவே நகரத்தினைச் சுற்றியிருந்த இடங்களிலிருந்து கிடைத்த ஊர்ச் சரக்குகளை இந்நகரத்தில் இடம்பெற்றுள்ள மடிகை, அங்காடி, பேரங்காடி வாயிலாகவே வெளியூருக்கு விற்பனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

சான்றுகளை நோக்கும்போது பேரங்காடி என்ற சொல்லாட்சி சோழர் காலத்திலும், மடிகை என்ற சொல்லாட்சி பாண்டியர் காலத்திலும் வழக்கில் இருந்துள்ளது. பொதுவாக இவ்விரு பகுதிகளும் பண்டக சாலைகளாகவும் வணிகத் தலங்களாகவும் செயல்பட்டு வந்துள்ளதைத் தெளிவாக உணரமுடிகிறது.

கி.பி.985-ஆம் ஆண்டில் எண்ணிக்கையில் அதிகமாக காணப்பட்ட வணிக நகரங்கள், வணிகக் குழுக்கள் கி.பி.1070-ஆம் ஆண்டு வாக்கில் சமூகத்தில் பின்னடைந்திருந்த வேளாண் சமூகத்தினர் மீண்டும் எழுச்சியுற ஆரம்பித்தவுடன் குறையத் தொடங்கின. ஆனால் வணிக சமூகம் முற்றிலும் அழிவுற்றது என்று கூறமுடியாது. ஊராட்சி மன்றத்தோடு இணைந்து

செயல்பட்டிருக்க வேண்டும். ந்கரம், பட்டினம், பேரங்காடி ஆகியவை பற்றிய செய்தியினை கி.பி.9-ஆம் நூற்றாண்டு வரையில்தான் அறிய முடிகின்றது. புரம் பற்றி கி.பி. 846-ஆம் ஆண்டு முதல் கி.பி.1350-ஆம் ஆண்டு வரையில் கிடைத்துள்ளது. இதனை நோக்கும்போது பிற்காலத்தில் வணிகக் குடியேற்றங்கள் புரம் என்ற பின்னொட்டு கொண்டுள்ள ஊர்களில் ஏற்பட்டுள்ளன என அறியமுடிகிறது. கி.பி.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர்காலக் கல்வெட்டுகளில் காணப்படும் பேரங்காடி என்ற வியாபாரத்தலம் போலவே மடிகை என்ற வணிகத்தலம் பற்றி கி.பி.14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது.

கி.பி.1070-ஆம் ஆண்டுக்கு பின் மீண்டும் வேளாண் சமூகம் எழுச்சியுற்றதால் பல வணிக சமூகக் கூட்டங்கள் தனிப்பட்ட ஆட்சிக் குழுவாகச் செயல்படாமல் வேளாண் சமூகத்தினர்களுடனோ, பிரமதேய சபைகளுடனோ இணைந்து செயல்பட்டிருக்க வேண்டும்.

### வணிக ஆட்சிக்குழுவும் (நகரத்தார்) நிலவுடைமையும்

நாட்டின் உட்புறத்திலிருந்தே நகரங்கள், வணிக சமூகக் குழுக்கள் தனக்கென நிலவுடைமைகளைப் பெற்றிருந்தன. பெரும்பாலும் நகரங்களிலிருந்த நிலங்கள் வணிகக் குழுவிற்கே உடைமையாக இருந்தன. இச்சமூகத்தினர் நிலங்களுக்கு உரிமை யுடையவர்களாக விளங்கியதோடு மட்டுமல்லாது நிலங்களை வாரத்திற்கு உழுது பயிரிட்டும் வந்துள்ளனர்[4].

இதற்குச் சான்றாக திருவிடைமருதூர் கல்வெட்டைக் குறிப்பிடலாம். இதில் நகரத்தார் என்ற வணிக ஆட்சிக்குழுவும், திரைமூர் சபையும் இணைந்து திருவிடைமருதூர் கோயில் நாடக சாலையில் இருபது தினங்கள் பெரும்பலி திருவாதிசை, திருவிழா, அமாவாசைத் திருவிழா, சதயத்திருவிழா போன்ற விழாக்காலங்களில் விளக்கு எரிக்க 180 தொக்கு எண்ணெய் செலுத்துவதற்கு நிலத்தைத் தானமாகக் கொடுத்துள்ளதை அறியமுடிகிறது[5]. இதிலிருந்து வணிகக் குழுவும், பிரமதேய சபையும் சேர்ந்து செயல்பட்டுள்ளதோடு இடைக்காலத்தில் இக்குழுக்கள் நிலவுடைமைக் குழுக்களாக விளங்கியுள்ளதைப் பற்றியும் அறியமுடிகிறது.

## நிலவுடைமை

வணிக ஆட்சிக்குழு தனியாகவும், ஊராட்சிமன்றம் பிரமதேய சபைகள் போன்றவற்றோடும் சேர்ந்தும் பல பணிகளைச் செய்துள்ளன. எடுத்துகாட்டாக, திருவிடைமருதூர் கோயிலுக்குப் பணிகள் செய்துள்ளதைக் குறிப்பிடலாம்[6]. திருவிடைமருதூர் நகரத்தாரும், திரைமூர் சபையாரும் இக்கோயிலில் பாடவியம் வாசிப்பவருக்கு தினமும் இரு தூணி நெல் கொடுப்பதற்காக ஏழு வேலி நிலத்தை வேளாண் குடியிலிருந்து தானமாக வழங்கியுள்ளனர்[7]. இதே கோயிலுக்கு கி.பி.1906-ஆம் ஆண்டில் வடசாத்தமங்கலம் உடையான் பிறர் தானமாகக் கொடுத்த 180 ஆடுகளை தாமோதிரன் வெண்காடன் என்ற மன்றாடியிடம் ஒப்படைத்து அதிலிருந்து வரும் நெய்யிலிருந்து விளக்கெரிக்க பொறுப்பெற்றுக் கொண்டுள்ளதைத் திருவிடைமருதூர் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது[8]. இதனைப் பார்க்கும்போது தானம் அளித்ததோடு மட்டுமன்றி பிறர் அளித்த கொடைப் பணிகளைப் பராமரிக்கும் பொறுப்பும் வணிகக் குழுவிற்கு இருந்துள்ளது என அறியமுடிகிறது.

கி.பி.1120-21-ஆம் ஆண்டில் திருவிடைமருதூர் வணிக ஆட்சிக்குழு இவ்வூர் கோயிலுக்கென்று மூன்று மாகாணி நிலத்தைத் தானமாகக் கொடுத்துள்ளது. ஒரு சில நேரங்களில் இந்நகர ஆட்சிக்குழுக்களின் முன்னிலையில் அறவோலை கிடைக்கப்பெற்ற கல்வெட்டில் திருவிடைமருதூர் தேவகன்மிகள், நகரத்தார், திரைமூர் சபையார் அதிகாரி மதுராந்தக மூவேந்த வேளாளர், ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற இங்கண் நாட்டு பேராவூர் சபையிடமிருந்து சோழமாதேவி இறையிலியாக பெற்ற நிலம் பற்றி விளக்கப்பட்டுள்ளது[9]. இதனைப் பார்க்கும் போது ஒரு சில நேரங்களில் அறவோலை அனுப்புவதற்கு நகர ஆட்சிக்குழு முன்மொழியப்பட்டுள்ளது.

நகரத்தார் என்ற வணிக ஆட்சிக்குழுக்கள் தங்களின் நிருவாகச் செலவிற்கு நகரத்தில் உள்ள மக்களிடமிருந்து நகர விநியோகம் என்ற வரியை சூலித்துள்ளது[10]. இக்குழுக்கள் காரியங்களை நிறைவேற்ற பல்வகையான வாரியங்களை ஏற்படுத்தி உள்ளன. எடுத்துக்காட்டாக, 9-ஆம் நூற்றாண்டில் திருநெய்தானத்து நகர ஆட்சிக்குழு வாரியம் என்ற

தனிக்குழுக்களை ஏற்படுத்தி இதன்மூலம் தங்கள் காரியங்களைச் செயல்படுத்தியுள்ளது[11].

இக்குழு நிறைவேற்றிய ஆவணங்களை எழுதுவதற்கென்று ஆவணக்காரர்கள் இருந்திருக்கின்றனர். வணிகர்கள் ஒவ்வொரு செயலையும் செய்வதற்கு முன்னால் கேள்வி கேட்டு கலந்தாலோசனை செய்த பின்னரே முடிவு செய்துள்ளனர். இதனைக் கைவினா முறைப்படி என்ற கல்வெட்டுச் சொற்றொடர் விளக்குகின்றது. இவ்வாறே முடிவு செய்துள்ள ஓலையை எழுதிக் கொடுத்ததை நெட்டோலை கொடுத்து என்ற கல்வெட்டு வாசகம் தெளிவாக்குகின்றது.

இத்தகைய நகரத்தார் என்று அழைக்கப்பட்ட வணிக ஆட்சிக்குழுக்கள் பல்வேறு காலகட்டங்களில் பலவாறு குறிப்பிட்டுள்ளதை அட்டவணை விளக்குகின்றது.

**நகர ஆட்சிக்குழுக்கள் பற்றிய சொல்லாட்சி இடம்பெற்றுள்ள பகுதிகள்**

| **சொல்லாட்சி** | **பகுதிகள்** | **காலம்** |
|---|---|---|
| நகரத்தோம் | புரம், மடிகை | *1137,1314-15* |
| நகரத்தார் | புரம், ஊர் | *976* |
| நகரத்தார் | ஊர் | *976* |
| நகரத்தில் அமைந்த நகரத்தோம் | ஊர் | *1210* |
| நகரங்களிலாரும் | ஊர் | *976* |
| பெருநகரத்தார் | பேரங்காடி | *985* |

**அரசர் காலங்களில் வணிக ஆட்சிக்குழு பற்றிய வழக்காறுகள்**

| **அரசர் பெயர்** | **ஆட்சிக்குழு எண்ணிக்கை** | **வழக்காறுகள்** |
|---|---|---|
| கோபரகேசரி I | *4* | நகரத்தார், நகர வாரியம் |
| ஆதித்தன் I | *1* | பெரும் நகரத்தார் |
| இராஜராஜன் I | *5* | பெரும் நகரத்தோம் |
| குலோத்துங்கன் I | *1* | நகரத்தார் |
| குலோத்துங்கன் III | *1* | நகரத்தில் அமைந்த நகரத்தோம் |
| இராசராசன் III | *1* | நகரத்தோம் |
| சுந்தரபாண்டியன் III | *2* | நகரத்தோம் |
| மொத்தம் | ***14*** | |

அட்டவணையைப் பார்க்கும்போது முதலாம் இராசராசன் காலத்தில்தான் நகர ஆட்சிமன்றம் அதிகளவு காணப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் நகரக்குழுவின் நிருவாகம் பற்றி ஒருசில கல்வெட்டுச் சான்றுகளே கிடைத்துள்ளன. இவ்வாட்சிக் காலத்தில்தான் பேரங்காடிப் பகுதியில் பெரு நகரத்தார் என்ற நகர ஆட்சிக்குழு செயல்பட்டுள்ளது. புரம், மடிகை பகுதிகளில் நகரத்தார், நகரத்தோர் என்ற சொல்லாட்சி கையாளப்பட்டுள்ளதிலிருந்து பேரங்காடி போன்ற பெரிய அளவிலான வணிக ஆட்சிக்குழுக்கள் இப்பகுதியில் செயல் படவில்லை என்பதை அறியமுடிகிறது.

## சான்றெண் விளக்கம்

---

1 *தெ.இ.க.5/434*

2 *தெ.இ.க. 5/303*

3 *தெ.இ.க. 5/435*

4 *தெ.இ.க. 23/97*

5 *தெ.இ.க. 23/200,222*

6 *தெ.இ.க. 23/264*

7 *தெ.இ.க. 23/264*

8 *தெ.இ.க. 23/304*

9 *தெ.இ.க. 19/162*

10 *தெ.இ.க. 5/623*

11 *தெ.இ.க. 5/623*

# 20. நாகபட்டினப் பகுதியில் இடைக்கால வணிகம்

ப. கலைச்செல்வன்

இடைக்கால வரலாற்றில் நாகபட்டினம் நாகை என்று அழைக்கப்பட்டுள்ளது[1]. நாகபட்டினம் பகுதியிலிருந்து தமிழர் உரோமானியருடன் நெருங்கிய வணிகத்தொடர்பு கொண்டிருந்ததைத் தாலமியின் குறிப்புகள் வழி அறியமுடிகிறது[2]. நாகபட்டினத்திலிருந்து முத்து மணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன எனவும் அறியமுடிகிறது[3]. கி.பி.7,8-ஆம் நூற்றாண்டுகளில் திருஞானசம்பந்தரும், சுந்தரரும் நாகபட்டினத்தின் வளமையைப் பற்றி தேவாரப் பாடல்களில் குறிப்பிடுகின்றனர். பிற்காலச் சோழ மன்னர்களான இராசராசசோழன் காலத்தில் முதலாம் இராசேந்திர சோழன் கடாரத்தின் மீது படையெடுத்துச் சென்றபோது நாகபட்டினத்திலிருந்துதான் கப்பல்படை சென்றுள்ளது. கி.பி.9-10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் இராசராசனின் செப்புக் காசுகள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன[4]. மேலும், முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வணிகம் சிறக்க மக்களின் நலன் கருதி சுங்க வரியை தவிர்த்ததை 'சுங்கம் தவிர்திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்'[5] என்றும் 'புவிராச ராசர் மனு முன்னோர் நாளில் தவிராத சுங்கம் தவிர்த்தோன்'[6] என்றும் குறிப்பிடப்படுகிறது.

இந்தப் படையெடுப்புதான் பிற்காலத்தில் நாகபட்டினப் பகுதி வணிகர்கள், கடாரத்தோடு மிக நெருங்கிய வணிக நடவடிக்கைகளை மேம்படுத்தியது எனலாம். கி.பி.12-ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் நாகபட்டினத் துறைமுகத்திற்கு வந்திறங்கிய பொருள்களைப்

பற்றி குறிப்பிடுகையில் 'கரிபரித்தொகை சொரிவதாம் காலத்தில்' என்று இங்கு யானை, குதிரை, மிளகு, ஏலம், தேங்காய் ஆகிய பொருள்கள் வந்து சென்றதைக் குறிப்பிடுகிறது. இடைக் காலத்தில் காவிரிபூம்பட்டினம் கடலின் இயற்கைச் சீற்றத்தால் அழிவுற்றதன் காரணமாக நாகபட்டினம் தலைமை துறைமுகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் இடைக்காலப் பகுதியில் நாகபட்டினம் ஒரு சிறந்த வணிகத்தலமாக விளங்கி வந்துள்ளது. மேலும் இப்பகுதியில் தனி வணிகர்களும், வணிகக் குழுக்களின் நடவடிக்கைகளும் அதிகமாக இருந்து வந்துள்ளது என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது.

## வணிகர்கள்

அயல்நாட்டு, உள்நாட்டு வணிகத்தில் ஈடுபட்டு வந்த பல வணிகக் குழுக்கள் இடைக்காலத்தில் நாகைப்பகுதியின் பல இடங்களில் பரவி இருந்தனர் என்பதை இப்பகுதிகளில் உள்ள கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகிறது. நாகை மாவட்ட திருவாமூர் கல்வெட்டு பாசையைச் சேர்ந்த வணிகன் வைப்பூருடையான் திருநாகீசுரமுடையானின் மனைவி, உடையா நாச்சியாள் என்பவர் 600 காசுகளை சிவன் கோயிலுக்கு விளக்கெரிக்க தானம் அளித்த செய்தியை மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது[7]. நாகபட்டினம் காயாரோகணமுடையார் சிவன் கோயிலில் உள்ள இரண்டாம் இராசராசரின் கல்வெட்டு கொல்லாபுரத்து வணிகன் திருச்சிற்றம் பலமுடையான் என்பவர் இவ்வாலயத்திலுள்ள தட்சிணாமூர்த்தி தேவர் திருமுன்பில் சன்னிதியில் இரண்டு விளக்கெரிக்க 30 காசுகளை தானம் வழங்கிய செய்தியை குறிக்கிறது[8]. மேலும் இதே ஊரைச் சார்ந்த கொல்லாபுரத்து காயாரோகணமுடையார் கோயிலில் அமைந்துள்ள முதலாம் இராசராசன் கல்வெட்டானது குரக்கேணிக் கொல்லத்தைச் சேர்ந்த வணிகன் நாமந்தையன் என்பவன், தினமும் 5 பிராமணர்கள் உணவு கொள்ள 180 காசுகளை தேவகன் வசம் கொடுத்த செய்தியைக் கூறுகின்றது[9]. நாகையில் அமைந்துள்ள காயாரோகணமுடையார் கோயிலில் காணப்படும் முதலாம் இராசேந்திரனின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டு நாகையைச் சார்ந்த வணிகன் (மாயிலட்டி) சேந்தன் கேரளாந்தகன் என்பவன் நிலக்கொடையளித்த செய்தியை எடுத்துரைக்கிறது[10].

நாகபட்டினம் காயாரோகணமுடையார் கோயிலிலுள்ள முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியரின் பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு கருவூர்க் கிழவன் திருவெண்கா வுடையான் பெரியாழ்வான் வணிகன் திவாகரன் என்பவன், சன்னமங்கலமான ஜெயங்கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலத்திலும் பிற ஊர்களிலும் நிலத்தை வாங்கி காயாரோ கணமுடையார் கோயிலுக்கு கொடுத்த ஆவணக் கல்வெட்டாகும். மேலும் 13 வேலி நிலம், அன்றாடு வராகன் பணம் 650-க்கு வாங்கப்பட்டதையும் கல்வெட்டு குறிப்பிடுகிறது[11]. அதே ஆலயத்தில் அமைந்துள்ள நீலாத்தாட்சியம்மன் கோபுரத்தில் உள்ள முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டிய மன்னனின் கல்வெட்டானது பச்சையப்ப செட்டியார் மகன் முத்து தண்டாயுதம், அமராவதி, அருணாச்சலம் ஆகியோர், இக்கோபுரத்திற்கு பலகை வரியும், போதிகை வரியும் செய்தளித்ததைக் குறிக்கிறது[12].

நாகபட்டினத்திற்கு அருகிலுள்ள ஆவராணியில் காணப்படும் விஜயநகர மன்னர்களில் ஒருவரான திகமப்ப தேவமகாராயனின் கல்வெட்டில் சாதிவரி, இனவரி, புறவரி, வினியோக வரி, பழவரி, புதுவரி ஆகியவைகளுக்கு வரிவிலக்கு அளித்ததைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவதை அறிய முடிகின்றது[13].

மேற்கண்ட பகுதியில் அமைந்து காயாரோ கணமுடையார் கோயிலில் உள்ள சோழ மன்னன் பரகேசரி வர்மனின் இரண்டாவது ஆட்சிக் கல்வெட்டானது வணிகன் ஒருவன் விளக்கெரிக்க 30 காசுகளைத் தானம் அளித்த செய்தியைக் குறிப்பிடுகின்றது[14].

## வணிகக் குழுக்கள்

வணிகக் குழுக்கள் சோழமண்டலத்தின் பல்வேறு ஊர்களான தஞ்சாவூர், பழையாறை, கங்கைகொண்டசோழபுரம் பகுதிகளுக்கு நாகபட்டினம், காவேரிப்பூம்பட்டினம் ஆகிய கடற்கரைத் துறைமுகங்களிலிருந்து வணிகப் பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர். இக்காலக்கட்டத்தில் வணிகப் பொருள்களை எடுத்துச் சென்ற சாலைகளை கல்வெட்டுகளில் 'அரங்கம் நோக்கி போந்த பெருவழி'[15], 'தஞ்சாவூர் பெருவழி'[16] என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும், வணிகக் குழுக்கள் பொருள்களை எடுத்துச்செல்லும் வழி சிற்றூர்களாயின் 'சிறுவழி' என்றும் தலை நகரங்களுக்கு எடுத்துச் செல்லும் வழியைப் 'பெருவழி' என்றும் அழைத்துள்ளனர். பயணத்தின் பொழுது வழி காவலர்களாகப் 'பெரும்பாடிகாவல்', 'சிறுபாடிகாவல்' என்றும் குறிப்பிடப்படுகிறது.

மயிலாடுதுறை வட்டத்திலுள்ள வலஞ்சூரில் காணப்படும் சிவன் ஆலயத்தில் விஜயநகர மன்னர் காலத்துக் கல்வெட்டு சிதைந்த நிலையில் காணப்படுகின்றது. இக் கல்வெட்டில் பன்னாட்டு வணிகக் குழுக்களான திசையாயிரத்து ஐந்நூற்றுவர், வளஞ்சியர், செட்டிகள் இவ்வூரிலுள்ள சிவால யத்திற்கு தானம் வழங்கியதைக் குறிக்கிறது[17].

நாகபட்டினம் மாவட்டத்திலுள்ள திருவிளக்குடியில் காணப்படும் சோழர்காலக் கல்வெட்டு, வளஞ்சூரில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தின் வளர்ச்சிக்கான குழுவில் வளஞ்சியர், திசையாயிரத்து ஐந்நூற்றுவர் குழுவைச் சார்ந்தவர்கள் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்துள்ளனர் எனத்தெரிவிக்கிறது. குறிப்பாக, திசையாயிரத்து ஐந்நூற்றுவர்கள் கடற்கரைப் பகுதிகளிலும் உள்நாட்டுப் பகுதிகளிலும் வணிகம் செய்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது[18].

மயிலாடுதுறை வட்டம் திருவிளிக்குடி மனவளஈஸ்வரர் கோயிலில் காணப்படும் உத்தமசோழனின் கல்வெட்டு இக்கோயிலுக்கு நல்லார் ஊரை நானாதேசியர்கள் பிரம்ம தேயமாக வழங்கியதைக் குறிப்பிடுகிறது. மேலும், இக்கோயிலில் வளஞ்சியர் வணிகக்குழுவைச் சார்ந்த கடாச்சிங்கம் என்பவர் தட்சிணாமூர்த்தி திருவுருவத்தை அமைத்துள்ளார்[19]. அதே பகுதியைச் சார்ந்த கோயிலில் உள்ள கல்வெட்டு தட்சிணா மூர்த்தியின் சிலையை அமைத்ததாகக் குறிப்பிடுகின்றது. அச்சிலை வளஞ்சியர் குழுவைச் சார்ந்த கடாச்சிங்கம் என்பவரால் அமைக்கப்பட்டதை அக்கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது[20].

திருக்காவாசல் சிவன் கோயிலிலுள்ள விக்கிரம சோழனின் கல்வெட்டில் கங்கை செட்டிகள், குதிரைச் செட்டிகள், சித்தா செட்டிகளைப் பற்றியும் அவர்கள் இவ் வாலயத்திற்கு நுந்தாவிளக்கும், விளக்கெரிக்க 17 காசு அளித்ததையும் குறிப்பிடுகின்றது. மேலும் இக்கல்வெட்டு

வீரராசேந்திர தேவமங்கலச் சாத்து என்ற வணிகக் குழுவையும் குறிப்பிடுகின்றது. இதன் மூலம் சாத்து என்பது குதிரை வியாபாரம் செய்யும் மொத்த வணிகர்களைக் குறிப்பதாகும். வீரராசேந்திர தேவமங்கலத்தில் இடைக்காலத்தில் இப்பகுதியில் குதிரை வணிகம் நடந்துள்ளதாகத் தெரிகிறது[21].

## சான்றெண் விளக்கம்

1 சதாசிவப்பண்டாரத்தார், தி.வை., 2008, *பிற்காலச் சோழர்* வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், பக்.493

2 நீலகண்டசாஸ்திரி, கே.ஏ., 1976, *தென்னிந்தியாவைப் பற்றிய வெளிநாட்டினர் குறிப்புகள்,* தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, பக்.99.

3 இராசவேலு, சு., திருமூர்த்தி, கோ., 1995, *தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள்,* பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை. பக். 78-79.

4 இராசவேலு, சு., திருமூர்த்தி, கோ., *முன்னர் சுட்டிய நூல்,* ப.81

5 *க.ஆ.அ.* 1912/408

6 *குலோத்துங்க சோழன் உலா,* வரிகள் 51-52

7 *க.ஆ.அ.* 1912/597

8 *க.ஆ.அ.* 1912/207

9 *க.ஆ.அ.* 1956-57/157

10 *க.ஆ.அ.* 1956-57/162

11 சீதாராம் குருமூர்த்தி (பொ.ப.ஆ.), 2007, *நாகப்பட்டினம் மாவட்டக் கல்வெட்டுகள்,* தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, பக்-244.

12 *க.ஆ.அ.* 1956-57/160

13 *க.ஆ.அ.* 1922/482

14 *க.ஆ.அ.* 1956-57/163

15 *தெ.இ. க.* 3/205

16 *க.ஆ.அ.* 1907/363

17 *க.ஆ.அ.* 1911/251

[18] *க.ஆ.அ. 1939-40/402*

[19] *க.ஆ.அ. 1926/131*

[20] *க.ஆ.அ. 1926/129*

[21] *தெ.இ.க. 17/601*

# 21. கடலூர் பகுதியில் வரலாற்றுத் தொடக்ககால, இடைக்கால வணிகம்

ஜோ. இரா.சிவராமகிருஷ்ணன்

கடலூர் மாவட்டம் தொண்டை நாட்டில் புகழ்பெற்று விளங்கிய அரிக்கமேட்டிற்கும் சோழநாட்டில் புகழ் பெற்று விளங்கிய பூம்புகாருக்கும் இடையில் அமைந்துள்ளதால் அப்பகுதியில் நிலவிய வணிக நடவடிக்கைகள் பற்றி இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

## வரலாற்றுத் தொடக்க காலம்

வரலாற்றுத் தொடக்க காலத்தில் தமிழகம் கிரேக்க, உரோம் நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பை உறுதிசெய்யும் வகையில் அமைந்த நகரங்கள் அரிக்கமேடும் பூம்புகாரும் ஆகும். இவ்விரு வணிகத் துறைமுகங்களும் புகழ்பெற்று விளங்கிய அதே காலகட்டத்தில் கடலூர் பகுதியில் குடிகாடு, காரைக்காடு ஆகிய இடங்களும் சிறந்த கடற்கரைப்பகுதி வணிகத் தலங்களாக விளங்கின.

## குடிகாடு

கடலூரில் இருந்து 8 கி.மீ. தொலைவில் கடற்கரை அருகே இவ்வூர் அமைந்துள்ளது. இங்கு 1988-89-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகம் கே.வி.இராமன் தலைமையில் நிகழ்த்திய அகழாய்வில் ஆம்புரோசாடிகள், ரௌலட்டட் மட்கல ஓடுகள், கல்மணிகள் கிடைத்துள்ளன[1]. இத்தொல்லியல் சான்றுகள் மூலம் குடிகாடு பகுதி கி.மு. 1 முதல் கி.பி. 2-ஆம் நூற்றாண்டுகளில் கிரேக்க, உரோமானியர்களுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தது என்பதை அறியமுடிகிறது. இங்கு பெருமளவில்

மணிகள் தயாரிக்க பயன்பட்ட மூலக்கற்களும், துளையிட்ட, துளையிடப்படாத மணிகளும் கிடைப்பதால் இவ்வூர் அரிய கல்மணிகள் செய்யும் தொழிற்கூடமாக விளங்கியது. மேலும் இங்கிருந்தே கிரேக்கம், உரோம் நாடுகளுக்கு மணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் தெரிகிறது.

**காரைக்காடு**

இவ்வூர் முன்வரலாற்றுக் காலத்தில் வணிகச் சிறப்புடன் விளங்கிய அரிக்கமேட்டிலிருந்து 20 கி.மீ. தொலைவில் வங்கக்கடலை ஒட்டி அமைந்துள்ளது. இங்கு அகழாய்வு செய்த யூவாஸ்மார்ட்டின் கறுப்பு-சிவப்பு, ரௌலட்டட் மட்கல ஓடுகளை கண்டுபிடித்தார்[2]. 1966-67-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம், கே.வி.இராமன் தலைமையில் நடத்திய அகழாய்வில் ரௌலட்டட் மட்கல ஓடுகள், உடைந்த ஆம்ரோசாடிகளின் பாகங்கள் மற்றும் சால்ஸிடனி, அமெதிஸ்ட், பெரில், ஜாஸ்பர், அகேட் ஆகிய அரிய கற்களால் செய்யப்பட்ட மணிகளும் கிடைத்துள்ளன[3]. இதன் மூலம் கி.பி.1-2 ஆம் நூற்றாண்டில் இவ்வூர் கிரேக்க, உரோமானியர்களுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்த சிறந்த வணிகத்தலமாகக் கருதப்படுகிறது.

**இடைக்காலம்**

வரலாற்று தொடக்ககாலத்தில் கடலூர்ப் பகுதியின் கடற்கரை நகரங்கள் கிரேக்க, உரோமானிய நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்ததைப் போன்று, இடைக்காலத்தில் இம்மாவட்டத்தின் பிறபகுதிகளில் வணிகம் சிறப்புற்று விளங்கியதை கல்வெட்டுச் சான்றுகள் மூலம் அறியமுடிகிறது. குறிப்பாக உள்நாட்டு வணிகம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்ற நோக்கில் சில முக்கியப் பெருவழிகளை (Trunk Roads) இம்மாவட்டத்தில் சோழர், பாண்டியர், நாயக்க மன்னர்கள் ஏற்படுத்தியிருந்தனர்.

**பெருவழிகள்**

கடலூரிலுள்ள பாடலீசுவரர் கோயிலில் காணப்படுகின்ற முதலாம் பராந்தகன், முதலாம் குலோத்துங்கன் காலத்தில் வெளியிடப்பட்ட கல்வெட்டுகளில் பெருவழிகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன[4]. கி.பி.1272-ஆம் ஆண்டு

மூன்றாம் விக்கிரமப் பாண்டியனால் வெளியிடப்பட்ட திருவந்திபுரம் கோயில் கல்வெட்டில் கோப்பெருஞ்சிங்கனால் ஏற்படுத்தப்பட்ட அவனி ஆளப்பிறந்தான் பெருவழி சுட்டப்படுகிறது. கி.பி.1370-ஆம் ஆண்டு இரண்டாம் கம்பண்ண உடையார் காலத்திய திருவதிகை கோயில் கல்வெட்டில் முதலாம் இராசராசன் பெயரால் ராசராசன் பெருவழி[5] பற்றிக் குறிப்பிடப்படுகிறது. இப்பெருவழி கடலூர்ப் பகுதியில் இருந்துள்ளது. இக்கல்வெட்டுகள் மூலம் இடைக்காலத்தில் கடலூர்ப் பகுதியில் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காக அக்கால மன்னர்கள் பெருவழிகளை ஏற்படுத்தி இருந்தமையை உணரமுடிகிறது. எனவே, இடைக்காலத்தில் கடல் வணிகம் தமிழகத்தில் சிறப்புற்று இருந்ததைப் போன்று உள்நாட்டு வணிகமும் மேன்மையுடன் நடைபெற்றதற்கு இதுபோன்ற பெருவழிகளும் ஒரு காரணமாகும்.

**திருத்திணை நகர், திருச்சோபுரம்**

திருத்திணைநகர் சிவக்கொழுந்தீஸ்வரர் கோயிலில் உள்ள இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் 22-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டில் தறிஇறை, தட்டார்ப்பாட்டம், செக்குக் கடமை போன்ற வரிகள் வசூலிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகிறது[6]. இதன் மூலம் திருத்திணை நகர் பகுதியில் ஆடை, ஆபரண நகை உற்பத்தியும் எண்ணெய் வணிகமும் நடைபெற்றுள்ளதை உணரமுடிகிறது. இதே கோயிலில் உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழனின் 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வணிகர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன[7]. மேலும் இவ்வூருக்கு அண்மையில் உள்ள திருச்சோபுரம் கோயிலில் காணப்படுகின்ற சுந்தரபாண்டியனின் கல்வெட்டில் வணிகர்கள் அரசுக்குச் செலுத்திய செட்டிறை[8] என்னும் வரி குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் வணிகப்பொருள்களை விற்றுப் பொருளீட்டப்படும் பெருவணிகம் செய்பவர்களிடமிருந்து அரசு செட்டிறை என்ற வரியை பெற்றுள்ளது[9] என்பதை அறிய முடிகிறது.

### திருமாணிக்குழி

இவ்வூரில் உள்ள வாமனபுரீஸ்வரர் கோயிலில் முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டில் 'வானவன்மாதேவிபுரத்து நகரம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் நகரம் என்பது வணிகமும், வணிகர்களும் நிறைந்த பேரூராகும். இன்று வானவன்மாதேவிபுரம் திருமாணிக்குழி அருகே ஓடும் கெடிலம் ஆற்றில் தென்புறம் அமைந்துள்ளது. இராசராசசோழனின் தாயார் வானவன்மாதேவி பெயரில் நிர்மாணிக்கப்பட்ட இவ்வூர் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் வணிகர்கள் நிறைந்த பல்பொருள் வணிகம் நடைபெற்ற பகுதியாகத் திகழ்ந்துள்ளது.

மேலும் இங்குள்ள மூன்றாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியனின் காலக் கல்வெட்டில் வணிகராகிய செட்டிகளிடம் இருந்து செட்டிறை[10], பொற்கொல்லர்களிடம் இருந்து தட்டார்ப்பட்டம்[11] போன்ற வரிகள் வசூலிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கடலூர் வட்டாரப் பகுதியில் செட்டிப்பிரிவைச் சார்ந்த வணிகர்கள் தங்கியிருந்தனர் என்பதையும் இப்பகுதியில் பொன்னாபரண வணிகம் நிகழ்ந்தமை குறித்தும் அறிய முடிகிறது.

கடலூர்ப் பகுதியில் உள்ள சிலம்பிமங்கலம், பெரியப்பட்டு, ஆண்டார் முள்ளிப்பள்ளம், மணிக்கொல்லை ஆகிய ஊர்களில் குண்டுமணியளவு முதல் கடுகளவு வரையிலான கல்மணிகள் பச்சை, நீலம், சிவப்பு, கருப்பு, மஞ்சள், வெள்ளை போன்ற நிறங்களில் ஏராளமாகக் கிடைக்கின்றன. மேலும் இவ்வூர்களில் இம்மணிகள் செய்யப் பயன்படுத்தப்பட்ட மூலக்கற்களும் பெருமளவில் கிடைக்கின்றன. எனவே, வரலாற்றுத் தொடக்க காலத்தில் இப்பகுதியில் தயாரிக்கப்பட்ட மணிகள் குடிகாடு, காரைக்காடு, அரிக்கமேடு வழியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம். கடலூர் பகுதியில் உள்ள தொண்டைமானத்தம் என்ற ஊரில் உரோமானிய நாணயம் கிடைத்துள்ளதின் மூலம் உரோமானியர்களுக்கும் இப்பகுதி மக்களுக்கும் இருந்த வணிக உறவைப் பற்றி அறியமுடிகிறது[12].

## சான்றெண் விளக்கம்

[1] *Indian Archaeology a Review (1988-89),* p.80

[2] *Indian Archaeology a Review (1966-67),* p.21

[3] *மேலது.*

[4] *தெ.இ.க.* 7/740-745

[5] *தெ.இ.க.*7/ 767

[6] *தெ.இ.க.* 7/221

[7] *தென்னிந்தியக் கோயில் கல்வெட்டுகள்,* பக்.2

[8] *Ibid.,* p.3.

[9] கோவிந்தராசன்,சி. *கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி,* ப.160.

[10] *தெ.இ.க.* 7/ 785

[11] *தெ.இ.க.* 7/ 795

[12] காசிநாதன், நடன., 2009, *கடலூர் மாவட்டத் தடயங்கள்,* மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.ப.36

# 22. மகதேசின் பெருவழி

க.கருப்பையா

பண்டைய நாட்களில் பொருள்களை ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு வணிக நோக்கில் கொண்டு செல்லப் பெருவழிகள் துணைபுரிந்தன. அவ்வகையில் இடைக்காலக் கல்வெட்டுகளில் பெருவழி குறித்த சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. கொங்குப் பெருவழி[1], ஆந்திரப் பாதை[2], தஞ்சைப் பெருவழி[3], இராசமேகந்திரப் பெருவழி[4] பெண்ணாடம் பெருவழி[5] என்று பல வழிகள் உள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன. இதே போல கொங்குநாட்டையும், தொண்டை மண்டலத்தையும் இணைக்கும் ஒரு பெரிய போக்குவரத்துச் சாலையொன்று இருந்திருக்கின்றது என்பதை ஆறகளூர் என்ற ஊரிலிருந்து கிடைக்கப்பெற்ற கல்வெட்டால் தெரியவருகிறது[6]. அக்கல்வெட்டால் அறியப்பட்ட மகதேசின் பெருவழி என்ற சாலையைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆறகளூர், சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் அமைந்துள்ளது. இது வசிட்ட நதியின் வலப்புறக் கரையில் அமைந்துள்ள தலைவாசல் என்ற கிராமத்தின் தென்கிழக்குப் பகுதியில் சுமார் 21/2 கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருக் கின்றது. போர்க்காலங்களில் போர் வீரர்கள் பதுங்கி இருந்து போரிடுவதற்காகத் தோண்டப்பட்ட 6 குழிகளை உடைய கிராமம் என்னுமடிப்படையில் ஆறகளூர் என்று இக்கிராமத்திற்கு பெயரிடப்பட்டிருக்கலாம் எனச் சேலம் மாவட்ட அரசு வெளியீட்டில் (Gazetteer) வெளியிடப்பட்டுள்ளது. இருப்பினும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆறகளூர் என்ற பதத்தைப் பிரித்துப்

பொருள் கொண்டால் ஆறு + அகளூர் நேரடியாக வரும் பதிலாவது ஆற்றே அகழியாகச் சூழ்ந்து நல்ல பாதுகாப்பு அரணாக இவ்வூருக்கு இருக்கும் சிறப்பால் இப்பெயர் (ஆறகளூர்) வரக் காரணமாக இருக்கலாம் என்று எண்ணலாம். வசிட்ட நதியும், சுவேதி நதியும் இணைந்து இந்தப் பகுதியை ஒரு காலத்தில் செழிப்புறச் செய்துள்ளன.

ஆறகளூரில் உள்ள ஸ்ரீகாமேஷ்வரர் என்னும் சிவன்கோயிலும் கரிவரதர் என்னும் பெருமாள் கோயிலும் பழமையானவை. சோழ, பாண்டிய, ஹொய்சால, விஜய நகர அரசு காலத்தைச் சார்ந்த பல தமிழ்க் கல்வெட்டுகள் இவ்விரு கோயில்களிலும் கண்டறியப்பட்டுள்ளன. இது தவிர சிவன்கோயிலின் முன்புறம் நடப்பெற்றுள்ள துண்டுக் கல்வெட்டும் கண்டறியப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு நான்கு வரிகளில், வழக்கம்போல பெரும்பாலான தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்பெறும் மங்கலச் சொல்லான ஸ்வஸ்திஸ்ரீ என்று தொடங்கி மன்னரின் பெயரையோ அல்லது அவர்களின் ஆட்சியாண்டோ குறிப்பிடப்படாமல் எழுதப்பட்டுள்ளது. எழுத்தமைதியின்படி இது கி.பி.11 அல்லது 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சார்ந்தது எனலாம். கல்வெட்டிலுள்ள வாசகம் கீழ்வருமாறு

1) ஸ்வஸ்தி ஸ்ரீ
2.) மகதேசின்
3.) பெருவழி
4) காஞ்சிபுரம்
5) ........
6) ........

இது வணிகர்களின் பெருவழிப்பாதை பற்றிய கல்வெட்டாகும், மேலும் பெருவழி காஞ்சிபுரம் என்று குறிப்பிடுவதால் இப்பாதை ஆறகளூரிலிருந்து காஞ்சிபுரம் வரை செல்லும் வழி எனப்பொருள் கொள்ளலாம். ஆனால் எங்கிருந்து இவ்வழி தொடங்குகிறது என்பதை அறிய முடியவில்லை. கல்வெட்டின் கீழ்ப்பகுதியில் 16 சிறு குழிகள் வரிசைக்கு எட்டு வீதம் இரண்டு வரிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் தூரத்தைக் குறிப்பதாகக் கருதலாம்[7]. மகதேசின்[8] பெருவழி என்ற பெயரைத்தாங்கிய இக்கல் கோயிலைச் சார்ந்தது அல்ல. அத்துண்டுக் கல்வெட்டு தனியாக வீழ்ந்து கிடப்பதால் ஆறகளூர்

அதன் பிறப்பிடமாகக் கொள்ளவும் முடியாது. ஆனால் அது ஒரு வணிகக் கல்வெட்டு என்பது மட்டும் உறுதியாகக் கூறலாம். ஏனெனில், திசை ஐந்நூற்றுவர்[9], நானாதேசி[10] போன்ற பெயரில் விளங்கிய வணிகக் குழுக்களைப்போலவே மகாதேசின் என்ற ஒரு மாபெரும் குழு இருந்திருத்தல் வேண்டும். இக்குழு பெரிய அளவில் வணிகம் செய்து சிறப்புப் பெற்றிருத்தல் வேண்டும். அதன் நினைவாகவே குழுவின் பெயரையே இப்பாதைக்கும் பெயரிடப்பட்டிருக்க வேண்டும்.

இப்பகுதி வணிகர்கள் நிறைந்து வாழும் ஊராகும். இங்குப் பலவகையான வணிகக் குழுக்கள் இருந்துள்ளனர் என இவ்வூரிலுள்ள தமிழ்க் கல்வெட்டுகள் கூறுவதால் இப்பாதையை அவர்களே உருவாக்கியிருக்க வேண்டும் என்று எண்ணுவதில் தவறில்லை.

இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'மகதேசின்' என்ற பெயர் மிகமுக்கியமாக ஆராயப்பட வேண்டிய பெயராக இருக்கின்றது. இவர் ஒரு சிற்றரசர் என்றும் குலோத்துங்கன் காலத்தில் சேலம் நாட்டிலுள்ள மகதை மண்டல தலைவராக இருந்துள்ளார் என்றும் கல்வெட்டு எடுத்தியம்புகிறது என அறிஞர்கள் எண்ணுகிறார்கள். பேரா. நீலகண்ட சாஸ்திரி பொன்பரப்பின மகதேசின் என்று ஒருவரைக் குறிப்பிடுகிறார்[11]. இவர் பாண வம்சத்தில் தோன்றிய குறுநில மன்னர் என்றும், அவர் மகதை மண்டலத்தை ஆட்சி செய்தவர் என்றும் குறிப் பிடுகிறார். அவருடைய நினைவாக திருவண்ணாமலை கோயிலின் மேற்கூரை வர்ணம் பூசப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றார். அவருடைய படைகளிலுள்ள முதன்மைப் படைத் தலைவராகிய (அகம்படி முதலிகள்) ஒருவர் ஆறகளூருடையான் என்கிற இராசராசதேவன் என்ற திருநாமத்தால் அழைக்கப்பட்டுள்ளான் என்றும் கூறுகிறார்.

சோழ மன்னன் மூன்றாம் இராசராசன் காலத்தில் இவன் பிறந்திருந்ததால் இவனுக்கு அந்த அரசனுடைய பெயரையே வைத்துள்ளார் என்று கருதுவோரும் உண்டு. அதேபோல் ஸ்ரீரெங்கத்திலிருந்து கிடைக்கப்பெற்ற கல்வெட்டு மேலும் ஒரு கருத்தை வெளியிடுகிறது[12]. அக்கோயில் பிரகாரத்தின் மதிற்சுவருக்கு மகதேசின் ஆன அடைய வளைத்தான் என்று பெயரிடப்பட்டிருப்பதாகக் கூறுகிறது. இப்பிரகார மதிற்சுவர்

தாயினும் நல்லான் என்ற குலோத்துங்க சோழ வாணக் கோவரையன் என்பவரின் மேற்பார்வையில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளதாகக் கல்வெட்டுக் குறிப்பு தெரிவிக்கின்றது.

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் மேலும் பல குறுநில மன்னர்கள் ஆண்டிருப்பினும் மகதேசன் இராசராச தேவன் பொன்பரப்பினான் என்பவர் அவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர். இவர் ஆறகளூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட குறுநிலமன்னராவார்[13]. குலோத்துங்கன் ஆட்சியில் முக்கிய அதிகாரிகளில் ஒருவரான மாறன் குழைந்தான் சேதிரையன் என்பவர் குலோத்துங்க சோழனின் 26-வது ஆட்சி ஆண்டில் திருப்பாலைப்பந்தல் கோயிலுக்குத் தான தர்மங்கள் வழங்கியுள்ளார் என்று கல்வெட்டுக் கூறுகிறது. மகதேசின் என்பவரின் நினைவாக அவருடைய அதிகாரி அவருக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டுள்ள செய்திகளைப் பற்றியும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்ற கருத்துக்களை மேலே கண்டோம். அதுவும் அவருடைய அதிகாரியின் மூலமாக நமக்குத் தெரியவருகிறது. மகதேசின் இராசராச பொன் பரப்பினான், மகதேசின் வளையவந்தான், பொன்னபரப்பின மகதேசின் என்று அடைமொழியாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. எனவே இது ஒருவடைய பெயரா அல்லது ஒரு குழுவின் பெயரா என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது. இருப்பினும் இப்பெயர் சோழர்கள் காலத்தில் அதுவும் மூன்றாம் குலோத்துங்கன், இராசராசன் காலங்களில் சிறப்புற்றிருந் திருப்பதாகக் கல்வெட்டு ஆதாரங்கள், நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆகவே ஒரு பொதுப் பெயரை பட்டப்பெயராகக் கொண்டு அவரவர்களுடைய சொந்தப் பெயர்களோடு இணைத்துக் கொண்டிருக்க வேண்டும். இச்சொல்லின் விளக்கத்தை கருத்தூன்றி எண்ணிப் பார்க்கின்றபோது, இது வணிகக் குழுக்களுடைய பெயராக இருப்பதை தெளிவாக அறியலாம். வணிகர்கள் பலகுழுக்களாகப் பிரிந்து, அவற்றின் எண்ணிக்கைக்கேற்பவும் தாம் செய்கின்ற தொழிற்கேற்பவும் தங்களுடைய குழுப் பெயரோடு அழைக்கப்படுவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். உதாரணமாக நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவர்[14], நானாதேசி ஐந்நூற்றுவர்[15] என்பது குறிப்பிடத் தக்கதாகும். செய்கின்ற தொழிலால் எண்ணெய் வணிகர்கள், குதிரைச்செட்டிகள் என்று பல்வேறு பெயர்களால் அழைப்பதும்

வழக்கம். இவர்கள் அனைவரும் நாலாபுறத் தேசங்களில் சென்று தன்வியாபாரத்தைச் சிறப்புறச் செய்வதால் நானாதேசி என்று அழைப்பது போல பெரிய குழுவைச் சேர்ந்தவர்களை மகாதேசின் என்று அழைத்திருக்கலாம். எனவே இவர்களில் சிறப்புற்று ஓங்கிய செல்வந்தர்கள் பலர் இப்பகுதிகளில் தலைவராக விளங்கியுள்ளனர். அவர்கள் வணிகம் மட்டு மல்லாது நாட்டினை நிர்வகிப்பதிலும் சிறப்புற்றிருந்தனர் என்பது கல்வெட்டுகள் வாயிலாக நமக்குத் தெரியவருகிறது.

கொங்கு நாட்டில் கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டொன்று வணிகச் செட்டியார்கள்[16] குதிரை வணிகத்தில் சிறந்து விளங்கியுள்ளனர் என்ற கருத்தினைத் தெரிவிக்கின்றது[17]. பதினான்காம் நூற்றாண்டு கல்வெட்டொன்று ஆறகளூரில் வாழ்ந்து வந்த வணிகச் செட்டியார்களைப் பற்றிய செய்திகளைத் தருகிறது. இன்னுமோர் கல்வெட்டு சுந்தரபாண்டியன் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இது வணிகச் செட்டியார்களுக்கும் (எண்ணெய் வணிகர்), இந்தச் செட்டியார்களுக்கும் கோயில் நிர்வாகம் தொடர்பாக பெரிய கருத்து வேறுபாடு ஏற்பட்டு பின்னர் சரிசெய்யப்பட்டுள்ளதாக இக்கல்வெட்டு தெரிவிக் கின்றது. கோயில் நிர்வாகத்திற்கு உட்பட்ட பொருளாதார சிக்கலைத் தீர்ப்பதற்காக நாட்டவர்கள் தலைவாய் என்ற கிராமத்தை கோயிலுக்குத் தானமாக வழங்கி அக்கோயில் செலவினைச் சரிகட்டி, விழாவைத் தொடர்ந்து நடைபெற உதவியதாகக் கல்வெட்டு கூறுகிறது.

வேதப்பிராமணர்கள்[18] கோயிலில் தொடர்ந்து வேதங்களை ஓதுவதற்காக, பாண்டிய மன்னன் வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்களைத் தானமாகப் பிராமணர்களுக்கு வழங்கியதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. அவர்கள் ஓதி வழிபடும் கோயில் ஒரு காலத்தில் வணிகப் பெருமக்களின் மேற்பார்வையில் இருந்துள்ளது பற்றியும் இக்கல்வெட்டு சாசனம் கூறுவதாக அரசு வெளியீட்டில் தரப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கூறப்பட்ட கருத்துகளிலிருந்து அறிந்து கொள்வது யாதெனில் வணிகர்கள் மிகவும் சிறப்புற்று செழித்தோங்கியுள்ளனர் என்பது இதன் மூலம் தெரிகிறது. நானாதேசி என்பது போல மகதேசின் என்பது அந்தக் குழுக்களின் பட்டப் பெயராகி வந்து இருக்கவேண்டும். வியாபாரப்

பொருள்கள் குவியும் சந்தையாகவும் இப்பகுதி விளங்கி இருக்கின்றது.

தங்களுடைய தொழிலோடு, பல சமூகச் சேவைகளிலும் ஈடுபட்டு பல நல்ல காரியங்கள் செய்துள்ளனர் என்று தெரிகிறது. அவர்கள் பொருளாதாரத்தில் சிறப்புற்று ஓங்கியிருந்ததால் ஆறகளூர் பகுதி முழுவதும் அவர்களது அதிகாரத்தில் இருந்திருக்க வேண்டும். மேலும் நெசவுத் தொழிலும் சிறப்புற்றிருந்துள்ளது என்ற தகவல்கள் பல கல்வெட்டுகளிலிருந்து நமக்குக் கிடைக்கின்றது. கர்நாடகம், ஆந்திரம், சேரநாடு, தமிழ்நாட்டிற்கும் இப்பகுதியிலுள்ள தலைவாசல் என்ற ஊர் சிறந்த முக்கியத் தலமாக விளங்கியிருக்கின்றது. இது சங்ககாலத்தில் ஒரு சிறந்த ஆட்சி பீடமாக இருந்துள்ளது தெரியவருகின்றது. இது தமிழ்ப் பெண் குலக் கவிஞரான அவ்வைபிராட்டியாரின்[19] அறிவுறுத்தலின் பெயரில் சேரர், சோழர், பாண்டியர்கள் இந்த ஊரினை நிர்மாணித்துள்ளனர் என்ற கருத்தும் வழிவழியாகச் சொல்லப்பட்டு வந்துள்ளது. இங்கிருந்து அவர்களின் எல்லைகளை வகுத்துக்கொண்டு தங்களின் ஆட்சியை விரிவுபடுத்தி உள்ளனர் என்று சேலம் கெஜட்டீர் எடுத்துரைக்கின்றது. மும்முறை வேந்தர்களின் வாடி வாசலாக இருப்பதால் மும்முடிகிரீடம் என்றும் இவ்வூரினை அழைக்கின்றனர். இந்நிகழ்வினை நினைவுபடுத்தும் முகமாக, அவ்வையார் மலை என்ற சிகரம், கல்ராயன் மலைமீது பூகோளரீதியாக அமைந்து சான்று பகர்கின்றது. இதன் சிறப்பு என்னவென்றால் தமிழ்நாடு முழுமை ஒரு பெருவாசலாக மட்டுமல்லாது கர்நாடக தேசத்திற்கும் ஒரு நுழைவு வாயிலாகவும் இது இருந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். இதன் மூலம் பலநாடுகளிலிருந்து கொண்டு வரப்படும் பொருள்கள் இங்குச் சேர்த்து வைக்கப்பெற்று தொண்டைமண்டலத்தில் உள்ள மகாபலிபுரம் துறைமுகத்தின் வழியாக உலகநாடுகளுக்கு வினியோகம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இக்கல்வெட்டு வாசகத்தின் இறுதியில் சுமார் 16 குழிகள் கொண்ட அடையாளம் உள்ளது. எனவே, இப்பதினாறு குழிகளும் முறையே 10 மைல்கல்லாகக் கொண்டால் 160 மைல் தூரம் எனக் கணக்கிடலாம். ஆக ஆறகளூருக்கும், காஞ்சி புரத்திற்கும் சுமார் 160 மைல் என உறுதியாகக் கூறலாம். இது தற்கால சுற்றுலாத் துறையினரால் வெளியிடப்பட்ட வரை

படத்தைப் பார்க்கும்போது கீழ்க்கண்ட வழியாக இச்சாலை அமைத்திருக்கவேண்டும் என்று ஊகித்தறியலாம்[20].

ஆத்தூர்-கள்ளக்குறிச்சி - தியாகதுருகம் - திருக்கோவிலூர் - விழுப்புரம் - திருவண்ணாமலை - போளூர் - திருவெட்டிபுரம் - வாழப்பாடி போன்ற ஊர்களின் வழியாகக் காஞ்சிபுரத்திற்கு இச்சாலை அமைத்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. பின்பு அங்கிருந்து மற்ற தேசங்களுக்கு பொருள்கள் தரைவழியாகவோ, அல்லது கடல் வழியாகவே அனுப்பப்பட்டிருக்க வேண்டும். எனவே, சுமார் பத்தாம் நூற்றாண்டில் இருந்து இன்றுவரை இந்த வணிகப்பாதையை சீரும் சிறப்போடும் நடத்தி வந்துள்ளனர் என்பதை ஆதாரத்தோடு இக்கல்வெட்டு விளக்குகின்றது[21].

## சான்றெண் விளக்கம்

---

1 *க.ஆ.அ. 281/1911*

2 *தெ.இ.க. 3/ 64*

3 *க.ஆ.அ. 363 /1907*

4 *தெ.இ.க. 3/21*

5 *க.ஆ.அ. 23/1915*

6 ஆறகளூரில் கிடைக்கப்பெற்ற தமிழ்க் கல்வெட்டு

7 கல்வெட்டு வாசகம் கொடுக்கப்பட்டுள்ளது

8 கல்வெட்டு வாசகம் கொடுக்கப்பட்டுள்ளது

9 Sastri, K.A.N., (reprint 1984), *The Cholas*, University of Madras, Madras, p.401

10 *க.ஆ.அ. 89/1936-37*

11 Sastri, K.A.N., *Ibid.*, p.401

12 *க.ஆ.அ. 89 /1936-37*

13 *க.ஆ.அ. 407/1937-38*

14 Sastri, K.A.N., *op.cit.*, p.595

15 *Ibid.*, p. 596

16 Arokiyasamy, K., *Kongu Country*, p.285

[17] *க.ஆ.அ. 432/1913*

[18] Ramaswami, A., 1957, *Madras District Gazetteer Salem,* Printed by the Superintendent, Govt. Press, p.654

[19] *Ibid.,* p.723

[20] *Ibid.*

[21] தமிழ்நாடு சுற்றுலாத்துறையினரால் வெளியிடப்பட்ட வரைபடம்.

